வரு.73 இல. 50 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2021 டிசம்பர் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

December 12 Sunday, 2021

32பக்கங்கள் 40/-

03 கூட்டணியில் பலமானவர்கள் சு.கவினர்

ஆரியகுளம் மகிழ்வூட்டல் திடல் 05

சரியான பாதையில் தமிழர் அரசியல் 09

ஜோக்கோவிச் தடுப்பூசி போட்டுவிட்டாரா? 24

சர்வதேச கடலில் மற்றுமொரு போதைப்பொருள் படகு

இரகசிய தகவலையடுத்து கடற்படை அதிரடி

250 கிலோ போதைப்பொருளுடன் வந்த படகு சுற்றி வளைப்பு

ஸாதிக் ஷிஹான்

சர்வதேச கடற்பகுதியில் சுமார் 250 கிலோ போதைப் பொருளுடன் மற்றுமொரு வெளிநாட்டு மீன்பிடி படகொன்றை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கைக்கு தெற்கே சுமார் 900 கடல் மைல் (1665 கி.மீ.) தொலைவில் வைத்து கைப்பற்றப்பட்ட இந்தப் படகிலிருந்து 06 வெளிநாட்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக இலங்கை கடற்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

09 சாக்குகளில் 225 சிறிய பொதிகளாக மறைத்து சூட்சுமமான முறையில் கடத்தல்

09 சாக்குகளில் 225 சிறிய ரக பொதிகளாக மறைத்து வைத்திருந்த 250 கிலோ போதைபொருட்களே கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை மேலும் தெரிவிக்கின்றது.

கடற்படைக்கு கிடைத்த இரகசிய புலனாய்வுத் தகவலுக்கமைய, பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவுடன் இணைந்து இந்த சுற்றி வளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கடற்பரப்பில் பல நாட்கள் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான குறித்த கப்பலை வழிமறித்து அதனை சோதனையிட்ட கடற்படையினர், 06 வெளிநாட்டு சந்தேகநபர்களுடன் பெருமளவான

04

தகவல் அறியும் உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள்

ஜனாதிபதியால் நேற்று நியமிப்பு

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 12 (1) விதிகளின் கீழ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பின்வரும் அதிகாரிகளை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமித்துள்ளார்.

ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன, ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக லியனாராச்சிலாகே ஜகத் பண்டார லியனாராச்சி, கிரிஷாலி பீண்டோ ஜயவர்தன, ஓய்வு பெற்ற நீதவான் பீ.ரோஹினி வல்கம, கலாநிதி அத்துலசிறி குமார சமரகோன் ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

சீல் உடைக்கப்படாது 02 மில். சமையல் Gas சிலிண்டர்கள்

அனைத்துக்கும் விரைவில் புதியவை

நாட்டில் சுமார் 1.8 மில்லியன் சீல் உடைக்கப்படாத சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இருப்பதாகவும், உடைக்கப்படாத சிலிண்டர்களின் அனைத்து உரிமையாளர்களுக்கும் ஒரே நேரத்தில் புதிய சிலிண்டர்களை வழங்குவது கடினமென்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் அனைத்து சமையல் எரிவாயு நிறுவனங்களின் செயற்பாடுகளிலும் நுகர்வோர்

04

லேக் ஹவுஸ் நிறுவன 'முத்து அஹுர' சஞ்சிகை சிறுவர் சித்திர கண்காட்சி நேற்று கொழும்பில் நடைபெற்றது. பிரதம அதிதி ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும சிறுவர் ஒருவருக்கு பரிசு வழங்குவதையும் நிறுவன தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ தயாரத்ன அருகில் நிற்பதனையும் காணலாம். (படம்: ரஞ்சித் அசங்க)

தீ விபத்தில் 8,200 கோழிகள் பலி

கொட்டதெனியாவ, வாரகல பிரதேசத்திலுள்ள கோழிப் பண்ணை ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சுமார் 8,200 கோழிகள் கருகி பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் கலாநிதி செய்யதினா முஃபத்தல் செய்ஃபுத்தீன் சஹெப், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று (11) மிரிஹானையில் அமைந்துள்ள ஜனாதிபதியின் இல்லத்தில் சந்தித்தார். ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் போரா சமூகத்தின் உறுப்பினர்கள் சிலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

அறிக்கை விடல், ஊடக மாநாடு நடத்துவதால் எவ்வித பயனுமில்லை

தொழிலாளர் வாழ்க்கைத் தரம் உயர அர்ப்பணிப்புடன் சேவைபுரிய வேண்டும்

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அறைகூவல்

பெருந்தோட்டத்துறையில் தொழில்புரியும் தோட்டத் தொழிலாளர்களது சம்பளம், வசிப்பிடம் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்துடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வரும் அதேவேளை, இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளை பெறுவதிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முனைப்பாக செயற்பட்டு வருவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களது நலன்களுக்காக தாமே பாடுபடுவது போல் சிலர் பாசாங்கு காட்டி வருகிறார்கள்.

04

08 கைதிகளின் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்

லொஹானுக்கு எதிரான CID விசாரணை ஆரம்பம்

அனுராதபுரம் சிறையில் தமிழ் கைதிகள் மிரட்டல்

லோரன்ஸ் செல்வநாயகம்

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சிலருக்கு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுத்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு விஷேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அனுராதபுரம் சிறைச்சாலைக்குள்

04

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

எங்கள் கருத்து

முற்போக்கு எழுத்தாளர்களுக்கு செ.கணேசலிங்கன் ஒரு திசைகாட்டி

இலங்கையின் முதுபெரும் நாவலாசிரியரும் முற்போக்கு சிந்தனையாளரும் மக்கள் நலன் கருதிய எழுத்தாளருமான செ.கணேசலிங்கன் அண்மையில் சென்னையில் காலமானதையிட்டு "தினகரன்" தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறது. 94 ஆவது வயதில் காலமான செ.கணேசலிங்கன் 1950களின் பிற்பகுதியில் தினகரனோடு நெருங்கிய தொடர்கொண்டு இலக்கிய பணியாற்றியவர். அக்காலத்தில் தினகரன் ஆசிரியராக இருந்த பேராசிரியர் க.கைலாசபதி முற்போக்கு இலக்கிய சிந்தனைக்கு கோட்பாட்டு ரீதியாக முழு வடிவம் கொடுத்தவர். அவருடைய மார்க்சிய சிந்தனைகள் ஈழத்து இலக்கியத்துக்கு ஒரு புதிய அடையாளத்தைத் தந்தது. அக்காலத்தில் இலக்குடனும் இலட்சியத்துடனும் ஈழத்து இலக்கியம் பயணித்தது என்றால், அதில் முழு பங்களிப்பையும் வழங்கியவர்களில் ஒருவராக செ.கணேசலிங்கன் விளங்கினார். காலங்காலமாக இருந்து வந்த இலங்கை இலக்கிய போக்கு இவர்கள் இருவரினதும் காலத்தில் ஒரு நிலைமாற்றத்தை பெற்றது.

ஆரம்பத்தில் காந்திய இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அவர் காந்திய சிந்தனையை ஒட்டி தீண்டாமை ஒழிப்பிற்காக ஓர் இயக்கத்தை வழிநடாத்தினார். பின்னர் இடதுசாரி சிந்தனையாளரான கார்த்திகேசு மாஸ்டரின் ஊடாக மார்க்சிய சிந்தனைகளை உள்வாங்கிய அவர், ஒரு செயலாற்றல் மிக்க இடதுசாரியாகவும் இலங்கையின் முற்போக்கு இலக்கிய இயக்கத்தை வழிநடத்திய ஒருவராகவும் பரிணமித்தார். அவருடைய நீண்டபயணம், சடங்கு, செவ்வானம் போன்ற நாவல்கள் அக்கால முற்போக்கு சிந்தனைகளை நன்கு பிரதிபலித்தன.

04

பாராளுமன்றத்தில் மீண்டும் தனது பெரும்பான்மையை நிரூபித்த அரசு

2022 பட்ஜட் மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் வெற்றி

2022ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 157 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன் எதிராக 64 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

04

TNA இல்லாமலேயே மூன்றிலிரண்டு எமக்குள்ளது

புலிகளை விடுவித்துத்தான் ஆதரவு கேட்கும் நிலையில் அரசு இல்லை

அவர்களே அதனை வைத்துக் கொள்ளட்டும்

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுதலை செய்துதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற வேண்டும் என்றால் அத்தகைய ஆதரவு அரசாங்கத்துக்கு தேவையில்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவ்வாறான

04

அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் முஸ்லிம் MPக்கள் குறித்த

சாணக்கியன் MPயின் குதர்க்க பேச்சுக்கு முபாரக் கண்டனம்

தேவைக்கு பாவிக்க முஸ்லிம்கள் என்ன கறிவேப்பிலையா எனவும் கேள்வி

அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து வரும் எதிரணியிலுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக அடிக்கடி எதிரானதும் குதர்க்கமானதுமான கருத்துக்களை தெரிவித்து வரும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தமது தேவைக்கு மட்டும் முஸ்லிம் தலைமைகளை

04

மனித நேயம் மிக்க யாழ். இளைஞனின் செயல்

முகநூலில் குவியும் பாராட்டுக்கள்

யாழ்ப்பாணத்தில் பல இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடி உள்ளிட்ட நகைப் பையை தவறவிட்டவர்களுக்கு இளைஞர் ஒருவர் இன்ப அதிர்ச்சியை கொடுத்துள்ளார். இச்சம்பவம் யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 9ஆம் திகதி வியாழனன்று அரியாலையிலிருந்து பயணிகள் பஸ்சில் ஏறும் போது கைப்பை ஒன்று தவற விடப்பட்டுள்ளது. அந்தப் பையில் தாலிக் கொடி உள்ளிட்ட பல பொருட்கள் இருந்துள்ளன. பணப்பையை கண்டெடுத்த இளைஞன் ஒருவர்

04

விக்கல் வீராச்சாமி

எரியுண்டு கொண்டு வந்த பூத–வுடலுக்கு அஞ்சலி செலுத்த புறப்பட்ட தலைவர் ஆறு மணி நேரமா வெயிட் பண்ணுறாரே, என்ன விஷயம் ...?

ஓ அதுவா, போட்டோ பிடிப்பவரும் வீடியோ எடுப்பவரும் இன்னமும் வர–வில்லையாம், அதுதான் தலைவர் செமகடுப்புல இருக்கிறார்...!!!

சிறந்ததொரு நாட்டின் முன்னோடியாக தேசிய இளைஞர் படையணி

ஒழுக்கம், தலைமைத்துவம், ஆளுமை விருத்தி என்ற மூன்று கருப்பொருளையும் அடிப்படையாகக் கொண்டு செயற்படும் தேசிய இளைஞர் படையணி ஏனைய அனைத்து இளைஞர் வலுவூட்டுதல்களையும் தாண்டி, சவால்களுக்கே சவால் விடுக்கும் ஆளுமையைக் கொண்ட பலம்வாய்ந்த இளைஞர் படையொன்றை கட்டியெழுப்புவதற்கு தெளிவானதும், முறையானதுமான பல்வேறு துறைகளில் செயற்பட்டு வருகின்றது.

நாட்டின் நாலாபுறத்திலிருந்தும் ஒன்று சேரும் இளைஞர் யுவதிகளை கீழ் மட்டத்திலிருந்து நிலையான, பெருமைமிகு அறிவை வழங்கி அவர்களின் எதிர்காலத்தை சிறந்த பாதையில் இட்டுச் செல்வதற்கு தேசிய இளைஞர் படையணி வலையமைப்பின் 800 இற்கும் குறையாத தகுதிவாய்ந்த ஆலோசகர் குழாம் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. முறையான பாடத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட கோட்பாட்டு ரீதியிலும் பிரயோக ரீதியிலும் ஆக்கபூர்வமாக மேற்கொள்ளப்படும் பயிற்சி நடவடிக்கைகளை மிகவும் விரிவுபடுத்தி 58 பயிற்சி நிலையங்களுக்கு மேலதிகமாக, தம்புள்ளை ஹோட்டல் பாடசாலை, வணிக செயன்முறை வெளிக்களப்படுத்தல் நிறுவனம் மற்றும் நாவுலை வெளிக்கள பயிற்சி நிலையம் இளைஞர் யுவதிகளுக்காக தாபிக்கப்பட்டுள்ளது. இவ்வனைத்து பயிற்சி பாடநெறிகளையும் இலவசமாக கற்க சந்தர்ப்பம் கிடைப்பதுடன், பயிற்சியின் பின்னர் தெரிவு செய்யப்படும் பயிலுனர்களுக்கு தம்மால் தெரிவு செய்யப்படும் தொழிற் பயிற்சிக்கு செல்வதற்கு புலைமைப்பரிசில், பயிற்சியின்போது மொழி அறிவு விருத்தி போன்ற பல்வேறு வரப்பிரசாதங்களும் கிடைக்கும்.

மென்திறன் விருத்தி பயிற்சியின் மூலம் தம்முள் காணப்படும் விசேட பண்புகளை முன்னிலைப்படுத்தி, மறைந்து காணப்படும் திறன்கள் மூலம் நல்ல பிரஜையொன்றை சமூகமயப்படுத்தும் பொறுப்பை சரியான முறையில் முழுமைப்படுத்தும் தேசிய இளைஞர் படையணி இவ்வருடம் முதல் புதிய ஒரு வகையுடன், அதிக பெறுமதியுடைய சான்றிதழை பயிலுனர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அடிப்படை பயிற்சி சான்றிதழுக்கு அதிக பெறுமதியை சேர்த்து, தகவல் தொழிநுட்பம் மற்றும் ஆங்கில மொழிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலம் அந்த

பாடங்களுக்கு உயர் சான்றிதழொன்றை வழங்குவது இதன் மூலம் இடம்பெறும். அதனூடாக பல்வேறு நிறுவனங்களுடன் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்ற நிறுவனமொன்றான SIBA நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் அடிப்படை பயிற்சி காலத்தினுள் தமது தொழிற் பாதையை வெற்றி கொள்ள தேவையான தகவல் தொழிநுட்பம் மற்றும் ஆங்கில மொழிக்கு உயர் சான்றிதழ் வழங்குவது இடம்பெறுகின்றது. இரு கட்டங்களாக இவ்வருடம் மார்ச் முதல் செயற்படுத்தப்பட்ட இந்த விசேட சான்றிதழ் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டதுடன், உலகத்தை பாதித்த தொற்று நோய் நிலைமை இலங்கையின் அனைத்து துறைகளிலும் வீழ்ச்சியை ஏற்படுத்துவதிலும் தாக்கஞ்செலுத்தியது. அவ்வாறெனினும், தேசிய இளைஞர் படையணியுடன் தொடர்புபட்ட பயிலுனர்கள் அவர்களுக்குரிய கால எல்லையில் தமது பயிற்சி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்தி வருவதில் கவனஞ்செலுத்தி, பயிலுனர்களுக்கு இணையத்தள வசதியுடைய சிம் கார்டுகளை இலவசமாக வழங்கி அவர்களின் பயிற்சி நடவடிக்கைகளை தொடர்வதற்கு அனைத்து நடைமுறைகளையும் மேற்கொண்டது. அதற்கமைய அனைத்து தடைகளுக்கு மத்தியிலும் கூட பயிற்சி இலக்குகளை சரியான முறையில் பூர்த்தி செய்வதற்கு நிலையப்பொறுப்பதிகாரி உள்ளிட்ட ஆலோசகர் குழு மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

நாட்டின் எதிர்காலம் ஆவது இளைஞர்களாவதுடன், நாட்டை மாற்றுவதற்கு அதிக திறன் காணப்படுவது இளைஞர்களுக்காகும் என்பது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தொலைநோக்காக அமைந்துள்ளது. பல்வேறு அமைச்சுக்களின் கீழ் செயற்பட்டுவந்த தேசிய இளைஞர் படையணி தற்சமயம் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் செயற்பட்டு வருகின்றது. இளைஞர்களை சக்திவாய்ந்தவர்களாக மற்றும் காலத்திற்கமைய எழச்செய்வதற்கு இன்றையை விட எதிர்காலத்தை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்கு, தமது பணியை புதுமையுடன் செயற்படுத்துவதற்கு தற்போதைய தவிசாளர் கேர்ணல் தர்ஷன ரத்நாயக்கவின் தூர நோக்குடைய வழிகாட்டுதலின் கீழ் அனைத்து ஆளணி அங்கத்தவர்கள் இளைஞர் யுவதிகள் ஆளுமையுடன், ஒழுக்கத்துடன், தலைமைத்துவத்துடன் மற்றும் திறன்களுடன் வலுவூட்டுவதற்கு பளுவான செயற்பாட்டை மேற்கொண்டுவருகின்றனர்.

அதேபோன்று அனைத்து செயற்பாடுகளின் பின்னாலும் பாரிய நெறிப்படுத்தலுடன் மற்றும் வழிகாட்டுதலுடன் செயற்படும் அமைச்சின் செயலாளர் அநுராத விஜேகோன் அவர்கள், மேலதிக செயலாளர் (இளைஞர் விவகாரம்) சமன் வடுகே அவர்கள் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் நினைவூட்டுவது கட்டாயமானதாகும். தேசிய இளைஞர் படையணி சபையின் அங்கத்தவர்கள், அனைத்து மாகாண பணிப்பாளர்கள், நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆலோசகர்கள் மற்றும் அனைத்து ஆளணி அங்கத்தவர்களின் அதீத தைரியம் மற்றும் அர்ப்பணிப்பு இல்லாவிட்டால் தேசிய இளைஞர் படையணி என்றால், தற்சமயமாகும் போதுஉண்மையாகாதஅல்லதுநடக்காதகனவாக மட்டும் இருந்திருக்கும்.

ஷலினி மனீஷா தொடங்கொட
ஊடகப் பிரிவு
தேசிய இளைஞர் படையணி

மூன்றாவது சிறகுநுனி சர்வதேச திரைப்பட விழா, மட்டக்களப்பில்



சிறகுநுனி கலை, ஊடக மையம் ஏற்பாடு செய்துள்ள 3ஆவது 'சிறகு நுனி சர்வதேச திரைப்பட விழா 2021' டிசம்பர் 17 முதல் 19 வரை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. 2018 டிசம்பர் முதல் நடைபெற்று வரும் இந்நிகழ்வு கொரொனாப் பரவல் காரணமாக கடந்த ஆண்டு இடம்பெறவில்லை. வழக்கமாக கல்லடி சாந்தி திரையரங்கில் ஏற்பாடு செய்யப்படும் இத் திரைப்பட விழா இம்முறை காத்தான்குடி/ ஆரையம்பதி பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ச்சியாக மூன்று தினங்கள் நடைபெறும் இவ்விழாவில் உலகத் தரமான முழுநீளத் திரைப்படங்கள்/ ஆவணப்படங்கள், குறும்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. திரையிடல்களின் நிறைவில் பார்வையாளர் கருத்துப்பகிர்வு இடம்பெறும். திரைப்படங்கள் யாவும் ஆங்கிலத்தில் / தமிழில் உபதலைப்பிடப்பட்டுள்ளன.

திரைப்பட விழாவின் ஆரம்ப நிகழ்வும் முதலாவது திரைப்படமும் டிசம்பர் 17 (வெள்ளி) பி. ப. 4.00 மணிக்கு இடம்பெறும். தொடர்ந்து வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 10.00, பி. ப. 4.00, மாலை 7.00 என தினமும் மூன்று காட்சிகளாக மொத்தம் 7 திரைப்படங்கள் இவ்விழாவில் திரையிடப்படவுள்ளன. முற்றிலும் இலவசமான இத் திரைப்பட விழா தொடர்பான மேலதிக விபரங்களை Sirahununi அல்லது Aathmaa En ஆகிய முகநூல்களிலும் www.sirahununi.com இணையத்தளத்திலும் sirahununi@gmail.com மின்னஞ்சல் மூலமாகவும் 0777 700043 எனும் தொலைபேசி இலக்கம் மூலமாகவும் திரைப்பட ஆர்வலர்கள் பெற்றுக் கொள்ள முடியும். தமிழ், முஸ்லிம் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் கருத்திற் கொண்டு சிறகுநுனி இச் செயற்பாட்டை ஆண்டு தோறும் முன்னெடுப்பதாக திரைப்பட விழா இயக்குனர் ஆத்மா ஜாபிர் தெரிவித்தார்.

14வது எடிசன் திரை விருது தெரிவு பட்டியலில் விஜயின் மாஸ்டர், தனுஷின் கர்ணன்



உலகத் தமிழ் ரசிகர்களால் கொண்டாடப்படும் எடிசன் தமிழ் திரை விருதுகள் 2022 தேர்வு பட்டியலில் அதிக இடங்களை பிடித்து முன்னணியில் விஜயின் மாஸ்டர் படமும், இரண்டாவதாக தனுஷின் கர்ணன் படமும், மூன்றாவதாக ஆர்யாவின் சார்பட்டா பரம்பரை படமும், சிவ கார்த்திகேயனின் டாக்டர் படமும் அதிக பிரிவுகளில் தேர்வு பட்டியலில் இடம்பெற்றுள்ளது என்பது தமிழ் சினிமா ஆரோக்கியமான இடத்திற்கு சென்றுள்ளது என்பதை உணர்த்துகிறது.

மாஸ்டர் திரைப்படம் 17 பிரிவுகளிலும், கர்ணன் திரைப்படம் 13 பிரிவுகளிலும், சார்பட்டா பரம்பரை திரைப்படம் 12 பிரிவுகளிலும், டாக்டர் திரைப்படம் 12 பிரிவுகளிலும், ஜெய் பீம் 9 பிரிவுகளிலும், மாநாடு 6 பிரிவுகளிலும் தேர்வு பட்டியலில் அதிகப்படியாக இடம்பெற்றிருப்பது திரைத்துறைக்கு ஆரோக்கியமான விடயமாகும்.

'இணையத்திலும், செயலியிலும் வாக்குப்பதிவு நடைபெற்று வரும் எடிசன் தமிழ் திரை விருதுகள் ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி சென்னையில் பிரமாண்டமாக நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் விருது மற்றும் தென்னிந்திய முன்னணி நட்சத்திரங்களின் கலை நிகழ்வு மற்றும் அயல்நாட்டு தமிழ் கலைஞர்கள் கலை நிகழ்ச்சியை படைக்க உள்ளனர்' என்று எடிசன் விருது குழு தலைவர் செல்வகுமார் மற்றும் செயலர் மலேசிய தீனா தெரிவித்தனர்.

JORDAN CLASSIC
FASHION APPAREL INDUSTRY
5000 தொழில் வாய்ப்புக்கள்
18 - 35 வயதுக்குட்பட்ட உங்களுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பு
இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்படுத்தல் மற்றும் சந்தை பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் பூரண கண்காணிப்பின் கீழ் தேசிய இளைஞர் படையணி மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்சி மூலம் தெரிவு செய்யப்படும் இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்படும் அடிப்படை பயிற்சியின் பின்னர் அதில் சித்தியடைந்தவர்களுக்கு பாடநெறி முடிவடைந்து ஒரு மாதத்தினுள் வெளிநாடு செல்லும் வாய்ப்பு
கீழ் காணப்படும் தொழிற்துறைகளில் ஈடுபடும் வாய்ப்பு...
◈ Machine Operator
◈ General Helper
இலவச
• பயிற்சி • மருத்துவ வசதிகள்
• தங்குமிட வசதி • உணவு பானம் • காப்புறுதி
• விமான டிக்கெட் மற்றும் விசா வசதிகள்
பாடநெறிக் காலம் - 1½ மாதங்கள்

Title	Total take home
Machine Operator	Rs. 56,000
General Helper	Rs. 42,000

ஒப்பந்த காலத்தை 3 வருடங்களாக சேவையை நீடிக்கும் வாய்ப்பு
க.பொ.த சா/த மற்றும் உ/த சித்தியடைந்தவர்களுக்கு பதவி உயர்வு பெறும் வாய்ப்பு
சம்பளத்துக்கு மேலதிகமாக மேலதிக கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு
சம்பளத்துடனான வருடாந்த விடுமுறை நாட்கள் 14 மருத்துவ விடுமுறை நாட்கள் 14
அழைக்கவும்
மேல் - 0773826921 / 0702587402
மத்திய மற்றும் வட மேற்கு - 0702587426 / 0716645603
தெற்கு - 0702587434 / 0702587418
சப்ரகமுவ - 0712050365 / 0718544213
ஊவா - 0770460352 / 0712666635
வடமத்திய - 0718289004 / 0714972223
கிழக்கு - 0776681559 / 0785989219
வடக்கு - 0710889436 / 0702587439
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
தேசிய இளைஞர் படையணி
மேலதிக விபரங்களுக்கு 0710377377

அரசியல் அரங்கம்

அர்ஜுன்

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் தமது பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என அமைச்சரவை இணைப் பேச்சாளரும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான டொக்டர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். எமக்கு வழங்கிய நேர்காணலின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கக் கூட்டணியில் பலமான பங்குதாரர்கள் சுதந்திரக் கட்சியினர்!

அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரண அளிக்கும் விளக்கம்

கே: ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் கூட்டணியாக செயற்பட முடியாத அரசாங்கத்தின் எந்தவொரு கட்சியும் ஆளும் கூட்டணியிலிருந்து வெளியேற முடியும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்திருந்தார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: நாம் பல கட்சிகளை உள்ளடக்கிய அரசாங்கம் என்பதுடன், நீண்ட காலமாகப் பல்வேறு கட்சிகளுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். எனினும், சில கொள்கைகள் குறித்து நமக்கிடையில் விவாதங்கள் காணப்பட்டன. கலந்துரையாடல்களின் மூலம் அந்த வேறுபாடுகளை களைய முடியும் என்ற எண்ணத்தில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் ஏனைய அனைத்துத் தலைவர்களும் உள்ளனர். இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு பாரிய பங்களிப்பை வழங்கிய சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகும் வகையில் தற்போது எந்த பிரச்சினையும் இல்லை.

கே: மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகி வருகிறது. ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான முறுகல் அதிகரித்திருப்பதன் வெளிப்பாடா இது?

பதில்: மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்து சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எந்தவிதமான கருத்துப் பரிமாற்றங்களும் இடம் பெறவில்லை. தேர்தலுக்கு இன்னமும் காலம் இருப்பதால் உரிய காலம் வரும் போது அது பற்றிப் பார்க்க முடியும். இது தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை களைய முடியுமாக இருக்கும்.

கே: அரசாங்கத்துக்குக் காணப்படும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையானது சுதந்திரக் கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்களினாலேயே சாத்தியமாகியுள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் அல்லவா?

பதில்: உண்மையில் சுதந்திரக் கட்சியின் 14 உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாகவே அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகிறது. அவர்கள் எமது கூட்டணியில் பலமான பங்குதாரர்கள். இரு கட்சிகளுக்கும் இடையிலான விவாதத்தின் விளைவாகவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறான கருத்தைக் கூறியிருந்தார். மறுபக்கத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தக்க வைப்பதற்கு சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் பங்கு முக்கியமானதாகும்.

கே: அந்நிய செலாவணி பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் நாடு மின்சாரத் தடையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: இது தற்பொழுது வித்தியாசமான விடயமாகக் காணப்படுகிறது. நாம் பாரிய அந்நிய செலாவணிக்கான தட்டுப்பாட்டை எதிர்கொள்கின்ற போதும் மருந்து மற்றும் மின்சார விநியோகம் என்பவற்றுக்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. இந்தத் துறைகளுக்கு எப்பொழுது அதிகமான டொலர் தேவை இருக்கின்றதோ அப்போது உரிய டொலரை வழங்குவோம். எனினும், இதுவரை அவ்வாறானதொரு அச்சுறுத்தல் எமக்குத் தெரியவில்லை. எனவே நாட்டுக்குத் தேவையான எரிபொருள் மற்றும் மின்சாரத்தை எம்மால் தொடர்ந்து வழங்க முடியும்.

கே: சேதன உரங்களை பயன்படுத்தியதால் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பில் அரசு ஏதாவது முடிவு எடுத்துள்ளதா?

பதில்: அறுவடைக்குப் பிந்திய நஷ்டம் ஏற்பட்டால், அதை முந்திய பருவத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்றும், அதை ஈடுகட்ட அரசு தயாராக இருப்பதாகவும் விவசாய அமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பெரும்போக நெற்செய்கை ஆரம்பமாகியுள்ளது. டிசம்பர் மற்றும் ஜனவரி இறுதிக்குள் அறுவடையை மதிப்பிட முடியும். அறுவடை கணிசமானளவு குறைந்திருந்தால் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க முடியும். ஆனால், தேவையான உரத்தை இறக்குமதி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளதால், அடுத்த பருவத்தில் இருந்து அந்த கேள்வி எழாது. மறுபக்கத்தில் சேதன முறையிலான விவாசயத்துக்கு சாகுபடிக்கு மானியத் திட்டத்தை அரசு தொடங்கும். எனவே, இந்தப் பிரச்சினை அடுத்த ஆண்டு பருவத்தில் தீர்க்கப்படும்.

கே: இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இயற்கை விவசாயத்துடன் கூடிய பசுமை விவசாயக் கொள்கையை அமுல்படுத்தும் தீர்மானத்தை எக்காரணம் கொண்டும் மீளப் பெற முடியாது என ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இதனை விளக்க முடியுமா?

பதில்: உண்மையில், இது ஒரு நல்ல முடிவு. உலகம் பசுமையான விவசாய முறைகளை நோக்கி நகர்கிறது. இதில் முன்னோடியாக இருப்பதற்கு நாம் முயற்சிக்கின்றோம் என்பதால் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் துணிச்சலான முடிவை எடுத்துள்ளது. எனினும், குறுகிய காலத்திற்குள் அதைச் செய்ய முடியாமல் போகலாம். அதனால்தான் நாம் வேறு தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். எனவே, அரசாங்கம், நீண்ட கால அடிப்படையில், இயற்கை விவசாயம் மற்றும் பசுமை விவசாயக் கொள்கைகளை ஊக்குவிப்பதில் ஆர்வமாக உள்ளது.

கே: பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த தேயிலைத் தோட்டங்களுக்கு உர மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்த ஏதாவது முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?

பதில்: கிடைக்கும் உரத்தின் அளவுக்கு அதனை விநியோகிக்க ஆரம்பித்துள்ளோம். பகுப்பாய்வு ரீதியாகப் பார்த்தால், 2020 இல் நாட்டிற்கு அதிகபட்ச உரம் இறக்குமதி செய்யப்பட்டது, ஆனால் ஒப்பிடுகையில் விளைச்சல் குறைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் தேயிலை தொழிற்துறையில் மிகக் குறைந்த விளைச்சலைப் பதிவு செய்துள்ளோம். 2013 ஆம் ஆண்டில், நாட்டில் அதிக தேயிலை உற்பத்தியைப் பதிவு செய்தோம், ஆனால் தேயிலைக்கான உரத்தின் இறக்குமதி அந்த ஆண்டு குறைந்த மட்டத்தில் இருந்தது. தற்போது மக்கள் உரத்தை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

விலை கொஞ்சம் அதிகமாக இருந்தாலும், அதே அளவைப் பயன்படுத்த வேண்டியதில்லை. அளவு வாரியாக இது குறைவாக இருக்க வேண்டும். அதேநேரம் சேதனப் பொருட்களுடன் இணைத்து அதனைப் பயன்படுத்த முடியும். மண்ணின் தரத்தை சரியானதாகப் பேண வேண்டியது மிகவும் முக்கியமானது. மண் பாதிக்கப்பட்டு வருகிறது. இதில் தேசனக் கூறுகள் இல்லாமல் போகின்றன. நாம் பன்முகத் திருத்த நடவடிக்கைகளை எடுக்காத வரை, இரசாயன உரங்களைப் பயன்படுத்தினாலும் அதனால் சிறந்த முடிவுகளைப் பெறப் போவதில்லை என்பது தெளிவாகிறது. பெருந்தோட்ட அமைச்சு மண்ணின் நிலையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

> “மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா இல்லையா? சு.கவுக்கும் பொதுஜன பெரமுனவுக்குமிடையில் இதுவரை கருத்துப் பரிமாற்றங்கள் இல்லை. தேர்தல் வரும்போது அதுபற்றிப் பார்க்க முடியும்”

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தக்க வைப்பதற்கு சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் பங்கு முக்கியம்

"இனவாத செயற்பாடுகளில் ராஜபக்ஷ குடும்பம் ஒரு போதும் ஈடுபட்டதில்லை"

பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல்

அஜ்வாத் பாஸி

ராஜபக்ஷ குடும்பம் இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களின் எதிரியல்ல என்பதையும் அவர்கள் எமது சமூகத்திற்கு எதிராக நாட்டில் ஒருபோதும் இனவாத செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லையென்றும் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார். இனிவரும் காலங்களில் எமது சமூகத்தின் தேவைகளை நீதியமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலிசப்ரி தலைமையில் எமது 11 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய நம்பிக்கையிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒழுங்கு செய்த விசேட கலந்துரையாடல் நிகழ்வு அண்மையில் (09) வெள்ளவத்தை 'மெரைன் கிரேன்ட்' வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 20ஆவது சட்டத்திருத்தத்திற்கு ஆதரவளித்த மு.கா பாராளுமன்ற உறுப்பினர்களான ஹாபிஸ் நஸீர் அஹமட், பைஸல் காசிம், எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் அ.இ.ம.கா உறுப்பினர்களான முஷர்ரப், இஷாக் ரஹ்மான், அலிசப்ரி ரஹீம் மற்றும் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய மர்ஜான் பளீல் எம்.பி, 1970ஆம் ஆண்டு முதல் பிரதமர் மஹிந்த குடும்பத்துடன் நெருங்கி பழகி வருகிறேன். அவர்களிடம் எந்த இனவாதத்தையும் நான் காணவில்லை. இவர்களை இனவாதியாக்கியோர் எமது முஸ்லிம் தலைமைகளே. இந்த உண்மைகளை விளங்கிய காரணத்தினால் எமது சமூகத்தைச்சேர்ந்த ஸ்ரீ ல.மு.கா மற்றும் அ.இ.ம.கா பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வித கோரிக்கையையும் அரசுக்கு முன் வைக்காமல் தேவையானதொரு காலகட்டத்தில் வேற்றுமைகளை மறந்து அரசாங்கத்தை பலப்படுத்துவதற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளமையை நான் பாராட்டுகின்றேன்.

எமது சமூகத்திலே ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு முஸ்லிம் தலைமைகளின் முனாபிக்கான நடவடிக்கைகளே காரணமென்பதை இவர்கள் இன்று விளங்கிவிட்டனர். அதன் காரணத்தினால் அக்கட்சிகளைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளார்கள். என்னுடன் சேர்த்து இந்த 11

பாராளுமன்ற உறுப்பினர்களும் நாம் ஒரே குடையின் கீழ் ஒற்றுமையாக எவ்வித எதிர்பார்ப்புமின்றி எமது சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்க தூய்மையான நோக்கோடு ஒன்றிணைந்துள்ளோம்.

அதேபோல் அமைச்சர் அலி சப்ரி உட்பட நாம் 11 பேரும் இணைந்து முஸ்லிம் சமூகத்தின் சில விடயங்கள் தேவைகள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டோம். இறைவனின் அருளால் அதற்கான பிரதிபலன்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. அதேபோல் அடுத்த வருட பட்ஜெட் நிதியிலும் கூடுதல் நிதி ஒதுக்கீடுகளை வழங்கவும் ஜனாதிபதியும் பிரதமரும் உறுதியளித்துள்ளார்.

இதனை நாம் தேவையானபோது வெளிப்படுத்துவோம். அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின்போது எனது தர்கா நகர் பிரதேசத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக நஷ்டஈடுகளை வழங்கினோம். ஆனால் நல்லாட்சியின்போது பாதிக்கப்பட்ட முஸ்லிம் பகுதிகளுக்கு ஒரு ரூபாய் கூட முஸ்லிம் தலைமைகளால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

அன்றைய ஆட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த எமது இந்த சகோதர பாராளுமன்ற உறுப்பினர்களின் உரையில் அதனை அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

முஸ்லிம் சமூகத்திற்கு நிறைய தேவைகள் இருக்கின்ற ஒரு காலகட்டத்தில் அரசாங்கத்தைவிட்டு பிரிந்திருந்து எதனையும் சாதிக்க முடியாது. இதனையே மர்ஹூம் எம்.எச். எம். அஷ்ரபும் எமக்கு கற்றுத்தந்தார். இவரின் கொள்கையை இன்றைய முஸ்லிம் தலைமைகள் கடைப்பிடிக்காமல் இருப்பது வேதனை தருகிறது எனவும் மர்ஜான் பளீல் எம்.பி இதன் போது தெரிவித்தார்.

புத்தளம் எலுவங்குளம் வீதியில் தனியார் பயணிகள் பஸ் விபத்து

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் எலுவங்குளம் பிரதான வீதியின் வன்னாத்திவில்லு பகுதியில் நேற்று (11) இடம்பெற்ற விபத்தில் 2 சிறுவர்கள் உட்பட 16 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

எலுவங்குளத்திலிருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் எதிர்த் திசையில் பயணித்த வேன் ஒன்றுக்கு இடம்கொடுக்க முற்பட்ட போது குடைசாய்ந்து வீதியோரத்தில் 04 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது இரண்டு சிறுவர்கள் உட்பட 16 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

காயமடைந்தவர்களில் 11 பேர் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 05 பேர் வண்ணாத்திவில்லு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு சென்றுள்ளதாகவும் வண்ணாத்தவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தில் வீதியின் அருகில் இருந்த மின் கம்பம் ஒன்றும் முழுமையாக சேதமடைந்துள்ளதால் வண்ணாத்திவில்லு பகுதியில் மின்சாரமும் தடைப்பட்டுள்ளது. விபத்து சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் வண்ணாத்திவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ப்ரேக் ஷா நாடக விழா ஆரம்ப நிகழ்வு சனிக்கிழமை (11)மாலை மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்றபோது ராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மங்கள விளக்கு ஏற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எஸ்.திசாநாயக, பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசீம் உமர், தமிழ் நாடகப் பிரிவுகளின் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொன். பத்மநாதனின் நூல் வெளியீட்டு விழா

பொன். பத்மநாதனின் பூக்கள் பூக்காத பூந்தோட்டம் சிறுகதை நூலின் வெளியிட்டு விழா எதிர் வரும்18/12/2021 அன்று மாலை.04.00 மணிக்கு கொட்டாஞ்சேனை நீவ் வைஷ்ணவி விகார் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் சிறப்பு அதிதியாக கலந்துகொள்வார்.

இலங்கை தமிழ் கலைஞர் சங்கமும் சிலோன் யுனெட்டெட் ஆர்ட்ஸ்டேஜ் அமைப்பும் இணைந்து நடத்தும் இந் நூல் வெளியிட்டு விழா ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தலைமையில் தேசபந்து லயன், ஆர், அசோக்குமார் முன்னிலையில் நடைபெறும். இவ்விழாவில் வரவேற்புரையை கலாபூஷணம் கே,செல்வராஜும் அறிமுகவுரையை கலைஞர் ராதா மேதாவும் நிகழ்த்தவுள்ளனர். முதல் பிரதியை சங்கத்தின் தலைவர் ஆர் ராஜ சேகரன் பெற்றுக்கொள்வார். நயவுரை மூத்த கலைஞர் கலாபூஷணம் கலைச்செல்வனும் ஏற்புரையை பொன்.பத்மநாதனும் நன்றியுரையை கலைஞர் கே. ஈஸ்வரலிங்கமும் தொகுப்புரையை அஜித்குமாரும், விஜேயும் நிகழ்த்தவுள்ளனர்.

ஐ.நா. உதவிச் செயலாளர் நாளை இலங்கை வருகிறார்

ஐக்கிய நாடுகள் சபைக்கான உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்கினராஜா ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை (13) இலங்கை வருகிறார்.

அவர் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உதவி நிர்வாகி மற்றும் அதன் ஆசிய பசிபிக் பிராந்தியப் பணிப்பாளராகவும் உள்ளார்.

அண்மையில் முடிவடைந்த COPE 26 உலக காலநிலை மாநாட்டின் முடிவுகள் மற்றும் பிராந்தியத்தினுள் கொவிட் தொற்றுக்குப் பிந்திய பொருளாதார மீட்சி என்பவற்றை ஆராய்வதே உதவிச் செயலாளர் நாயகத்தின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும்.

இதன்போது அவர் விசேடமாக மனிதவள அபிவிருத்தித் துறையின் வெற்றிக்காக, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை விரைவுபடுத்துவதில் கவனம் செலுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றி

பண்டிகைக் காலங்களில் அவதானமாக இருங்கள்

காதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல

பண்டிகைக் காலங்களில் பொது மக்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டமென சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கேட்டுக்கொண்டுள்ளார்.

தடுப்பூசி நடவடிக்கை திருப்திகரமான வகையில் முன்னெடுக்கப்படுவதனால் நாடு இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தை மக்கள் பாதுகாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறினால் இந்த ஆண்டு புத்தாண்டுக் கொத்தணி உருவானதைப் போன்று புதிய கொத்தணி உருவாகக் கூடுமென அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலப்பகுதியில் நடத்தப்படும் அனைத்து குடும்ப ஒன்றுகூடல்கள் மற்றும் விழாக்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார். கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான இலகுவான வழி, ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதே என பலர் கூறினாலும், அத்தகைய நடவடிக்கையினால் உள்ளூர் பொருளாதாரம் வீழ்ச்சியடையமென அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சாணக்கியன் MP யின் குதர்க்க...

கறிவேப்பிலையாக பயன்படுத்த முயல்கிறரென

ஐக்கிய காங்கிரஸ் மற்றும் உலமா கட்சிகளின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் குற்றம் சாட்டியுள்ளார். தமிழ் முஸ்லிம் ஒற்றுமையை தொடர்பாக கூறும் சாணக்கியன் எம்பி கல்முனை விவகாரம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் தொடர்பாக முஸ்லிம் மக்களை புறக்கணித்து வருகிவது மிகவும் வருத்தத்துக்குரிய விடயமாகும். அத்துடன் தமது தேவைகளுக்கு அரசாங்கத்துடன் உரையாடல்களை நடத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் மக்கள் தமது தேவைகளை அரசாங்கத்துடன் இணைந்து நிறைவேற்றிக் கொள்ள முயல்வதை விரும்பவில்லையா? எனவும் முபாறக் அப்துல் மஜீத் கேள்வியெழுப்பியுள்ளார்.

எனவே ஒற்றுமைப் பற்றி பேசுவோர் உண்மையான இதய சுத்தியுடன் பேச வேண்டுமே தவிர, பேசிவிட்டு அதனை வீடியோ எடுத்து முக நூலில் பதிவேற்றுவதற்காக அல்லது பத்திரிகைகளில் செய்திகளை வெளியிடுவதற்காக பேசக்கூடாதெனவும் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுடன் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதையே விரும்புகிறார்கள். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இருவரும் சேர்ந்து பயணிப்பது உண்மையான பலனைத்தரும். ஆனால் அடுத்த பல வருடங்களுக்கு இன்றைய ஆட்சியே தொடர்ந்து இருக்கும். அதனால் ஆட்சியாளர்களுடன் இணைந்து சென்று காரியங்களை செய்வது சிறந்த பலனைத் தரும். இதனை விடுத்து வேகமாக நடந்து கொள்வதனால் தமக்கு வாக்களித்த மக்களுக்கு அரசியல் தலைவர்களால் எதனையும் செய்ய முடியாது போய் விடும். எனவே இதனை சாணக்கியன் போன்ற இளம் தலைவர்கள் மனதில் கொள்ள வேண்டுமெனவும் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்

சீல் உடைக்கப்படாது சமையல்...

பாதுகாப்பு அதிகார சபை அதிகம் கவனம் செலுத்துவதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்காலத்தில் எரிவாயு பிரச்சினைகளைத் தடுக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுமென லிட்ரோ நிறுவனத் தலைவர் துஷார ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

உடைக்கப்படாத சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தற்போது நுகர்வோருக்கு கிடைக்கின்றன. பணத்தை திரும்பப் பெறும் நடவடிக்கை முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும், எரிவாயு சிலிண்டர்களை உடனடியாக திருப்பித் தருவது கடினமாக இருக்கலமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் எரிவாயு நுகர்வோர் இன்னும் சீல் உடைக்கப்படாத எரிவாயு சிலிண்டர்களை விநியோஸ்தர்களிடம் திருப்பித் தர தயங்குகின்றனர். அவர்கள் புதிய சிலிண்டர்களை வழங்கவுள்ளனர். ஆனால், சீல் உடைக்கப்படாத எரிவாயு சிலிண்டர்களை விநியோஸ்தர்களிடம் திருப்பி கொடுத்தாலும், புதிய சிலிண்டர்களை வழங்கத் தயங்க மாட்டமென சமையல் எரிவாயு சிலிண்டர் நுகர்வோர் கூறுகின்றனர்.

லொஹானுக்கு எதிரான...

சென்று, தமிழ் அரசியல் கைதி ஒருவரின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்திய சம்பவம் காரணமாக தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 08 தமிழ் அரசியல் கைதிகள் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் குற்றவியல் சட்டக் கோவையின் கீழ், விசாரணைகளை முன்னெடுக்குமாறுபொலிஸ் மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் கடந்த ஒக்டோபர் 21 ஆம் திகதி உத்தரவிட்டது.

இதற்கமைய,பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் கீழ் இந்த விசாரணைகளை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு ஆரம்பித்துள்ளது.

அதன்படி , முன்னெடுத்துள்ள விசாரணையில், அனுராதபுரம் சிறைச்சாலையின் இரு கைதிகள், 07 சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 09 சிறைக் கைதிகளின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இம்மனு மீதான பரிசீலனைகளின் போது குற்றவியல் விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டிருந்த்துடன் தற்போது அதன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பூபாலசிங்கம் சூரியபாலன், மதியரசன் சுலக்ஷன், கணேஷன் தர்ஷன், கந்தப்பு கஜேந்திரன், இராசதுரை திருவருள், கணேசமூர்த்தி சிதுர்ஷன், மெய்யமுத்து சுதாகரன், ரீ.கந்தரூபன் ஆகிய அரசியல் கைதிகளே அம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் மீண்டும்...

நேற்று முன்தினம் மாலை 06.05 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெற்றது.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் 2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் (வரவுசெலவுத் திட்ட உரை) நவம்பர் மாதம் 12 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது. நவம்பர் 13 சனிக்கிழமை முதல் நவம்பர் 22ஆம் திகதி வரை 07 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றது.

நவம்பர் 22ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 153 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நவம்பர் 23ஆம் திகதி குழுநிலை விவாதம் ஆரம்பமானதுடன், சனிக்கிழமைகள் உள்ளடங்கலாக இன்று வரை (டிசம்பர் 10) 16 நாட்கள் குழுநிலை விவாதம் நடைபெற்றது.

சர்வதேச கடலில் மற்றுமொரு...

போதைப் பொருட்களை ஏற்றிச் செல்வதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து இலங்கைக்கு தெற்கே சுமார் 900 கடல் மைல் தொலைவிலுள்ள சர்வதேச கடற்பரப்பில் வைத்து கைப்பற்றப்பட்ட மேற்படி வெளிநாட்டு மீன்பிடி படகு இலங்கை கடற்படையினரின் கப்பல் மூலம் கரைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கெப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை கடற்படையினரால் அண்மைக்காலத்தில் கடலில் நடத்தப்பட்ட போதைப் பொருள் தடுப்புநடவடிக்கைகளில்290கிலோ ஹெரையினுடன் உள்ளூர் மீன்பிடிக் கப்பல் ஒன்று 2021 ஆகஸ்ட் 30ஆம் திகதி கைப்பற்றப்பட்டது.

அதேபோன்று கடந்த செப்டம்பர் 04 மற்றும் 10ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது 336 கிலோ மற்றும் 170 கிலோ ஹெரையின்களை ஏற்றிச் சென்ற மேலும் இரண்டு வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களையும் கடற்படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந்த ஆண்டு மாத்திரம் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் கடத்தல் முறியடிப்பு நடவடிக்கைகளின் மூலம் 13.16 பில்லியன் ரூபாய் பெறுமதியான போதை பொருட்களை கைப்பற்ற முடிந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவிக்கின்றது.

இதேவேளை, போதைப் பொருளுடன் தற்போது கைப்பற்றப்பட்டுள்ள படகு எதிர்வரும் சில தினங்களில் கடற்படையினரால் கரைக்கு கொண்டுவரப்படவுள்ளதுடன், 06 வெளிநாட்டு பிரஜைகளுடன் மேற்படி கப்பல் விசாரணைகளுக்காகவும் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட உள்ள சட்ட நடவடிக்கைகளுக்காகவும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் இலங்கை கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

மனித நேயம் மிக்க யாழ்...

உரியவர்களிடம் கொடுத்துள்ளமை பலருக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ் அரியாலையை சேர்ந்த தியானேஸ் மதுசன் (வயது 22) என்ற இளைஞனே இவ்வாறு உரியவர்களிடம் ஒப்படைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

பஸ் வந்துவிட்டது என்ற பரபரப்பில் அவசரமாக ஏறும்போது, அரியாலை பஸ் தரிப்பிடத்தில் கைப்பை தவறி கீழே விழுந்ததை அதன் உரிமையாளர் கவனிக்கத் தவறிவிட்டார்.

ஆனால் அந்தவழியாகச் சென்ற மதுசன் அந்தக் கைப்பை எடுத்துத் திறந்து பார்த்த போது அதிர்ச்சியடைந்துள்ளார். உள்ளே தாலிக்கொடி உள்ளிட்ட நகைகள் இருந்துள்ளன.

பணப்பையிலிருந்து உரிமையாளரின் தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து, விடயத்தைக் கூறியதோடு, கைப்பைக்கு உரியவரின் அறிவுறுத்தலுக்கமைய யாழ்ப்பாண உறவினரிடம் நேரில் சென்று ஒப்படைத்துமுள்ளார்.

சமகாலத்தில் தங்கத்தின் விலை மிகவும் உயர்ந்த மட்டத்திலுள்ளது. பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை கண்டெடுத்த போதும், அதனை உரியவர்களிடம் ஒப்படைத்த அவரின் நேர்மையான செயல் குறித்து சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்பட்டு வருகிறது.

புலிகளை விடுவித்துத்தான்...

சிந்தனையுடையவர்களின் ஆதரவு எமது அரசாங்கத்திற்குத் தேவையில்லை அவர்களே அதனை வைத்துக் கொள்ளட்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பி ராஜமாணிக்கம் சாணக்கியன் நிதியமைச்சின் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது முன்னாள் புலி உறுப்பினர்களான தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே குழுநிலை விவாதத்தில் தாம் உரையாற்றிய போது அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர:

இந்த நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவாகவோ அல்லது விடுதலைப்புலிகள் தலைதூக்கவோ இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் போவதில்லை.

அவ்வாறு அவர்களின் நிபந்தனையுடன் தான் அவர்களது வாக்குகளை பெற்றுக் கொள்ள வேண்டி நேரிட்டால் அவ்வாறான வாக்குகள் எயக்குத் தேவையில்லை.எமது அரசாங்கத்திற்கு பெரும்பான்மை பலம் உள்ளது.

எதிர்வரும் தேர்தலிலும் நாமே வெற்றி பெறுவோம். தேவையற்ற நிபந்தனைகளுடன் நாம் எவரது ஆதரவையும் நாடப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தொழிலாளர் வாழ்க்கைத் தரம் உயர ...

தமது ஆட்சியில் 50 ரூபா சம்பள அதிகரிப்பைக்கூட பெற்றுத் தர முடியாது போனவர்கள் இன்று தோட்டத் தொழிலாளருக்கு 2,500 ரூபா சம்பளம் வேண்டுமென்று குரல் கொடுப்பது மிகவும் வேடிக்கையாக உள்ளது.

மழை பெய்தால் இடிந்துவிழும் வீடுகளையும், காற்றில் பறக்கும் கூரைகளைக் கொண்ட குடியிருப்புகளையும் அமைத்துக் கொடுத்தவர்கள் இன்று நாம் கட்டிக்கொடுக்கும் தரமான வீடுகளைப் பற்றி விமர்சிக்கின்றனர். இந்த செயல்களை சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும். பல நூறு வருடங்களாக வறுமைக்கோட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர்களது வாழ்வில் உயர்ச்சியை காண்பதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு தயவுடன் முட்டுக்கட்டை போட வேண்டமென்றும் தான் கேட்டுக் கொள்வதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அறிக்கைகளை விடுவதும் பத்திரிகையாளர் மாநாடுகளை மட்டுமே நடத்தி கருத்துக்களை கூறுவதும் ஒரு பயனற்ற செயல். அதனால் ஆகப் போவது எதுவுமில்லை. எனவே செயலில் ஈடுபடவேண்டும். களத்திற்குச் செல்ல வேண்டும். அங்கு திறமைகளை காட்ட வேண்டும். அதனை இன்று செவ்வனே செய்யும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளை மலையகத்தில் உள்ள எவரும் குழப்ப வேண்டமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். மலையகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மட்டுமே தொழிலாளர் நலனில் அதிக அக்கறை செலுத்தும் ஒரு தொழிற்சங்கம் ஆகும். அது அதிக அங்கத்தவர்களை கொண்டது. அது அறிக்கைகளை மட்டும் விட்டு பிரசாரம் தேடும் ஒரு தொழிற்சங்கம் அல்ல. அதனால் தொழிலாளர்களது வாழ்வு வளம் பெற அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவது அவசியம். தொழிலாளர்களது வாழ்வுடன் அரசியலை கலக்காது தூய்மையான சேவைக்கு முன்வருமாறும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அழைப்பு விடுத்துள்ளார்.

முற்போக்கு எழுத்தாளர்களுக்கு செ.கணேசலிங்கன் ...

மார்க்சியவாதிகளான இவர்கள் அக்கால சமூக ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள். "உயர்ந்தவன் தாழ்ந்தவன், தொழிலாளி, முதலாளி, ஆண்டான்,அடிமை என்ற ஏற்றத்தாழ்வுகள் முற்றாக ஒழித்துக்கட்ட வர்க்கப் போராட்டம் ஒன்றினால் தான் முடியும்" நடைமுறையிலுள்ள ஏற்றத்தாழ்வான சமூகத்தை வேறு வழிகளில் திருத்தி அமைக்க முடியாது என்பதை உணர்ந்து மார்க்சிய சித்தாந்தத்திற்குள் ஊறித் திளைத்த செ.கணேசலிங்கன் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் துன்பங்களையும் அவலங்களையும் தமது நாவல்களில், சிறுகதைகளில் கதை நாயகர்கள், சம்பவங்களினூடாக யதார்த்தமாக எடுத்துக்காட்டி, பின் வந்த முற்போக்கு எழுத்தாளர்களுக்கு ஒரு திசைகாட்டியாக விளங்கினார்.

இவர் இந்தியாவில் வாழ்ந்த முப்பது வருட காலத்தில் இவரது நாவல்களும் இலக்கிய சிந்தனைகளும் மார்க்சிய இலக்கிய சிந்தனைகளும் தமிழக இலக்கிய ஆர்வலர்களையும் பெரிதும் கவர்ந்தன. இவரது நாவல்கள் பல பல் கலைக்கழகங்களில் பட்டபின்நிலை ஆய்வுகளுக்காக தெரிவு செய்யப்பட்டன. படைப்பிலக்கிய சாதனைகளுக்கு அப்பால் செ.கணேசலிங்கன் நிறுவி நடாத்தி வந்த குமரன் பதிப்பகம் இன்று வரை 900க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டு, முதல்தரமான தமிழ் பிரசுராலயம் என்ற பெயருடன் விளங்குகிறது. பேராசிரியர்கள், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோரினுடைய மிகச் சிறந்த நூல்களை இப் பதிப்பகமே வெளியிட்டது. அனேகமாக இலங்கையில் தமிழ்ச் சூழலில் பணியாற்றும் பேராசிரியர்கள், புலமையாளர்கள் அனைவருமே மனமுவந்து நாடும் ஒரு பதிப்பகத்தை உருவாக்கிய பெருமை கொண்டவர் அவர்.

தமது நாவல்கள் சிறுகதைகள் என்பவற்றுக்கப்பால் 'குமரன்' என்ற சஞ்சிகையினூடாகவும் ஏனைய புனைவு சாரா பல நூல்களினூடாகவும் தனது சிந்தனைகளை வெளிப்படுத்தினார். சமகால இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்துக்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் இலக்கியங்களாகவும், குரலாகவும் வெளிவர க.கைலாசபதி, செ.கணேசலிங்கன் ஆகியோர் வகுத்துக் கொடுத்த இலக்கியப் பாதை மிகப் பிரதானமானது. தினகரன் செய்திப் பத்திரிகையாக மட்டுமல்லாது,

செ.கணேசலிங்கன் போன்ற பல்வேறு முற்போக்கு எழுத்தாளர்களுக்கும் இலக்கிய களத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளது. தினகரனை ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தளமாக பேரரங்காக அமைத்துக் கொடுத்த பெருமை முன்னாள் பிரதம ஆசிரியர்களான பேராசிரியர் க.கைலாசபதி, ஆர்.சிவகுருநாதன் ஆகியோரையே சேரும் என்பதை நினைவு கூர்ந்து தினகரன் மறைந்த ஈழத்து எழுத்தாளர் செ.கணேசலிங்கன் ஐயாவுக்கு தனது ஆத்மார்த்தமான அஞ்சலியை செலுத்துகின்றது.

சர்ச்சைகளை வென்று நிற்கும் "ஆரியகுளம் மகிழ்வூட்டல் திடல்"

மயூரப்பிரியன்...

ஆரிய குள புனரமைப்பு சர்ச்சைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு, சர்ச்சைகளுடன் திறக்கப்பட்டு, சர்ச்சைகளுடன் அடுத்த கட்ட புனரமைப்பு பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஆரியகுளம் அமைவிடம்

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து, சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்திலும், யாழ். மத்திய புகையிரத நிலையத்தில் இருந்து சுமார் 1 கிலோ மீற்றர் தூரத்திலும் , பருத்தித்துறை வீதி ஸ்ரான்லி வீதி சந்திக்கும் சந்தியில் அமைந்துள்ளது. அருகில் நாக விகாரையும் அமைந்துள்ளது.

பெயர் எவ்வாறு வந்தது?, எப்போது வந்தது?

ஆரியகுளத்தை யாழ்ப்பாண அரசுடனும், அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும் போது ஆரியகுளம் என்ற பெயர் எவ்வாறு வந்தது?, எப்போது வந்தது?, எந்த மன்னன் காலத்திற்கு உரியது? இக்குளம் யாருக்குச் சொந்தமானது? என்பன தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களும், பல கேள்விகளும் மக்களிடமும், வரலாற்று ஆர்வலர்களிடமும் நீண்டகாலமாக இருந்து வருகின்றது. அது தொடர்பில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் எழுதிய கட்டுரை ஒன்றில் ,

"தமிழ்ப் பேரகராதியில் ஆரியன் என்ற சொல்லுக்கு தலைவன், பிராமணன் என்ற பொருள்களும் உள்ளன.

பாண்டியப் படை, கி.பி.13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகரகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தது.

இதனால் இவ்வரசு பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு என்றே அழைக்கப்படுகின்றன. இதனால் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த தொடக்ககால மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்பதை ஒரு வம்சப் பெயராகக் கொண்டு தமது பெயருடன் ஆரியன் என்ற பெயரையும் இணைத்துக் கொண்டனர்.

யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச் சக்கரவர்த்திகளின் முக்கிய வரலாற்று அடையாளமாக இது பார்க்கப்படுகின்றது.

மேலும் ஆரியச்சக்கரவர்த்திகள் வாழ்ந்த தென்தமிழகத்தில் அதிலும் குறிப்பாக பாண்டியரின் ஆதிக்கம் நிலவிய இடங்களில் ஆரியகுளம், ஆரியநல்லூர், ஆரியச்சக்கரவர்த்தி நல்லூர், ஆரியகவுண்டனனூர், ஆரியக்கவுண்டன் வளவு முதலான பெயர்கள் பரந்த பிரதேசத்திற்குரிய இடப்பெயர்களாக உள்ளன.

அதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் என்ற அதே பெயர் தென்தமிழகத்தில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பெயராக இருப்பது யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் ஆரியச்சக்கரவத்திகளின் ஆட்சியை நினைவுபடுத்த தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

ஆரியகுளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவரத்திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு வேறு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை" என குறிப்பிட்டுள்ளார்.

கவனிப்பாரற்று காணப்பட்ட குளம்.

யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்புடைய மரபுரிமை சின்னமாக பேணப்பட வேண்டிய ஒரு குளம், அதுவும் நகர் மத்தியில் காணப்படும் குளம் கவனிப்பாரற்று காணப்பட்டது.

ஆகாய தாமரைகள் வளர்ந்தும் , பொலித்தீன் , பிளாஸ்டிக் கழிவுகள் என குப்பைகளாலும் நிறைந்தும் காணப்பட்டது. அந்நிலையிலையே இந்த ஆண்டு ஆரம்பத்தில் மாநகர சபையை கைப்பற்றி ஆட்சி அமைத்து முதல்வரான சட்டத்தரணி வி.மணிவண்ணன், தனது தேர்தல் வாக்குறுதியான "தூய கரங்கள் தூய நகரம்" திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் வேலைத் திட்டங்களை ஆரம்பித்தார்.

அதன் ஒரு கட்டமாக நகர்ப் பகுதியில் உள்ள வெள்ள வாய்க்கால்கள் , மற்றும் குளங்களை துப்பரவு செய்யும் திட்டத்தை ஆரம்பித்தார். அதனை தொடர்ந்து நகர் பகுதிகளில் உள்ள குளங்களை புனரமைத்து அழகு படுத்தும் செயற்திட்டங்களையும் ஆரம்பித்தனர்.

குள புனரமைப்புக்கு உதவி கோரல்

அதற்காக கொடையாளிகளிடம் உதவிகளையும் கோரினார்கள். இவர்களின் கோரிக்கையை அடுத்து தியாகி அறக்கொடை நிறுவனர் வாமதேவா தியாகேந்திரன் ஆரிய குள புனரமைப்பு மற்றும் அழகு படுத்தலுக்கான நிதியுதவியை வழங்க முன்வந்தார்.

அதனை அடுத்து புனரமைப்பு மற்றும் அழகு படுத்தலுக்கான திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டு செலவு மதிப்பீடு செய்யப்பட்ட போது, சுமார் 4 கோடி ரூபாய் எனத் தெரியவந்தது. அதற்கான நிதியினை தருவதாக தியாகி அறக்கொடை நிறுவனர் உறுதியளித்தார்.

புனரமைப்பு பணிகள் 4 கட்டமாக திட்டமிடப்பட்டு , கடந்த யூலை மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் ஆரம்பமாகின, முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட பணிகள் தற்போது நிறைவடைந்து கடந்த 2ஆம் திகதி திறப்பு விழா நடைபெற்றது.

குறித்த இரண்டு கட்ட பணிகளையும் நிறைவு செய்வதற்கு சுமார் 2 கோடியே 80 இலட்ச ரூபாய் செலவானதாக கூறப்படுகிறது. மூன்றாம் மற்றும் நான்காம் கட்ட பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குளத்தின் அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றினை வாங்குவதற்கான மதிப்பீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அத்துடன் , குளத்தின் நடுவில் ஒரு சிற்றுண்டி சாலை அமைக்கும் திட்டமும் உள்ளது. அத்துடன் சில பணிகளும் உள்ளன. அவையே மூன்றாம் நான்காம் கட்ட பணிகளாகும்.

புனரமைப்பு பணியும் – எதிர்ப்பரசியலும்.

ஆரியகுளம் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியானதும், சமூக ஊடகங்கள் உள்ளிட்டவற்றில் பலரும் அதனை வரவேற்றத்துடன், அது தொடர்பிலான அபிப்பிராயங்களையும் வெளியிட்டனர்.

அதனை தொடர்ந்து எதிர்ப்பரசியல் தொடங்கப்பட்டது. அதிலும் குறிப்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் ஆரிய குளம் புனரமைப்பு பணிகளை கடுமையாக எதிர்த்தார்கள்.

அதில் வேடிக்கையான விடயம் என்னவெனில் , உள்ளூராட்சி சபை தேர்தல் காலத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டவர்கள் "தூய கரங்கள் தூய நகரம்" என வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆரிய குளம் புனரமைப்பும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அந்நிலையில் கடந்த பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்ததுடன், தற்போதைய முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்ட 10 மாநகர சபை உறுப்பினர்கள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி அல்லாது, தமிழ் தேசிய மக்கள் முன்னணி என தனித்து இயங்குகின்றார்கள். தமது கட்சியை விட்டு, தனித்து இயங்குவதானல், அவர்கள் முன்னெடுக்கும் திட்டங்களை எதிர்த்து, எதிர்ப்பரசியல் செய்வதனை வழமையாக்கி கொண்டுள்ளார்கள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர்.

குளத்தை புனரமைத்தால் சிங்களமயமாகும் என எதிர்ப்பு

அதன் ஒரு கட்டமாகவே, ஆரிய குளத்தினை புனரமைப்பு செய்தால், அருகில் பௌத்த விகாரை காணப்படுவதனால் , புத்தர் சிலை வைக்கப்படலாம் , விகாராதிபதி குளத்தை சொந்தமாக்கலாம் , அருகில் வயல்கள் இல்லாத நிலையில் எதற்காக குளத்தை புனரமைக்க வேண்டும்? குளத்தை தூர்வாரி புனரமைத்தால், குளத்தின் கீழ் உள்ள களிமண் படலம் அகற்றப்படலாம் அதனால் குளத்தில் நீர் தேங்கி நிற்காது என கடுமையாக புனரமைப்பு மற்றும் அழகு படுத்தல் திட்டத்தை எதிர்த்தனர்.

அவர்களின் எதிர்ப்பையும் மீறி அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் ஆரம்பமாகின. அதன் போது திட்ட வரைவு மக்கள் பார்வைக்கு வெளியிடப்பட்டது. அதில் குளத்தின் நடுவில் சிற்றுண்டிச்சாலை அமைக்கப்படும் படம் இருந்தது.

உடனே எதிர்ப்பரசியல் செய்தவர்கள் குளத்தின் நடுவில் உள்ளது சிற்றுண்டி சாலை அல்ல அது கொழும்பில் உள்ள "கங்காராம விகாரையை" ஒத்தது. என விமர்சனங்களை முன் வைத்தது சர்ச்சைகளை கிளப்பினார்கள்.

அதனால் ஏற்பட்ட சர்ச்சைகளுக்கு பதில் அளிக்கும் முகமாக கடந்த ஒக்டோபர் 27ஆம் திகதி "ஆரியகுளத்தில் எந்தவொரு மத அடையாளச் சின்னங்களும் அமைக்கப்பட முடியாது" என யாழ்.மாநகரசபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனை தொடர்ந்து சர்ச்சை முடிவுக்கு வந்தது.

நிதி பங்களிப்பு செய்தவருக்கு எதிராக விமர்சனம்

பின்னர் புனரமைப்பு பணிக்கு நிதி உதவி வழங்கும் தியாகி அறக்கொடை நிறுவனர் தொடர்பில் விமர்சனங்களை முன் வைத்தனர். அவரின் நிதி பங்களிப்புடன் இராணுவத்தினர் ஊடாக முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டம் உள்ளிட்ட மக்கள் நல திட்டங்களை வைத்து , அவர் இராணுவத்தின் முகவர் என விமர்சனங்களை முன் வைத்து சர்ச்சைகளை கிளப்பினார்கள். அவையும் பெரியளவில் சலனத்தை ஏற்படுத்தவில்லை.

அவ்வாறான எதிர்ப்புக்கள், சர்ச்சைகளையும் தாண்டி முதலாம் மற்றும் இராண்டாம் கட்ட புனரமைப்பு மற்றும் அழகுபடுத்தல் திட்டங்கள் நிறைவு பெற்று டிசம்பர் 2ஆம் திகதி திறப்பு விழா என நாள் குறிக்கப்பட்டது.

தொடர் 20ஆம் பக்கம்...

இந்தியாவின் முதலாவது முப்படை தலைமைத் தளபதியான விபின் ராவத்

நீலகிரி விமானப்படை ஹெலிகாப்டர் விழுந்து நொறுங்கிய நிகழ்வில் இந்தியாவின் முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் உயிரிழந்தார்.

பிபின் ராவத், அவரது மனைவி மதுலிகா ராவத் மற்றும் 11 பேர் குன்னூர் அருகே நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

க்ரூப் கப்டன் வருண் சிங் எனும் விமானப்படை அதிகாரி இப்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு படைகளின் ஊழியர்களுக்கான கல்லூரியில் நடக்க இருந்த ஒரு நிகழ்வுக்காக பிபின் ராவத் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து நடந்துள்ளது.

பிபின் லக்ஷ்மன் சிங் ராவத் 1958ஆம் மார்ச் மாதம் 16ஆம் திகதி பிறந்தார். அவர் பிறந்த ஊர் இப்போதைய உத்தராகண்ட் மாநிலத்தில் இருக்கும் பௌடி. இந்தியாவின் முதல் முப்படை தலைமைத் தளபதியாக ஜெனரல் பிபின் ராவத் கடந்த 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் நியமிக்கப்பட்டார். அதற்கு முன் இந்திய ராணுவத் தளபதியாக இவர் இருந்தார். ஜெனரல் பிபின் ராவத், சிம்லாவில் உள்ள செயிண்ட் எட்வர்ட் பள்ளியில் படித்தார். பின்னர் கடக்வாஸ்லாவில் உள்ள தேசிய பாதுகாப்பு அகடமியில் படித்தார். அவர் 1978ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் டேராடூனில் உள்ள இந்திய ராணுவ பயிற்சி அகாடமியில் உள்ள பதினோராவது கூர்கா ரைஃபிள்ஸ் பிரிவின் ஐந்தாவது படையணியில் சேர்ந்தார்.

அவருடைய தந்தை இருந்த அதே பிரிவில் அவர் தன் ராணுவப் பயணத்தைத் தொடங்கினார். டேராடூனில் உள்ள இந்திய ராணுவ பயிற்சி நிலையத்தில் இந்திய ராணுவ இயக்குநரகத்தின் தலைமை அதிகாரி உட்பட பயிற்சி அளிக்கும் பொறுப்பை அவர் வகித்தார். மத்திய பிராந்தியத்தில் தளவாடங்கள் பிரிவு அலுவலராக அவர் பணியாற்றினார். ராணுவ செயலர் பிரிவில், துணை ராணுவ செயலாளர் மற்றும் கர்னல் அந்தஸ்தில் ராணுவ செயலாளராக பிபின் ராவத் பணியாற்றினார்.

வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு சேவை உயரதிகாரிகளுக்கான பயிற்சிக் கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்த பிபின் ராவத், தேசிய பாதுகாப்பு கல்லூரியிலும் பல்வேறு பிரிவுகளில் தேர்ச்சி பெற்றார். அமெரிக்காவின் ஃபோர்ட்லீ வன்வொர்த்தில் உள்ள ராணுவ தளபதிகளுக்கான பயிற்சி வகுப்புகளிலும் பிபின் ராவத் பங்கெடுத்துள்ளார்.

தொடர் 20ஆம் பக்கம்...

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329
பிலவ வருடம் கார்த்திகை மாதம் 26ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஊலா பிறை 07

பாலில் தன்னிறைவடைய போர்க்கால அடிப்படையில் முயற்சிகள் அவசியம்

கடந்த புதன் கிழமை கொழும்பில் விவசாயத்துறை அமைச்சில் நடைபெற்ற ஒரு சந்திப்பில் கலந்து கொண்ட நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ சாதாரண இலங்கை வாசிகளுக்கு அதிர்ச்சி அளிக்கக் கூடிய விஷயங்களை பேசியிருக்கிறார். பொதுவாகவே அரசியல்வாதிகள் கடினமான விஷயங்களை சூசகமாகவோ அல்லது சுற்றிவளைத்தோ தான் பேசுவது வழக்கம். மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களான தாம் ஏற்கனவே வழங்கிய உறுதிமொழிகளுக்கு மாற்றாக எவ்வாறு பேசுவது என்ற குழப்பம் அவர்களிடம் இருக்கத்தான் செய்யும். ஆனால் பாரம்பரிய அரசியல்வாதியாக அல்லாத, நியமன பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான நிதியமைச்சர் இச் சம்பிரதாயங்களை பொருட்படுத்தாதவராக தாம் எதைச் செய்யப் போகிறோமோ அவற்றை வெளிப்படையாகவே பேசியிருப்பது பாராட்டுக்குரிய தானாலும், பொதுவாகவே குதூகலமும் சுபீட்சமும் பொங்கும் என ஒவ்வொரு புத்தாண்டையும் எதிர்கொள்ளும் எமக்கு, 2022 உவப்பானதாக நிச்சயமாகவே இருக்கப் போவதில்லை என்பதை அமைச்சரின் பேச்சின் உள்ளடக்கம் புலப்படுத்தியிருக்கிறது.

அடுத்த ஆண்டு இலங்கையின் நிதிநிலையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியைக் காண்பது கடினமாக இருக்கும் எனவும், அத்தியாவசிய உணவுப் பொருட்கள், எண்ணெய், மருந்து எரிவாயு போன்றவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கும் அதேசமயம் குறித்த காலப்பகுதியில் மீளச் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்களை செலுத்துவதற்காக பெருமளவு வெளிநாட்டு பணத்தை செலவிட வேண்டியிருக்கும் என்றும் சுட்டிக் காட்டியிருக்கும் நிதி அமைச்சர், இதன் பொருட்டு கடினமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்று கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் உறுப்பினர்கள் இந்த அரசின் குறைபாடுகளைத் தூக்கிப் பிடித்து பேசுவதும் பதிலளிக்கும் அரசு தரப்பினர், ஏன் நீங்கள் மட்டும் இம் மாதிரித் தவறுகளைச் செய்ய வில்லையா என சுட்டிக் காட்டுவதுமாக தவறுகளுக்கு ஒரு சமன்பாட்டை வைத்திருக்கிறார்கள். குற்றங்களையும் குறைகளையும் இப்படி சமன்படுத்திப் பேசிப் பேசியே இந்நாட்டில் காலம் கழிந்திருக்கிறதே தவிர தவறுகள் திருத்தப்பட்டு அவை மீண்டும் நிகழாதிருப்பதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இன்றைய டொலர் பற்றாக்குறைக்கு இன்றைய அரசு முன்னைய அரசை குற்றம் சாட்டுவதும் அவர்கள் இவர்களை குறை சொல்வதையும் குடிமக்கள் காது புளித்துப்போகும்வரை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். உண்மை என்னவெனில், மாறி மாறி ஆட்சி செய்தகட்சிகள் தொலைநோக்கு பொருளாதாரத் திட்டங்களைத் தொடர்ச்சியாக நிறைவேற்றத் தவறியதன் விளைவாகவே, கொவிட் தொற்று ஏற்படுத்திய பொருளாதார பின்னடைவுகளில் இருந்து ஏனைய நாடுகளால் முடிந்ததைப் போல இலங்கையால் மீண்டு வர முடியவில்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எமது அரசியல்வாதிகள் என்ன பங்களிப்பு வழங்கப் போகிறார்கள் என்பதில் அக்கறை செலுத்தாத முன்னைய வாக்காளர்கள் இனவாதத்தையும் மதவாதத்தையும் முன் நிறுத்தி கட்சிகளை பாராளுமன்றத்துக்கும், அரசை அமைக்கவும் அனுப்பி வைத்ததன் விளைவையே இன்றைய வாக்காளர்கள் அனுபவிக்கிறார்கள்.

1973 – 74 காலப்பகுதியில் இலங்கை மக்கள் கடுமையான, நிதி நெருக்கடி மிகுந்த ஒரு காலக்கட்டத்தைக் கடந்து சென்றார்கள். அக் காலத்தில் சாதாரண மனிதரிடம் பணப் புழக்கமுமில்லை கடைகளில் வாங்குவதற்கு பொருட்களும் இல்லை. இன்றோ மனிதர் கையில் பணப் புழக்கம் உள்ளது. கடைகளில் பொருட்களும் உள்ளன. விலைகள் வானளாவி நிற்பதால் கொள்வனவு செய்வதை யோசிக்க வேண்டியிருக்கிறது. கடந்த புதன் கிழமை உரையாற்றிய பசில் ராஜபக்ஷ, கடினமான காலத்தைப் பற்றி பேசியிருக்கிறார். சில தினங்களுக்கு முன்னர் பிரதமரும் கடினமாக முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும் என்று கூறியதும் கவனிக்கத்தக்கது.

இந்த வருடம் அமுலில் உள்ள வாகன இறக்குமதிக்கான தடை அடுத்த வருடத்துக்கும் நீடிக்கப்படும் என்றும் சோளம் இறக்குமதியில் கட்டுப்பாடு கொண்டுவரப்படும் என்றும் கூறியுள்ள நிதியமைச்சர் பசில் ராஜபக்ச, அடுத்த வருடம் பால்மா இறக்குமதிக்கு தடை விதிக்கப்படும் என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். இந்த அறிவிப்பு பலரின் புருவங்களையும் உயர்த்தியுள்ளது.

இலங்கையில் 40 சதவீதமான பால் மட்டுமே உள்ளூரில் உற்பத்தியாகிறது. அறுபது சதவீத பால்மா இறக்குமதி செய்யப்படுகிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக பால் உற்பத்தி அதிகரிப்புக்காக பல திட்ட வடிவில் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். வெளிநாட்டு பசுக்கள் நிறையவே கொண்டுவரப்பட்டன. அவற்றில் சில வயதானவை என்றும் மேலும் சில எதிர்பார்க்கப்பட்ட அளவு பாலை சுரக்கவில்லை என்னும் பின்னர் தெரியவந்தது. இலங்கையில் இயங்கும் பால் பொருள் உற்பத்தி நிறுவனங்கள் திரவப்பால், பால்மா, யோகர்ட், தயிர் ஐஸ்கிறீம், சுவையூட்டப்பட்ட பால்வகைகள், சீஸ், பட்டர் எனப் பல பால் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். இவை அனைத்துமே உள்ளூர் உற்பத்தியான 40 சதவீத பாலின் உதவியால் மட்டுமே செய்யப்படுவதாக சொல்லப்படுமானால் அது நம்புவதற்குக் கஷ்டமாகவே இருக்கும்.

இந்நிலையில், அறுபது சதவீதமான இறக்குமதி பாலுக்கு அடுத்த ஆண்டு முதல் தடை இறக்குமதி செய்யப்பட மாட்டாது. அதற்கு பணம் வழங்க முடியாது என அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். அவ்வாறானால் உள்நாட்டில் பால்விலை அதிகரிக்கும் என்பதோடு பசும் பாலுக்கு பெரும் தட்டுப்பாடும் ஏற்படும். அரிசி, மா ஆகிய பிரதான இரண்டு திட உணவுகளுக்கு அடுத்ததாக இலங்கையில் பசும் பாலையே போஷாக்கான திரவ உணவாகக் கொள்கிறோம். பால் குழந்தைகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் இன்றியமையாதது. கல்சியம் நிறைந்தது. டீக்கு சுவை சேர்க்கவல்லது. குழந்தைகளுக்கு பாடசாலைகளில் பால் வழங்கும் நடைமுறை முன்னர் பரவலாக இருந்தது. வயதானவர்களுக்கும், நோயாளர்களுக்கும் அவசியமான பானமாகக் கருதப்படுகின்றது. மேலும் ஐஸ்கிறீம் உட்பட்ட ஏராளமான சுவையான பண்டங்கள், சொக்கிலட், பிஸ்கட் வகைகள் பாலைப் பயன்படுத்தியே தயாரிக்கப்படுகின்றன. தாய்ப்பால் சுரப்பு குறைவடையும் போது ஆபத்பாந்தவராக வந்து நிற்பது பசும்பால் மட்டுமே!

இவ்வளவு முக்கியத்துவம் கொண்ட பசும்பால் இறக்குமதி தடைசெய்யப்படும் என்று நிதியமைச்சர் தெரிவித்திருப்பது பேரிடியாகவே உள்ளது. உள்ளூர் பசும்பால் உற்பத்தியை எண்பது சதவீதமாக உயர்த்தப்படும் என்றும் கூறப்படுகிறது. ஆனால் கடந்த ஐம்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்த பால் உற்பத்தி அதிகரிப்பு 40 சதவீதத்தையே எட்டியிருக்கும் நிலையில் அடுத்த ஒரு வருட காலத்தில் இதை இரட்டிப்பாக்க முடியும் என்பது சாத்தியமான இலக்காகத் தென்படவில்லை. மஞ்சள், உளுந்து இறக்குமதியை நிறுத்தியதோடு பால்மா இறக்குமதி நிறுத்தத்தை ஒப்பிட முடியாது.

ஏற்கனவே அத்தியாவசிய பொருட்களான அரிசி, மா, சீனி, காய்கறிகள், மாமசி உணவுகள் என்பனவற்றின் விலை அதிகரிப்பால் மக்களுக்குக் கிடைத்துவந்த போஷாக்கில் தடைகள் ஏற்பட்டுள்ள நிலையில் நாட்டில் பசும்பாலுக்கும் தட்டுப்பாடும் விலையதிகரிப்பும் ஏற்படுமானால் அது பாரதூரமான சிக்கல்களை ஏற்படுத்தவே செய்யும்.

அரிசி, பருப்பு, எண்ணெய் எவ்வளவு அத்தியாவசியமோ அவ்வளவுக்கு பசும்பாலும் அத்தியாவசியம் என்பதால் பால்மா இறக்குமதி மட்டுப்படுத்தப் படக் கூடாது. அதேசமயம் பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைய அரசு எல்லா முயற்சிகளையும் போர்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

வடக்கு, கிழக்கு தமிழர்களை புறக்கணிக்கும் எதிர்க் கட்சி!

வடக்கு, கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அநீதி இழைத்திருப்பதாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

தேர்தலென வருகின்ற போது எதிர்க்கட்சித் தலைவர் வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டாலும், அப்பிரதேச மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் அநீதியே இழைத்து விட்டாரென்று பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

கூறிய கருத்தை ஆமோதிக்கும் வகையிலேயே, அமைச்சர் ஜோன்டன் பெர்னான்டோ இதனைக் கூறியிருந்தார்.

கடந்த 03 ஆம் திகதி எதிர்க்கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த போது, அரச மற்றும் எதிரணி தரப்பினருக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

வாக்குகளுக்கு மாத்திரமே தமிழ் மக்கள் தேவையா?

வடக்கு, கிழக்கு மக்களின் குறைகள் தொடர்பாக அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்துவதற்கான வாய்ப்புகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் வழங்கவில்லையென்று ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் ஜோன்டன் பெர்னான்டோ பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டியிருந்தார்.

தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களின் பிரச்சினைகள் பலவற்றை முன்வைப்பதற்கான சந்தர்ப்பமாக வரவுசெலவுத் திட்ட விவாதம் காணப்படுகின்ற போதும், எதிர்க்கட்சியில் இரண்டாவது பெரிய கட்சியாக விளங்கும் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கட்சி உறுப்பினர்கள் சபையில் காரசாரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதன் தொடர்ச்சியாக கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்கிழமை எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற அமர்வுகளை முற்றாக பகிஷ்கரித்தனர். வரவுசெலவுத் திட்ட விவாதத்தைப் பொறுத்த வரையில் இதற்கான முழுமையான பொறுப்பு எதிர்க்கட்சிக்குக் காணப்படுகிறது. வரவுசெலவுத் திட்ட விவாதம் நடத்தப்பட வேண்டிய நாட்கள் மற்றும் குழு நிலையில் எவ்வாறு செலவுத் தலைப்புகளை விவாதிப்பது போன்ற விடயங்களை எதிர்க்கட்சியினரே தீர்மானிப்பதுடன், வரவு செலவுத் திட்ட விவாதத்தில் எதிர்க்கட்சிக்கே அதிக நேரம் ஒதுக்கப்பட்டிருக்கும். இதுவே சம்பிரதாயமாகும்.

வரவு செலவுத் திட்ட குழுநிலையில் குறிப்பிட்ட செலவுத் தலைப்பை விவாதத்துக்கு எடுக்க முன்னர் செலவுத் தலைப்புக்கான தொகையில் சம்பிரதாய பூர்வமாக பத்து ரூபாவை குறைத்து விடுமாறு கோரும், செலவுக் குறைப்புப் பிரேரணையொன்றை எதிர்க்கட்சி முன்வைக்க வேண்டும்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 130வது நிலையியற் கட்டளைக்கு அமைய செலவுக் குறைப்புப் பிரேரணையொன்றை எதிர்க்கட்சி முன்வைக்காவிட்டால் குறித்த செலவுத் தலைப்பை விவாதத்துக்கு உட்படுத்த முடியாது. எனினும், செலவுத் தலைப்புக்களுக்கான திருத்தங்களை சம்பந்தப்பட்ட அமைச்சர் முன்வைக்கலாம். இதுவே பாராளுமன்ற வழமை.

இவ்வாறான நிலையில் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை நாட்களில் எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்தமையால் செலவுக் குறைப்புப் பிரரேணை முன்வைக்கப்படவில்லை. இதனால் செலவுத் தலைப்புக்களின் கீழ் உள்ள விடயங்களை விவாதிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறான நிலையில், சபையில் சமுகமளித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், சம்பந்தப்பட்ட அமைச்சுகள் சார்பில் தமது பகுதிகளில் உள்ள மக்களின் பிரச்சினைகளை முன்வைப்பதற்கான வாய்ப்பு திருக்க வேண்டும். முற்கூட்டியே இதற்கான ஏற்பாடு செய்திருக்கப்பட வேண்டும் என சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன அவ்விடத்தில் சுட்டிக் காட்டினார்.

இருந்த போதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் தொடர்பில் தமது மக்களின் குறைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

தேர்தல்களின் போது தமிழ் மக்களின்

தமிழ் மக்களது பிரதிநிதிகளின் வேதனைமிகு ஆதங்கத்தை சபையில் வெளிப்படுத்திய சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி!

ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் தன்னைத் தாக்குவதற்கு முயற்சித்ததாக அவர் முறையிட்டிருந்தார். மறுநாளான 04 ஆம் திகதியும் இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டது.

இதனால் ஆளும் கட்சி, எதிர்க்

தேர்தல் வருகின்ற போது வடக்கு, கிழக்கு தமிழர்களின் வாக்குகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பெற்றுக் கொள்கின்றார். ஆனால் அப்பிரதேச தமிழ் மக்களின் குறைகளை பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வழங்காமல் விடுகின்றார். இவ்வாறான செயற்பாடு அநீதி!

செலவுக் குறைப்புப் பிரேரணைகளை சமர்ப்பிப்பதற்கான 33 பேர் கொண்ட பெயர்ப் பட்டியலில், எதிர்க்கட்சியில் இரண்டாவது பெரிய கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒருவரின் பெயர் கூட உள்ளடக்கப்படவில்லை!

இல்லாமல் போயுள்ளது எனத் தெரிவித்தார்.

செலவுக் குறைப்புப் பிரேரணைகளை சமர்ப்பிப்பதற்கான 33 பேர் கொண்ட பெயர்ப் பட்டியலில், எதிர்க்கட்சியில் இரண்டாவது பெரிய கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒருவரின் பெயர் கூட உள்ளடக்கப்படவில்லை. இது அநீதியானது எனக் கூறிய சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி, செலவுக் குறைப்புப் பிரேரணையை முன்வைப்பதற்கான வாய்ப்பை தனக்கு வழங்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இருந்த போதும் எதிர்க்கட்சியின் முதற் கோலாசானே இதற்கான ஏற்பாடுகளைச் செய்வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் எதிர்க் கட்சித் தலைவர், அம்மக்களின் பிரதிநிதிகளுக்கு அநீதி இழைப்பதாக ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் ஜோன்டன் பெர்னாண்டோ அவ்விடத்தில் கருத்துத் தெரிவித்தார். இந்தக் கருத்தை ஆமோதிக்கும் வகையில் முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா மற்றும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோர் பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டியிருந்தனர்.

(21ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

மனித நாகரிகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் காட்டுமிராண்டித்தனம்!

இனம், மதம் என்பன உலகின் பல நாடுகளில் அரசியலில் அதிகம் பயன்படுத்தப்படும் விடயமாக மாறியுள்ள நிலையில், உலகின் பல பகுதிகளில் மத அடிப்படைவாதம் பல்வேறு விதமான பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தி வருகின்றது. மத ரீதியான அடிப்படைவாதக் கோட்பாடுகள் ஓர் எல்லையைத் தாண்டிச் செல்லும் போது, அது மதத் தீவிரமாதமாகவும் வெறித்தனமாகவும் மாறி விடுகின்றது. அங்கே காட்டுமிராண்டித்தனமும் காடைத்தனங்களும் அரங்கேறுகின்றன.

வார இறுதி
அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

அவ்வாறு உருமாறிய மதத் தீவிர வாத வெறித்தனச் செயற்பாட்டின் விளைவையே கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாகிஸ்தானின் நாம் கண்ணுற்றோம். இலங்கையரான பிரியந்த குமார தியவதன என்ற அப்பாவிப் பொறியியலாளர் பாகிஸ்தானில் மதவெறித் தீவிரவாதக் கும்பல் ஒன்றினால் பட்டப்பகலில், பலரும் பார்த்திருக்க வீதியில் வைத்து தாக்கப்பட்டு உயிருடன் தீயிட்டுக் கொழுத்தப்பட்டார்.

பின்னர் அவர் எரிக்கப்பட்டும் உள்ளார்.

உருது மொழியில் காணப்பட்ட சுவரொட்டியின் உள்ளடக்கம் குறித்து தெரிந்து கொள்ளாத நிலையில் அதனை அகற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுத்திருந்ததாகவும், அதன் பின்னர் அவர் மன்னிப்புக் கேட்ட போதும் அதனை ஏற்றுக் கொள்ளாத மதத் தீவிரவாத வெறிக் கும்பல் அவரை அடித்துக் கொன்று விட்டதாகவும் நேரில் கண்டவர்கள் சாட்சியமளித்துள்ளனர்.

மனித இனம் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. ஆனால் மதத்தின் பேரில் இவ்வாறான காட்டுமிராண்டித்தனத்தில் ஈடுபடுவோர் தங்களை எக்காலத்திலும் மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்பதற்கு இச்சம்பவம் ஒரு உதாரணமாகக் காணப்படுகிறது.

மதம் குறித்த வெறி சாதாரண மனிதனுக்குக் காணப்படும் இரக்க குணத்தை முழுமையாகச் சாகடித்து விட்டது என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது. பிரியந்தகுமார வன்முறைக் கும்பலால் தாக்கப்பட்டு எரிக்கப்பட்ட காட்சியை தொலைபேசிகளில் வீடியோ பதிவு செய்து கொண்டதன் மூலம் அக் கும்பலின் வெறித்தனம் நன்கு தெளிவாகின்றது.

மற்றொரு வன்முறையாளன், கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டு பிரியந்தகுமார தீயிட்டுக் எரித்துக் கொல்லப்படுவதை ரசித்து செல்பி எடுத்துள்ளார். ஷெல்பி எடுப்பதிலும், வீடியோ பதிவு செய்வதிலும் அவர்கள் அனுபவித்த இன்பத்தைப் பார்க்கும் போது அவர்களது வெறித்தனம் நன்றாகவே புரிகின்றது.

நாடுகள் பலவற்றில் மத அடிப்படைவாதம் காணப்படுகின்றமை நாம் அறிந்த விடயமாக இருக்கின்றது. அதன் பேரில் கொடிய தாக்குதல்களும் அடிக்கடி இடம்பெறுகின்றன. தற்போது தெற்காசிய பிராந்திய நாடொன்றில் இவ்வாறான வெறியாட்டம் நிகழ்ந்திருக்கின்றது.

அடிக்கடி மாறி வரும் இராணுவ ஆட்சி, பயங்கரவாதக் குழுக்களின் செயற்பாடுகள் எனப் பல்வேறு உள்ளகச் சிக்கல்களைக் கொண்ட நாடாகவே பாகிஸ்தான் காணப்படுகிறது. பாகிஸ்தானில் காணப்படும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அங்கு ஆட்சிக்கு வரும் எவரும் உறுதியான நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஆயுத ரீதியிலான பயங்கரவாத செயற்பாடுகளுக்கு அப்பால் தற்பொழுது மதரீதியிலான மிருகத்தனங்களும் அங்கு தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளன.

இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளால் பாகிஸ்தானில் இலங்கை எதிர்கொண்ட துர்ப்பாக்கியமான இரண்டாவது சம்பவம் இது என்று கூற வேண்டும். பல வருடங்களுக்கு முன்னர் பாகிஸ்தானில் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளச் சென்ற இலங்கை கிரிக்கெட் அணி மீது தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருந்தனர். எனினும் அதிர்ஷ்டவசமாக எமது வீரர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் பாகிஸ்தானுக்கு சர்வதேச ரீதியில் பாரியதொரு அவப்பெயரை அவ்வேளையில் ஏற்படுத்தியது மாத்திரமன்றி, அதன் பின்னர் எந்தவொரு நாடும் பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் விளையாடச் செல்லவில்லை. இது அவர்களுக்குப் பாதிப்பாக அமைந்தது. இலங்கை கிரிக்கட் அணியானது அத்தாக்குதலில் இருந்து தப்பிக் கொண்டது. ஆனால் அப்பாவியான பிரியந்த குமாரவின் உயிரைக் காப்பாற்றுவதற்கு முடியாமல் போயுள்ளது.

பாகிஸ்தானில் இடம்பெற்று வந்த ஊழல் ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்த இம்ரான் கானை கடந்த பொதுத் தேர்தலில் அந்நாட்டு மக்கள் பிரதமராகத் தேர்ந்தெடுத்தனர். அவருடைய ஆட்சியில் பாகிஸ்தானின் மறுமலர்ச்சி எதிர்

பிரியந்தவின் உயிரைப் பறித்த கொடியவர்களின் மிருகவெறித்தனத்துக்கு எதிராக நீதி நிலைநாட்டப்படுமா?

ஒருவர் மதவெறிக் கும்பலால் படுகொலை செய்யப்பட்டுள்ளமை பலருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தாலும், இதனை இனம் ஒன்றுக்கு எதிரான குற்றச்சாட்டாக மாற்றாமல் விடயம் கையாளப்படுகின்றமை பாராட்டத்தக்கதாகும். பெரும்பான்மையின மக்களின் உளப்பண்பையே அவர்களது உணர்வுகள் புலப்படுத்துகின்றன.

பாகிஸ்தானில் இடம்பெற்ற இந்தக் கொடூர சம்பவத்தைக் கண்டித்து அமைதி வழியிலான போராட்டங்கள் சில முன்னெடுக்கப்பட்டாலும் குரோதம் தூண்டி விடப்படவில்லை என்பது ஆறுதலான விடயம். மறுபக்கத்தில் ஒரு சிலர் மதத்தை முன்னுரிமைப்படுத்தி சமூக ஊடகங்களில் இந்தச் சம்பவத்தை நியாயப்படுத்த முயலுவதையும் காணக் கூடியதாகவுள்ளது. சவூதி அரேபியாவில் இலங்கைப் பணிப்பெண் ரிசானா கழுத்து வெட்டப்பட்டு மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்ட சம்பவத்தை நியாயப்படுத்திய ஒரு மனமுதிர்ச்சியற்ற தரப்பினரே தற்பொழுதுபிரியந்தமீதானகொலைவெறித் தாக்குதலையும் நியாயப்படுத்த முயற்சிப்பதை சமூக ஊடகங்களில் காண முடிகின்றது. ஆனாலும் பிரியந்த விவகாரத்தை குறித்த இனத்துக்கு எதிரான விடயமாகத் தூண்டி விடாமல் பெரும்பான்மை இனத்தவர்கள் நேர்மையான முறையில் கையாண்டு வருவதும் பாராட்டுக்குரியதாகும்.

அதேநேரம், பிரியந்தவின் படுகொலைக்கு நீதி கிடைக்குமா என்ற சந்தேகம் பலரினாலும் எழுப்பப்படுகிறது. மதத்தை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்ற பல வன்முறைகளுக்கு பாகிஸ்தான் இன்னமும் நீதியைப் பெற்றுக் கொடுக்காமையே இந்த சந்தேகத்துக்குப் பிரதான காரணமாகவுள்ளது. பாகிஸ்தானில் முன்னர் இந்து ஆலயங்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. இந்து மக்களும் தாக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் அவற்றுக்கெல்லாம் அங்கே நீதி கிடைக்கவில்லை.

இருந்த போதும் பாகிஸ்தானுக்கும், இலங்கைக்கும் இடையில் காணப்படும் இராஜதந்திர ரீதியிலான நெருக்கம் பிரியந்தவின் கொலைக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்புக்களை அதிகமாக்கியுள்ளன. இறுதி யுத்தமாக இருக்கட்டும், அண்மையில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதாக இருக்கட்டும்... இக்கட்டமான சூழ்நிலைகளில் இலங்கைக்கு உதவிய நட்பு நாடாக பாகிஸ்தான் விளங்குகிறது. இந்த நெருக்கமான புரிந்துணர்வு பிரியந்தவின் கொலைக்கான நீதியையும் நிலைநாட்டுவதற்கு ஒத்துழைப்பாக அமைய வேண்டும். அதுவே இன, மத ஒருமைப்பாட்டை நேசிக்கின்ற மக்களின் கோரிக்கை ஆகும்.

அதேவேளை மதஅடிப்படைவாதத்தின் பேரில் இடம்பெறும் வெறித்தனங்கள் பாகிஸ்தானில் முடிவுக்குக் கொண்டு வரப்படாத வரை, அந்நாட்டில் வேறு மதங்களைச் சேர்ந்த மக்களுக்கு பாதுகாப்பில்லை என்பதையே பிரியந்த மீதான கொலைவெறித் தாக்குதல் உறுதிப்படுத்துகின்றது.

இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை உலகின் அனைத்து நாடுகளுமே வன்மையாகக் கண்டித்தன. இந்த நாகரிகமற்ற காடையர் கும்பலின் வெறித்தனத்தையிட்டு உலகமே வெட்கத்தினால் தலைகுனிந்தது. இவ்வாறான ஈனச் செயலில் ஈடுபட்டவர்களை மதத்தின் பெயரால் செயற்படும் வெறிபிடித்த கொடிய மிருகங்கள் என்பதே பொருத்தமாகும்.

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாநிலத்தின் சியால்கோட் நகரில் உள்ள முன்னணி ஆடைத் தொழிற்சாலையில் முகாமையாளராகப் பணியாற்றி வந்த இலங்கையர் பிரியந்த குமார தியவதன என்ற பொறியியலாளர் மதவெறியாட்டத்தில் பலியான ஒரு அப்பாவி குடும்பஸ்தர் ஆவார்.

சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக அங்கு பணியாற்றி வந்த அவர், குறித்த தொழிற்சாலையின் வர்ணம் பூசும் பணிக்காக மதிலில் ஒட்டப்பட்டிருந்த மதம் சார்ந்த சுவரொட்டியொன்றைக் கிழித்ததாகக் கூறியே அவர் கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதன் பார்க்கப்பட்டது. சமாதானப் பிரியரும், மனித உரிமைகள் ஆர்வலருமான இம்ரான் கானின் ஆட்சியில் ஒப்பீட்டளவில் முன்னேற்றங்கள் தென்பட்டாலும், மதவாத அடிப்படையில் அங்கு இடம்பெறுகின்ற வன்முறைகளுக்கு எதிராக நீதி நிலைநாட்டப்படவில்லை என்பதால் தற்போதைய ஆட்சி தொடர்பிலும் சந்தேகங்கள் காணப்படுகின்றன.

மதஅடிப்படைவாதத்தின் பேரில் இடம்பெறும் வெறித்தனங்கள் பாகிஸ்தானில் முடிவுக்குக் கொண்டு வரப்படாத வரை, அந்நாட்டில் வேறு மதங்களைச் சேர்ந்த மக்களுக்கு பாதுகாப்பில்லை என்பதையே பிரியந்த மீதான கொலைவெறித் தாக்குதல் உறுதிப்படுத்துகின்றது

பிரதமர் இம்ரான் கான் மனித உரிமை ஆர்வலர். பண்பும் நாகரிகமும் நிறைந்தவர். பிரியந்த விடயத்தில் அவரது பிரதிபலிப்பு பாராட்டத்தக்கது. ஆனால் மத அடிப்படைவாதமும், அரசியலில் இராணுவத்தின் மறைமுக பிரசன்னமும் காணப்படுகின்ற பாகிஸ்தானில் பிரியந்தவுக்கு நீதி கிடைப்பதில் முட்டுக்கட்டைகள் அதிகம்!

பிரதமர் இம்ரான் கான் மனித உரிமை ஆர்வலர். பண்பும் நாகரிகமும் நிறைந்தவர். பிரியந்த விடயத்தில் அவரது பிரதிபலிப்பு பாராட்டத்தக்கது. ஆனால் மதஅடிப்படைவாதமும், அரசியலில் இராணுவத்தின் மறைமுக பிரசன்னமும் காணப்படுகின்ற பாகிஸ்தானில் பிரியந்தவுக்கு நீதி கிடைப்பதில் முட்டுக்கட்டைகள் அதிகம்!

'பிரியந்தவின் விவகாரம் தொடர்பில் பாகிஸ்தான் வெட்கம் அடைகிறது' என இம்ரான் கான் கருத்துத் தெரிவித்திருந்ததுடன், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உச்ச தண்டணை வழங்கப்படும் என அறிவித்திருந்தார். இந்த கொடூர சம்பவம் தொடர்பாக அவர் சில நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார். இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருந்த போதும் இவ்வாறான வன்முறைகள் சாதாரணமாக இடம்பெறுபவை என அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருப்பது பலரையும் விசனத்துக்குள்ளாக்கியுள்ளது. அவரது கூற்று தொடர்பாக கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

பிரியந்தவை மதவெறிக் கும்பல் தாக்கும் போது, அவரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஒரேயொரு நல்லுள்ளம் மாத்திரம் போராடியுள்ளது. அந்த பாகிஸ்தானியர் தனித்து நின்று கெஞ்சிய போதும், அது பலனளிக்கவில்லை. பிரியந்த கொலை செய்யப்பட்ட பின்னர் குறித்த நகரில் உள்ளவர்கள் ஒரு இலட்சம் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணத்தை சேகரித்து பிரியந்தவின் குடும்பத்தினருக்கு வழங்கவுள்ளனர். அது மாத்திரமன்றி பிரியந்தவின் குடும்பத்தினருக்காக அவருடைய சம்பளத்தைத் தொடர்ந்தும் வழங்குவதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. ஒருவரை உயிருடன் அடித்து எரித்துக் கொன்று விட்டு என்னதான் நஷ்டஈடுகள் வழங்கினாலும் அவரது உயிர் மீண்டும் வரப் போவதில்லை. குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் துயரம் தீரப் போவதுமில்லை.

பிரியந்த விவகாரம் இலங்கை முழுவதும் பாரிய சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. சக இலங்கையர்

புசல்லாவ சங்குவாரி தமிழ் வித்தியாலயம்

மண்சரிவில் பாழடைந்த கட்டடம் மறுசீரமைப்பு செய்து தரப்படுமா?

மலையகத்தில் கடந்த 150 ஆண்டுகளாக தமிழ் சமூகம் வாழ்ந்து வந்தாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 7 பேர்ச் காணிக்கு கூட உரிமைப் பத்திரம் இல்லை என்பது விசித்திரமானது, வெட்கக் கேடானது.

அந்தக் கட்சி இந்தக் கட்சி என எந்தக்கட்சியும் காணி உரிமை தொடர்பில் முழுமையான தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை. 7 பேர்ச் காணியுடன் கூடிய பல வீட்டுத்திட்டங்கள் வந்தாலும் வீடுகள் கட்டுவதற்கான பொருத்தமான நிலப்பகுதிகளை பெற்றுக்கொடுக்கவில்லை. மண்சரிவுக்கு உள்ளாகக் கூடிய, தேயிலைகூட நடமுடியாத சேற்று நிலப்பகுதிகளையே வீட்டு மனையாக ஒதுக்கி தருகிறது நிர்வாகம்.

மலைச்சரிவான பகுதிகளிலேயே 90 சத வீதமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஏன் சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் அவ்வாறான இடங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. மண்சரிவு ஏற்படக்கூடிய நிலப்பகுதியாகவும். காற்று கடுமையாக வீசும் ஏற்றமான இடமாகவும் இருக்கின்றன. உங்கள் கண்ணில்பட்ட வீட்டுத்திட்டங்களையும் சிறுவர் நிலையங்களையும் கொஞ்சம் உங்கள் மணக்கண்ணுக்கு கொண்டு வாருங்கள், நான் சொல்வதி சரி என்பது புரியும். இப்படியாக என் கண்ணில்பட்ட பாடசாலை. ஒன்றை உங்கள் பார்வைக்கு கொண்டு வருகின்றேன். மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்திற்குள் கம்பளை தேர்தல் தொகுதியில் கம்பளை கல்

ஆர் நவராஜா...✍

படங்கள்: தெல்தோட்டை தினகரன் நிருபர்

விவலயத்திக்கு உட்பட்ட புஸ்சலாவ க/சங்குவாரி தமிழ் வித்தியாலத்துக்கு வருவோம்.

இது பிரபல மூத்த அரசியல்வாதி அமரர் இராசலிங்கத்தின் ஊராகும். இந்த பாடசாலையில் தற்போது 100க்கு மேற்பட்ட மாணவர்களும் 10க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் உள்ளனர். தரம் 9 வரையில் வகுப்புகள் உள்ளன.

இப்பாடசாலை மிக பழமையான கட்டடம் ஒன்றில் இயங்கி வந்தது 2005 ஆண்டு காலப்பகுதியில் 11025 அளவுடைய புதிய பாடசாலைக் கட்டடம் ஒன்று கட்டடம் ஆரம்பிக்ப்பட்டது. பெருந்தொகை பண செலவில் கட்டப்பட்ட இந்த கட்டிடம் மிகநேர்த்தியாகவும் உறுதியுடையதாகவும் அமைக்கப்பட்டது. ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் புதிய கட்டடத்தையும் அதன் நேர்த்தியையும் கண்டு மகிழ்ந்திருந்தனர். கம்பளை கல்வி வலயத்தில் கட்டட இடவசதி கொண்ட ஒரு பாடசாலையாக இது இருந்தது. சங்குவாரி பாடசாலை, கண்டி நுவரெலியா ஏ5 பிரதான பாதை அருகில் சங்குவாரி தோட்டத்திக்கு செல்லும் உள்வீதியின் மேல்பக்கத்தில் அமைந்துள்ளது. 2018 ஆண்டு பெய்த கடும் தொடர் மழையின்போது 2018ம் ஆண்டு மே 9 ஆம் திகதி பி.ப 2.30 இந்த பாடசாலை கட்டிடத்தின்பின்புறம் உள்ளபரிய மண்மேடு ஒன்று சரிந்து கட்டிடத்தில் வீழ்ந்தது. அச் சமயத்தில் பாடசாலை பிற்பகல்1.30 மணியளவில் முடிந்திருந்தது. மேலதிக வகுப்புகள் சாதாரண தரம் கற்ற ஏ. தியாகராஜா என்ற மாணவன் பேராதனைப் பல்கலைகழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்து விரிவுரையாளரானார். பின்னர் புலமைப்பரிசில் பெற்று கனடா சென்று தற்போது அங்கு வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

70களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் சிக்கலை எதிர்நோக்கினார். பாரதி கல்லூரியை தனியார் ஆரம்பித்த நாள் முதலே இதனை அரசாங்கப் பாடசாலையாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்த இவர், முன்னாள் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீ.எச். பண்டார, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஏ. அசீஸ் ஆகியோரின் உதவியுடன் 1976 இல் இப் பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்க வழிவகை செய்தார்.

பாரதி கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்றாலும் அங்கு சேவையாற்றிய ஆசிரியர்களை அரச ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. அன்றைய காலகட்டத்தில் கல்வி அமைச்சின் பணிப்பாளராக இருந்த ஏ. சமீம், கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவுத் தலைவர் இலட்சுமணன் ஐயர் ஆகியோரின் உதவியுடன் பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களான எஸ். முத்துகருப்பன், வை.தேவராஜா, வி.நடனசபாபதி, செல்வி.கே. ஜானகி, உட்பட 9 ஆசிரியர்களுக்கு 1978.08.03 ஆம் திகதியன்று அரசாங்க ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. பிரஜாவுரிமை பிரச்சினை காரணமாக பாரதி இராமசாமி இந்நியமனத்தைப் பெறவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இந்நியமனத்தைப் பெற்ற பலர் பின்நாளில் பிரபல அதிபர்களாக சமூகப் பணி புரிந்து ஓய்வு பெற்றனர்.

பாரதி இராமசாமி 1960களில் தமிழ் மாணவர்களின் உயர்தரக் கற்கைக்கான வகுப்பை உருவாக்குவதில் பல சவால்களை எதிர்நோக்கினார். இறுதியில் புனித பீட்ஸ் கல்லூரியின் சாரணர் அறையைப் போராடிப் பெற்று முதலாவது உயர்தர வகுப்பை தொடங்க வழியமைத்தார். இதன் பின்னரே அதிக மானோர் பதுளையில் இருந்து பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு ஏற்பட்டது.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் போன்ற அமைப்புகளில் இணைந்து முக்கிய பதவிகளை வகித்தார். இதன் மூலம் மலையக இளைஞர்கள் மத்தியில் சமூக எழுச்சி சிந்தனையை விதைக்கப் பாடுபட்டார். மலையக கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்திய இரா. சிவலிங்கம், திருச்செந்தூரன் ஆகியோருடன் இணைந்து கல்வி மேம்பாட்டிற்கு ஆக்கபூர்வமான பணி செய்தார்.

மலையக மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு தனது வாழ்நாளை அர்ப்பணித்த பாரதி இராமசாமி அக்காலத்தில் கனவரல்ல தோட்டத்தில் அண்ணா மன்றம், பலகல தோட்டத்தில் பாரதி மன்றம் என்பவற்றை நிறுவ பாடுபட்டார். தெளிவத்தை வள்ளுவர் மன்றம் என்பவற்றோடு இணைந்து மலையக இளைஞர்களை கலை இலக்கிய அமைப்பு ரீதியான பணிபுரிய ஊக்குவித்தார். தமது சமூகத்தின் நன்மை கருதி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பதுளை கிளை உறுப்பினராக செயற்பட்டார். கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு என்ற அரச சார்பற்ற அமைப்பில் இணைந்து கிராம, தோட்டப்புற மகளிர் மேம்பாட்டு பணி செய்தார்.

2004 ஆம் ஆண்டு இர.சிவலிங்கம் ஞாபகார்த்த குழு இவரது கல்விப் பணியைப் பாராட்டி பதுளையில் விருது வழங்கி கௌரவித்தது. பாரதி தமிழ் மகா வித்தியாலய பெற்றோர் ஒன்றிணைந்து இவரது சேவையைப் பாராட்டி வாழ்க்கை வரலாறு கூறும் மலரை வெளியிட்டனர். 2020 ஆம் பாரதி பழைய மாணவர்கள் பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் நிறுவிய பாரதி திருவுருவச் சிலையை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார். சிறந்த மேடைப் பேச்சாளரான இவர், மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தனது விடமான பகுத்தறிவு பேச்சின் மூலம் புதிய சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்தினார்.

பல பாடசாலைகள் இவரது கல்விப் பணியை பாராட்டி கௌரவித்துள்ளன. ஊவாவில் உயர்தர விஞ்ஞான வகுப்புகள் அதிகமான பாடசாலைகளில் உருவாக்கப்பட வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். தெளிவத்தை உட்பட பல தோட்டங்களில் மகளிர் மேம்பாட்டு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். கல்வியின் மூலம் சமூக மாற்றம் விளையும் என்பதை நன்குணர்ந்து ஆரம்பித்த பாரதி கல்லூரி பல கல்வியாளர்களையும் பொறியியலாளர்களையும், சட்டவல்லுநர்களையும், ஏனைய துறைசார் விற்பனர்களையும் உருவாக்கிய பெருமையுடன் கம்பீரமாக பாரதி கனிஷ்ட வித்தியாலயம், பாரதி தமிழ் மகா வித்தியாலயம் என்ற இரு பிரிவுகளாக இன்றும் கல்விப் பணியாற்றி வருகின்றது. பாரதி இராமசாமியின் துணைவியார் அமரர் ஜானகி ஆங்கில ஆசிரியையாக பணிபுரிந்து இவரது கல்விப் பணிகளுக்கு பக்கபலமாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

தமது இறுதி நாட்களை நோயுடன் கழித்த பாரதி இராமசாமி இயற்கையெய்தியமை கல்வி புலம் சார்ந்தவர்கள் மத்தியில் துயரை ஏற்படுத்தி இருக்கின்றது. தமிழ்நாட்டில் எட்டயபுரத்து கவிஞன் இறந்தபோது எவ்வளவு குறைவானோர் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டனரோ அதே நிலைமை பாரதி இராமசாமியின் இறுதி நிகழ்விலும் காணப்பட்டு குடும்பத்தினர் மத்தியில் மன வேதனையை ஏற்படுத்தி இருந்தது. பதுளை தமிழ் சமூகத்தின் கல்வி மாற்றத்திற்கான அடித்தளமிட்ட பாரதி இராமசாமி பெயரில் அறக்கட்டளை நிறுவி வறிய மாணவர்களின் கல்விக்கு உதவ கல்விப் புலம் சார்ந்தோர் முன்வர வேண்டும். இராமசாமியின் வாழ்க்கை வரலாற்றை நூலுருவாக்கி மாணவர் மத்தியில் கொண்டு செல்வதோடு அவர் குறித்த நினைவேந்தல்களை கௌரவமாக அனுட்டிப்பது அவரது தன்னலமற்ற கல்விப் பணிக்கு செய்யும் கைம்மாறாவும் குடும்பத்தினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

" நானெனும் பொய்யை நடத்துவோன் நான்
ஞானச் சுடர் வானில் செல்லுவோன் நான்
ஆனப்பொருள்கள் அனைத்தினும் ஒன்றாய்
அறிவாய் விளங்குமுதற் சோதியே நான்." என்ற பாரதியின் வரிகளுக்கு அமைய பாரதி இராமசாமியின் கல்வி, சமூகப் பணியை சமூகம் பாராட்டி கொண்டாடா விட்டாலும் சரித்திரம் போற்றும் என்பதே நிதர்சனம்.

தன்னலமற்றக் கல்விப் பணியால் சமூக மாற்றத்துக்கு வித்திட்ட

பாரதி இராமசாமி

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தம்மை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டு, தனது உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க கவிதை வரிகளால் சமூக மாற்றங்காண விளைந்த மகாகவி பராதியாரின் கவிதைகளில் அதிக ஈடுபாடு கொண்டு அதன் மூலம் சமூகப்பணியில் தீவிரமாக ஈடுபட்டு பதுளை, பசறை வீதி 2ஆவது மைல் கல்லில் பாரதி கல்லூரியை நிறுவி பலர் வாழ்வில் கல்வி எனும் ஞானச்சுடரை ஏற்றிய பெருந்தகை அமரர் பாரதி இராமசாமி ஆவார்.

கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை உடல் நலக்குறைவு காரணமாக தனது 89 ஆவது வயதில் இயற்கையெய்திய பாரதி இராமசாமியின் கல்வி, சமூக மேம்பாட்டுப் பணிகள் குறித்து மீட்டிப்பார்ப்பது இளைய தலைமுறையினர் மத்தியில் சமூகம் கடந்து வந்த சவால்மிக்க பயணம் குறித்த தெளிவை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள புதுப்பட்டி என்ற கிராமத்தில் 1932 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 11 ஆம் திகதி கருப்பையாபிள்ளை தம்பதிகளுக்கு மகனாக பிறந்த இவர், தனது ஆறாவது வயதில் வர்த்தகரான சித்தப்பா சோமசுந்தரம் பிள்ளையுடன் இலங்கைக்கு வந்தார். 1938 ஆம் ஆண்டு பதுளை தர்மதூதக் கல்லூரியில் சேர்ந்து, 1951 இல் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் (எஸ். எஸ். சீ) சித்தியடைந்தார். தான் செல்வந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும் திராவிட சிந்தனை ஈடுபாடு காரணமாக சமூகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றார். 195152 காலப்பகுதியில் பதுளையில் அச்சகம் நடத்தி வந்த ஜெ.சற்குருநாதன், என் தந்தை கவிஞர் தமிழோவியன் மற்றும் பெரி.கந்தசாமி ஆகியோருடன் இணைந்து தெளிவத்தையில் இயங்கிய திருக்குறள் மன்றத்தில் மாணவர்களுக்கு வகுப்புகளை நடத்தி வந்தார்.

இக்காலப் பகுதியில் பதுளையில் இயங்கி வந்த சைவ பரிபாலன சங்கத்தில் உறுப்பினராக இணைந்து கொண்டார். இச்சங்கத்தின் தலைவர் கே.இரத்தினசாமி, செயலாளர் கே. ஆறுமுகராசா ஆகியோரிடம் சைவ பரிபாலன சங்கம் சொந்தமாக வாங்கிய நிலத்தில் (தற்போது சரஸ்வதி தேசிய கல்லூரி இருக்கும் இடம்) தற்காலிகமாக ஒரு பாடசாலையை நிறுவ முயற்சி எடுத்தார். அது நிறைவேறாமல் போகவே, தானே ஒரு பாடசாலையை எங்காவது அமைக்க வேண்டுமென உறுதி கொண்டார். திருக்குறள் மன்றத்தினூடாக மாணவர்களுக்கு கற்பிக்கும் பணிகளுக்கு எழுத்தாளர் மு.வெ.பெ. சாமி, ஆ. தங்கராசன் மற்றும் சற்குருநாதனும் 1956 வரை உதவினர்.

2ஆவது மைல்கல் பகுதியில் பதுளை மாணிக்க விநாயகர் கதிர்வேலாயுத சுவாமி கோயிலுக்கு சொந்தமான சிறிய விநாயகர் கோவில் ஒன்றிருந்து. இது மடமாவும் பாவிக்கப்பட்டது. இதனை மொடர்ன் தியேட்டர் உரிமையாளர் இரத்தினசாமியின் உதவியுடன் பாடசாலையாக மட்டும் பாவிக்கும் அனுமதியுடன் பெற்றுக் கொண்ட இவர், 1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் திகதியன்று இம் மடத்தில் பாரதி கல்லூரியை ஆரம்பித்தார். "பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்" என்ற மகுட வாசகம் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டது. ஆறு மாணவர்களுடன் ஆரம்பப் பிரிவு (1 தன்னலமற்றக் கல்விப் பணியால் 5 வரை வகுப்புகள்) தொடங்கியது. பாடசாலையின் முதல் மாணவனாக பெ. சதாசிவம் என்ற மாணவன் உள்வாங்கப்பட்டார். அக்காலத்தில் பாரதியின் பெயரில் ஒரு பாடசாலையேனும் காணப்படாத நிலையில் இவர் ஆரம்பித்த பாரதி கல்லூரி வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

பாரதி கல்லூரி ஆரம்பித்த நாட்களில் இவரோடு தந்தையார் தமிழோவியன், ஊடகவியலாளர் பெரி. கந்தசாமி, ஜெ. சற்குருநாதன், சின்னையா, இராமநாதன், செல்வி.எஸ். யோகேஸ்வரி, திருமதி. சிவகாமி கந்தசாமி ஆகியோர் ஆசிரியர்களாக கடமையாற்றினர். பாரதி கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட சில மாதங்களிலே தமிழ்நாட்டின் தமிழறிஞர் குன்றக்குடி அடிகளார், எழுத்தாளர் டி.கே. சீனிவாசன் ஆகியோர் இங்கு வந்து மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உற்சாகம் ஊட்டினர். பாரதி கல்லூரியின் முதலாம் ஆண்டு நிறைவில் பாரதி என்ற பெயரில் நினைவு மலர் வெளியிடப்பட்டது. இம்மலருக்கு இந்திய உப ஜனாதிபதி டாக்டர் எஸ். இராதாகிருஸ்ணன், பாரதியின் உற்ற நண்பர் பரலி ஆர். நெல்லையப்பர், சுவாமி சித்பவாநந்தர் மற்றும் பிரேமானந்த சுவாமிகளும் வாழ்த்துரை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் இரண்டாவது ஆண்டு நிறைவில் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள், சோவியத் குழந்தைகள், ஆபிரகாம் லிங்கன் வாழ்க்கை வரலாறு என் பற்றை உள்ளடக்கிய கண்காட்சியும் நினைவு மலர் வெளியீடும் இடம்பெற்றது. இவற்றுக்கு எல்லாம் இராமசாமி தலைமை தாங்கி செயற்பட்டார். 1960களில் பதுளையைச் சேர்ந்த ஐந்து மாணவ, மாணவிகளை யாழ்ப்பாண பாடசாலைகளில் பல்கலைக்கழக அனுமதி வகுப்புகளில் சேர்க்க உதவினார். இவர்களில் மூன்று மாணவர்கள் பேராதனைப் பல்கலைக் கழக பட்டதாரிகளாயினர்.

இக்காலப்பகுதியில் தோட்டப்புறங்களில் இயங்கிய ஆரம்ப பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பு வரை கற்று விட்டு இடைநிலை கல்வியைத் தொடர முடியாதிருந்த மாணவர்களை லயன் குடியிருப்புகளுக்கு சென்று வலுக்கட்டாயமாக அழைத்து வந்து இடை வகுப்புகளில் சேர்த்தார். இதன்போது பிள்ளைகளின் உடற் சுகாதாரத்தைப் பேணுவதில் தயக்கமின்றி ஈடுபட்டார்.

1963 காலப்பகுதியில் 'தேயிலை தோட்டத்திலே' என்ற பத்திரிகையை வெளியிட்டார். நான்கு இதழ்களாக வெளியான இப்பத்திரிகை இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமை, பதுளை பாடசாலைகளின் மறுசீரமைப்பு குறித்து அதிகம் பேசியது.

பாரதி கல்லூரின் 10ஆம் ஆண்டு நிறைவு விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் மகாகவி பாரதியின் பேத்தி திருமதி ஆர். விஜயபாரதி, அவரது கணவர் பேராசிரியர் கே. சுந்தராஜன் மற்றும் புகழ்பெற்ற எழுத்தாளர் அழகிரிசாமி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ஆண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் காரை சுந்தரம்பிள்ளை முதற் பரிசு பெற்றார். இவ்வாண்டு விழாவையொட்டி இப்பகுதி தோட்டப் பாடசாலைகளை மையப்படுத்தி விளையாட்டுப் போட்டி அனைவரது ஒத்துழைப்புடனும் நடத்தப்பட்டதுடன் கல்விச் சுற்றுலாவும் இடம்பெற்றது.

ஆ. புவியரசன் ...✍

1968இல் 8ஆம் வகுப்பு வரை வகுப்புகள் ஆரம்பமாகின.பாரதி கல்லூரி மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளுக்கு நிகராக தமிழ் மற்றும் சமயப் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்த அடித்தளமிட்டார். வெளிமடை, பம்பரபன்னையில் எஸ். பி.கே. வேலாயுதம் என்பவர் நடத்தி வந்த இளங்கோ மன்றத்தைப் பொறுப்பேற்று பம்பரபன்னை பாரதி வித்தியாலயம் என்ற பெயரில் க.பொ.த.சாதாரண தரம் வரை வகுப்புகளை நடத்தினார்.

இப்பாடசாலைக்கு பதுளை பகுதியில் இருந்து ஆசிரியர்கள் அனுப்பப்பட்டனர். இப்பாடசாலையில்

பேரழிவின் விளிம்பில் ஆப்கான்...

இன்றைய நவீன வரலாற்றில் மிக விரைவான பொருளாதார வீழ்ச்சியை நோக்கிச்செல்லும் ஆப்கானிஸ்தானின் மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் பெரும் உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ளப் போகிறார்கள் என கடந்த வாரம் அச்சம் வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபை, ஆப்கானிஸ்தான் மனிதாபிமான பேரழிவின் விளிம்பில் உள்ளது என தெரிவித்துள்ளது.



ஆப்கானிஸ்தான்நாட்டைகடந்தஆகஸ்ட் பிற்பகுதியில் தலிபான்கள் கையகப்படுத்திய பிறகு, அமெரிக்கா அங்கிருந்து வெளியேறியதை அடுத்து நாட்டின் அரச வருமானங்கள் அனைத்தும் வீழ்ச்சி அடைந்து, பணப் புழக்கம் அருகி மக்கள் பெரும் அவலத்துக்கு முகம் கொடுத்து வருகின்றனர். 23 மில்லியன் ஆப்கானியர்கள் (மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள்) உண்பதற்கு எதுவும் அற்றவர்கள்ஆகும் நிலை விரைவில் ஏற்ப்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக உலக உணவுத் திட்டத்தின் மதிப்பீடுஒன்றிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொதுத்துறை ஊழியர்களுக்கு பல மாதங்களாக ஊதியம் வழங்கப்பட வில்லை, என்பதுடன் ஐந்து வயதுக்குட்பட்ட மூன்று மில்லியனுக்கு மேற்பட்ட குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்கின்றனர் எனவும் அறியமுடிகிறது.

இரண்டரை கோடிக்கும் மேற்ப்பட்ட மக்கள் தொகையை கொண்ட,மூன்று வல்லரசுகளை தமது நாட்டிலிருந்து வெளியேற்றிய வரலாற்றை கொண்ட ஆப்கானிஸ்தான் நாடு இப்படியான ஒரு நெருக்கடியை அதன் வரலாற்றில் எதிர் கொண்டிருக்க மாட்டாது. இன்றைய ஆப்கானிஸ்தானிய மக்களின் அன்றாட, அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய தேவையான நிவாரணங்களைக் கூடவழங்குவது பெரும்சவாலான ஒரு விடயமாக இருக்கிறது உலகின் பல நாடுகளுக்கு..

நாட்டிலுள்ளபெண்கள்,சிறுமிகள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பது மற்றும் சர்வதேச பயங்கரவாதத்துடனான அதன் உறவுகளை சந்தேகத்திற்கு இடமின்றி துண்டிப்பதுஎன்பனவற்றைதலிபா அரசு நேர்மையுடன் நடைமுறைப்படுத்தாதவரை அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் தலிபான் அரசாங்கத்திற்கு சட்டபூர்வமான நிதியுதவிகளை வழங்கும்என எதிர்பார்க்கமுடியாது. அதேவேளை தலிபான்கள் தரப்பில் இருந்து அவர்கள் நடத்தையை மாற்றுவதற்கான எந்த சிறிய அறிகுறிகளும் வெளிப்படுத்தப்பட வில்லை என்பதும் கவலையான விடயமே.

அண்மைய தலிபான்களின் வெற்றியின் பின்னரான ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகள் அளித்து வந்த நிதி உதவிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதுடன்,சர்வதேச நாணய

நிதியம் மற்றும் உலக வங்கி போன்றன, அளித்த கடன்களும் நிறுத்தப்பட்டுள்ளன. ஆப்கான் ரிசர்வ் வங்கிக்கு சொந்தமான 940 கோடி டொலர் பணமும் அமெரிக்கா அரசினால் முடக்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச அளவில் இருக்கும் தலிபான்களின் சொத்துகளை முடக்க,39 நாடுகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இவற்றின் விளைவாக ஆப்கானிஸ்தானில் விலைவாசி நாளுக்கு நாள் கடுமையாக உயர்ந்து வருவதுடன் பொது மக்கள் தங்களின் வங்கி கணக்குகளில் இருந்து மாதாந்தம் அதிகபட்சமாக 200 டொலர்கள் பணம் மட்டுமே எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். பட்டினியை எதிர்கொண்டுள்ள வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் அறுபது சதவீதத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் அளிக்கவும், தற்போதைய குளிர் காலத்தில் கோதுமை பயிரிடவும், கால்நடைகளுக்கு தீவனம் அளிக்கவும் 3.6 கோடி டொலர்கள் உடனடியாக தேவைப்படுவதாகவும் ஐ.நா கூறியுள்ளது.

அந்த நாட்டின் பில்லியன் கணக்கான டொலர்கள் பெறுமதியான அரச சொத்துக்களை விடுவித்து அங்கு இன்னமும் இயங்கி வரும் சில அரசசாரா நிறுவனங்கள் மூலம், மக்களுக்கான அவசர உதவிகளை வழங்க வேண்டும் என சில சர்வதேச மனிதாபிமான அமைப்புக்கள் அமெரிக்க அரசிடமும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் கோரிக்கை விடுத்துள்ளன.ஆப்கானின் முட்டுக்கட்டை நிலைமையை எதிர்கொண்டு, மேற்கத்திய அரசாங்கங்களும் சர்வதேச அமைப்புகளும் எவ்வாறு உதவிகளை வழங்குவது என்பதை மறுபரிசீலனை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

அமெரிக்காவின் திட்டமிட்ட வெளியேற்றம் அதனை ஒட்டிய தலிபான்களின் மீள் கையகப்படுத்துதல் என்பவற்றிற்கு பின்னரான இந்த மிக மோசமான பொருளாதார சீர்கேடு மற்றும் நாட்டின் தற்போதைய மனிதாபிமான நிலைமைகள் என்பன தொடர்பில் மேற்க்கத்தைய ஊடகங்கள் பெருமளவில் செய்திகளை வெளிக்கொண்டு வரவில்லை என்பது வேதனையான விடயமே.ஆப்கான் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்களும் பெரும் அளவில் இடம்பெறாத நிலையில் நாடு அமைதியாக இருப்பதான ஒரு தோற்றப்பாடே வெளிகொணரப்படுகிறது. இன்னமும் நாட்டிற்குள் இருக்கும் முன்னாள் அமெரிக்க அரசின் உயரடுக்கு உறுப்பினர்கள் சிலரின் திட்டமிட்ட செயல்பாடே மேற்கத்திய ஊடகங்களின் மௌனத்திற்கு காரணம் என்கின்றனர் சில ஆய்வாளர்கள்.

கடந்த ஆகஸ்ட் 15 அன்று காபூலில் இருந்து அமெரிக்க படைகளின் இறுதி வெளியேற்றத்திற்கு முன்னரே ஆப்கானிய பொருளாதாரம் ஆபத்தான நிலையில் தான் இருந்தது. அங்கு பதவியில் இருந்த அமெரிக்காவின் பொம்மை அரசாங்கத்திற்கு மேற்கத்திய நாடுகளும் உதவி நிறுவனங்களும் பில்லியன் கணக்கான டொலர்களை மனிதாபிமான மற்றும் மேம்பாட்டு உதவிகளாக வழங்கின, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40 சதவீதத்திற்கும் அதிகமான,நிதி வழங்கப்பட்டும் கூட, தனிநபர் வருமானம் உலகின் மிகக் குறைந்த ஒன்றாகவே அங்கே இருந்தது, தலிபான்கள் ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களில், இந்தப் பிரச்சினைகள் பல மடங்கு அதிகரித்து மேலும் மில்லியன் கணக்கானவர்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலையை தற்போது எட்டியுள்ளது.

சர்வதேச சமூகத்துடன் நல்ல உறவை பேண முயலும் தற்போதைய தலிபான்கள் தாம்

தடுக்குமா மேற்குலகம்...?

முன்னர் ஆட்சி செய்ததை விட மிதமான இஸ்லாமிய ஆட்சிக்கு உறுதியளிப்பதாகவும், அதனையே விரும்புவதாகவும் கூறியுள்ளதன் நம்பகத்தன்மை தொடர்பில் சர்வதேச மட்டத்திலும் நாட்டின் உள்ளேயும் சந்தேகம் வெளியிடப்படுகிறது .

இதற்கிடையில் ஆப்கானில் ஒரு மோசமான வறட்சி ஏற்பட்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் வாழ்வாதாரத்துக்கு அது அச்சுறுத்தலாக அமையும் வாய்ப்புக்கள் உள்ளதாக அச்சம் வெளியிட்டுள்ளது ஐநா நிறுவனமான உணவு மற்றும் விவசாய அமைப்பு.

அதேவேளை தமது மக்கள் சமீபத்திய குழப்பநிலைமை மற்றும் தாக்குதல்கள் போன்றவற்றால் கொரோனா வைரஸ் தொற்று,இடப்பெயர்வு ஆகியவற்றை எதிர்கொண்டு அதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாவதாக தலிபான் அரசு கூறுகிறது. தாம் மனிதாபிமான உதவிகளை வழங்குவதாக அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் கூறியுள்ள போதிலும் ஆப்கான் மீதான பரந்த ஈடுபாடும்,உதவிகளும் மிதமான ஆட்சி என்கிற தலிபான்களின் வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றுகிறார்களா என்பதைப் பொறுத்தே அமையப் போகிறது.

தலிபான்கள் முன்னர் ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்த 1996 முதல் 2001ல்அமெரிக்க தலைமையிலான படையெடுப்பு வரை, அவர்கள் இஸ்லாமிய சட்டக் கட்டுப்பாடுகள் எனப்படும் மனிதாபிமானத்தை மீறும் பல கட்டுப்பாடுகளை மக்கள் மீது கடுமையாக திணித்தனர். பெண்கள் பெரும்பாலும் தங்கள் வீடுகளிலேயே அடைக்கப்பட்டனர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் இசை நிகழ்சிகள் போன்ற மக்கள் களியாட்டங்கள் தடைசெய்யப்பட்டன, குற்றவாளிகள் என சந்தேகிக்கப் படுவோர் அனைவரும் பொது மக்கள் மத்தியில் தூக்கிலிடப் பட்டனர்.

இந்த முறை,பெண்கள் பாடசாலைகளுக்கு செல்லவும் வீட்டுக்கு வெளியே சென்று தொழில் செய்யவும் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தலிபான் ஆட்சியாளர்கள் கூறுகிற போதிலும் நடைமுறையில் பெரிதாக எதுவும் இடம்பெற்றதாக தெரியவில்லை. இதுவரை பெண்களில் சிறுமிகள் மட்டுமே பாடசாலைகளுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் சில பிரதேசங்களில் அதுவும் கூட இடம்பெறவில்லை.

தலிபான்களின் தலைமைகள் மிகவும் மிதமான தொனியில் கருத்துக்களை வெளியிடுகின்ற போதிலும் அவர்களின் பிராந்தியங்களில் மனித உரிமை மீறல்கள் பற்றிய தகவல்கள் வந்து கொண்டே இருகின்றன.. அங்குள்ள கீழ்மட்ட போராளிகள் தலைமையின் கட்டளையின் கீழ் செயல்படுகிறார்களா...? அல்லது சுயமாக செயல்படுகிறார்களா,,,? என்பது தெளிவாக இல்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

கோவை நந்தன்...✍

தமிழ் தேசிய அரசியல் தற்போது சரியான திசையில் செல்கின்றது

தமிழ் தேசிய அரசியலில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமையினால், இனத்தின் அபிலாசைகள் என்ன என்பதில் தெளிவு ஏற்பட்டுள்ளதாகவும், இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஒற்றுமையை வலுப்படுத்தவே தமிழ் மக்கள் விரும்புவதாவும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய விசேட செவ்வி வருமாறு:

சிவாஜிலிங்கம் நேர்காணல்

கே: தமிழ் தேசிய அரசியல் நிலவரம் எவ்வாறு காணப்படுகின்றது?

பதில்: தமிழ் தேசிய அரசியலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக எமது தமிழ் தேசிய இனத்தின் அபிலாசைகள் என்ன என்ற விடயத்தில் தெளிவு பிறந்துள்ளது.

ஆகவே இதனைக் கூட ஒரு ஆரோக்கியமான விடயமாக பார்க்க முடியும். இதே போன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்குக்கூட 2021ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து ஐ.நா மனித உரிமை பேரவை ஆணையாளருக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் அரசியல் தீர்வு விடயத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கேட்கும் நிலமை தொடர்ந்து நீடித்கொண்டிருக்கின்றது. தமிழ் தேசிய மக்கள் முன்னனியினர் பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தார்கள். அந்த கோரிக்கையை வேறு தளங்கில் வலியுறுத்துவதாக தெரியவில்லை. தமிழ் மக்கள் தேசிய கட்சியினர் மற்றும் பலர் இணைந்து பொதுசன வாக்கெடுப்பைக் கோரியிருந்தோம். அமெரிக்க காங்கிரஸ் கட்சியின் பெண் உறுப்பினரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில் வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பொதுசன வாக்கெடுப்பு என்ற தீர்மானமும் இணைக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலாவது பொதுசன வாக்கெடுப்பு என்ற விடயத்தில் எமது மூன்று அணிகளும் ஒன்றுபடுமாயின் வரவேற்கத்தக்கது. பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளக சுயநிர்ணய உரிமை வழங்காவிடின் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவோம் என்று தெரிவித்திருக்கின்றார். 2030 ஆம் ஆண்டிலும் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோரப் போகின்றோம் எனறு சொல்லிக்கொண்டு இருக்கப் போகின்றோமா? உடனடியாக 2022 இலாவது தீர்க்கமான முடிவை பிரதான கட்சிகள் எடுக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை.

கே: தமிழ் தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் ஊடாக இனப்பிரச்சினை தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் விடங்கள் தொடர்பாக நீதியைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமையுமா?

பதில்: ஆம் தமிழ் தேசிய அரசியலில் உள்ள பிரதான 3 கட்சிகளும் தேர்தர் அரசியலை ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு ஒரு நிலைப்பாட்டை எடுத்து ஒத்த கருத்துடன் எந்த கோணத்தில் அணுகினாலும் ஒரே விடயத்தை ஒரே குரலில் சொல்ல முடியுமாக இருந்தால் அது மிகவும் சாதகமான முடிவைத் தரும். எமது இனப்பிரச்சினைத் தீர்வை நோக்கிய பயணத்திலே சர்வதேச நாடுகள் அல்லது ஐக்கியநாடுகள் சபையாக இருக்கட்டும் நல்ல முடிவை எடுப்பதற்குப் பேருதவியாக இருக்கும். ஆகவே, தற்போதைய நிலையை விட மேலும் ஒற்றுமை வலுப்படுவதை தான் மக்கள் விரும்புகின்றார்கள். அதன் மூலம் தான் பல விடயங்களைச் சாதிக்க முடியும்.

கே: உள்ளக சுயநிர்ணய உரிமை வழங்கப்படாவிடின் வெளியக சுயநிர்ணய உரிமை கோரப்படும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அவரின் இந்த கருத்தை ஏனைய கட்சிகள் ஏற்றுக்கொள்கின்றனவா? உங்களின் நிலைப்பாடு?

பதில்: உள்ளக சுயநிர்ணய உரிமை என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. எல்லோருமே இணைந்து சமஸ்டி அடிப்படையிலான ஒரு தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அதேபோன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு சமஸ்டி அடிப்படையில் தீர்வு வேண்டுமென்று வலியுறுத்துகின்றார்கள். அதேவேளை இது மறுக்கப்படுமாக இருந்தால், உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுமாக இருந்தால் வெளியக சுயநிர்ணய உரிமையை கோர வேண்டிவரும் என சம்பந்தனும் கூறியிருந்தார்.

அத்துடன், தமிழ் தேசிய மக்கள் கூட்டணி ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் உட்பட ஐக்கிய நாடுகள் சபைக்கும் நாங்கள் இந்த கோரிக்கையை சமர்ப்பித்துள்ளோம். பொது வெளியில் பகிரங்கமாக வைத்துவிட்டோம். தொடர்ந்தும் எங்களுடன் இணைந்து ஏனைய கட்சியினர் கோரிக்கையை முன்வைப்பதில் எந்தப்பிரச்சினையும் இல்லை. அனைத்துக் கட்சிகளும் உள்ளக சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திக் கொண்டிருந்தன. அது கூட்டாகவா அல்லது தனியாக என்பது இங்கு பிரச்சினை இல்லை என்பதே எனது நிலைப்பாடு.

கே: இனப்படுகொலை மற்றும் சர்வதேச விசாரணைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பல்வேறு சர்ச்சையான கருத்துக்களை முன்வைத்திருந்தார். தற்போது உள்ளக விசாரணை தொடர்பில் பேசுவதன் உண்மைத் தன்மை?

பதில்: கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஒஸ்லோவில் உள்ளக சுயநிர்ணய உரிமையை கோரியிருந்தார். அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. உள்ளகமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் வெளியகமாக நாங்கள் கோர முடியும். தமிழ் தேசிய இனத்திற்கு தொடர்ந்தும் உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுகின்ற பொழுது வெளியக சுயநிர்ணய உரிமையை கோரும் தகுதியை உரிமையை நாங்கள் கொண்டிருக்கின்றோம். அதை இவர்கள் அவர்கள் எமக்குத் தரத் தேவையில்லை அது எமது பிறப்புரிமை கடந்த 75 ஆண்டுகளாக முயற்சி செய்து முயற்சி செய்து ஒரு நாட்டிற்குள் சரிவரவில்லையென்றால் நாட்டிற்கு வெளியே சென்று ஒரு பொதுசன வாக்கெடுப்பைக் கோருவதன் ஊடாகத்தான் எமது இறைமையை நிலைநாட்டக்கூடிய வகையில் அந்த வாக்கெடுப்பை நடத்துகின்ற பொழுது வாக்கெடுப்பு வேண்டுமா. என்ற முடிவிற்கு தமிழ் மக்கள் வர முடியும். அது மக்களின் விருப்பம் ஆகவே அந்த உரிமையை நிலைநாட்டுவது தான் வெளியக சுய நிர்ணய உரிமை. அதை ஏனைய அரசியல் கட்சிகள் வலியுறுத்த வேண்டும். தமிழ் தேசிய அணிகள் அனைத்தும் ஒத்த கருத்தாக நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையை கோருகின்றோம் என்பதை காட்டுகின்ற வகையில் பொதுசன வாக்கெடுப்பைக் கோருவது தான் சிறந்தது.

கே: உள்ளக சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துகின்ற இந்த சந்தர்ப்பத்தில் ஏனைய தமிழ் கட்சிகள் உங்களுடன் இணைந்து செயற்படுவார்கள் என நம்புகின்றீர்களா? அல்லது அவர்களுடன் கலந்துரையாடுதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா?

பதில்: எல்லோருடைய கருத்தும் ஒத்ததாக இருக்க வேண்டும். கோரிக்கை வைக்கின்றபோது தான் அதற்குரிய சாத்தியங்களைப் பார்க்க முடியுமே தவிர எல்லோரும் உள்ள சுய நிர்ணய உரிமை என்ற அடிப்படையில் என்ற கருத்தில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. சமஸ்டி அடிப்படையிலான ஒரு தேசம் என அங்கீகரிக்கப்பட வேண்டும். எங்களுக்கு இறைமை இருக்கின்றது. சுயநிர்ணய உரிமை இருக்கின்றதென்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணி வற்புறுத்துகின்றது.

கே: தற்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி.....?

பதில்: இன்று விவசாயிகளின் உரப்பிரச்சினையை நாடளாவிய ரீதியில் கிளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இதை ஒரு சாதாரண விடயமாக பார்க்க முடியாது. கொரோனா கோரத் தாண்டவம் ஆடியது. அதையும் இந்த ஆட்சியாளர்கள் எதிர்க்கொள்ள வேண்டியிருந்தது. இன்று நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றது. காஸ் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினால் பொதுமக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இது ஒரு சாதாரண விடயம் அல்ல. அரசாங்கம் மீது கோவித்தால், அதிலிருந்து வெற்றி பெற முடியாது. இன்னுமொரு தேர்தலை இந்த நாடு சந்திக்க வேண்டி வரும். 1952 ஆம் ஆண்டு 2 சதம் விற்ற அரிசியை 10 சதமாக அதிகரித்ததன் காரணமாக அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்க தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு சென்றார்.

சுமித்தி தங்கராசா...✍

தொப்புள்கொடி உறவுகள் தூக்கிப்பிடிப்பது எதை?

சுஜப் எம்.காசிம்..✍

இந்திய, இலங்கை அரசுகளுக்குள்ள உறவுகளில் அல்லது சர்வதேச மட்டத்துடன் தமிழர் தரப்பு வைத்துள்ள தொடர்புகளில், ஆதாயம் அடையும் இலங்கைச் சக்திகளைப் போன்று முஸ்லிம்களுக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்கிறதா? இவ்வாறு, அரசியல் ஆதாயம் ஏதாவதை அடையுமளவுக்கு இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகள் சர்வதேச வாசல்களைத் தொட்டிருக்கிறதா? இவற்றையே,முதலில் ஆராய வேண்டும்.

அவ்வாறு சர்வதேச எல்லை வரை சென்ற இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகள், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறதா? 'இல்லை' என்பதுதான் முஸ்லிம் அரசியல் தளத்தின் பொதுவான அபிப்பிராயம். முஸ்லிம்களின் அபிலாஷைகள் சர்வதேசமயப்படுத்தப்படாதமைக்கு, தலைமைகளின் அணுகுமுறைகளிலும் தவறு நடந்திருப்பதாகவே உணர முடிகிறது.

இதில், எங்கு தவறு நடந்திருக்கிறது? என்பதை ஆராய வேண்டிய கடப்பாட்டுக்குள் மூன்றாம் தேசியம் வந்துமிருக்கிறது. இதன் பின்னரும், இந்தக் கடப்பாடுகள் கண்டுகொள்ளப்படாவிடின், அரசியல் அந்தஸ்துக்குப் பொருத்தமான சமூகமாக இந்தச் சமூகத்தை அடையாளப்படுத்த முடியாமல் போகும். எதை, எங்கு ஆரம்பிப்பது? என்பதில் இந்தச் சமூகத்தின் அரசியல், சிவில் தலைமைகளுக்கு தடுமாற்றம் இருக்கிறது. இதனால்தான், மூன்றாம் சமூகத்தின் அரசியல் முகவரிகள் அடையாளம் இழக்கவோ, சபையேறாது போகவோ செய்கின்றன.

இந்தியாவின் இருப்பிடமும், இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழியும் இந்தியாவின் தென்னக மாநிலங்களுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தவே செய்கிறது. இந்த தொடர்புகள், அரசியலில் பெரிதளவு இல்லாவிடினும் இலக்கிய, மத ரீதியிலானவற்றுடன் தான் பிணைந்து நிற்கிறது. ஆனால், இலங்கை முஸ்லிம் தலைமைகளுக்கு இந்தியாவுடன் குறிப்பாக, தமிழகத்துடன் தேவைப்படுவது அரசியலுறவுதான். என்ன செய்வது? தமிழக அரசியலில் செல்வாக்குச் செலுத்துமளவுக்கு அங்கு முஸ்லிம் கட்சிகள் இல்லையே!. இதனால், தமிழக முஸ்லிம் தலைவர்களுடன் ஆறுதலுக்கான சந்திப்புக்களை அல்லது மரியாதை நிமித்த வரவேற்புக்களை செய்யும் தேவைப்பாடுகள், இலங்கை முஸ்லிம் தலைமைகளுக்கு ஏற்பட்டுள்ளன. பெரிதாக இல்லாவிட்டாலும் பார்வைக்கு இந்தப் படங்களும், செய்திகளும் இவர்களது அரசியல் வட்டாரங்களில் ஒரு பரபரப்பை ஏற்படுத்துகிறதுதான். இந்த பரபரப்புக்குள்தான், இத்தலைமைகளின் இயலாமைகள் ஒளிந்து கொள்கிறதோ தெரியாது!

அகில இந்திய முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் காதர் மொஹிதீன், இங்கு வந்து நடத்திய சந்திப்புக்கள், அவரது பேச்சுக்கள் எல்லாம், பல்லின மதங்கள், பல்வகைக் கலாசாரங்கள் வாழும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் சகோதரத்துவமும், விட்டுக்கொடுப்பும்தான் சிறுபான்மைச் சமூகங்களை பாதுகாப்புடன் வாழவைக்கும் என்ற தொனிப்பட இருந்தது. இது, இங்குள்ள சிறுபான்மைத் தலைமைகளுக்கு எடுத்தோதப்பட்ட அறிவுரையாகவும் இருக்கலாம்.

தனியலகு, கரையோர மாவட்டம் உள்ளிட்ட மொழி, மத, இன அடையாள அரசியல் இந்தியாவைப் போன்று, இலங்கையிலும் பொருந்தாது என்பதுதான் காதர் மொஹிதீனின் பூடகமான கருத்து. இதற்குப் பின்னராவது, முஸ்லிம் தலைமைகள் புதிய வியூகங்கள் வகுக்கும் என எதிர்பார்ப்பதுதான் யதார்த்தம்.

இலங்கையில் முஸ்லிம் லீக் உருவாக்கப்பட்ட சமகாலத்தில்தான், இந்தியாவிலும் இந்த முஸ்லிம் லீக் உருவாக்கப்பட்டது. இங்குள்ள கட்சிகள் மாறி மாறி ஆட்சியாளர்களுடன் அமர்வதைப் போன்று, காதர்மொஹிதீனின் கட்சி, அங்கு அடிக்கடி தாவும் அரசியல் செய்வதில்லை. ஆரம்பித்த காலம் தொட்டு திராவிட முன்னேற்றக் கழகத்துடனே பயணிக்கிறது.

தி.மு.கவுடன் இவ்வளவு நெருக்கமுள்ள இந்த முஸ்லிம் லீக், அங்குள்ள முஸ்லிம்களுக்கு செய்பவை என்ன? இங்குள்ள முஸ்லிம்களுக்கு செய்கின்றவை என்ன? எதைச் செய்ய வேண்டுமென்பதற்காக இலங்கை சிறுபான்மை தலைமைகள், காதர் மொஹிதீனின் வருகைக்கு இத்தனை நாட்டம் காட்டுகின்றன. தமிழக அரசியலில், இந்த முஸ்லிம் லீக், இங்குள்ள முஸ்லிம்களின் எந்தப் பிரச்சினைக்கு குரல் கொடுத்தது என்ற சிலரின் ஆதங்கமெல்லாம் இனியாவது, குரல் கொடுக்கட்டும் என்ற எதிர்பார்ப்புக்களையாவது ஏற்படுத்தட்டும்.

வடக்கு, கிழக்கில் தாய்மொழிச் சமூகங்கள் மத்தியில் நிலவுகின்ற, சின்னச்சின்ன இழுபறிகளை தீர்ப்பதற்கு, தமிழக முதல்வர் தலைமையில் ஒரு சந்திப்பையாவது இந்திய முஸ்லிம் லீக் செய்வதுதான், இலங்கை விஜயத்துக்கு அவர் செய்யும் கைங்கர்யம்.

அரசியலால் அல்ல, ஆரம்ப காலத்து உறவின் உரிமையால் இக்கட்சிக்கு இதைச் செய்ய முடியும்தானே!

வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றம், கொரோனா காலத்தில் முஸ்லிம் ஜனாஸாக்களுக்கு நடந்த கதி, இவைபற்றி ஆறுதலுக்காவது தமிழக சட்டசபையில் ஏதாவது ஒலிக்கச் செய்திருக்கலாம். இந்திய மத்திய, மாநில அரசுகளுக்குள்ள பலத்தில் இந்தக் குரல்கள் எதையும் செய்யப்போவதில்லைதான். சம்பிரதாயத்துக்காக அல்லது "இலங்கை தம்பிக்கு வலித்தது, தமிழக அண்ணனுக்கு கனத்தது" என்ற உறவின் அடையாளத்துக்காக ஒலித்திருக்கலாமே!

இவை, எதுவும் குறைகளுக்காகச் சுட்டிக்காட்டப்படவில்லை. தொப்புள் கொடி உறவுகளின் உணர்வுகளுக்காகவே தூக்கிப்பிடிக்கப்படுகின்றன. தமிழ் பேசும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும், அல்லது தமிழ் மொழி பேசுவோர் சிறுபான்மையாக வாழும் தேசங்களிலுள்ள எமது உறவுகளை மொழியால் இணைக்கவாவது, இந்தக் கட்சிகள் எதையாவது செய்யட்டும்.

எனினும், தமிழ் நாடு முஸ்லிம் முற்போக்கு கழகம் அங்குள்ளோருக்கு மட்டுமல்ல, இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கும் குரல் கொடுத்துள்ளமைக்கான பதிவுகள் இருப்பது, எதையாவது எதிர்பார்ப்போருக்கு ஆறுதல் தான்.

நாட்டைவிட்டு வெளியேறிச் செல்லும் மனோநிலையில் இளம் தலைமுறையினர்

இதனை மாற்றுவதில் அரசினதும் புத்திஜீவிகளினதும் பங்கு என்ன?

"இலங்கையில் இளைய தலைமுறையின் எதிர்காலம் எப்படியிருக்கும்? அதாவது உங்கள் பிள்ளைகளுடைய, இளைய சகோதர சகோதரிகளின், உங்கள் மாணவர்களின் எதிர்காலம் எப்படியாக இருக்கும்?"

இந்தக் கேள்வி உங்களுடைய தூக்கத்தை இல்லாமல் செய்யக் கூடியது. ஏற்கனவே பலரிடம் இத்தகைய கேள்விகள் உள்ளதால் தங்கள் பிள்ளைகளை இந்த நாட்டை விட்டு எப்படியாவது வெளியேற்றி விட வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பலர் அதற்கான ஏற்பாடுகளிலும் இறங்கி விட்டனர்.

அதுவும் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி, ஜனநாயக நெருக்கடி போன்றவையும் இந்த உள நிலையை எச்சரிக்கையை – பாதுகாப்பு உணர்வை உருவாக்கியுள்ளன.

கூடவே யுத்தம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடந்த பின்னும் நிலைமை இன்னும் சீரடையாமல் மேலும் மேலும் சிக்கலடைந்து வருவதால் இந்த உணர்வு இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

இதற்குப் பதிலாக ஒரு நண்பர் சொல்கிறார் "இப்போதுள்ள நிலைமையை ஐந்து மடங்கினால் பெருக்கிப் பாருங்கள் புரியும்" என்று.

இன்றைய நிலை மிக மோசமாக உள்ளது என்ற அடிப்படையில் இதைச் சொல்கிறார். இதைச் சீராக்கக் கூடிய ஏது நிலைகள் எதுவும் புலப்படவில்லை. அரசிடமும் இதற்கான தெளிவான திட்டங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சமூகத்திலும் அவ்வாறான அடையாளங்கள் துலங்கவில்லை. மொத்தத்தில் எதிர்காலம் இருளாகவே உள்ளது என உணர முடிகிறது.

அப்படியென்றால் சந்தேகமேயில்லை. இது பேரபாயமானதே.

இன்னொரு நண்பர் (இவர் எழுத்தாளரும் கூட) சொல்கிறார் "முதலில் நிகழ்காலத்தைச் சீராக்குவோம். அதுதான் முக்கியமாகும்" என.

இதனுடைய அர்த்தம், நிகழ்காலத்தைச் சரியாகக் கட்டமைத்துக் கொண்டால் அதிலிருந்து எதிர்காலத்தைச் சிறப்பாகக் கட்டியெழுப்ப முடியும் என்பதாகும்.

இது ஏற்றுக் கொள்ளக் கூடிய சரியான கூற்றே.

உண்மையில் எதிர்காலம் என்பது நிகழ்காலத்தில்தான் துளிர்க்கிறது. அது வடிவமாவது அன்றைய (எதிர்காலத்தில் உள்ளோரின்) மனிதர்களின் சிந்தனையினாலும் செயற்பாட்டினாலும்தான்.

ஆனால் அவர்களுக்கான அடித்தளம் வேண்டுமே. அதை உருவாக்குவதும் நிகழ்காலத்துக்குரியது, நிகழ்காலத்துக்குரியோருக்குரியது.

அது நடக்கவில்லை என்பதே எல்லோருடைய கவலையுமாகும்.

இன்னொரு நண்பர், இவர் ஒரு ஆசிரியர் என்பதோடு சமூக அரசியல் இலக்கிய விமர்சகருமாவார். இவர் சொல்கிறார் It's time to think about it... (இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய நேரமிது) என்று.

"இளைய தலைமுறையின் வாழ்க்கைக்காகவும் அவர்களுடைய பாதுகாப்புக்காகவும்தான் ஏராளமான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துள்ளது.

அவர்களுக்கான நவீன (அறிவியற்) கல்வி, தொழில்நுட்ப அறிமுகம், புதிய பயிற்சிகள், பயிற்சி மையங்கள், இளைஞர் அமைப்புகள் எனப் பல திட்டங்களும் கட்டமைப்புகளும் உள்ளனவே. அப்படியிருக்கும்போது எதற்காக இப்படியொரு தேவையில்லாத கேள்வியும் வியாக்கியானங்களும்?"என்று ஒரு ரெடிமெற் பதில் வரக்கூடும்.

இதை ஒத்ததாக வேறு சிலரும் சில பதில்களைச் சொல்லலாம்.

இந்த ஏற்பாடுகளும் கட்டமைப்புகளும் உண்டுதான். ஆனால் இவை பற்றிய கேள்விகளும் உண்டு.

ஏனென்றால், இந்த நிறுவனங்கள் இன்று தோல்வியான பங்களிப்புகளையே வழங்கியுள்ளன. அதாவது நவீன கல்வியை – எதிர்காலத்துக்குரிய அறிவை – இவை வழங்கிக் கொண்டிருக்கலாம். இளைஞர்களுக்கான கட்டமைப்புகள் கூட இருக்கலாம். ஆனால், அவற்றினால் உருவாக்கப்படும் இளைய தலைமுறையினர் தாம் படித்த துறையில் வேலைகளைச் செய்வதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது.

இதற்கு கடந்த 15 ஆண்டுகாலத்தை ஒரு மாதிரிக்கு எடுத்துக் கொள்ளலாம்.

இந்தப் 15 ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைப் பெற்றுக் கொண்டு வெளியேறியோரில் 70 வீதமானோருக்கு அவர்கள் படித்த கல்விக்கு மாறான வேலைகளே கிடைத்துள்ளன.

மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளைத் தவிர்ந்த ஏனையோருக்கு அவர்கள் படித்த அடிப்படையில் தொழில் கிடைப்பதில்லை. வெளியே வேலைகளை உருவாக்கக் கூடிய சூழலும் இல்லை. இதனால் தமக்கு அரசாங்கமே வேலையை வழங்க வேண்டும் என்று கேட்கிறார்கள் இந்தப் பட்டதாரிகள். வேலையில்லாப் பட்டதாரிகளின் போராட்டங்கள் இந்த வகையானவையே.

அரசாங்கமும் அரசியற் கட்சிகளும் இந்த நிலையைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி, "அரச உத்தியோகம் பெற்றுத் தரப்படும்" என தேர்தலில் வாக்குகளை அறுவடை செய்கின்றன. இதனால் படித்தது எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. ஏதாவது ஒரு உத்தியோகம் கிடைத்தால் போதும் என்று அந்த வேலை வாய்ப்பில் சேர்ந்து விடுகிறார்கள்.

இதனால் பல அரச திணைக்களங்களில் அந்தத் திணைக்களங்களுக்குப் பொருத்தமற்ற பலர் நிரப்பப்பட்டுள்ளனர். இது அவர்களுடைய ஆற்றலைப் பயன்படுத்த முடியாமல் போவதுடன் அந்தத் திணைக்களங்களையும் பலவீனப்படுத்துவதாக உள்ளது.

இது தவிர, மேற்கல்வியைத் தொடர முடியாத பல்லாயிரக்கணக்கானோருக்கு எதிர்காலத் திட்டங்கள் எதுவும் தெளிவாக இல்லை. இளைஞர் விவகார அமைச்சு ஒன்று தனியாக இருந்தாலும் அதனால் சரியான முறையில் வழிகாட்டல்களைச் செய்யவும் வாய்ப்புகளை உருவாக்கவும் முடியவில்லை.

இதன் காரணமாக இளைய தலைமுறையில் பலரும் வெளியேறும் மனநிலையிலேயே இருக்கின்றனர். இந்த வெளியேறும் மனநிலையும் இந்த வெளியேற்றமும் சாதாரணமானதல்ல.

நாட்டுக்குப் பேரிழப்பைத் தருவதாகும். அதேவேளை தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொருவருக்கும் துயரை ஏற்படுத்துவதாகும்.

வெளியேறிச் செல்வோர் அனைவரும் நாட்டைப் பிரிந்து, பிறந்து வளர்ந்த ஊர், உற்றம் என்ற சூழலைப் பிரிய முடியாமல் பிரிந்தே செல்கிறார்கள்.

யாருக்குத்தான் பெற்றோரையும் குடும்பத்தையும் விட்டு வெளியேறி பிற நாடொன்றில் வேலைக்கோ வாழவோ செல்ல விருப்பமாக இருக்கும்?

"சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போல வருமா?" என்பது எல்லோருடைய உள்ளத்திலும் கொதித்துக் கொண்டிருக்கும் உண்மை.

ஆகவே யாரும் ஊரையும் உறவுகளையும் தாய் நாட்டையும் விட்டு வெளியேற விரும்பவே மாட்டார்கள்.

அப்படியிருந்தும் எதற்காக இந்தப் பிரிவை ஏற்றுக் கொண்டு துயரத்துடன் வெளியேறுகிறார்கள்? என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

காரணம், நாட்டில் தங்களுடைய எதிர்காலத்தை நிர்மாணிக்க முடியாது. அதற்கு உத்தரவாதமில்லை. ஒன்று, தொடரும் இனவாதம். இரண்டாவது தொடரும் ஜனநாயக நெருக்கடி. மூன்றாவது, சீரில்லாத பொருளாதாரக் கொள்கை. நான்கு, திட்டமில்லாத, ஸ்திரமற்ற அரசியல் முன்னெடுப்புகள். திறமைக்குரிய இடமும் அங்கீகாரமும் இல்லை என்ற நிலை.

இப்படியான நியாயமான காரணங்களினால் இளைய தலைமுறை சலித்துப் போயிருக்கிறது. சோர்ந்திருக்கிறது. கோபத்துடனிருக்கிறது.

இதனால்தான் அது இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று சிந்திக்கிறது.

இந்த வெளியேற்றம் கூட இரண்டு வகையானது. ஒன்று தொழிலுக்கான தற்காலிக வெளியேற்றம். இரண்டாவது, புலம்பெயர்ந்து செல்லும் நிரந்தர வெளியேற்றம்.

இரண்டு வெளியேற்றங்களிலும் இளையோரே பெரும்பாலானவர்களாக இருக்கின்றனர். இளையோர் என்பது ஒரு நாட்டின் அருமையான வளமாகும். ஒரு நாட்டின் வளங்களில் முக்கியமானது மனித வளமாகும். அதிலும் இளைய தலைமுறையின் ஆற்றலும் அறிவும் முக்கியமானது. அதை இந்த நாடு இழந்து கொண்டிருக்கிறது. அவர்கள் எந்த வகையில் வெளியேறினாலும் அது நாட்டுக்குப் பேரிழப்பே.

முன்பு யுத்தத்தினால் பல லட்சம் இளையோரின் ஆற்றல் வீணடிக்கப்பட்டது – நாசமாக்கப்பட்டது.

அதற்கு முன்பு நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளால் (ஜே.வி.பி கிளர்ச்சிகள், தமிழ் இயக்கங்களின் போராட்டங்கள்) பல லட்சம் இளையோரின் ஆற்றல் இழக்கப்பட்டது. அவர்களே இல்லாதொழிக்கப்பட்டனர்.

இந்த நெருக்கடிகளாலும் பொருளாதாரப் பிரச்சினைகளாலும் பல லட்சக்கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றனர்.

அவர்களே இன்று புலம்பெயர்ந்தவர்களாக உள்ளனர்.

ஆகவே கடந்த ஐம்பது ஆண்டுகளாக (1971 இல் ஜே.வி.பி கிளர்ச்சி ஏற்படத் தொடங்க முன்பிருந்து) இலங்கையின் இளையோரில் கணிசமான தொகையினரின் ஆற்றலும் அறிவுத்திறனும் உற்பத்திக்கும் வளர்ச்சிக்குமாகப் பயன்படுத்தப்படவில்லை. அவை சிதறடிக்கப்பட்டன. இழக்கப்பட்டன.

பின்னர் அது வெளியுலகத்தில் இழக்கப்பட்டன. இப்பொழுதும் இதுவே நிகழ்கிறது. இனியும் இதுதான் நிகழக்கூடிய சாத்தியமுண்டு.

விமான நிலையத்தில் நீங்கள் ஒரு சில மணி நேரம் நின்றாலே தெரியும் பணியாளர்களாகவும் பணிப்பெண்களாகவும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு எத்தனை ஆயிரம் பேர் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று.

அதைப்போல தினமும் ஏதேதோ வழிகளால் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளுக்கெல்லாம் எவ்வளவு பேர் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதையும்.

இங்கே – இலங்கையில் தொழில் வாய்ப்பும் வாழ்வுக்கான உத்தரவாதமும் அமைதியான அரசியல் சூழலும் இருக்குமாக இருந்தால் இவர்கள் வெளியேறுவார்களா? அதற்கான அவசியம் இருக்குமா?

இதைப் புரிந்த கொள்ள முடியாதிருப்பது ஏன்? புரிந்தால் இதைச் செய்யாதிருப்பது ஏன்?

இங்கேதான் நாம் கவனிக்க வேண்டிய விசயங்கள் உள்ளன. இதில் நாம் தனியே அரசாங்கத்தை மட்டும் குறை சொல்லவோ குற்றம் சாட்டவோ முடியாது. ஆனால் அரசாங்கம்தான் பெரும் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்துக்கு அப்பால் சமூகவியல், பொருளாதாரத்துறை, தொழில் துறை, வாழ்வுத்துறை போன்றவற்றில் ஈடுபடும் புத்திஜீவிகள் அனைவருக்கும் இதில் பெரும் பொறுப்புண்டு.

முக்கியமாகப் பல்கலைக்கழகங்களுக்கும் அதற்கு நிகரான நிறுவனங்களுக்கும்.

அதைப்போல சமூக மட்டத்திலான அமைப்புகளுக்கும் இதில் பொறுப்புண்டு.

இவையெல்லாம் இதைச் செய்யாத காரணத்தினால்தான் ஒரு தொகுதியினர் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். அதற்கு வாய்ப்பில்லாதோரில் ஒரு தொகுதியினர் கசிப்பு கஞ்சா போதைப் பொருள் பாவனை, வாள் வெட்டு, திருட்டு போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். ஏனையோர் மிகச் சிரமப்பட்டு தங்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இலங்கை மணித்திருநாட்டின் இளைய தலைமுறையின் எதிர்காலம் இப்படித்தான் உள்ளது.

கருணாகரன்...✍

Ministry of Energy

வலுசக்தி அமைச்சு
மற்றும்
இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

Public Utilities Commission of Sri Lanka

அனைத்து வாகன உரிமையாளருக்குமான அறிவித்தல்

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) ஆகிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து வலுசக்தி அமைச்சானது, பொதுமக்களுக்கு குறிப்பாக வாகன உரிமையாளர்களுக்கு பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றது.

உராய்வு நீக்கி எண்ணெய் உங்களது வாகனங்களில் எதற்காக பயன்படுகின்றது?

என்ஜின்கள் இலகுவில் பழுதடையாமலும் மற்றும் இதன் செயற்பாடுகளால் எழும் வெப்பத்தை தணிப்பதற்கும், துருப்பிடித்தலை குறைத்து பழுதடையாமல் பாதுகாப்பதற்கும் உராய்வு நீக்கி எண்ணெய் பிரதானமாக பயன்படுத்தப்படுகின்றது. வாகன உற்பத்தியாளரால் சிபார்சு செய்யப்பட்ட மிகப் பொருத்தமான உராய்வு நீக்கி எண்ணெயை பயன்படுத்தாதவிடத்து வாகனத்தின் என்ஜின்கள் பழுதுபார்க்க முடியாதளவிற்கு சேதத்தை உண்டாக்கும்.

உராய்வு நீக்கி எண்ணெயை உபயோகப்படுத்தும் போது அவைகளின் தரங்கள் குறைவடைவடைவதனால், உற்பத்தியாளரால் சிபார்சு செய்யப்பட்டதன் அடிப்படையில் அவற்றை கிரமான முறையில் மாற்றுதல் வேண்டும். பயன்படுத்தப்பட்ட உராய்வு நீக்கி எண்ணெயை சுற்றாடலுக்கு தீங்கிழைக்காத வகையில் அகற்ற வேண்டும். இதனை மீள் சுழற்சிக்குட்படுத்தல் ஆகாது.

தரம் குறைந்த/உயர் தர உராய்வு நீக்கி எண்ணெய்களை உபயோகப்படுத்துவதால் உங்களது வாகனத்திற்கு என்ன நடக்கும்?

சிபார்சு செய்யப்பட்ட தரத்தினை விட குறைந்தளவான தரத்தினை உடைய உராய்வு நீக்கி எண்ணெயை ஒருபோதும் பயன்படுத்தல் ஆகாது. அவ்வாறு பயன்படுத்துமிடத்து என்ஜின்களுக்கு பாரிய சேதங்கள் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

சிபார்சு செய்யப்பட்ட தரத்தினை விட அதிக தரத்தினை உடைய உராய்வு நீக்கி எண்ணெயை உபயோகப்படுத்தும் போது என்ஜின்களுக்கு எந்த வகையான பாதிப்புகளும் ஏற்படாது. சந்தையில் கிடைக்கக்கூடிய தரம் குறைந்த உராய்வு நீக்கி எண்ணெயை உபயோகப்படுத்தியதன் பின்னரே என்ஜின்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தெரியவரும். உடனடியாக பாதிப்புக்கள் தெரியவருவதில்லை. எனவே, மிகப் பொருத்தமான உராய்வு நீக்கி எண்ணெயை உபயோகித்தலே அதிக பலன்களை தருவனவாக இருக்கும்.

பெற்றோல் என்ஜின் ஒயில், டீசல் என்ஜின் ஒயில், நான்கு ஸ்ரோக் உந்துருளி என்ஜின் ஒயில் (Four stroke motorcycle engine oils), இரு ஸ்ரோக் என்ஜின் ஒயில் (Two stroke motorcycle engine oils), தன்னியக்க பரிமாற்றல் திரவம் (automatic transmission fluids) மற்றும் கியர் ஒயில் போன்ற பல்வேறு தரங்களில் உராய்வு நீக்கி எண்ணெய்கள் காணப்படுகின்றன. உராய்வு நீக்கி எண்ணெயின் தரங்கள் அதன் லேபிலில் (label) அல்லது அதன் உற்பத்தி கைநூலில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட வியாபாரக் குறியீடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நபர்கள் யாவை?

உராய்வு நீக்கி எண்ணெய்ச் சந்தையில் தற்பொழுது அங்கீகரிக்கப்பட்ட வியாபாரக் நாமங்களின் பெயர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நபர்கள் யாவை

வியாபாரக் குறியீடு (கள்)	நிறுவனம்	முகவர் நிறுவனம்
POWEROIL	Apar Industries Limited	Ideal Choice (Pvt) Ltd.
MAK	Bharat Petroleum Corporation Limited	TVS Lanka (Pvt) Limited
bp Castrol	BP Middle East LLC	Associated Motorways Limited
hyraol	Ceylon Petroleum Corporation	Sdn Bhd Hyraol Oil Sdn Bhd (blending and producing only)
Caltex, Chevron, Texaco, Lanka	Chevron Ceylon Limited	Chevron Lubricants Lanka PLC
ExxonMobil, Esso, Mobil	ExxonMobil Asia Pacific Pte. Limited	McLarens Lubricants Limited
CAT	ExxonMobil Asia Pacific Pte. Limited	United Tractor & Equipment (pvt) Ltd
Kixx	GS Caltex Corporation	Samaco International (Pvt) Ltd.
Gulf	Gulf Oil Middle East Limited	
SERVO	Indian Oil Corporation Limited	Lanka IOC PLC
Laugfs	Laugfs Holdings Limited	Laugfs Lubricants Limited
SINOPEC	Lubricant Company Sinopec Corporation	Interocean Lubricants Limited
MOTUL	Motul	Transmec International Spectrum Trading Company (Private) Limited
PETRONAS	Petronas Lubricants (India) Private Limited	Global Capital Holdings (Pvt) Limited
Prista	Prista Oil Holding EAD	Desha Shakthi (Private) Limited
Shell	Shell Markets (Middle East) Limited	N. M. Distributors (Pvt) Limited
elf	Total Oil India Private Limited	Navalaka Petroleum (Pvt) Limited
TOYOTA	Toyota Tsusho Corporation	Toyota Lanka (Pvt) Limited
Valvoline	Valvoline LLC	United Motors Lanka Limited

குறிப்பு: இவ் பட்டியல் காலத்திற்கு காலம் இற்றைப்படுத்தப்பட்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இணையத்தளங்களில் வெளிப்படும்.

உங்களது வாகனத்திற்கு பொருத்தமான உராய்வு நீக்கி எண்ணெய் எது?

வாகன உற்பத்தியாளரால் சிபார்சு செய்யப்பட்ட தரத்தினை உடைய உராய்வு நீக்கி எண்ணெயையே எப்போதும் பயன்படுத்துதல் வேண்டும். இவை பொதுவாக உரிமையாளரின் வழிகாட்டி புத்தகத்தில் (கைந்நூல்) அல்லது உராய்வு நீக்கி எண்ணெய் வடிக்கட்டல் முடியில் அல்லது உராய்வு நீக்கி எண்ணெய் அளவினை சரிபார்க்கும் கம்பியில் அல்லது உராய்வு நீக்கி எண்ணெய் பெயர் பலகையில் இவை பொதுவாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

இவை ஒன்றிலும் இல்லாதவிடத்து வாகன உற்பத்தியாளரின் முகவரிடம் சென்று இவை தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும். இவை தொடர்பான உதவிகளையோ அல்லது விபரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைகள் ஏற்படின் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை (PUCSL) தொடர்பு கொள்ளவும்.

உராய்வு நீக்கி எண்ணெய் சந்தை எவ்வாறு ஒழுங்குறுத்துகை செய்யப்படுகின்றன?

உராய்வு நீக்கி எண்ணெய் சந்தையானது 1961 ஆம் அண்டு 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் உள்ள பிரிவின் பிரகாரம் இவை ஒழுங்குறுத்துகை செய்யப்பட்டு நிருவகிக்கப்படுகின்றது.

உராய்வு நீக்கி எண்ணெயை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கலவை செய்தல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், வழங்கல் மற்றும் விநியோகம் செய்வதற்கு அரசாங்கத்திடமிருந்து மிகப் பொருத்தமான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

தரம் குறைந்த பொருட்கள் சந்தையில் உள்நுழைவதை தடுக்கும் வகையில், போதுமான நிதியியல் திறன் மற்றும் தொழிநுட்ப அறிவு கொண்ட தகுதிவாய்ந்த நபர்களுக்கே இவற்றுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே, உராய்வு நீக்கி எண்ணெய் உற்பத்தியாளர்களால் பிரத்தியேகமாக உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் அனுமதி பெற்ற தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களால் சந்தைப்படுத்தப்படும் உராய்வு நீக்கி எண்ணெயையே உபயோகித்தல் வேண்டும்.

உராய்வு நீக்கி எண்ணெய்க்கான தர நிர்ணயங்கள் என்ன?

சர்வதேச சந்தையில், American Petroleum Institute (API) and Japanese Automobile Standards Organization (JASO), European Automobile Manufacturers Association(ACEA) மற்றும் தனிநபர் அசல் உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் (OEM) போன்றோரால் வழங்கப்படும் தரச் சான்றிதழுக்கமைய உராய்வு நீக்கி எண்ணெய் தரங்கள் நிருவகிக்கப்படுகின்றன.

உராய்வு நீக்கி எண்ணெயின் ஆகக் குறைந்த இலங்கை தரங்கள் (SLS), API, JASO, ACEA மற்றும் American Society for Testing Materials (ASTM) standards ஆகியவற்றின் அடிப்படையில் இருத்தல் வேண்டுமென இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது செல்லுபடியாகும் உராய்வு நீக்கி எண்ணெயின் ஆகக் குறைந்த தரங்கள் பின்வருமாறு.

உற்பத்திகள்		இலங்கைத் தரம்	2021.12.31 ஆம் திகதி வரை API/JASO க்கு சமனானது	2022.01.01 ஆம் திகதியில் இருந்து API/JASO க்கு சமனானது
பெற்றோல் என்ஜின் ஒயில் Gasoline Engine Oil		SLS 1374	API - SJ	API - SL
டீசல் என்ஜின் ஒயில் Diesel Engine Oil		SLS 1373	API - CF	API - CH-4
இரு ஸ்ரோக் என்ஜின் ஒயில் Two Stroke Engine Oil		SLS 1446	JASO FC	JASO - FC (Use of a diluent, if any, is limited to High Flash Point Low Aromatic (HFLA) solvent)
நான்கு ஸ்ரோக் உந்துருளி என்ஜின் ஒயில் Four Stroke Motorcycle Engine Oil	உந்துருளி என்ஜின் ஒயில் Motorcycle Engine Oil	SLS 1409	JASO MA API - SG	JASO MA2 API - SL
	ஸ்கூட்டர் என்ஜின் ஒயில் Scooter Oil	SLS 1409	JASO MA API - SG	JASO MB API - SL
கியர் ஒயில்Gear Oil		SLS 1396	GL - 4	GL - 4

உராய்வு நீக்கி எண்ணெய் தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் அரச நிறுவனங்களை அல்லது அவர்களது இணையத்தளத்தினை நீங்கள் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

வலுசக்தி அமைச்சு
இல. 80, சேர் ஏர்னெஸ்ட் டி சில்வா மாவத்தை
கொழும்பு 07,
தொலைபேசி - 011 2564355
தொலை நகல் - 011 2372115
மின்னஞ்சல் - info@energymin.gov.lk
இணையத்தளம் - energymin.gov.lk

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
6 வது மாடி, லங்கா லங்கி வர்த்தகக் கோபுரம்
இல.28, சென் மைக்கல் வீதி
கொழும்பு 03
தொலைபேசி - 011-2392604-8
தொலை நகல் - 011-2392641
மின்னஞ்சல் - info@pucsl.gov.lk
இணையத்தளம் - pucsl.gov.lk

இலங்கை கட்டளைகள் நிறுவனம்
இல. 17, விக்ரோரியா இடம்
லவினியா மாவத்தை
கொழும்பு 08
தொலைபேசி - 011-2671567
தொலை நகல் - 011-2671579
மின்னஞ்சல் - slsi@slsi.lk
இணையத்தளம் - www.slsi.lk

கோவிட் பின்னடைவுகளுக்கு மத்தியிலும் 2020இல் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள்

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals) என்பவை 2015 செப்டெம்பர் மாதத்தில் கூடிய ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் அதன் அங்கத்துவ நாடுகளால் 2015 தொடக்கம் 2030 வரையிலான பதினைந்தாண்டு காலப்பகுதியில் அடைந்து கொள்ளப்பட வேண்டுமென்று உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்குகளாகும்.

அதற்கு முன்னைய 2000 தொடக்கம் 2015 வரையிலான காலப்பகுதியில் அடைய வேண்டுமென அங்கத்துவ நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புத்தாயிரமாண்டு இலக்குகளின் (Millenuim Development Goals) நீட்சியாகவே பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைக் கொள்ள வேண்டும். எல்லாமாக பதினேழு பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன.

அவை முறையே பின்வருமாறு :

1. உலகின் எல்லா இடங்களிலும் எல்லா வடிவங்களிலும் காணப்படும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல்.
2. உலகில் பட்டினியை முடிவுறுத்தல் உணவுப் பாதுகாப்பை எய்துதல் போசாக்கு நிலையை மேம்படுத்தல் மற்றும் நிலைபேறுடைய தன்மை கொண்ட விவசாயத்தை ஊக்குவித்தல்.
3. உலக மக்கள் சுகதேகிகளாக வாழ்வதை உறுதிப்படுத்தல் எல்லா வயதுகளிலும் உள்ள சகலரதும் நல்வாழ்வை ஊக்குவித்தல்.
4. அனைத்தையும் உள்ளடக்கிய தரமான கல்வியை ஏற்றத்தாழ்வுகளின்றி அனைவரும் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தல்.
5. பால்நிலைச் சமத்துவத்தை அடைவதுடன் எல்லாப் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டல்.
6. உலகின் சகலருக்கும் நீரும் சுகாதார வசதிகளும் கிடைப்பதையும் அவற்றின் நிலைபேறுடைய முகாமைத்துவத்தையும் உறுதி செய்தல்.
7. உலகில் வாழும் அனைவரும் நம்பகரமானதும் மலிவாகக் கொள்வனவு செய்யத்தக்கதும் நிலைபேறுடைய தன்மை கொண்டதுமான நவீன சக்திவலுவை பெறுவதை உறுதிப்படுத்தல்.
8. நிலைபேறுடையதும் அனைத்தையும் உள்ளடக்கியதுமான பொருளாதார வளர்ச்சியை அடைவதை ஊக்குவித்தலும் முழுமையானதும் உற்பத்தித் திறன் வாய்ந்ததும் ஒழுக்கமானதுமான தொழில் வாய்ப்பை ஊக்குவித்தலும்.
9. தாக்குப்பிடிக்கவல்ல உட்கட்டுமானங்களைக் கட்டியெழுப்பலும் அனைத்தையும் உள்ளடக்கியதும் நிலைபேறுடையதுமான கைத்தொழில்மயமாக்கத்தை ஊக்குவித்தலும் புத்தாக்கங்களை வளர்த்தெடுத்தலும்.
10. நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையிலும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.
11. நகரங்களையும் மனித குடியிருப்புகளையும் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் பாதகாப்பானதாகவும் தாக்குப்பிடிக்க வல்லதாகவும் நிலைபேறுடைய தன்மை கொண்டனவாகவும் மாற்றியமைத்தல்.
12. நிலைபேறுடைய உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளை உறுதிப்படுத்தல்.
13. காலநிலை மாற்றங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு எதிராகப் போராடுவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுத்தல்.
14. பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக சமுத்திரங்கள் கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களைப் பாதுகாத்தலும் நிலைபேறுடைய விதத்தில் அவற்றைப் பயன்படுத்தலும்.
15. நிலப்பரப்பில் காணப்படும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தலும் மீளக்கட்டியமைத்தலும் நிலைபேறுடைய விதத்தில் அவற்றின் பயன்பாட்டை ஊக்குவித்தலும் வனப்பகுதிகளை நிலைபேறுடைய விதத்தில் முகாமை செய்தலும் காடழிப்புக்கு எதிராகப் போராடுவதும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளின் பரப்பளவு குறைவடைவதைத் தடுத்தலும் உயிர்ப்பல்வகைத்தன்மை குறைவடைவதை தடுத்த நிறுத்துவதும்.
16. பேண்தகு அபிவிருத்தியை அடைவதற்காக அனைத்தையும் உள்ளடக்கிய சமாதானமான சமூகங்கள் உருவாகுவதை ஊக்குவித்தல் அனைவரும் நீதியைப்பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குதல் எல்லா மட்டங்களிலும் வினைத்திறனான பொறுப்புக் கூறவல்ல அனைத்தையும் உள்ளடக்கிய நிறுவனங்களைக் கட்டியமைத்தல்.
17. பேண்தகு அபிவிருத்திக்காக உலக நாடுகளிடையே பங்குபற்றலையும் அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கான வழிவகைகளையும் மீள வலியுறுத்தலும் உறுதிப்படுத்தலும்.

மேற்கூறப்பட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் உலகளாவிய ரீதியில் எந்தளவு தூரம் இந்த இலக்குகள் அடையப்பட்டுள்ளன என்பதை ஆராய்வது பொருத்தமானது. குறிப்பாக, 2019இன் இறுதியிலிருந்து கோவிட் பெருங்கொள்ளை நோய்த்தாக்கம் இக்குறிக்கோள்களை எய்துவதில் கணிசமான பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

பேண்தகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் குறித்த 2021 ஆண்டிற்கான

அறிக்கையின்படி உலகில் ஒரு தலைமுறையின் பின்னர் முதல் தடவையாக கடுமையான வறுமை நிலை அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் சுமார் 124 மில்லியன் மக்கள் கடும் வறுமை நிலையில் தள்ளப்பட்டு விட்டதாக அறிக்கை கூறுகிறது. அதனால் 2020 ஆண்டில் உலகின் வறுமைநிலை 7 சதவீதமாக அதிகரிக்கவும் எனவும் கருதப்படுகிறது. அதேபோல கொள்ளை நோயின் காரணமாக உலகில் பட்டினியின் தீவிரம் அதிகரித்துள்ளது.

2020இல் சுமார் 161 மில்லியன் பேர் புதிதாக பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இக்கொள்ளை நோய் சுகாதாரம் தொடர்பில் இதுவரை எய்தப்பட்ட சாதனைகளை முறியடித்துள்ளமை தெளிவானது. அத்துடன் கல்வித்துறை தொடர்பாக கடந்த இருபது வருடங்களில் பெறப்பட்ட நன்மைகள் அனைத்தும் துடைத்தெறியப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி 2020 ஆண்டில் 255 மில்லியன் முழுநேரத் தொழில்வாய்ப்புகள் இழக்கப்பட்டிருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. கைத்தொழில் உற்பத்திகள் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளன. 2020இல் இத்துறை 6.8 சதவீத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

உலகில் நாடுகளுக்கிடையிலான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020 அல் 1.5 டிரில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 1 டிரில்லியன் டொலர்களாக 40 சதவீத வீழ்ச்சினைச் சந்தித்துள்ளது.

மேற்படி நெருக்கடி நிலை காரணமான உலகில் வருமானச் சமமின்மை நிலையும் தீவிரமாக அதிகரித்துள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் (Gini coefficient) ஜினி குணகம் 6 சதவீதத்தினால் அதிகரித்து சமமின்மை அதிகரித்துள்ளமையை வெளிப்படுத்துகிறது.

கோவிட் பெருங்கொள்ளை நோய் காரணமாக சிறுவர்கள் சுரண்டப்படும் தன்மை அதிகரித்துள்ளது. உலகில் 160 மில்லியன் சிறுவர்கள் சிறுவர் தொழிலாளர்களாக மாறியுள்ளனர். கடந்த இரண்டு தசாப்தங்களில் ஏற்பட்ட மிகப்பெரிய அதிகரிப்பு இதுவாகும். இவ்வாறு வறுமை பட்டினி வருமான ஏற்றத்தாழ்வுகள் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்புகள் மற்றும் முதலீட்டுப் பாய்ச்சல்கள் என்பவற்றில் கடந்த வருடம் மோசமான பின்னடைவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனால் 2030 ஆம் ஆண்டில் அடையலாம் என எதிர்பார்க்கப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில் பலவற்றை அடைய முடியாமல் போகுமென எதிர்வு கூறப்படுகிறது. ஆனால் இலங்கை தொடர்பில் இதே காலப்பகுதியில் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் குறித்த அடைவுகள் சிறந்ததாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

முன்னைய ஆண்டு அபிவிருத்தி இலக்குகளை அடைவது தொடர்பிலாக 165 நாடுகள் தரவரிசையில் 2019இல் 94வது இடத்திலிருந்து 2020 இல் 87ஆவது இடத்திற்கு முன்னேறியிருக்கிறது. அது மட்டுமன்றி வறுமை தணிப்பு, பட்டினி தவிர்ப்பு, கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் இதே காலப்பகுதியில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளதாக மேற்படி அறிக்கை குறிப்பிடுகிறது.

விளாடிமிர் புடினுடைய இந்திய விஜயமும் பூகோள அரசியலில் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியும்

இந்தியா சோவியத் உறவின் நீட்சியாக ரஷ்யாவுடனான நெருக்கத்தை அதிகம் கொண்டிருகிறது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்தியாவுக்கு 06.12.2021அன்று விஜயம் செய்திருந்தார். அவரது வருகை மூலோபாய உறவினை பலப்படுத்துவதாக அமைந்திருந்தது. உலக ஒழுங்கில் ஏற்பட்டுவரும் குழப்பமும் இந்தியா ரஷ்யா ஆகிய நாடுகளின் எழுச்சியும் அவரது இந்திய விஜயத்தை அதிக தந்திரோபாயமிக்கதாக பேச வைத்துள்ளது. வரலாற்று ரீதியாக இந்தியாவுக்கும் சோவியத்திற்கும் இடையில் பாதுகாப்பு உடன்பாடு இந்திரா காந்தி காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. அக்காலத்திலிருந்து இந்தியா தனது அணிசேராமை எனும் கொள்கையை கைவிட்டதுடன் சோவியத் சார்பு நிலைக்குள் நகர்ந்தது.பங்களாதேஷ் பிரிவினை மட்டுமன்றி எல்லை போர்களையும், இராணுவ வலிமையையும் சோவியத்தின் ஒத்துழைப்புடன் பலப்படுத்திக் கொண்டது. ஏறக்குறைய ஒரு பிராந்திய வல்லரசாக இந்தியா எழுச்சியடைவதற்கு ரஷ்யாவுடனான இராணுவ ஒத்துழைப்பே பிரதான காரணமாக அமைந்திருந்தது. இக்கட்டுரையும் விளாடிமிர் புடினது இந்திய விஜயம் ஏற்படுத்தியுள்ள பிராந்திய சர்வதேச அரசியலை தேடுவதாக உள்ளது.

விளாடிமிர் புடினுடைய இந்திய விஜயம் இரு நாட்டுக்குமான இராணுவ உறவில் அதிகமான முக்கியத்துவத்தை ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக, அமெரிக்காவோடு நரேந்திர மோடி அரசாங்கம் பின்பற்றிய உரையாடலை ரஷ்யாவுடனும் நிகழ்த்தியிருந்தது. இரு நாடுகளதும் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சுக்களும் உரையாடியது மட்டுமன்றி உத்தர பிரதேசத்தில் குறுந்தூர தாக்குதல் ஆயுதங்களை AK203 தயாரிப்பதற்கான 6.66மில்லியன் அமெரிக்க டொலரில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இதுமட்டுமன்றி இருநாட்டு கடற்படை ஒத்துழைப்பை அதிகரிக்கும் விதத்திலும் இந்தியாவின் பாதுகாப்பு வலுவை ஆயுதரீதியாக அதிகரிப்பதற்குமான புரிந்துணர்வு ரீதியிலான உடன்பாடுகளில் இருநாட்டு தலைவர்களும் கையெழுத்திட்டுள்ளனர். ஏறக்குறைய 10இற்கும் மேற்பட்ட பரிந்துணர்வு உடன்படிக்கைகள் இருநாட்டு தலைவர்களும் மேற்கொண்டுள்ளனர். அவற்றில் அநேகமானவை ஆயுத உற்பத்தியுடனேயே தொடர்புறுகிறது. அமெரிக்காவின் எச்சரிக்கையையும் கடந்து இந்தியா ரஷ்ய தயாரிப்பான எஸ்400வகை ஏவுகணைகளை கொள்வனவு செய்ய உடன்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி இந்தியாவும் ரஷ்யாவும் பிராந்திய சர்வதேச விடயங்களில் வெளிவிவகாரத்தை பொறுத்தளவில் அதிக சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இதனை சரிசெய்வதற்கான உரையாடலையும் இருநாட்டு தலைவர்கள் மேற்கொண்டுள்ளதுடன், தென்னாசியா மற்றும் மேற்காசியாவில் நிகழும் நெருக்கடிகளையும் உரையாடி உள்ளனர். இவற்றை முதன்மைப்படுத்தி கொண்டு ஆப்கானிஸ்தான் விவகாரத்தையும் சுமுகமாக கையாளும் விதத்தில் இந்தியாவும் ரஷ்யாவும் புரிந்துணர்வை ஏற்படுத்தும் உரையாடலில் கவனம் செலுத்தினர். இவற்றை அவதானிக்கும் போது இரு நாடுகளுக்குமிடையில் வலுவான நட்புறவுக்கான அடித்தளமும் அதற்கான அணுகுமுறையும் தீவிரமாக நிகழ்ந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. ரஷ்யாவின் ஆயுதங்களையும் இராணுவ ரீதியிலான தளபாடங்களையும் அதிகமாக கொண்டிருக்கும் இந்தியா ரஷ்யாவுடன் ஏற்படும் நெருக்கம் மீளவும் ஒரு நெருக்கடிமிக்க சூழலை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புச்சார்ந்து சீனா மட்டுமன்றி அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளும் உரையாட ஆரம்பித்துள்ளன. அத்தகைய உரையாடலின் தாக்கம் எத்தகையதாக அமையுமென்பதை ஆழமாக அவதானித்தல் அவசியம்.

முதலாவது, பனிப்போரின் பின்னான காலப்பகுதியில் இந்திய அமெரிக்க கூட்டு வலுவானவொரு அரசியல் களத்தை பூகோள அரசியலில் ஏற்படுத்தி வருகிறது. இதன் பிரதிபலிப்புக்களை இந்தோ பசுபிக் உபாயத்திலும் குவாட்01,02 பொறிமுறையிலும் அடையாளம் காண முடிகிறது. சீனாவுக்கு எதிரான அணியொன்று அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தியாவால் தெளிவாக வரையறுக்கப்பட்டள்ளது. அதில் ஜப்பான், அவுஸ்ரேலியா, தென்கொரியா போன்ற நாடுகளும் இணைந்து பயணிக்க முயலுகின்றன. இத்தகைய நாடுகளின் கட்டமைப்பை நேட்டோ02 என அழைக்கும் ஆய்வாளர்களும் ஆய்வுகளும் வெளிவந்துள்ளன. குவாட் 01,02 என்பன

நோட்டோ02இன் ஆரம்ப முயற்சியாகவே அத்தகைய பதிவுகள் உறுதிப்படுத்துகிறன. இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் 2102 உரையாடலை அமெரிக்காவுடன் செயற்படுத்தி வரும் இந்தியா பொருளாதார ரீதியிலும் அதிகம் அமெரிக்காவுடனும் ஐரோப்பிய நாடுகளுடனும் தங்கியிருக்க முயன்றது. இவ்வகை போக்கு கொவிட் தொற்றுக்கு பின்னர் அதீதமாக வளர்ச்சியடைந்ததுடன், சீனாவுக்கு எதிரான அணியொன்றையும் கட்டமைத்து அதனூடாக இந்திய மேற்கு உறவு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அரசியல் பொருளாதார இராணுவ கட்டமைப்பு என்பதை விட அதையும் கடந்து இந்தியாவின் ஒவ்வொரு நகர்விலும் மேற்கு மற்றும் அமெரிக்காவின் கரிசனையும் ஈடுபாடும் செல்வாக்கும் அதிக்கமும் அதிகரிக்க தொடங்கியது. இந்தியாவின் எல்லைக்குள் அமெரிக்காவின் பிரவேசம் என்பது சாதாரணமொன்றாக மாறியுள்ளது. ட்ரம்ப்,மோடி சந்திப்புக்கள் அதனையே வெளிப்படுத்தியிருந்தது. ஆனால் புதிய ஜனாதிபதி பைடன் சற்று விலகியிருந்தாலும், அமெரிக்க வெளி விவகாரம், பாதுகாப்பு மற்றும் இராணுவ நடவடிக்கைகள் இந்திய எல்லைக்குள் அதீத வளர்ச்சியை அடைந்துள்ளது. ஏறக்குறைய முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் காலப்பகுதியை அப்படியே தொடர்ந்து பின்பற்றி வருகிறார் பைடன் .

இரண்டாவது, இந்திய ரஷ்யா நட்பானது நீண்ட வரலாற்றை கொண்டது முன்னாள் சோவியத் யூனியன் காலப்பகுதியிலிருந்து அத்தகைய பிணைப்பு வலுவானதாக உள்ளது.

அதிலும் குறிப்பாக, இந்தியாவில் உள்ள ஆயுத தளபாடங்கள், விமானங்கள், நீர்மூழ்கிகள், உலங்குவானூர்திகள், போர்க்கப்பல்கள் மட்டுமன்றி சிறிய ரக ஆயுதங்களும், போக்குவரத்து சாதனங்களும் ரஷ்யாவினுடையதாகவே காணப்படுகிறது. ரஷ்யாவின் மிகப்பெரிய ஆயுதக்கொள்வனவு நாடாக இந்தியா விளங்குகின்றது. அத்தோடு இந்தியாவின் ஆயுத ஏற்றுமதிகளையும், உள்நாட்டு ஆயுத உற்பத்திகளையும் மேற்கொள்வதற்கான தொழில்நுட்பம், அதற்கான மூலப்பொருட்களை ரஷ்யாவிடமிருந்தே இந்தியா பெறுகிறது. இந்தியா உலகில் உள்ள 84 நாடுகளில் ஆயுத ஏற்றுமதியை செய்வதுடன் 5.5 பில்லியன் அமெரிக்க டொலரை அத்தகைய ஏற்றுமதியால் பெறுகிறது.

இத்தகைய நெருக்கமான உறவை கொண்டிருக்கும் இருநாடுகளும் மக்கள் தொகையாலும் நிலப்பரப்பாலும் வலுவான தேசங்களாக காணப்படுகிறன. இவற்றினுடைய இணைவு என்பது மூலோபாய ரீதியில் முக்கியமானது என்பதுவும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளுக்கும் சீனாவுக்குமானது என்பதும் கவனத்திற்குரியது.

மூன்றாவது, ரஷ்சியா, இந்தியா மூலோபாய நட்புறவு வலுவடைவதன் மூலம் உடனடியான பாதிப்பை ஐரோப்பாவும் அமெரிக்காவும் அதன் அணி நாடுகளுமே எதிர்கொள்பவையாக அமையும். படிப்படியாக அமெரிக்கா தனது ஆயுத தளபாடங்களை இந்தியாவுக்குள் குவிப்பதற்கும் மீண்டுமொரு சீன, இந்திய யுத்தத்தை உருவாக்க முயற்சிக்கின்ற போது சீன அணியோடு பயணிக்கும் ரஷ்சியாவுடனான இந்தியா ஒத்துழைப்பு வலுவடையுமாயின் இராணுவ ரீதியில் மட்டுமன்றி அரசியல், பொருளாதார ரீதியிலும் அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஆபத்தானதாக அமையும்.

சீனாவை பொறுத்தவரை ரஷ்யாவுடன் ஒத்துழைக்க மேற்கை எதிர்த்தாலும் சீனா எண்ணிக்கொண்டதன்படி மேற்கு தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் தனது பிரதான எதிரிகளாக இந்தியா மற்றும் ரஷ்யாவையே கருதும். ஆனால் மேற்கை தோற்கடிக்கும் வரை அத்தகைய முரண்பாட்டை அது சுமுகமாகவே கையாள முயலும். புடினுக்கு பின்னான ரஷ்யா சீனாவின் செல்வாக்கு மண்டலமாக அமையுமாயின் இந்தியாவோடு மோதுவதே சீனாவின் பிரதான உத்தியாக இருக்கும். இதனால் சீனா சமகாலத்தில் இந்தியாவையும் ரஷ்யாவையும் சுமுகமாகவே கையாள முயலும்.

நான்காவது, இச்சூழலிலேயே ரஷ்ய ஜனாதிபதியின் இந்திய விஜயம் நிறைவு பெறுகின்ற போது இந்தியாவின் முப்படைத் தளபதி பிபின் ராவத் தமிழகத்தில் ரஷ்யா தயாரிப்பு உலங்கு வானூர்தியான எம்17இல் பயணிக்கையில் கொல்லப்பட்டுள்ளார். அத்தகைய கொலைக்கு சரியான காரணத்தை இந்திய தரப்பு இதுவரை வழங்கவில்லை.

இந்திரா காந்தியின் மரணத்துக்கும் இந்திய மத்திய அரசு இதுவரை யார் காரணமென்று தெரிவிக்கவில்லை. அப்படுகொலை எத்தரப்பால் மேற்கொள்ளப்பட்டது என்பதை படுகொலையின் நகர்வுகளை வைத்துக்கொண்டு அடையாளங்காண முடிந்தது.

அத்தகைய சூழலில் இந்தியாவின் முப்படை தளபதி கொல்லப்பட்டதற்கு பின்னாலுள்ள நடைமுறையும் இந்திரா காந்தியின் படுகொலைக்கு பின்னால் உள்ள நடைமுறையும் ஏறக்குறைய ஒன்றாகவே காணப்படுகிறது. அதாவது ரஷ்ய, இந்திய நெருக்கம் வலுவடைகின்ற போது வலுவான தொழில்நுட்பத்தை கொண்ட ரஷ்ய தயாரிப்பான உலங்குவானூர்தியில் பயணம் செய்கின்ற போது முப்படை தளபதி கொல்லப்பட்டுள்ளார்.

எனவே, மூலோபாய ரீதியிலான ரஷ்ய, இந்திய உறவு வலுவடைவதற்கான சூழல் மீளமைக்கப்பட்டுள்ளது. இராணுவ ரீதியிலான வளர்ச்சியை நோக்கி இந்தியாவின் நகர்வு பிராந்திய சர்வதேச அரசியலில் அதிக அச்சத்தையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்குமான நட்பென்பது இராணுவ மற்றும் அரசியல் ரீதியில் விசேடமானது. இது பூகோள அரசியலில் அதிக அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

தினகரன் வாரமஞ்சரி
மஞ்சரி மாருதம்

வாழ்க்கைச் சுமையை சுமக்க முடியாமல் தள்ளாடும் நாட்டாண்மைகள்

சனநெரிசல் மிகுந்த தலை நகரின் மொத்த விற்பனை நிலையங்களுக்கு அருகில் பாரிய சுமைகளை தோள்களிலும், அல்லது தள்ளு வண்டில்களிலும் அங்கும் இங்கும் எடுத்துச் செல்லும் நாட்டாண்மைகளை அன்றாடம் பார்க்கலாம். அவர்கள் தொழிலுக்கு வரவில்லை என்பதற்காக அவர்களுக்கு சம்பளம் வெட்டப்படுவதில்லை..

தொழிலுக்கு வரும் நேரம், வேலை முடிந்து செல்லும் நேரங்களைப் பார்த்து சிகப்பு கோடு இடுபவர்களும் இல்லை. இத்தொழிலுக்கு கல்வி, குணநலச் சான்றிதழ்கள், அரசியல் அதிகாரமுள்ளவர்களின், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் சிபார்சுக் கடிதங்களும் தேவையில்லை. உடலில், கைகளில் பலமிருந்தால் தமக்கு விருப்பமான நேரத்தில் தொழிலைச் செய்ய முடியும். தமது உடம்பில் பலம் இருக்கும் வரைக்கும் செய்யக் கூடிய இத்தொழிலை, உடலில் சக்தி குறைந்து செல்லும் போது செய்ய முடியாது. அதுவரைக்கும் அவர்கள் மற்றவர்களுக்கு கைகொடுத்து வாழ்கின்றார்கள். நகரின் வீதிகளில் சத்தமிட்டுக் கொண்டு பாரம் சுமக்கும் சில நாட்டாண்மைகள் கடைசி நேரத்தில் நடைபாதையில் காலத்தைக் கடத்துகின்றார்கள். சில நேரங்களில் சுமைகளைச் சுமந்து செல்லும் போதே வீழ்ந்து மரணித்துப் போகின்றனர். எனினும் சில நாட்டாண்மைகள் நகருக்கு வெளியில் காணி நிலங்களை விலைக்கு வாங்கி வீடுகளை நிர்மாணித்து தமது பிள்ளைகளுடன் சிறப்பான வாழ்க்கையும் வாழ்கின்றனர். அவர்களிடையே வட்டிக்கு பணம் வழங்குபவர்களும், மோட்டார் சைக்கிள்களில் வேலைக்காக நகருக்கு வருபவர்களும், நன்றாக ஆடை அணிந்து கைபேசிகளைப் பயன்படுத்துபவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

மொஹமட் நயிஸர்

கே.ரமேஷ்

வீ.பாலா

எந்தளவுக்கு பெரும் பாரம் கொண்ட ஒரு மூட்டையினை வாகனங்களுக்கு ஏற்றும் போது பத்து ரூபாவும், இறக்கும் போது எட்டு ரூபாவும் மாத்திரம் வழங்குவது போதுமானதாக இல்லை எனக் கூறும் இவர்கள் அண்மையில் தாம் சுமக்கு ஒரு மூட்டைக்கு 5 ரூபாவினை அதிகரித்து வழங்குமாறு கோரி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். கொழும்பு நகரில் இந்த நாட்டாண்மைத் தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகமானதோடு, அவர்கள் தலைநகரின் முடுக்குகள் மற்றும் சட்டவிரோத வீடுகளில் வசித்து வருகின்றனர். மாலையில் வீட்டுக்குத் திரும்பும் போது இலவசமாகப் பெற்றுக் கொண்ட மரக்கறிகள், அரிசி உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய பொதியினை வீட்டுக்கு எடுத்துச் செல்லும் நாட்டாண்மைகளும் இல்லாமலில்லை. தற்போது தள்ளு வண்டியின் கூலியும் ஒரு நாளைக்கு 200 ரூபாய் வரையில் அதிகரித்துள்ளது. பாரம் தூக்குபவர்களின் சுக துக்கங்களை அறிந்து கொள்வதற்காக நாம் புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள தெருக்களை நோக்கிப் பயணித்தோம். (21ஆம் பக்கம் பார்க்க)

நிஷானி ஹேரத் பண்டெஹெக...
தமிழில்:
எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

மன நிறைவைத் தந்த "திதுலன தாரக்கா" சிங்கள நூல் வெளியீட்டு விழா

ஒரு தனி இலக்கிய படைப்பாளியின், படைப்புகளை மட்டுமே தாங்கியதாய் நூல் வெளியீட்டு விழா வரிசையில், முற்றும் முழுதுமாய் மாறுபட்ட மறக்கவொண்ணா நிகழ்வு.

ஆமாம் அடுத்த எழுத்தாளர்களின் அடைவுகளை, அவர்கள் தம் அற்புத சாதனைகளை, தேடித் திரட்டி, காழ்ப் புணர்ச்சி அணுவளவேனும் இன்றி, அடையாளம் போட்டுக் கொண்ட, ஆவண பொக்கிஷ வெளியீட்டரங்கு.

கண்களை குளமாக்கி, நெஞ்சை நெகிழவைத்த கனத்த சபை.

நம் தாய் நாட்டின், இஸ்லாமிய பெண் எழுத்தாளர்களின், காத்திரமான, கனதியான ஆளுமைகளை, அடுத்த சமூகத்துக்கும், கொண்டு சென்று இன ஐக்கியத்துக்கு, தூபமிட்ட "திதுலன தாரக்காவுக்கு" (மின்னும் தாரகைகள்) சிங்கார மொழியாம் சிங்களத்தில் நூல் வெளியீட்டு விழா.

தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் தலைமையில் கடந்த சனியன்று (04,12,2021) காலை தலைநகரில் கண்கொள்ளா, நூல் வெளியீட்டு விழா மிக சீராய் நிகழ்ந்து, இலக்கிய இதயங்களை, கட்டிப்போட்டுக்கொண்டது.

இத்தனைக்கும், காரணமாயமைந்த "பெண்ணுலக தாரகை" கலாபூஷணம் சகோதரி நூருல் அயின் நஜ்முல் ஹுசைனின் ஆழமான அர்ப்பணிப்புகளும், அவரது வியர்வைத் துளிகளும், நம் கண்முன்னே ஒவ்வொரு பொழுதும், நிழலாடுகின்ற போது யாரது உளம்தான் நெகிழாமல் இருக்கப்போகிறது?.

மங்காப் புகழை இவருக்கு தேடிக் கொடுத்த, "மின்னும் தாரகை" எனும் ஆவணப் பொக்கிஷத்தை வெளியிட்ட, அந்த நினைவுகளின் ஈரத்தோடு, இன்னும் ஒரு புதையலாக, "திதுலன தாரக்கா" சிங்கள மொழியில், ஓர் ஆய்வு நூலுக்கு, உருப்போட்ட கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைனின் இந்த அபார சாதனையினை, இலக்கிய உலகும், காலமும் எப்படி மறந்து போகும்? எப்படி இதை மறைத்து கடந்துபோகும் ?

விழாத்தலைவர், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர், செந்தில் வேலவர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர், "திதுலன தாரக்கா" நூல் ஆசிரியை கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைனின், சிறப்பான பங்களிப்புகளை, அவரது வளமான ஆற்றல்களை மிகத் தெளிவாக, சபையில் வெளிகொணர்ந்த அதே வேளை, பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் மாலா பஸ்நாயக்க, முன்னாள் "தெசத்திய" பிரதம ஆசியர், அரசாங்க தகவல் திணைக்கள அதிகாரி சுமித் மாயாதுன்னே, இலங்கை எழுத்தாளர் அமைப்பின் செயலாளர் கமல் பெரேரா ஆகியோர் சிங்கள மொழியில், சகோதரி நூருல் அயினின் சிறப்புகளை மிகச்சிறப்பாக மனநிறைவாக சொல்லி சபையோரை ஆனந்த களிப்பிலாழ்த்தினர். பயங்கர வாத காலப் பகுதியில் தனது உயிரைப் பணயம் வைத்து பல தமிழ்த் தலைவர்களை பேட்டி கண்டு தெசத்திய சஞ்சிகையில் நூருல் அயின் பிரசுரித்தார் என்று கூறி சுமித் மாயாதுன்னே அவரின் புகழை ஓங்கச் செய்தார்.

கோலாகலமான விழா !

அதுவும் இன்றைய நெருக்கடியான சூழலில் !

இலங்கை வானொலி பிரதி பணிப்பாளர் நாயகம் திருமதி மயூரி அபேசிங்க, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் இப்ராஹிம் அன்சார் ஆகியோரும் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர். தமிழ் மணி மானா மக்கீன், சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி, காவ்யாபிமானி கலைவாதி கலீல் ஆகியோரும் மேடையை அலங்கரித்தனர்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் காதர் மொஹிதீன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதுவும் இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு சிறப்புச் சேர்த்தது. அவருடன் மௌலவி ஜலீல் சுல்தான், ஊடகவியலாளர் சாஹுல் ஹமீத் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

நூல் நயவுரையினை முஸ்லிம் மீடியா போரம் தலைவர், முன்னாள் நவமணி பிரதம ஆசிரியர் என். எம். அமீன் கனகச்சிதமாக சிங்கள மொழியில் நிகழ்த்தினார்.

இசைகோகிலம் நூர்ஜஹான் மர்சூக், ஈழத்து இசைமுரசு கலைக்கமல், ஆசிரிய ஆலோசகர் ரக்வான அனீஸா பேகம் ஆகியோர் தமது காந்தக் குரல்களால் நூருல் அயின் புகழ் பாட சென் அந்தனீஸ் கல்லூரி மாணவர் ரிஹாம் றியாழ் தனது மழலைக் குரலால் தமிழிலும் சிங்களத்திலும் வாழ்த்துப் பாடல் இசைத்து சபையை தன் வசமாக்கினார்.

தமிழ்த்தென்றல் அலி அக்பர், நூலாசிரியரின் மகள் சட்டத்தரணி நூருஸ் ஷப்னா சிராஜுதீன் ஆகியோர் கலாபூஷணம் நூருல் அயினை தம் கவி வரிகளால் வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

இந் நிகழ்வில் முதல் பிரதியை அக்கரைப்பற்றிலிருந்து நீண்ட தூரம் பயணம் செய்து வந்த ஓய்வுபெற்ற ஆசிரியையான பன்னூலாசிரியர் கவிதாயினி திருமதி மதீனா உம்மா பெற்றுக் கொண்டார். ஒரு பெண் பிரமுகர் நூல் வெளியீட்டு விழாவில் முதல் பிரதியை

எம். எஸ். எம். ஜின்னா...

பெற்றுக் கொண்டதும் ஒரு புதுமையே. தனக்காக அவ்வாறு பயணம் செய்து தன்னை கௌரவப் படுத்திய மதீனா உம்மாவை நூலாசிரியர் நூருல் அயின் சும்மா விடவில்லை. அவருக்கு மேடையிலேயே பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்ததோடு மட்டும் நிற்காமல் நூலாசிரியர் நூருல் அயின் முதல் பிரதி பெற்ற மதீனா உம்மாவுக்கு தங்க மோதிரம் அணிவித்து அவரையும் சபையோரையும் பிரமிக்கச் செய்தார்.

இதனை மற்றொரு சிறப்பம்சமாகவே நான் கருதுகிறேன்.

மன நிறைவோடு கலைந்து சென்ற அனைவருக்கும் பகல் உணவு "திதுலன தாரக்கா" பொறித்த கைப் பையில் வைத்து வழங்கப்பட்டது.

கொழும்பு டீ. எஸ். சேனாநாயக்க மற்றும் குணசிங்கபுர மஸ்ஜிதுன் நஜ்மி மாணவன் ஷிராப் ஸாஹிர் கிராஅத் ஓதினார். சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் வரவேற்புரை வழங்க ஆரம்பமான இவ்விழா " மின்னும் தாரகை", "திதுலன தாரக்கா " நூல் ஆசிரியை கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைனின் ஏற்புரையோடு, இனிதே நிறைவுபெற்றது. இந்நூலில் உள்வாங்கபட்ட காலஞ்சென்ற எழுத்தாளர்கள் உட்பட கொரோனா தாக்கத்தால் இறையடிசேர்ந்த எழுத்தாளர்களுக்காகவும் மௌனப் பிரார்த்தனை இடம்பெற்றது.

பல அமைப்புகள், தனிப்பட்ட முறையில் எழுத்தாளர்கள் நூலாசிரியரை பொன்னாடை போர்த்தி, பரிசுகள் வழங்கி கௌரவித்தமையும் கண் கொள்ளா காட்சியாக இருந்தது.

விழா நிகழ்வுகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை தயாரிப்பாளர், இஸ்பஹான் ஷாபி நளீமீயின் தொகுப்பில் முஸ்லிம் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகியமை குறிப்பிடத்தக்கது.

திருப்தி

அலிறிஸாப், அக்குறணை

உன்னை
நேசிக்கும் இதயம்
ஒன்று கிடைக்காவிட்டால்
நீ நேசிக்கும்
இதயம் ஒன்றைத்
தேடிப் பெற்றுக்கொள்
நிச்சயம்
கிடைக்காத ஒன்றை
நினைத்து
ஏங்குவதைவிட
கிடைக்கக் கூடிய
ஒன்றைத் தேடி
பெற்றுக் கொள்வதே
மேலானது என்றும்
உயர்வானது

நீயும் நானும் யார்...?

காரையன் கதன்

நாம் இருந்த அதே இடத்தில்
இருக்கிறேன் தனியாக

எதிரில் கதிரை கதைக்கிறது
நாம் பரிமாறிய வார்த்தைகள்தான்
பகிர்கிறது

முத்த சப்தங்கள் கேட்டு
உதிர்ந்த இலை ஒன்றை
பத்திரமாய் பாதுகாத்து காட்டுகிறது
உனக்கு பிடித்த மரம்

அணிலும் ஏமாற்றத்துடன்
வந்து போகின்றது
அடிக்கடி

நினைவுகளை நினைத்து பார்கிறேன்
சிரிக்கிறேன்
நீயும் நானும் யார் என்று

யாரடி நீ மோகினி ?

மொழி

என் மௌனத்தை மொழி பெயர்த்தவளே
என் புன்னகைக்கு புது அர்த்தம் கொடுத்தவளே
என்விழி மொழிக்கு புது மொழி கற்பித்தவளே
என் நடைக்கு அபிநயம் புரிந்த வளே
என் வாய் மொழியை
தாய் மொழியில் இனிமையாக்கியவளே
என் நெற்றிப் பொட்டை மறைத்த
மயிரை கோதி விட்டவளே
என் நெற்றியைத் தொட்ட உன் கரத்தை
பிடிக்க முயல்கையில் எட்டி நின்றவளே
என் இதழ் குவிப்பிற்கு "உச்" கொட்டியவளே
என் நாசியைப் பிடித்து ஓர் ஆட்டு ஆட்டியவளே
என் முகத்தில்'மூன்றாம் பால்' வடிவதைக் கண்டு
என் காதைப் பிடித்துத் திருகியவளே
என் புருவங்கள்களை உயர்த்தி
கண்விழித்துப் பார்த்தபோது
உன்னைக் காணவில்லை
யாரடி நீ மோகினி!

பாசக்காரி

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

உயிராக உன்னை
நேசிக்கிறேன் என்று தானே
அவள் கரம் பற்றிக் கொண்டாய்

அத்தனை
சிரமங்களுக்கு மத்தியில்
உன்னை கைப்பிடித்தாள் விடாப்பிடியாக

இனி எல்லாமே
நீ தான் எனும் நம்பிக்கையில்
குங்குமமாய் சிவந்தது அவள் முகம்

எல்லாலோருக்கும் கிடைக்காத
அரும் பொக்கிஷம்
அவளோடு இருப்பதாய் உணர்ந்த
அந்த நொடிகளில்
குழந்தையாய் மாறி
குதூகலித்தாள் அவள்

பெண்மையைப் போற்றும் உன்னை
பொன்னாக நினைத்தாள்
அந்தப் பேதை

எல்லாமே போதை என்பது போல
சட்டென்று உன் பாசம் எல்லாம்
வேஷம் ஆகிடும் என்று சற்றேனும்
நினைக்கவில்லை அவள்

இப்போது
புழுவாய் துடிக்கிறாள்
அனலாய் எரிகிறாள்
காற்றோடு கரைகிறாள்
கண்ணீரில் மிதக்கிறாள்

போதும் நீ கொடுத்த
பொய்யான நம்பிக்கைகள்..
இனிமேலும் காத்திருப்பதால்
அவள் மற்ற விரலும்
உன் தாக்குதலுக்குள் சிக்குண்டு
உடைந்து போகலாம்..
உன் குடிப்பழக்கம் அவளை
இன்னும் சின்னாபின்னமாக்கலாம்
அவள் கன்னங்கள் வீங்கிப் போகலாம்
அவள் கண்கள் சோர்விழந்து போகலாம்

அத்தனை கசப்பை
நீ உமிழ்ந்த பின்னரும்
கனத்த கண்ணீருடன்
தாய் வீடு திரும்புகிறாள் அவள்

இத்தனைக்கும் அவள்
உன்னை மட்டும் நம்பி வந்த பேதை....

மீண்டுமொருமுறை
அவளைத் தேடாதே
நீ தேடும் போது அவள்
மண்ணோடு மறைந்திருப்பின்
உன் கால் தடங்கள்
அவளுக்காக அலைந்து
சிரமப்படக் கூடாதாம்
அப்போது கூட
ஒரு துரோகி முன்னால்
பாசக்காரி அவள் தான்..



இல்லை

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

போனகாலம் திரும்பி வரப்போவது இல்லை
புரிந்துணர்வு இல்லையெனில் வாழ்வது தொல்லை
ஆனவரை நன்மைசெய்தால் துன்பமும் இல்லை
அடுத்தவருக்கு உதவினால் இன்பமே இல்லை
போட்டிப் பொறாமையால் நல்லதே இல்லை
பொறுமையால் துன்பம் வருவது இல்லை
மாட்டும் தீயவழி ஏகினால் தொல்லை
மதிப்புடன் வாழ்வினை காப்பாயேல் துயரில்லை
அன்பால் பண்பால் பகைமையே இல்லை
ஆண்டவனை நம்பினால் இன்பமே எல்லை
உன்மன வேட்கையில் நிரம்பினால் தொல்லை
உறுதியாய் செயல்பட்டாய் கலக்கமே இல்லை
திட்டமாய் வாழ்வுக்கு முறைகண்டால் குழப்பம் இல்லை
திடமாக செயற்பட தடையேதும் இல்லை
சட்டங்களை மீறினால் நன்மையே இல்லை
ஞாலத்தில் நேர்மையானால் சுமை ஒன்றும் இல்லை

அவளுக்காக வாழவிடுங்கள்

இஷாதா முஹம்மத்
ஏறூர் கவிமொழி

வீட்டுச்சுமைகள் என்னை
கைதுசெய்து விட்டதென
ஒருத்தி எழுதிக்கொண்டிருந்தாள்

தொழில் சுமைகள்
என்னை எங்கோ விரட்டிக்கொண்டிருக்கிறது
என எனது பழைய
நண்பியொருத்தி கூறிக்கொண்டிருந்தாள்

பிள்ளைகளுக்காகவேயென
ஓடியோடி களைத்துப்போன
ஒருத்தி பற்றி
நான் நன்றே அறிந்திருந்தேன்

பாரம்பரியமென
பதினாறு வயதிலொரு திருமணத்திற்கு
தயாரானதாய் என் தாய் கூறக்
கேட்டுக்கொண்டிருந்தேன்

இன்று நேற்றல்ல
பெண் எப்போதும் அப்படித்தான்..
அவளைப்பற்றி
அவள் சிந்திப்பதில்லை...
அவளுக்கான
ஆசைகள் என
எதுவுமிருந்ததில்லை
அவளுக்காய் எந்த
கற்பனைகளையும்...
வைத்துக்கொண்டதில்லை
அது பற்றியதொரு
புகார்களையும் இட்டதில்லை...

கணவனின் கனவுக்காக
அவளின் கனவை கருக்கிக்கொண்டிருப்பாள்,
மகனின் ஆசைக்காக
அவளின் ஆசையை தூக்கிலிட்டிருப்பாள்,
மகளின் விருப்புக்காக
அவளின் விருப்பை
கருணைக்கொலை செய்திருப்பாள்,
தேவையானோரின்
தேவைக்காக அவள்
தேவையையே மறந்துவிட்டிருப்பாள்,

ஆக சிக்கிச் சிதறி
யாருக்கோவென
ஓடிக்கொண்டிக்குமவளை
கொஞ்சம் விட்டு விடுங்களேன்

யாரிடமோ தன்னை ஒப்புக்கொடுத்து
யாருக்கோ தன்னை விட்டுக்கொடுத்து
யாருக்கோ தன்னை பலியிட துணிந்தவளை
கொஞ்சமேனும்
விட்டு விடுங்களேன்
ஒரு சில நொடிகளேனும்
அவளுக்காய் வாழந்துவிட்டு வரட்டும்

உறைந்த நதி

ரதிதேவி, மானிப்பாய்

எத்தனையோ இரவுகளின் பின்
இன்று மீண்டும் அந்த நினைவு
கண்முன்னே
கலையாத நிழல்களாய்
அலைகளோடு உறைந்த நதியாக

அவள் ஓடினாள்
வேகமா
அதிவேகமாக
அந்த சிறுமியின்
சிறிய கால்கள்
அந்த உறைந்த நதியை
ஒரே பாய்ச்சலில்
கடக்க முயன்றன

உடைந்த முகமூடியுடன்
அவன் பின்னே
துரத்தி வருகிறான்
கையில்
இயந்திரத் துப்பாக்கி
இதயத்திற்கு அருகிலிருந்து
கசியும் குருதி–
வெண்பனி மேல்,
அந்நியமாய் சிந்தும்

பனி உடைகிறது
நதி அவளை விழுங்கி
இழுத்துச் செல்கிறது

இழுத்துச் சென்று
அவன் காலடி கீழ் போடுகிறது

மொத்த உலகமும்
அந்தப் பனிப் படலத்தின் கீழ்
மங்கிவிட
அவள் மூச்சுத் திணறத் திணற
அந்த பனிச் சுவரை
உடைக்க முயல்கிறாள்
கருவறையை விட்டு வெளிவரும்
ஒரு சிசுவின் வேதனையோடு

முகமூடியில் இருந்து
இரண்டு கண்கள் உயிர் பெறுகின்றன
துளைத்த குண்டு
இதயத்தில் எதோ மின்சாரத்தை
இயக்கி விட்தோ

பனியைத் தாண்டி
மழைத்துளிகளாய்
பொழிகின்றது சன்னங்கள்
அவன் அவள்
நிஜம் நிழல்
மரணம் வாழ்வு
கண்ணாடி உடைந்து
எல்லைகள் உருகுகின்றன
நிழல்கள் விடுதலை அடைகின்றன

இதுவும் ஒரு வலிதான்!

பொத்துவில் அஜ்மல்கான்

வலி வந்தது
வழிகள் எதுவுமில்லை
வழி எங்கும்
கதறி ஓடிக்
கொண்டு இருந்தது
மருத்துவ அவசர
ஊர்தி அதனுல்
தாய்மையும் அழுதபடி
கிடக்கின்றாள்!
எண்முறை காலம்
இது என்பதால்
அனைவரும் சுலபமாய்
இருந்தார்கள் இருந்தும்
தாய்மை அழுதபடிக்
கிடக்கின்றாள் வயிற்றுனுல்
வலிகளும் தெரியாது
வழிகளும் இல்லாது
கிடக்கு குழந்தையினைப்
பெற!
அவசரமாய் அழைத்துப்
போனார்கள் அதிசயமுள்ள
பிறப்பினைக் காண
யுகங்கள் மறைந்து
போனாலும் இவ்
வலிகள் மறைவதில்லை
என்பதாலே!
வயிற்றை கிழித்திட
உத்தரவு வந்தது
அவளுக்கு சிறு
நேரம் தூக்கமும்
வந்தது அவர்கள்
போட்ட ஊசியினால்
அவளுக்கு தெரியாது
நான் கடைசியாய்
உறங்குவது இந்த
மணி நேரமே
என்று!
அவளுக்கும் தெரியாது
வயிற்றை கிழித்து
ஒரு ஜீவன்
கதறியபடி வருகின்றது,
ஆசை முத்தங்கள்
கொடுக்க இதழ்கள்
தவிக்கும் அரவணைக்க
கைகள் துடிக்கும்
என்ன செய்வது
உறக்கம் கொள்ள
தந்த ஊசி
ஒன்றும் செய்ய
வீடாது!
இவ்வாறு வலிகளுடன்
பிறந்திட்டவன் பிரிது
ஒரு நாளில்
பரிதாபமாய் தவிக்க
வைத்துப் போனனான்
அவளை என்பதில்
கவலையே!
இவன் நாகரிக
குழந்தை என்பதால்
நரகத்தில் தள்ளி
போனானோ இன்று!

பூப்புன்னகை.....

இர்ஷாத்,
வாழைச்சேனை

பூலோகப் பாய் விரிப்பில்
ஒற்றைப் புல்லின்
சிறு பூவாய்
உன் புன்னகை

காத்திருப்பு

இணுவில் வாகீசன்

கண்களால் கைதுசெய்து
உன் இதய சிறையில்
சிக்கிக்கொண்டேன்
புன்னகைகளை
பரிசளிக்கின்றாய் என்
புன்னகைகளை
பறித்துவிட்டு
பழங்களை உண்டு
விதைகளை விதைப்பதை
பறவைகள் அறியாததைப்போல
நீயும் அறியவில்லை
உன் விழிப்பார்வையில்
என்மனதில் முளைத்த
காதலை

அனுப்புகிறேன் மகளே, கவிதைப் பூங்கொத்து!

ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

அகவை பதினொன்றில் அடியெடுத்து
வைக்கும் அழகி அவள்
ஐயிரண்டு மாதங்கள் தவமிருந்து
பெற்ற அன்பு மகள்
குதித்து ஓடுவதில்
புள்ளிமான் தோற்றுப்போகும்
அருவியோ அவளைப்
பார்த்து ஆடிப்போகும்
செல்ல மகள் அழகினிலே
செந்தாமரையும் கூம்பிப் போகும்
பைங்கிளியோ பாவை
காணவே வாடிப் போகும்
கண்களை விரித்துக்
கதைகள் பேசியே
கனவுலகம் சென்று
வர வானவில் தருவாள்
சிருங்காரச் சிரிப்பினில்
சிந்தையை மயக்கியே
செந்தேன் பொழிவாள்

சிகரம் தொட்டுச் சாதனைகள்
படைக்க வேண்டும்
நுட்பங்கள் கற்று நூதனங்கள்
அறிந்திட வேண்டும்
நீடூழி நிறைவாக
வாழ்ந்திட வேண்டும்
ஈன்ற பொழுதை விட
பெரிதுவக்கும் தாய்
நானாக வேண்டும்
புகழ் ஏணியில் நீ ஏற வேண்டும்
புடை சூழ வாழ்த்தொலிகள்
வர வேண்டும்
இந்நன்னாளில் உயிரே
உன் தாய்
வாழ்த்துகிறேன்
வளம் பெற வேண்டுமென்று
இறையோனை வேண்டுகிறேன்!

வாழ்வியல்

குகதா
கிளிநொச்சி

புதுப்புதுச் சோதனைகள்
வேதனைகளின் தீண்டலாய்
புத்தாக்கம் பெற்றது
கிருமித் தொற்றும்

சடுதியில் வளர்ந்த
நவீனம் இன்று
படுத்தும் பாடோ
ஏராளம் ஏராளம்

கடுகதிச் சமையலும்
அடுப்பிற்கு மாற்றம்
சமையலறைக்குள்ளும்
அரசியல் நாடகம்

விலையேற்றம் மலைபோல்
உயர்ந்து நிற்க
பசிப்பிணி பலர்வாழ்வில்
மருந்தற்ற நோயானது

நெருப்பிற்குத் தவங்கிடக்கின்றன
அடுக்களையில் அடுப்புக்கள்
விருப்பின்றியே தொடருது
வில்லங்கமாய் வாழ்வு

எதிர்காலம் என்பதே
எதிரியாய்த் தோன்றும்
எவ்வாறு சமாளிப்பது
என்ற ஏக்கத்துடன்

மான் வேட்டை போலின்று
மனித வேட்டையும்
சர்வ சாதாரணமாய்ச்
சந்தியில் அரங்கேறுது

கலிகாலம் என்பதை
வெறும் சொற்களால் கண்ட நாம்
இன்று கலிகாலத்திலேயே
வாழும் சூழ்ச்சி....

தண்ணீர் ஆற்றில்
கண்ணீரில் ஓடம்
கரைசேரும் நாள்
என்று

---மழைக் காலம்---

எம். எப். தஸ்லீன்
ஓட்டமாவடி

உயரத்தில் இருந்து
ஊத்துகிறது மழை...
இதுதான்
மாரி காலத்து நிலை....

கழுவிய துணிகள்
கண் முன் இருக்குது உலராமல்....
மழைதான் விடாது பொழியிது ஓயாமல்....

தாவரங்கள் எல்லாம் மழையில் குளிக்கிறது....
புதுமுக இலைகள் தளிர்க்கிறது...
புன்னகைக்கும் பூக்கள் கண் விழிக்கிறது...
புண்பட்ட என் நெஞ்சம் முழிக்கிறது....

தூரளோடு வீசும் அழகிய காற்று,
துள்ளிக் குதித்தது என்னில் நேற்று...
மண்ணில் நட்டு வைத்த நாற்று,
மெல்லமாய் தள்ளியது கீற்று....

கூலித் தொழில் செய்து திரிந்த மக்கள்,
கூறுவதோ "இல்லை தொழில்" என்ற சொற்கள்...
சிரிக்கின்றன சோம்பேறிகளின் பற்கள்!
இவரது வாழ்வினில்தான் உள்ளது முற்கள்....

எதிர்வினை

அசட்டுத்தனமான கவிதையா அல்லது அசட்டுத்தனமான விமர்சனமா?

அ. யேசுராசா

எனது ‘புதிய சப்பாத்தின் கீழ்’ என்னும் கவிதை முதலில் ‘அலை’ இதழிலும்(1980), பிறகு, எனது ‘அறியப்படாதவர்கள் நினைவாக...!’ கவிதைத் தொகுப்பிலும் (1984) , ‘தமிழியல்’ வெளியீடான ‘மரணத்துள் வாழ்வோம்’ தொகுதியிலும் (1985) இடம் பெற்றுள்ளது. அக்கவிதை இதுதான்

புதிய சப்பாத்தின் கீழ்
சமாந்திரமாய்ச் செல்லும்
கரிய தார் றோட்டில்,
நடந்து செல்கிறேன்.
கண்களில்,
பிரமாண்டமாய் நிலைகொண்டு
கறுத் திருண்ட
டச்சுக் கற் கோட்டை ;
மூலையில்,
முன்னோரைப் பய முறுத்திய
தூக்குமரமும் தெளிவாய்.
பரந்த புற்றரை வெளியில்
துவக்குகள் தாங்கிய
காக்கி வீரர்கள் :
அரசு யந்திரத்தின்
காவற் கருவி.
என்றும் தயாராய்
வினைத்திறன் பேண
அவர், அணிநடை பயின்றனர் ;
சூழ்ந்த காற்றிலும்,
அச்சம் பரவும்.
முன்னூறு ஆண்டுகள் கழிந்தனவாயினும்
நிறந்தான் மாறியது ;
மொழிதான் மாறியது ;
நாங்கள் இன்றும்,
அடக்கு முறையின் கீழ்...
17. 10. 1979

இக்கவிதை எழுதப்பட்ட பின்னணி பற்றி, ‘வெளிவராதுபோய்விட்ட ஒரு நூலுக்கான என்னுரை’ என்னும் எனது கட்டுரையில், பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது :

ஒரு தகவல் : 17. 10. 1979 அன்று மாலைநேரம் ஏ. ஜே. கனகரத்தினா, கவிஞர் வ. ஐ. ச. ஜெயபாலன், நான் – ஆகிய மூவரும் கதைத்தபடி யாழ்ப்பாணத் திலுள்ள ‘பிரதான வீதி’யில் நடந்துகொண் டிருந்தோம். துரையப்பா ஸ்ரேடியம் அருகில், காங்கேசன்துறை வீதியில் திரும் புகையில் (கடற்பக்கத்தில் யாழ். பொலிஸ் நிலையம் இருக்கிறது), டச்சுக் கோட்டை யையும் கோட்டைமேல் தெரிந்த தூக்கு மரத்தையும் பார்த்தபடி, தான் காலையில் இந்த இடத்தால் போகும்போது, மைதா னத்தில் துப்பாக்கிகளுடன் பொலிசாரின் அணிவகுப்புப் பயிற்சி நடைபெற்றதும் – பின்னணியில் கோட்டைச் சூழல் தெரிந்த தும், “காலங்கள் கழிந்தும் அடக்குமுறை அதிகாரச் சூழலில் எந்த மாற்றமும் இல்லை”யென்ற உணர்வைத் தனக்கு ஏற் படுத்தியதாக ஏ. ஜே. சொன்னார். அவரது சொற்கள் என்னுள் பதிந்து ஏற்படுத்திய இரண்டாம் நிலை அனுபவத் தாக்கத்தால், அன்றிரவு ‘புதிய சப்பாத்தின் கீழ்’ என்ற கவிதையை எழுதினேன்.

‘ஜீவநதி’ சிறப்பிதழில் (ஆவணி 2021), இக்கவிதைபற்றி எம். ஏ. நுஃமான் குறிப் பிட்டுள்ள சில வரிகள் வருமாறு :

“... முதலிய கவிதைகளில் யேசுராசா இக்காலகட்டத்து அனுபவங்களையும் உணர்வுகளையும் பதிவுசெய்துள்ளார். இவற்றுள் ‘புதிய சப்பாத்தின் கீழ்’ என்ற கவிதை தமிழ்த் தேசியவாதக் கருத்து நிலை அடிப்படையில் முக்கியமானது எனலாம். ‘தமிழர் தாயகத்தை’ ஐரோப்பி யர் காலத்திலிருந்து ஆக்கிரமிக்கப் பட்ட பூமியாகக் காண்பது இக்கவிதையின் முக்கிய அம்சமாகும். யாழ்ப்பாண டச்சுக் கோட்டையின் பின்னணியில் தொடங் கும் கவிதை, ‘சூழ்ந்த காற்றிலும் அச்சம் பரவும்’ ராணுவ அணிநடையைக் காட்டி இவ்வாறு முடிகின்றது...”

இலண்டனில் வசிக்கும் மு. நித்தியா னந்தன் என்பவர், இலண்டனில் வாழ்ந்து மறைந்த லக்ஷ்மி ஹோம்ஸ் ரோம்பற்றி (இவர் ஏராளமான தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்; எனது ‘புதிய சப்பாத்தின் கீழ்’ முதலிய கவிதைகளையும் மொழிபெயர்த்துள் ளார்.), தினகரன் வார மஞ்சரியில் தொடர் கட்டுரை எழுதினார். 24. 10. 2021 இல் வெளியான பகுதியில், ‘புதிய சப்பாத்தின் கீழ்’ கவிதைபற்றி கிண்டலான குறிப்புக ளையும் எழுதியுள்ளார் ; அவை வருமாறு :

”... சமாந்தரமாய்ச் செல்லும் பாதை என்றால், எதனோடு அந்த பாதை சமாந்தர மாய் செல்கிறது என்று தெரிய வேண்டும். சும்மா ஒரு பாதை சமாந்தரமாகப் போகாது. அந்த பாதைக்கு சமாந்தரமாக ஒரு ரயில் பாதையோ அல்லது இன்னு மொரு சாலையோ சென்றாக வேண்டும்.

... அடுத்து, மூலையில் முன்னோரைப் பயமுறுத்திய தூக்குமரமும் தெளிவாய்த் தெரிகிறதாம். கோட்டைக்குள் போய்ப் பார்த்தால்தான் மூலையில் தூக்குமரம் இருப்பது தெரியவரும். அதுவும் கவிஞ ருக்கு அந்த தூக்கு மரம் தெளிவாய்த் தெரி கிறது. உண்மையில் அங்கு தூக்குமரம் இருக்கிறதா? என்பதே சந்தேகம். இவர் எப்போதாவது கோட்டைக்கு உள்ளே போய் அங்கு தூக்கு மரம் இருந்ததைப் பார்த்தாரா? என்றும் தெரியவில்லை. ஒருவேளை இருந்தாலும் இருக்கக்கூடும். எல்லாம் ஒரு ஊகம்தான். அது பெரிய கோட்டை. அங்கே எந்த மூலையில் அந்த தூக்குமரம் இருக்கிறது என்று யாருக்குத் தெரியும். நான் இருந்த வெலிக் கடை சிறைச்சாலையில் நாங்கள் இருந்த சிறைக்கூடத்திற்கு அருகில்தான் தூக்குத் தண்டனை வழங்கும் இடம் இருக்கிறது என்பார்கள். ஆனால், எனது ஓராண்டு காலத்தில் எனக்கு ஒருபோதும் அருகி லேயே இருந்ததாகக் கூறப்படும் தூக்கும ரத்தை நான் ஒருநாளும் மங்கலாகக்கூடப் பார்த்ததில்லை. இவருக்கு அந்தத் தூக் குமரம் தெளிவாய்த் தெரிந்துவிடுகிறது. கோட்டையில் உள்ள சிறைச்சாலை அதி காரிகளுக்கு இது தெரியவந்தால் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தல் ஆகிவிடும்.

“சமாந்திரமாய்ச் செல்லும்
கரிய தார் றோட்டில்,
நடந்து செல்கிறேன்.
கண்களில்,
பிரமாண்டமாய் நிலைகொண்டு
கறுத் திருண்ட
டச்சுக் கற் கோட்டை ;”

என்பதில், டச்சுக் கற்கோட்டைக்குச் சமாந்தரமாய்த்தான் பாதை செல்கிறது என்பது உணர்த்தப்படுகிறது. துரையப்பா விளையாட்டரங்கின் மேற்குப் பக்கத்தி லிருந்து தொடங்கும் கோட்டைச்சுவர், வடக்குப் பக்கமாக முனியப்பர் கோவி லையும் தாண்டி ‘றீகல்’ திரையரங்கின் அண்மைவரை செல்கிறது ; பாதையும் வடக்குப் பக்கமாய்ச் சென்று, றீகல் திரை யரங்கின் அண்மையில்தான் வளைந்தும் செல்கிறது!

கோட்டைச்சுவர் தொடங்கும் இடத் தின் மேற்புறத்திலேதான் தூக்குப்போ டும் இடமும் இருக்கிறது. பழுதடைந்த நிலையில் அகலமான நான்கு தூண்கள் இருப்பதை, இன்றும் காணலாம். முன்பு அந்தத் தூண்களிடையில் அகலமான மரச்சட்டங்கள் நாற்புறமும் இருந்தன. அந்த மரச்சட்டங்களில்தான் ஆட்கள் தூக்கிலிடப்பட்டனர்; பழைய வரலாற்று நூல்கள் சிலவற்றில், கோட்டோவியமாக அக்காட்சிகள் சித்திரிக்கப்பட்டுமுள் ளன! ஆக்கிரமிப்பாளர்கள் மக்களைப் பயமுறுத்துவதற்காக – உயரமான இடத் தில் வெளிப்படையாக அதனை நிறு வியிருந்தனர்; எனவே கோட்டைக்குள் அதனை ‘ஒளித்துவைக்கும்’(!) தேவை அவர்களுக்கு இருந்திராது. நித்தியானந் தன் என்ற இந்த நபர், பதுளையில் பிறந்து வளர்ந்தவர்; அங்கேயே மட்டும் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒருபோதும் வந்திரா தவரென்றால், அவரது ‘அறியாமை”யைப் புரிந்துகொள்ளலாம்! ஆனால், 1982 வரை, பல வருடங்களாக யாழ்ப்பாண நக ரத்தில் வசித்தவரல்லவா இவர்!

1986 இற்குப் பிறகு (இன்றுவரை) கோட்டைக்குள் சிறைச்சாலை இயங்க வில்லை என்பதும், இலண்டனிலுள்ள இவருக்குத் தெரியவில்லை! ; அதனால் தான், கிண்டல்செய்வதாக எண்ணி “கோட்டையில் உள்ள சிறைச்சாலை அதி காரிகளுக்கு இது தெரியவந்தால் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தல் ஆகிவிடும்.“ என்று உளறுகிறார்!

“ஆனால் இந்தக் கவிதையில் கோட்டை, தூக்குமரம், துவக்கு, காக்கி வீரர்கள், திடீர் சத்தம், சப்பாத்து, தெருவில் செத்து வீழ்தல் போன்ற இத்தி யாதி அம்சங்கள் இதனை போர்ச் சூழலை பிரதிபலிக்கும் கவிதையாக ஆக்கியிருக்கி றது.” என்றும் குறிப்பிடுகிறார்.” இவற்றில் – திடீர் சத்தம், தெருவில் செத்து வீழ்தல் என்பவற்றுக்கும் இக்கவிதைக்கும் சம்பந் தமேயில்லை! ; இவை நித்தியானந்தனின் கற்பனையில் உள்ளவை! ; உண்மையில் என்னுடைய பிறிதொரு கவிதையில் வருபவை அவை! ‘புதிய சப்பாத்தின் கீழ்’ கவிதை எழுதப்பட்டது 1979 இல் ; இவர் கூறுவதுபோல அக்காலத்தில் “போர்ச் சூழல்” இருக்கவுமில்லை! இவ்வாறான அபத்தக் குறிப்புகளை எழுதியபடியேதான் இவர் “இம்மாதிரி அசட்டுத்தனமான கவி தைகளை மொழிபெயர்க்கும் நிலையில், பொதுப்புத்திக்கு பங்கம் வராதமாதிரி அவதானத்தோடு லக்ஷ்மி செயற்பட்டிருப் பதை நாம் இங்கு காணமுடிகிறது” என்று ‘அடைமொழி’ சூட்டி எழுதுகிறார்! ; அதுவும் கவிதை எழுதப்பட்டு 42 ஆண் டுகளின் பின்னர்! எதை மனதில் வைத் துக்கொண்டு – இவ்வாறெல்லாம் குரோத உணர்வுடன் செயற்படுகிறார் என்பதை, என்னால் நன்கு உணர முடிகிறது!

இப்போது, புத்தியுள்ள வாசகர் யாரும் அவரிடம் பின்வருமாறு கேட்கலாம் :

“அசட்டுத்தனமான கவிதையா
அல்லது
அசட்டுத்தனமான விமர்சனமா?”

16. 11. 2021

அச்சம் தவிர் பாரதியே!

பாரதியின் 139ஆம் பிறந்த தினக் கவிதை

நீ இப்புவியில் இன்றிருந்தால் – அகவை
நூற்றி முப்பத்தொன்பதுவாம்
தீப்பிழம்பாகத் தீமைகளைத்
தீய்க்கும் உந்தன் பண்பதுவாம்!

மெல்லத் தமிழினிச் சாகுமென
பேதையுரைத்த மொழி சொன்னாய்
அல்ல வாழும் அதுநிலையாய்
அறிவாய் பாரதி இதை நன்றாய்!

முண்டாசுத் தலை மீசைக்காரா
முரண்பாடுண்டு எனக்குன்னோடு!

அண்டம் வாழும் நாள் வரைக்கும்
அழகு தமிழ் நிலைத்தே இருக்கும்!

எழில் பொழியும் தமிழணங்கின்
ஏற்றமிகு கவின் சிறப்பைத்
தொழில்நுட்ப வளர்ச்சியுடன்
தொலைதூரம் கொண்டு செல்வோம்!

செம்மொழியின் சிறப்புகளைச்
செய்மதியின் துணையுடனே
அம்புலிக்கும் அனுப்பி வைப்போம்
அங்கும் ந(ா)ம் தமிழ் வளர்ப்போம்!

ஷெல்லி, பைரன், டால்ஸ்டாயும்
செகப்பிரியராம் ஷேக்ஸ்பியரும்
அள்ளித் தந்த இலக்கியங்கள்
அனைத்துமிங்கு தமிழிலுண்டு!

ஆத்திசூடி, கொன்றைவேந்தன்,
அகத்தியன், இளங்கோ பற்றிப்
பேத்திகூடப் ‘பேஸ்புக்’ பார்த்துப்
பேசுவதே தமிழின் வெற்றி!

கம்பனொடு, வள்ளுவனும்,
கணியன் பூங்குன்றனாரும்
எம்வீட்டுக் கூடத்துக்குள்
‘என்டனா’ வழியே குடியமர்வர்!

குறந்தொகையைப் பெருந்தொகையின்றி
குறுஞ்செய்தியில் குறிப்பெடுப்போம்!
அருந்தமிழின் அற்புதத்தை
‘அன்டிரோய்ட்’டில் அறிந்திடுவோம்!

அகநானூறை முகநூலினூடே
‘ஐ’ போனில் கற்றிடுவோம்!

தகவல்துறை பரிமாற்றத்தைத்
தனித் தமிழில் பெற்றிடுவோம்!

உமறுப்புலவர் சீறாவை,
உமர்கய்யாம் ருபையாத்தை,
குமரிக்கண்டம், கொள்ளிடத்தைக்
‘கூகுலு’க்குள் கண்டெடுப்போம்!

அன்று நீ பிறந்த காலம்
‘இணையம்’ என்றொன்றில்லை – தமிழ்
நின்று நிலைத்திடுமோவென்ற
நின் நினைப்பில் தவறுமில்லை!

இக்காலம் அவ்வாறன்று – இது
இருபத்தோராம் நூற்றாண்டு!

திக்கெட்டும் விஞ்ஞானந்தான்
துறந்திடு அஞ்ஞானந்தான்!!

பார் அறியப் பகர்வேன் யான்
பல்லாண்டு வாழுமே தமிழ்!

பாரதியே அச்சம் தவிர் நீ
புவிதனில் சாகாது தமிழ் இனி!!

கலைஞர் கவிஞர்
எம்.எஸ்.அப்துல் லதீப்

தமிழர்களால் மறக்கப்பட்ட ஆயுதம்; வளரி

தமிழர்களின் மிகசிறந்த ஆயுதமாக, வாள், கத்தி, வில் , அம்பு ,கேடயம் போன்ற எல்லோருக்கும் தெரிந்த ஆயுதங்களை விட பல மடங்கு பலம் பொருந்தியதாக அமைந்த அந்த ஆயு தத்தை எத்தனைபேர் நினைவில் வைத்தி ருக்கிறார்கள்? அறிவியலையும் , கணிதவி யலும் நன்கு அறிந்து வைத்திருந்த எமது முன்னோர்களின் மிகச் சிறந்த படைப்பாற் றலுக்கான உதாரணம்தான் வளரி. வளரி என்றவுடன் பலருக்கும் புரியாமலிருக்க லாம். 1000,1000 ஆண்டுகளுக்கு முன்பே தொழில்நுட்பம் கண்ட ஆயுதம்.

ஆங்கிலேயர்களின் துப்பாக்கி குண் டுகளை செயலிழக்க வைத்து ஆங்கி லேய படைகளை அதிரவைத்த ஆயுதம் வளரி. காற்றை கிழித்து கண்ணிமைக்கும் நேரத்தில் எதிரியை தாக்கக்கூடிய இவ்வா யுதத்தை யாரும் பயன்படுத்த கூடாது என்ப தற்காக இக் கலையை அடியோடு அழிக்கத் திட்டம் தீட்டிய ஆங்கிலேய தளபதிகள் வளரி கலையை பயன்படுத்துபவர்களுக்கு மரண தண்டனை விதித்து வளரி கலையை அழிக்க முற்பட்டனர். ஆனால் சில தமிழ் அரசர்களால் மறைமுகமாக இக்கலை பயிற்றுவிக்கப்பட்டது என்று வரலாறு குறிப்பேடுகள் கூறுகின்றன.

வளரி பற்றிய முக்கிய இலக்கிய சான்று கள் தமிழ் இலக்கியங்களிலும், வரலாற் றிலும் வளரி பற்றிய குறிப்புகள் காணப்பட்ட போதிலும் எதிர் கால சந்ததியினர் அது பற்றித் தெரிந்து கொள்ளக்கூடாதென்ப தற்காக பல குறிப்புக்கள் அழிக் கப்பட்டுள்ளன. ஆனாலும் சில குறிப்புக்கள் கல்வெ ட்டுகளிலும் இலக்கியங்களிலும் கண்டறியப் பட்டுள்ளன. அவற்றுள் கள்ளர்க ளின் மரபில் அதிக பயன்பாட்டில் இருந்த வளரி பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. தடி, வலை தடி, திகரி, பாறாவலை, சுழல்படை, படை வட்டம் என்றெல்லாம் அழைக்கப் பட்டிருக்கிறது. கள்ளர்களின் திருமண நிகழ்வுகளில் வளரியை சீதனமாக கொடுத் துள்ளனர் என்று ஆங்கிலேய தொல்பொ ருளியலாளர் ரொபேர்ட் குரூப்ஸ் [robat groops] குறிப்பிட்டுள்ளார். புதுக்கோட்டை மன்னர்களிடம் வளரிப்படை தனிப்படை யாக இருந்ததாகவும் வரலாறு தெரிவிக்கி றது .

வளைந்த வாளை எறி என்பதே வளரி யின் அர்த்தம். அவுஸ்திரேலிய ஆதிவா சிகளால் உபயோகிக்கப்பட்ட பூமராங் என்ற ஆயுதம்தான் வளரி. அவர்கள்

பறவைகளிடமிருந்து திணைப்புலத்தை பாதுகாக்கவும், விளையாட்டுப் பொருளா கவும் மட்டுமே வளரியைப் பயன்படுத்தி வந்துள்ளார். ஆனால் பலநூறு ஆண்டுக ளுக்கு முன்னர் போரின்போது எதிரிகளை நடுநடுங்க வைக்க பூமராங் என்ற வளரியை பயன்படுத்திய பெருமை தமிழனையே சாரும். அவுஸ்திரேலிய வேடுவர்கள் பயன் படுத்திய ஆயுதமும் வளரியில் காணப்ப டும் தொழில்நுட்பமும் ஒன்றுதான்.

வளரியை வீசும் போது விசை சரியான அளவு இருக்க வேண்டும், ஆயுதத் தின் எடை கூடினால் நீண்ட தூரம் வீச முடியாது. எடை குறைந்தால் தாக்கும் திறன் குறையும். அதை விட முக்கியமா னது ஓர் இரும்பு துண்டு காற்றில் சுழன் றபடி இலக்கு நோக்கிச் செல்வதற்கு தேவையான அடிப்படையான எடைக் கட் டுப்பாடு. ஆயுதத்தின் மை யத்தில் நிலை கொண்டுள்ள எடை அதன் சமநிலையை குவித்து விசையின் பாதையில் துல்லிய மாக பயணிக்க உதவுகிறது.வளரியின் இந்தத் தொழில்நுட்பம் தமிழர்களையும், தமிழ் மண்ணையும் கர்வப்பட வைப்பது. 18 ஆம் நூற்றாண்டில் அவுஸ்திரேலி யாவை வரலாற்று ஆய்வு செய்த சாவேஸ் கேன் தனது ஆய்வின் படி வளரி ஆசிய மக்களின் போர்க்கருவி என்றும் அவர்கள் இக் கருவியை பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே யுத்தங்களில் பயன்படுத்தியுள் ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். புலம் பெயர் தமிழ் மக்களின் வருகையின் கார ணமாக இந்த வேடுவ குடிகளுக்கு வளரி பழக்கப்பட்டது என்றும் அவரின் குறிப்புக் கள் தெரிவிக்கின்றன.

கிழக்கிந்திய கம்பனி படையில் பல முக்கிய பொறுப்புகள் வகித்த கேர்னல் ஜேம்ஸ் வெல்ஸ் தனது இராணுவ குறிப் புகளில் வளரியைப் பற்றி எழுதியுள்ளார். கம்பனிக்கு சிவகங்கை சீமையோடு நல் லுறவு இருந்த காலக்கட்டத்தில் பெரிய மருதுவிடம் தான் வளரி வீசக் கற்றுக் கொண்டதாகவும் உலகில் வேறு எங்கே யும் இல்லாத இக் கருவி திறமையுடை யவர்கள் வீசினால் 100 கஜ தூரம் வரை சென்று இலக்கை துல்லியமாக தாக்கும் என்றும் தமிழர்களை போல இக் கருவியை வேறுயாரும் திறமையாக வீச மாட்டார்கள் என்றும் அவர் புகழ்ந்துள்ளார்.

ஆங்கிலேய தளபதிகள் அதிகம் பயந்த ஆயுதமாக வளரி இருந்தது அன்று. பாளையகாரர்களின் யுத்தத்தில் குறிப்பாக கெரில்லா முறையிலான மறைந்திருந்து தாக்கும் போர் முறைக்கு ஏற்ற ஆயுதமாக வளரியே இருந்தது. பாளையகாரர்களின் யுத்தம் முடிவுக்கு வந்த காலக்கட்டத்தில் ஆங்கிலேய நிர்வாகம் 1801 ஆம் ஆண்டு ஆயுத தடைச் சட்டத்தை கொண்டு வந்தது. அதன்படி மக்கள் யாராவது போர் ஆயுதங் களை வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட் டால் பொது இடத்தில் தூக்கிலிடப்படு வார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

எல்லா வகை யிலான ஆயுதங்களும் கை ப்பற்றப்பட்டன. பாளையக்காரர்கள்,போர் வீரர்கள், குடிமக்கள் என்ன அனை வரும் ஆயுதங்கள் நீக்கப்பட்ட மனிதர்களாக ஆக் கப்பட்டார்கள். அப்போது ஆங்கிலேயர்க ளால் 22000 வளரிகள் கைப்பற்றப்பட்டன. தென்தமிழகம் முழுவதுமுள்ள வளரிகள் மொத்தமாக அழிக்கப்பட்டன. அந்த ஆயுதத்தின் நினைவு கூட இம் மண்ணில் மிஞ்சக் கூடாது என ஆங்கிலேயர்கள் உறு தியாக இருந்தனர். கரங்களிருந்து நீங்கிய ஆயுதம் நாளடைவில் மக்கள் நினைவுக ளிலுமிருந்தும் நீக்கப்பட்டது. இவ்வாறு மிகச்சிறப்பு வாய்ந்த வளரி தற்போது இராம நாதபுரத்தில் பாதுகாக் கப்பட்டு வருகிறது. வளரி என்ற பூமராங் தமிழர்களின் சொத்து. தமிழர்களின் மறக்கப் பட்ட உண்மை.

ஜனூஷிகா சிவராஜன்
இதழியல் கல்லூரி

සී/ස ලංකා සීනි (පෞද්ගලික) සමාගම
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்
LANKA SUGAR COMPANY (PRIVATE) LIMITED

கரும்பு சோளம் மரமுந்திரிகை, மிளகு, கருவா, கிராம்பு, வெற்றிலை உட்பட சிறு தோட்டப் பயிர்கள் பயிர்செய்கை அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

2022 ஆம் ஆண்டிற்காக சீனி மொத்த கொள்வனவாளர்களைப் பதிவு செய்தல்

இலங்கையின் பிரதான பழுப்பு நிற சீனி உற்பத்தியாளர்களான எமது நிறுவனம், விசமற்ற, மற்றும் மரபணு தொழில்நுட்பம் தவிர்ந்த சுகாதாரமான உயர் தரத்திலான பழுப்பு நிற சீனியை பாவனையாளர்களுக்கு நீண்டகாலமாக வழங்கி வருகிறது. எமது நிறுவனத்தினால் சிறுபோக மற்றும் பெரும்போக காலங்களில் ஒரு மாதத்திற்கு 8,000 - 10,000 தொன் இற்கு இடைப்பட்ட அளவிலான சீனி அரச மற்றும் தனியார் துறை கொள்வனவாளர்களுக்கு விற்கப்படுகிறது.

எம்மால் உற்பத்தி செய்யப்படும் பழுப்பு நிற சீனியை கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற சீனி மொத்த கொள்வனவாளர்கள் 2022 ஆண்டிற்காக எமது நிறுவனத்துடன் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது. பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை எமது தலைமையகத்தில் மளளிக்கப்படாத இலங்கை ரூபா 36,000/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடிவதுடன், அவ்வாறு பதிவு செய்யும் கொள்வனவாளர்கள் மாத்திரம் சீனி கேள்விக்காக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இதற்காக கொள்வனவாளர்கள் 2022 ஜனவரி 21 வரை வார நாட்களில் அலுவலக நேரங்களில் தலைமையகத்திற்கு வருகை தந்து பதிவுசெய்து கொள்ளவும்.

தலைவர்
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல.27, மெல்பன் அவெனியூ,
கொழும்பு - 04.

சகல தொடர்புகளும் : 011-2584184 / 0710912252
பெக்ஸ் : 0112500674

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

மகாவலி வலயம் சார்ந்த குளங்கள் மற்றும் குடியிறுப்பு பொது கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

இலங்கை மகாவலி அதிகார சபை (MASL)

ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI)

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதான நீர்த்தேக்கத்திற்கான வண்டல் மண்ணை அகற்றுதல் மற்றும் முகாமைத்துவ உபாயவழிகளை அபிவிருத்தி செய்தல் பற்றிய விடயங்களை கணித்துக்கான ஆலோசனை சேவைகளின் பெறுகை மேற்கொள்ளல்.

DDG/TS/CON/HW/De-Consult/20

மகாவலி வலயம் சார்ந்த குளங்கள் மற்றும் குடியிறுப்பு பொது கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படுத்தல் இலங்கை மகாவலி அதிகார சபை சார்பாக அமைச்சு ஆலோசகர்களின் பெறுகைக்குழு (CPCM) இங்கு விபரிக்கப்பட்டுள்ள சேவைகளுக்காக ஆர்வம் காட்டுகின்ற தொழில் முயற்சியாளர்களிடமிருந்து ஆர்வவெளிப்பாடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மகாவலி அதிகாரசபையில் கீழ் நிர்வகிக்கப்படும் மகாவலி கங்கை மற்றும் கலாஓயா கங்கை பிரதான நீர்த்தேக்கங்களில் நீர் கொள்ளளவு நாளுக்குநாள் கவனத்தில் கொள்ளகூடியவாறு குறைவடைந்து செல்கின்றமை மதிபீடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. அதனடிப்படையில் விக்டோரியா, ரந்தெனிகல, ரன்டம்பே, பொல்கொல்ல, போவதென்ன மற்றும் கலாவெவ போன்ற நீர்த்தேக்கங்களின் தேங்கியுள்ள வண்டல் மண்ணை அகற்றுதல் மற்றும் முகாமைத்துவ உபாயவழிகள் அபிவிருத்தி பற்றிய உண்மைகளை அவதானிப்பதற்காக இணங்காணப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படும் பல்நோக்கு நீர்த்தேக்கங்கள் முறையே நுவரெலிய, கண்டி, பதுளை, மாத்தளை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் மகாவலிகங்கை மற்றும் கலாஓயா வழியாக அமைந்துள்ளது.

எதிர்காலத்தில் அவதானிப்பின் இறுதி பெறுபேறை உபயோகித்து, மேற்படி நீர்த்தேக்கங்களின் விணைத்திறனை மேம்படுத்துவதன் மூலம் நீர்மின் உற்பத்தி மற்றும் நீர்ப்பாசனத்திற்கான நீரை திறந்து விடுதலை அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்படுகிறது. எனவே, தேர்ந்தெடுக்கப்படும் நீர்ப்பாசனத்திற்காக வண்டல் மண்ணை அகற்றுதல் மற்றும் முகாமைத்துவ உபாயவழிகள் அபிவிருத்தி பற்றிய உண்மைகளை அவதானிப்பை நிறைவேற்றும் அவதானிப்பின் நோக்கமாவது,

a) உத்தேச EIRR, NPV மற்றும் ஏனைய தகைமையான பொருளாதார ஆய்வு மற்றும் செலவினம் மற்றும் சலுகைகள் பற்றிய ஆய்வுடன் உண்மைகளை அவதானித்தல்.
b) உத்தேச உபாய வழிகளை செயற்படுத்துவதற்காக செலவின் மதிப்பீடு மற்றும் கேள்வி ஆவணத்தை தயாரித்தல்.

வண்டல் மண் பாவனை முகாமைத்துவம் (Sediment Utilization Management) இவ் அடிப்படையாகக் கொண்டு சந்தை வாய்ப்புக்களை கவனத்தில் கொண்டு வண்டல் மண்ணாக அகற்றப்பட்ட பொருட்களுக்காக உபாயவழிகளின் சலுகைகள் பெறப்பட்டுள்ளது. (உ+ம்: மணல், உரம், பல்வேறு கைத்தொழிலுக்கான களிமண், போன்றன)

தகைமை தேவைப்பாடுகள்

இங்கு விபரிக்கப்பட்டுள்ள சேவைகளுக்காக ஆர்வம் காட்டுகின்ற தொழில்முயற்சியாளர்களால் ஒப்பந்தத்திற்காக தகைமை பெறுவதற்கு மற்றும் ஏற்றுக் கொள்வதற்கு கீழ்க்காணும் தகவல்களை வழங்குதல் வேண்டும். அதனடிப்படையில் குறுகிய பட்டியல்படுத்தல் கீழ்க்காணும் தகவுத்திறன்களை அடிப்படையாகக் கொண்டது.

a) தொழில்முயற்சியாளரின் பதிவு மற்றும் அதன் வியூகம்
b) அவதானிப்புக்கு உத்தேச ஊழியர் குழாமின் தகைமை (Curriculum vita) பற்றிய விபரம்
c) கிட்டிய 05 வருடத்திற்கான கணக்காய்வுக்கு உற்படுத்தப்பட்ட நிதிக்கூற்று
d) கடந்த 10 வருடத்திற்குள் கம்பனியினால் பூர்த்தி செய்யப்பட்ட வழங்கல்கள், இந்த அவதானிப்புக்குச் சமமான செயற்றிட்டங்களின் பட்டியல் மற்றும் விபரம் (கம்பனியானது இந்த அவதானிப்புக்கு சமமான 02 செயற்திட்டங்கள் அல்லது அதற்கு மேற்பட்டு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)
e) Broachers மற்றும் வேறு துனை ஆவணங்கள் மற்றும் அவர்களது தகைமைகளை உறுதி செய்யும் எந்த குறித்த ஆவணங்களும்

எனவே, மேற்படி அவதானிப்புக்காக ஆர்வம் காட்டுகின்ற தொழில் முயற்சியாளர்கள், மேற்படி தகவல்களுடன் தமது ஆர்வத்தை குறுகிய பட்டியல்படுத்துவதற்காக மூலப்பிரதி 01 மற்றும் போட்டோப் பிரதிகள் 05 உடன் மேலே கோரப்பட்டுள்ளது தேவைப்படும் விபரங்கள்/ தகல்களை வழங்குதல் வேண்டும். தகைமையுள்ள மற்றும் ஆர்வம் காட்டுகின்ற உள்ளூர் கம்பனிகள்/ இணைந்த வியாபாரங்கள் அவர்களது தகைமைகளை உறுதி செய்வதற்காக ஆவணங்களுடன் அவர்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு, அவர்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போது உள்ளூர் கம்பனிகள் ஒன்று அல்லது பலவற்றுடன் இணைந்த வியாபாரத்தை அமைத்துள்ள வெளிநாட்டுக் கம்பனிகளும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியவை.

இலங்கை தேசிய பெறுகை நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஆலோசகர்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஆலோசணை வழிகாட்டல்களில் தரப்பட்டுள்ள தரத்தன்மை மற்றும் செலவை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுத்தல் (QCBS) இன் பிரகாரம் தகைமையான ஆலோசகர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மேலதிக தகவல்கள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்) இடம் கீழ்க்காணும் முகவரியில் அலுவலக நேரங்களில் 09.00 முதல் 16.00 வரை அல்லது http://mahaweli.gov.lk/tenders.html எனும் மகாவலி அதிகார சபையில் இணைய தளத்திற்கு பிரவேசித்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி : 0094112689651/ 0094112687475
பெக்ஸ் : 0094112689651
மின்னஞ்சல் : ddgts.masl@gmail.com

ஆலோசகரால் மேற்படி விபரங்கள்/ ஆவணங்களை 2022 ஜனவரி 10 பி.ப 2.00 இற்கு அல்லது அதற்குமுன் பணிப்பாளர் நாயகம் அலுவலகம், இலங்கை மகாவலி அதிகாரசபை, இல 500, டி.பீ.ஜாயா மாவத்த, கொழும்பு-10, இலங்கை இற்கு அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'ஆர்வத்தை வெளிப்படுத்தல் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான நீர்த்தேக்கங்களில் தேங்கியுள்ள வண்டல் மண்ணை அகற்றுதல் மற்றும் முகாமைத்துவ உபாயவழிகள் அபிவிருத்தி பற்றிய உண்மை நிலை அவதானித்தல்' என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம் -
இலங்கை மகாவலி அதிகாரசபை
இல. 500, டீ.பீ. ஜாயா மாவத்த,
கொழும்பு-10,
இலங்கை.

இலங்கை புகையிரத சேவை

கேள்வி அறிவித்தலுடன் சம்பந்தப்பட்ட காலத்தை நீடித்தல் பற்றிய அறிவித்தல்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் 2021.11.07ம் திகதிய சிலுமின, சன்டே ஒப்சவர், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளில் அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான புகையிரத நிலைய உணவகம் மற்றும் கொழும்புக்கு வெளியில் உள்ள பொருட் களஞ்சியங்களில் குறித்த கேள்வியின் கேள்வி கால எல்லை பின்வருமாறு நீடிக்கப்படுவதாக அறிவித்துக் கொள்கிறேன்.

விபரம்	விண்ணப்பங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி	விலைமனுக்கள் திறத்தல்
கொழும்புக்கு வெளியில் உள்ள பொருட் களஞ்சியங்கள்	2022.01.06 பி.ப . 2.00 வரை	2022.01.07 பி.ப. 2.00 இற்கு
புகையிரத நிலைய உணவகம்	2022.01.10 பி.ப. 2.00 வரை	2022.01.11. பி.ப. 2.00 இற்கு

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம்,
புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்த,
கொழும்பு -10.

සතොස

வர்த்தக அமைச்சு

லங்கா சதொச லிமிடட்டிற்கு வருடத்திற்கான வழங்குனர்களை பதிவு செய்தல் - 2022

லங்கா சதொச லிமிடட் தலைவர் மூலம் வர்த்தக அமைச்சின் கீழ் உள்ள லங்கா சதொச லிமிடெட்டிற்கு 2022 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு அரச திணைக்களங்கள், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- உலர் உணவு பொருட்கள்
- மளிகை உருப்படிகள்
- மதுபான உருப்படிகள்
- பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகள்

வழங்குனர்களாக பதிவு செய்வதற்கு குறித்த விண்ணப்பம், நிபந்தனை மற்றும் கொடுப்பனவு தொடர்பில் விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்ட லங்கா சதொச லிமிடட் இணையதளம் மூலம் தரவிறக்கம் செய்ய முடியும். இல்லையேல் 2,500 ரூபா பணத்தை செலுத்தி லங்கா சதொச லிமிடட் தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) பெற்றுக்கொள்ள முடியும்.

www.lankasathosa.org

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேவையான ஆவணங்களை இணைத்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2021 டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அல்லது அதற்கு முன்னர் கைகளால் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும், இல்லாவிட்டால் கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

லங்கா சதொச லிமிடட்,
பெறுகை பிரிவு,
3ஆவது மாடி,
இல. 27, சதொச செயலாளர் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

புதிய வழங்குனர்கள் மற்றும் போட்டிரீதியாக விலைமனு மூலம் தேர்வு செய்யப்படும் வழங்குனர்கள் பதிவு செய்யப்படும் கால எல்லை ஆண்டு முழுவதும் திறந்து இருக்கும்.

மேலதிக விபரங்களை கீழ் தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தை அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்.

070-1560692

2022 ஆம் ஆண்டுக்காக லங்கா சதொச லிமிடட் வழங்குனர்களை பதிவு செய்தல் தொடர்பில் இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் லங்கா சதொச லிமிடட் தலைவர் வசமானது.

தலைவர்,
லங்கா சதொச லிமிடட்,
சதொச பொதுச் செயலாளர் அலுவலகம்.
இல 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு - 02

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

திருகோணமலை துறைமுகத்தில் பொறியியல் வேலைத்தள கட்டிடத்தை நிர்மாணித்தல்

(Contract No.: SLPA/CD/TRINCO/ESSB)

1. "திருகோணமலை துறைமுகத்தில் பொறியியல் வேலைத்தள கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக (Contract No.:SLPA/CD/TRINCO/ESSB)' தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சின் செயலாளருக்காக துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இந்த ஒப்பந்தத்தின் கீழான வேலையானது பிரதானமாக தேவையான மெருகூட்டல் மற்றும் சேவைகளையடக்கிய மூன்று மாடி கட்டிட நிர்மாணமாகும். மொத்த தரைப்பானது அண்ணளவாக 1800 சதுர மீற்றராகும்.
2. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக பின்வருவன பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
   - விலைமனுதாரர் CIDA (முன்பு ICTAD என அழைக்கப்பட்டது) பதிவு சி-2 தரம் மற்றும் சி-3 ஒப்பந்தக்காரர், கட்டிட நிர்மாணத்தில் விஷேடத்துவம் பெற்றவராகவிருத்தல்.
   - Eroc.drc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து ஒன்-லையின் மூலமாக விலைமனுதாரரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவொன்று.
3. திருகோணமலை, சீனன் குடா, திருகோணமலை துறைமுகம், இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, வதிவிட முகாமையாளரின் அலுவலகத்தில் 2022.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து தள விஜயமும் நடைபெறும்.
4. 2021.12.13 ஆம் திகதியிலிருந்து 2022.01.24 ஆம் திகதி வரையும் (இரு நாட்களும் அடங்கலானவை) வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் பெசேவ அடங்கலாக 35,000 ரூபாவை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக செலுத்திய பின்னர், கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலகத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைத்தல் பிரிவு, ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைத்தலுக்கான பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரினால் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். அதே அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. விலைமனுக்கள் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கோரல் ஆவணமானது தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு பாதுகாப்பாக முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Construction of Engineering Workshop Building at Trincomalee Port (Contract No.: SLPA/CD/TRINCO/ESSB)" என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சு பெறுகை குழு, துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2,100,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2022.06.21 ஆம் திகதி வரையும் செல்லுடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. வேலைகளின் பூர்த்தி செய்தலுக்கான நேரச்சட்டகம் 365 நாட்களாகும்.
9. இரு பிரதிகளிலுள்ள விலைமனுக்கள் 2022.01.25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியளவில் சமர்ப்பிக்கப்பட்டு அவைகள் பி.ப.2 மணிக்கு மூடப்பட்டு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
10. எந்தபொரு மேலதிக விபரங்களும் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைத்தலுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து மேலேயுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளப்படலாம். (தொலைபேசி: 011-2380517)

மேற்கூறப்பட்டுள்ள அனைத்தும் eroc.drc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து ஒன்-லைனில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தலைவர்,
அமைச்சு பெறுகைக் குழு,
துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சு,
இல. 19, சைத்திய வீதி,
கொழும்பு-01.

பேரழிவின் விளிம்பில்...

(09ஆம் பக்கத் தொடர்)

காபூலில் இயங்கும் பிரபல தனியார் தொலைக்காட்சி ஒன்றின் படப்பிடிப்பாளர் தலிபான் போராளிகளால் மிக மோசமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது தொடர்பில் அந்த தொலைக்காட்சி சேவையின் தலைமை நிர்வாக அதிகாரியால் தலிபான் தலைமைக்கு அறிவிக்கப்பட்டபோதும், அடையாளம் காணப்பட்ட அந்த கொலையாளி மீது ஒழுங்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமையும் இந்த சம்பவம் பற்றி தலைமையிடம் இருந்து எந்த கருத்தும் வெளிப்படாமையும் குறிப்பிடத் தக்கது. இது போல பல சம்பவங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இவையாவும் வெளி உலகிற்கு வருவதும் இல்லை இது பற்றி அமெரிக்க தரப்பு கவனம் செலுத்துவதும் இல்லை.

இந்த நிலையில் சர்வதேச உதவிகள் துண்டிக்கப்பட்டு வங்கி அமைப்பு பெருமளவில் முடக்கப்பட்ட நிலையில், இருக்கும் ஆப்கானின் பொருளாதாரம் வெகுவிரைவில், வெகுவாக சுருங்கும் என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் ஆய்வாளர்கள் அமைப்பு என்கின்ற தனியார் அமைப்பொன்றின் சமீபத்திய அறிக்கை ஒன்றில் தலிபான் அரசாங்கத்திடம் அதன் நிதிச் சரிவுப் பொருளாதாரத்தை ஒத்திசைவாக்குவதற்கான எந்த திட்டமும் இல்லை என்றே தோன்றுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கு மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பில் விட்டுக் கொடுப்புகளைச் செய்ய ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. என்பதையே இவை யாவும் உணர்த்துகின்றன.

அதேவேளை உலக வங்கியும், ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து போன்ற சில நன்கொடையாளர்கள் நாடுகளும்,ஆப்கான் சுகாதாரத் துறையில் உள்ள ஊழியர்களுக்காவது ஊதியம் வழங்க ஆலோசித்து வருவதாக அறிய முடிகிறது. உலக வங்கி 500 மில்லியன் பவுண்ஸ்கள் வரை நிதியை வெளியிட பரிசீலித்து வருவதாகவும் கூறப்படுகிறது. மருத்துவ பணியாளர்களுக்கு சம்பளம் இல்லாததால், மிக அடிப்படையான சுகாதார சேவைகள் கூட, தடைப்பட்டுள்ளதாகவும் இது குழந்தைகள் மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கவலை அளிக்கின்றன.

அதேவேளை சர்வதேச உதவிகளை எந்த நாணயம் மூலமாக நாட்டிற்கு மாற்றுவது, என்பது தொடர்பிலும் பல சிரமங்களை எதிர்கொள்ளப்படுகிறது. அங்குள்ள தனியார் வங்கி அமைப்புகள் பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ள தயங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச பணப் பரிமாற்றத்தை தற்போது நடைமுறையில் இருக்கும் அமெரிக்க நாணயத்தில் மேற்கொள்வது பாதுகாப்பானதோ, நிலையானதோ அல்ல என்கின்ற கருத்துக்களும் முன் வைக்கப்படுகின்றன. எப்படியாயினும் இந்த குளிர்காலத்தில் மனிதாபிமான நிவாரணத்திற்கான அவசர உதவிகளை ஊக்குவிக்கும் மனோ நிலையிலேயே பல மனிதாபிமான அமைப்புகளின் விருப்பங்களும், செயல்பாடுகளும் உள்ளன.

நிதிப் பரிமாற்ற சிக்கலைத் தீர்ப்பதற்காக, உலக வங்கியின் முன்னாள் பொருளாதார நிபுணர் வில்லியம் பைர்ட் மற்றும் முன்னாள் கருவூல அதிகாரி அலெக்ஸ் ஜெர்டன் ஆகியோர் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர். அவர்களின் அனைத்து திட்டங்களும் சாத்தியமானதாக இல்லாவிட்டாலும், தனியார் துறை வங்கிகள் மற்றும் ஆப்கானிஸ்தானில் இன்னும் செயல்படும் சில தனியார் நிறுவனங்கள் மூலம், தனிப்பட்ட குடும்பங்களுக்கு டிஜிட்டல் தொழில் நுட்பம் மூலம் உதவிகளை வழங்கலாம் என்பது சில நாடுகளால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. வணிக இறக்குமதியை எளிதாக்குவதன் மூலம் நாட்டிற்கு நிதியைக் கொண்டுவருவதற்கான ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகளையும் அவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

அமெரிக்காவும் சர்வதேச நாணய நிதியமும் ஆப்கானின் தனியார் சிலரால் வெளிநாடுகளில் முதலிடப்பட்டுள்ள பல பில்லியன் பெறுமதியான சொத்துக்களை முடக்கி நாட்டின் பஞ்ச நிலையை போக்க வேண்டும் என்று முன்மொழிந்துள்ளது. அமெரிக்கா கையகப்படுத்திய ஆப்கான் மத்திய வங்கியின் பணமும் மனிதாபிமான உதவிகளுக்காக உடன் விடுவிக்கப்பட வேண்டியதே. எந்த அணுகுமுறையை பயன்படுத்தியாகிலும், அமெரிக்காவும் பிற நன்கொடையாளர்களும் விரைவாக செயல்பட வேண்டும் என்பதே கள நிலவரம்.

ஆப்கானின் இன்றைய இந்த அவல நிலைக்கு காரணமான அமெரிக்கா இந்த விடயத்தில் அதிகவனம் செலுத்த வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பும் ஆகும். அதேவேளை சர்வதேச உதவியிலிருந்து தலிபான் அமைப்பினரே அதிக பலன் பெறுவார்கள் என்கின்ற நியாயமான, ஆழமான கவலைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும், சர்வதேச உதவிக்கான நோக்கத்தை விரிவுபடுத்துவது எளிதானது அல்ல. தலிபான்களின் முன்னைய மற்றும் சமீபத்திய அடக்குமுறை நடவடிக்கைகள், சர்வதேச பயங்கரவாத குழுக்களுடனான அவர்களின் தொடர்பு மற்றும் அவர்களின் அரசாங்கத்தில் அனுமதிக்கப்பட்ட பயங்கரவாதிகளின் இருப்பு ஆகியவற்றை அசைப்பது என்பது இலகுவான விடயம் அல்ல,

காபூலில் இருந்து தங்கள் துருப்புக்கள், தூதரகங்கள் மற்றும் குடிமக்களை அண்மையில் வெளியேற்றிய அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு, ஆப்கானிஸ்தான் மக்களின் நெருக்கடிக்கு தீர்வு கான்பதை விட தலிபான் அமைப்பினர் மீதான அழுத்தத்தை அதிகரிக்க வேண்டும் என்கின்ற உணர்வே வலுவானதாக இருக்கும்.

எது எவ்வாறாயினும், இந்த குளிர்கால நடுப் பகுதியில் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படும் மனிதாபிமான பேரழிவு அபாயம் தடுத்து நிறுத்தப் படாவிட்டால் ஆப்கானிஸ்தானுடனான 20 ஆண்டுகால சர்வதேச முரண்பாடுகள் மேலும் அதிகரித்து தலிபான்களின் நிலைபாடு, நியாயப் படுத்தப்படும் அபாயம் ஏற்படலாம்.

தற்போதைய காபூலின் வீழ்ச்சிக்கும் அதன் மூலமான தலிபான்களின் மீள் எழுச்சிக்கும் வழிவகுத்த அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஆப்கான் மக்களை புறக்கணிக்க மாட்டோம் என்பதை உறுதி செய்ய வேண்டும். நடக்குமா இது...? ஒத்துழைப்பார்களா தலிபான்கள்...? மலருமா ஜனநாயகம்...?

உலகின் விடை அற்ற பல கேள்விகளில் இவற்றையும் இணைப்பதை தவிர வேறெதுவும் தற்போதைக்கு சாத்தியமற்றதே..!

பூமிக்கு சுவாசத்தை தரும் நிலத்தோற்ற திட்டமிடல் முறை

அபிவிருத்தி மற்றும் மக்கள்தொகை அதிகரிப்பு உட்பட பல்வேறு காரணங்களால் சுற்றுச்சூழலுக்கு மற்றும் காடுகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கு தீர்வாக நிலத்தோற்ற திட்டமிடல் முறை 1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

படிப்படியாக வளர்ச்சி அடைந்த அது, இன்றாகும்போது நூற்றுக்கணக்கான நாடுகள் பயன்படுத்துகின்ற வெற்றிகரமான முறையாக உள்ளது. இதில், ஐக்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, சீனா, ஜப்பான், கொரியா போன்ற வளர்ந்த நாடுகள் போன்று, வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளும் அடங்கும்.

அதேபோன்று ஆசியா மற்றும் அமெரிக்காவின் பல நாடுகளிலும் இந்த முறை வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது. 2017 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற காடுகள் தொடர்பிலான மாநாடு ஒன்றில் நிலத்தோற்ற திட்டமிடல் முறையாயத்தை தமது நாடுகளின் வன முகாமைத்துவத்தில் பின்பற்றுவதற்கு, அதில் பங்கேற்ற 36 நாடுகள் இணக்கம் தெரிவித்தன.

பொதுவாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்ற துறைகளின் இலக்கு சில சந்தர்ப்பங்களில் ஒன்றோடொன்று போட்டி கொண்டதாகும். மோதலுக்கு வழிவகுப்பதாகும். என்றாலும் இந்த ஒன்றோடொன்று மாறுபட்ட இலக்கினை பூர்த்தி செய்து மேற்கொள்ளப்படுகின்ற முறையாயம் மற்றும் விஞ்ஞான ரீதியான நடவடிக்கையாக நிலத்தோற்ற திட்டமிடல் செயற்பாடு தற்காலத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நிலத்தோற்றம் என அடையாளப்படுத்தப்படுவது, உயிரினங்கள் மற்றும் அவைகளின் இடைவினை இடம்பெறுகின்ற உயிர் மற்றும் உயிரற்ற அம்சங்கள் மற்றும் இயற்கை வளங்கள் உட்பட வளங்கள் உட்பட்ட ஒட்டுமொத்த பகுதியாகும். அதன் எல்லைகளை அடையாளம் இடும்போது நீர் நிலைப் பகுதி அல்லது மலைகளை உள்ளடக்கிய பகுதி அல்லது ஆறுகளை உள்ளடக்கிய பகுதி அல்லது மாகாணம், மாவட்டம் போன்ற நிர்வாக எல்லைகளாக அடையாளம் இடப்பட்ட பகுதி என மட்டுப்படுத்த முடியும். அதேபோன்று இவை அனைத்தையும் ஒன்றிணைத்த முறை ஒன்றும் நிலத்தோற்ற பகுதியில் உட்படுத்த முடியும். இந்த திட்டம் நிலத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதால், அதில் தேர்வு செய்யப்படுகின்ற பகுதியில் இருக்கின்ற நிர்வாக எல்லைக்கு அப்பால் செல்ல முடியும்.

இந்த நிலத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடல் செயற்பாட்டில் இரு அடிப்படை அம்சங்களை அடையாளம் காண முடியும். அதில் முதலாவது, இந்த தேர்வு செய்யப்படும் நிலத்தோற்றத்தை உட்படுத்திய பகுதி உள்ளடக்கப்படும். அந்த நிலப்பகுதிக்குள் அமைந்துள்ள காடுகள், வனப் பாதைகள், விவசாய நிலம், பயிர் நிலம், நீர் நிலைகள், குளங்கள், வாய்கள், நதி பகுதிகள் மற்றும் கடற்கரை போன்ற அனைத்து வகையான நில பயன்பாட்டு பகுதிகளுக்கு பொருத்தமான பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் இந்த திட்டமிடலுக்கு உள்ளடக்கப்படும்.

அதன்படி வரையறுக்கப்படுகின்ற ஒட்டுமொத்த நிலப்பகுதியையும் உள்ளடக்குகின்ற பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி இலக்கைக் கொண்ட திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். அது குறித்த பகுதியின் அனைத்து பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளினதும் பங்குதாரர்களான அனைத்து நிறுவனங்களின் பங்களிப்பை பெற்று தயாரிக்கப்படும் ஒன்றிணைந்த திட்டமாகும்.

இவ்வாறான திட்டம் ஒன்றை செயற்படுத்துவதன் மூலம் மிகத் தரமான மற்றும் வெற்றிகரமான பிரதிபலன் ஒன்றை எட்ட முடியும் என்பது தெளிவானது. அதேபோன்று, இவ்வாறு ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் குறித்த திட்டத்தை இலகுவாக மற்றும் தாமதம் இன்றி வெற்றிகரமாக செயற்படுத்த முடியுமாகும். அதற்காக விஞ்ஞான ரீதியிலான முறை ஒன்று பயன்படுத்தப்படுகிறது.

இந்த செயற்பாட்டின்போது குறித்த பகுதியின் பல்வேறு தேவைகளுக்காக பொருத்தமான பகுதி அடையாளம் காணப்படும். உதாரணமாக, பாதுகாக்கப்பட வேண்டிய பகுதி, மறுசீரமைக்க வேண்டிய பகுதி, சுற்றுச்சூழல் அடிப்படையில் உணர்வுபூர்வ பகுதி மற்றும் வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்த முடியுமான பகுதியை அடையாளம் காண்பது இதன்போது இடம்பெறுகிறது. தற்போது இருக்கின்ற பாதுகாக்கப்பட்ட பகுதிகளை காப்பதற்காக இருக்கும் சந்தர்ப்பம் மற்றும் தடங்கல்களை அடையாளம் கண்டு, அவைகளை நிர்வகிப்பதற்கு தேவையான திட்டங்கள் வகுக்கப்படும். அதன்படி பாதுகாப்பு நோக்கை செயற்படுத்துவதற்கு இலகுவான நிலைமை ஏற்படும்.

அதேபோன்று சுற்றுச்சூழலின் இருப்புக்காக மீளமைக்க வேண்டிய பகுதிகள் அடையாளம் காணப்படுவதோடு அவைகளுக்கு பொருத்துகின்ற மீளமைப்பு திட்டங்கள் செயற்படுத்தப்படும். அதற்கு, காடுகளை மேம்படுத்தல், மண் அரித்துச் செல்லப்படுவதை கட்டுப்படுத்தல், வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் நீரேந்து பிரதேசங்களின் பாதுகாப்பு போன்ற நடைமுறைகள் உள்ளடங்கும்.

ஓர் இடத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு செயற்பாடு சில நேரங்களில் தோல்வி அடைவது, அதன் அருகாமை பகுதியில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இடம்பெறுவதாலாகும். இவ்வாறு ஒட்டுமொத்த பகுதியை இலக்காகக் கொண்ட விரிவான அடிப்படை உள்ள செயற்பாடு ஒன்றின்போது இவ்வாறான வெளி செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியும்.

மனித செயற்பாடுகள் கொண்ட கிராமங்கள், வீட்டுத் தோட்டம், நகரம், விவசாய நிலம் ஆகியவை போன்ற, வேறு அரச காணிகளையும் அடையாளம் காண்பதுடன் அவைகளை பேணத்தகு முறையில் பயன்படுத்த முடியுமான முறையை அறிமுகம் செய்வது இங்கு முக்கியமானது. அவ்வாறு பல்வேறு நிலப் பயன்பாடுகளுக்காக எடுபடுத்த முடியுமான காணி மற்றும் பிரதேசங்கள் எவை என்பது மற்றும் தேவையான வளங்கள் எவை என்பதை அடையாளம் காண்பதும் இங்கு இடம்பெறுகிறது. நகர அபிவிருத்திக்கு, குடியேற்றங்களுக்கு மற்றும் விவசாயத்திற்காக பயன்படுத்த முடியுமான பகுதிகளை வெவ்வேறாக அடையாளம் காண்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அப்போது அந்த நிலப் பகுதிகளை முறையான வகையில் அந்த பணிக்காக பயன்படுத்த முடியும். மறுபுறம், தமது வாழ்வாதாரத்தை பெற்றுக்கொள்வதற்காக இயற்கை பாதுகாப்பு பகுதிகளில் தங்கியுள்ள குறைந்த வருமானம் உடைய மக்களை அடையாளம் கண்டு அவர்களுக்காக மாற்று தொழில்வாய்ப்பு மற்றும் வருவாய்க்கான வழிகளை அடையாளம் காண்பது மற்றும் மேம்படுத்துவது முக்கியமானதாகும். அதன்மூலம் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களையும் பாதுகாத்து, அவைகளை பேணத்தகு முறையில் பயன்படுத்த முடியுமான நடைமுறை ஒன்றை அறிமுகம் செய்வது முக்கியமானதாகும். இதன் கீழ் கற்றுலா தொழில்துறை, கற்றுச்சூழல் சார்ந்த உற்பத்திகளை உருவாக்குவது போன்ற துறைகளில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எளிமையாக கூறுவதென்றால், நிலத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த செயற்திட்ட நடைமுறையின்போது இயற்கை வளங்கள் மற்றும் மனித செயற்பாடுகள் பற்றி அவதானம் செலுத்தப்பட்டு, பல்வேறு நில பயன்பாட்டு போக்குகளை ஒரே திட்டத்தின் கீழ் நிர்வகிப்பதே இடம்பெறுகிறது. அதற்காக, தற்போது இலங்கையில் முன்னோடித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் தற்போது இலங்கையில் செயற்படுகின்ற சுற்றுச்சூழல் கட்டமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் வருகின்ற ஒரு கூறாக, முன்னோடி நிலத்தோற்ற முகாமைத்துவ திட்டங்களை தயாரிக்கும் செயற்பாடு உள்ளது. தற்போது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலத்தோற்ற திட்டத்தை தயாரிக்கும்போது அதற்கு தொடர்புடைய பல்வேறு பிரிவுகளின் பிரதான தரப்பினர் மூலம் பெயரிடப்படுகின்ற அதிகாரிகளைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்படும். தேசிய அளவில், மாவட்டம்/ பிராந்திய அளவில் மற்றும் பிரதேச அளவில் தயாரிக்கப்படுகின்ற இந்த குழுக்களின் பங்களிப்பு மூலம் தயாரிக்கப்பட்ட அடிப்படை திட்டங்கள் அனைத்து தரப்புகளினதும் இணக்கத்திற்கு உட்படுத்தி அரசின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும். அதன் பின் அது நீண்ட கால திட்டம் ஒன்றாக செயற்படுத்த முடியும்.

இதற்காக, இரு பகுதிகள் தேர்வு செய்யப்பட்டிருப்பதோடு, அதில் ஒன்று உயர் வலயத்தில் இருப்பதோடு, மற்றது ஈர வலயத்தில் அமைந்துள்ளது. அந்த இரு பகுதிகளும், ஹுருது - கடுவல்ல - கன்தலே நிலத்தோற்றம் மற்றும் சிங்கராஜ நிலத்தோற்றம் ஆகிய பகுதிகளாகும். இவைகளை தேர்வு செய்யும்போது பல விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

உயர் வலய முன்னோடித் திட்டம் செயற்படுத்தப்படுகின்ற மகாவலி பள்ளத்தாக்கில் அமைந்திருக்கும் ஹுருது - கடுவல்ல - கன்தலே முன்னோடித் திட்டம் மூலம் உள்ளடக்கப்படுகின்ற நிலப்பகுதி 528,826.85 ஹெக்டேர் அளவாகும். அதில் 275,557.03 ஹெக்டேர் அளவு பாதுகாப்பு பகுதிகளைக் கொண்டிருப்பதோடு, எஞ்சிய 256,269.82 ஹெக்டேர் அளவு வனங்கள், விவசாய மற்றும் தனியார் காணிகள் போன்றவற்றைக் கொண்டது.

இந்த நிலத்தோற்ற பிராந்தியத்திற்கு சொந்தமான பகுதிகளில் உயர் வலய காட்டுப் பகுதிகள் பல உரித்தாகின்றன. இதற்கு ஹுருது, கோன்வெவ, ரத்மலே, மொரகஸ்வெவ, கந்தலே, கலேகம, பதவிய, அடமாகஹுருவுள்ள, கும்புக்வெவவுள்ள, சுந்தன்காடு, நவபரிசான, பம்புருகஸ்ஹின்ன, பொருவெவ, ரலபனாவ போன்ற பாதுகாக்கப்பட்ட காடுகள் போன்று, ஆனைவிழுந்தான உத்தேச பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியும் அடங்கும்.

இது தவிர கவுடுல்ல, சோமாவதி மற்றும் மின்னேரியா போன்று தேசிய பூங்காக்கள் மற்றும் திருகோணமலை கடற்படை தலைமையக சரணாலயம் மற்றும் மகா சோப் பூங்கா சரணாலயமும், கடோலான நிலப்பகுதிகள் மலதும் இந்த நிலத்தோற்றத்திற்கு உரித்தாகும். இந்த பகுதிகள் ஊடாக ஆறு பிரதான நதிகள் ஓடுவதோடு, ஒன்பது நீரேந்து பகுதிகள் மற்றும் ஐந்து பாரிய குளங்களும் அமைந்துள்ளன. பெரும் அளவு வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள், தொல்பொருள் அடிப்படையில் பல முக்கிய பிரதேசங்களும் உரித்தாகின்றன. அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகள் இருக்கின்ற இந்த நிலத்தோற்றம் சார்ந்த முன்னோடி நிலத்தோற்ற திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

நிலத்தோற்ற முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்படுகின்ற மற்றைய நிலத்தோற்ற பகுதியானது சிங்கராஜ காடு உள்ளடக்கிய தொகுதிக்கு 242,695.17 ஹெக்டேர் அளவு பகுதி அடங்கும். அதில் 150,473.07 ஹெக்டேர் அளவு பாதுகாக்கப்பட்ட பகுதிகளை உள்ளடக்கிய காடுகளாக இருப்பதோடு, எஞ்சிய 92,222.10 ஹெக்டேர் நிலப்பகுதி ஏஞ்சிய வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதற்கு சிங்கராஜ உலக உரிமை நிலம், மொரம்பிட்டிய - ரேன கந்த, தம்புலுவ, முவகந்த, மகுருகொட, எரியகஹேனே, வர்தல்கொட, கிதுலுதர, நெகிட்டி முகலான, ஹுந்தலவ கந்த, முதலிகந்த - பக்கந்த - நவ்கந்த - கபரக, வலிகந்த, குருகல, சூரியகந்த, கலு போவிட்டியன மற்றும் தியநல ஆகிய பாதுகாக்கப்பட்ட காடுகள் உரித்தாகின்றன.

இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் கலுத்துறை ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு சொந்தமான 16 பிரதேச செயலாளர் பிரிவுகள் இந்த பகுதியில் அமைந்துள்ளன. இந்த நிலத்தோற்ற பிராந்தியத்திற்கான நிலத்தோற்ற முகாமைத்துவ திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவ திட்டம், குறித்த பகுதியின் இயற்கை வள பாதுகாப்பு போன்று, பேணத்தகு பயன்பாட்டுக்கு பொருத்தமான முறையொன்று அறிமுகப்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பை வைத்திருக்க முடியும்.

பெரும் உழைப்பு மற்றும் பெரும் செலவு கொண்டு, இலங்கையின் காடுகளின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால சந்ததியின் சுவாசிக்கும் உரிமைக்காக மேற்கொள்ளப்படும் இவ்வாறான பாரிய பணிகள் இடையிலேயே நின்றுவிடுவதற்கு அல்லது அதிகார துஷ்பிரயோகத்திற்கு மத்தியில் சீர்குலைவதற்கு இடமளிக்காது, தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வது நமது பொறுப்பு என, இந்நாட்டின் அனைத்து மக்களும் புரிந்து கொள்வது முக்கியமாகும்.

- இனோகா பெரேரா பண்டார

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

வன பாதுகாப்பு திணைக்களம்

ESCAMP
சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ திட்டம்

இது தான், நீங்கள் எமக்கு எழுத வேண்டிய முகவரி:
ESCAMP திட்டப் பணிப்பாளர்,
இலக்கம் 82, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
escamp.pd@gmail.com

நிகழ்வைக் காண
QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

லேக்ஹவுஸ் நிறுவனத்தால் அச்சிட்டு வெளியிடப்படும் கல்வி வெளியீடான 'முத்து அஹுர' சஞ்சிகைக்காக சிறுவர் சிறுமியரால் அனுப்பிவைக்கப்படும் சித்திரங்களின் கண்காட்சி நேற்று கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது... (படங்கள் சாலிய ரூபசிங்க)

பாகிஸ்தான் விமானப்படையின் அதிகாரி ஹபீஸ் முஹம்மது உஸ்மான் ஹயாத் மற்றும் சொஹைப் தாஹிர் ஆகியோர் கொத்தலாவலை பாதுகாப்பு கல்லூரில் லொஜிஸ்டிக் முகாமைத்துவத்தில் இளங்கலை மற்றும் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியலில் இளங்கலை பட்டப்படிப்பில் 1வது மற்றும் 2 வது இடத்தைப் பெற்றமையை இட்டு பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் வாழ்த்துக்களை தெரிவித்தது. விமானப்படை அதிகாரி ஹாபிஸ் முஹம்மது உஸ்மான் ஹயாத், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து, லொஜிஸ்டிக் முகாமைத்துவ இளங்கலையில் அதி சிறந்த திறமைக்கான கிண்ணத்தை பெற்ற முதல் பாகிஸ்தானின் அதிகாரி ஆவார்.

தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கொழும்பு பல்கலைக்கழகத்தின் இதழியல் பிரிவினால் நடாத்தப்படும் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் டிப்ளோமா பாடநெறிக்கான 2022 ஆம் கல்வியாண்டிற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் டிப்ளோமா பாடநெறியானது தேசிய தொழில் சார் தகைமையின் மட்டம் 05 க்கு (NVQ Level 05) சமனானதாகும். மேலும் இது இலங்கை தகைமைக் கட்டமைப்பின் (SLQF Level 03) மட்டம் 03 க்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களானவை ஊடகங்களில் பணியாற்றும் இயைபான அனுபவமுள்ள விண்ணப்பதாரரிடமிருந்து கோரப்படுகின்றன. சுயாதீன ஊடகத்துறை சார்ந்தவர்கள், ஆக்கப்பூர்வமான எழுத்தாளர்கள், கலைஞர்கள் எனத் தத்தம் துறைகளில் தற்போது ஈடுபட்டுள்ளவர்களும் உள்வாங்கப்படுவர். ஊடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள், எதிர்காலத்தில் ஊடகத்துறையில் இணைய விரும்புபவர்களிடமிருந்தான மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் இந்த திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எனவே, அவர்களும் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

இந் நிகழ்ச்சித் திட்டமானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடத்தப்படும் மற்றும் விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வின் மூலம் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகளுக்கான டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் வெளியீட்டு பிரிவு மற்றும் பல்கலைக்கழக இணையத்தளமான www.cmb.ac.lk இலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு 0716843267 அல்லது 077327733 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி 2021 டிசம்பர் 31 ஆகும்.

பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதனுக்கு மீண்டும் கிடைக்கப்பெற்ற உயர்ந்த கௌரவம்

பிரித்தானியா லண்டன் பல்கலைக்கழக தகவலியல் துறைப் பேராசிரியரான ஆறுமுகம் நல்லநாதன் உலகில் மிகப்பெரிய தொழில்நுட்பத்துறைசார் நிபுணர்களின் நிறுவனமான மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் நிறுவனத்தின் (IEEE) 16வது சர்வதேச மாநாட்டிற்கு கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம் மாநாடு நேற்றைய தினம் இணையம் ஊடாக நடைபெற்றிருந்தது.

பேராசிரியர் நல்லநாதன் 2016ஆம் ஆண்டு IEEE நிறுவனத்தின் "Fellow" உறுப்பினர் என்ற தகுதியைப் பெற்றுக்கொண்டு சாதனை படைத்தவர். இலங்கையிலிருந்து IEEE Fellow உறுப்பினர் என்ற தகமையைப் பெற்றுள்ள பத்து உறுப்பினர்களுள் பேராசிரியர் நல்லநாதனும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். IEEE Fellow உறுப்பினர் என்ற தகமை தொழில்நுட்ப சமூகத்தினால் வழங்கப்படுகின்ற அதிசிறந்த கௌரவமாகவும் முக்கியமான தொழில்த்துறைச் சாதனையாகவும் பார்க்கப்படுவதாகும். பேராசிரியர் நல்லநாதன் IEEE நிறுவனத்தின் சர்வதேச மாநாட்டிற்கு கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தமை அவருக்கு மீண்டும் கிடைத்த ஒரு உயரிய கௌரவமாகும்.

காரைநகர் இந்துக் கல்லூரியின் மகிமைமிக்க பழைய மாணவனான பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதனுக்கு கிடைத்த உயர்ந்த கௌரவம் குறித்து பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளை மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதுடன் அவர் மேலும் பல சாதனைகள் படைத்து கல்லூரி அன்னைக்கு பெருமை சேர்க்கவேண்டும் என வாழ்த்துகிறது.

துரைவி விருது -2022/2021

2022/2021 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் தமிழில் வெளிவந்த கட்டுரைத் தொகுப்பு மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களில் சிறந்தவை தேர்ந்தெடுக்கப்பட்டு துரைவி விருது வழங்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்படும் சிறந்த நூல் ஒன்றுக்கும் தலா 10000.00 ரூபாவும், விருதும், சான்றிதழும் வழங்கப்படும். கட்டுரைத் தொகுப்பு, கலை இலக்கிய விமர்சனம், ஆய்வு, கோட்பாடுகள் போன்ற வகையான ஆக்கங்கள் கொண்ட நூலாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்பு நூலின் மூலப்படைப்பு உலகின் எந்த மொழியிலும் வெளிவந்ததாகவும் இருக்கலாம். மொழிபெயர்க்கப்படும் நூல் ஆக்க இலக்கியமாக இருத்தல் வேண்டும். விருதுக்காக அனுப்பப்படும் நூல் இலங்கையில் பதிப்பிக்கப்பட்டு இலங்கையில் ISBN இலக்கம் பெற்று இருத்தல் வேண்டும். நூலாசிரியர் மொழிபெயர்ப்பாளர் இலங்கையில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். நூலாசிரியர்/ மொழிபெயர்ப்பாளர் பற்றிய விபரக் கொத்து, சமர்ப்பிக்கப்படும் நூலுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு நூலின் மூன்று பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும். நூலின் பிரதிகள் நேரடியாகவோ தபால் மூலமாகவோ 2022ஆம் ஆண்டு ஜனவரி 15ந்திகதிக்கு முன்னதாக கீழ் காணும் விலாசத்திற்கு சேர்க்கப்படல் வேண்டும். முகவரி : Duraivi, c/o Vijaya General Stores,85, Wolfendhal Street, Colombo13.மேலதிகத் தொடர்புகளுக்கு மேமன் கவி 0778681464, துரைவி அலுவலகம் 0112327011, மின்னஞ்சல் duraivi1931@gmail.com

எழுத்தாளர் செல்வி நிவேதா ஜெகநாதனின் காலத்திற்கு ஏற்றவகையில் கையெழுத்தின் வெளிப்பாடாக சிறையில் ஒரு சிற்றோவியம் என்ற நூல் வெளியீட்டு விழா கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த 4ஆம் திகதி மாலை இடம் பெற்றது.

சாதனை புரிந்தவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம்

இலங்கையில் அமெரிக்க தேசிய பல்கலைக்கழகம் சார்பில் பல்வேறு துறையில் சாதனை புரிந்தவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கும் விழா 05.12.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பில் உள்ள தாஜ் நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களை டாக்டர் கலாநிதி தரிந்து விஜேநாயக்க (துணைத் தலைவர்) டெக்ஸ்டர் பெர்னாண்டோ (தலைவர்) ஆகியோர் வரவேற்றனர். டாக்டர்.எம்.ஏ.ஏ.ஜப்பார் துணைத் தலைவர் (இலங்கை அத்தியாயம்) எஸ். ரகு இந்திரகுமார் இயக்குநர் (இலங்கை அத்தியாயம்) ஆகியோர் நிகழ்வுக்கு தலைமை வகித்தனர்.

விழாவில் சிறப்பு விருந்தினராக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர்மொய்தீன் , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோர் கலந்து இளங்கலை, முதுகலை மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு கவுரவ டாக்டர் பட்டங்களை வழங்கினார். தமிழகத்தில் இருந்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தமைக்காக கீழக்கரை சதக் அப்துல் காதர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தென் சென்னை மாவட்ட செயலாளர் மடுவை பீர் முஹம்மது, கல்வி துறையில் சாதனை புரிந்தமைக்காக ராஜகிரி ஆர்.டி.பி. கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர் ஆர்.டி.பி. தாவூது பாட்ஷா, திருச்சி சமத் மெட்ரிக் ஹையர் பள்ளி மேலாளர் ஷேக் அப்துல் காதர் சுஹைல், ஊடகத் துறை மற்றும் தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இணைப்பு பாலமாக இருந்தமைக்காக திருச்சி மணிச்சுடர் ஊடகவியலாளர் புத்தாநத்தம் எம்.கே.ஷாகுல் ஹமீது உள்ளிட்ட 30 பேருக்கு இந்த கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

விழாவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், மூத்த ஊடகவியலாளருமான என்.எம்.ஆமீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பொதுச்செயலாளர் ஷாதிக் ஷிகான், மூத்த ஊடகவியலாளர் எம்.எம். நிலாம், தமிழகத்தில் இருந்து வந்த ஷேக் முஹம்மது சுஹைபு, வழக்கறிஞர் உமர் கையான், பழனி ஷாகன், கௌரவ சுதாத் அபேசிங்க, டாக்டர் டூரிங், டாக்டர் திஸ்ஸ ஜெயவீர, பேராசிரியர் ரோஹன் டி சில்வா, டாக்டர் உதார சம்பத், டெக்ஸ்டர் பெர்னாண்டோ உள்ளிட்ட பல்வேறு பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இப்பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்களுக்கான வணிக நிர்வாகம், மேலாண்மை, வர்த்தகம் மற்றும் இலக்கியம் குறித்த முதுகலை மற்றும் இளங்கலை பட்டங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்.கோண்டாவில் CCTMS பாடசாலை பிள்ளைகளின் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக பூமணி அம்மா அறக்கட்டளையின் நிர்வாகக் குழுவினர் புலம்பெயர்ந்த மக்களின் உதவியுடன் தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரனின் தலைமையில் மோட்டர் பொருத்தி குடிதண்ணீர் வசதியை பெற்றுக் கொடுத்ததுடன் கல்வி கற்கும் 42 மாணவர்களுக்கும் மதிய உணவையும் வழங்கியதோடு கற்றல் உபகரணங்களையும் வழங்கினர். இதற்கென சுமார் 1,20,000 ரூபா நிதியை கனடாவில் வாழும் மோகனதாஸ் குடும்பத்தினர் வழங்கினர். பிரான்ஸ் தமிழ் வானொலி மற்றும் பூமணிஅம்மாஅறக்கட்டனையின் ஸ்தாபகர் இந்த ஏற்பாட்டை செய்திருந்தார். படம்: வேலணை குறூப் நிருபர்

சிரேஷ்ட பத்திரிகையாளர் எம்.ஏ.எம். நிலாம் எழுதிய தட்டுத்தாவாரம் எனும் கவிதை நூலின் அறிமுக விழா கொழும்பில் புதன்கிழமை (8) முஸ்லிம் மீடியா போரத்தின் உப தலைவி கலாபூஷணம் புர்கான் பீ. இப்திக்கார் (எம்.ஏ) தலைமையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையக தாருஸ்லாம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் முனிருள் மில்லத் பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பத்திரிகையாளர் எம்.ஏ.எம் நிலாமுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். நூலின் பிரதியொன்றை திருச்சி மாவட்ட காதி நீதிபதி ஜலீல் சுல்தான் பெற்றுக்கொண்டார். கல்லொலுவை அல் அமான் அதிபர் எம்.ரி.எம். அஸீம், சிரேஷ்ட பத்திரிகையாளர் என்.எம். அமீன், கவிஞர்களான ரவுப் ஹசீர், அலி அக்பர், கலைவாதி கலீல், சட்டத்தரணி ரசீத் எம். இம்தியாஸ் மற்றும் தினகரன் பிரதம ஆசிரியர். தே.செந்தில்வேலவர் ஆகியோர் நிலாம் கடந்த 75 வருட காலத்தில் ஆற்றிய சேவைகள், பத்திரிகை தொடர்புகள் பற்றி உரையாற்றினார்கள். அஷ்ரப் ஏ சமத்

தினகரன் வாரமஞ்சரி

BUDGET

adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

62-6 தொடர் இசுசு யேர்னி ஏசி பஸ் - ரீகொண்டிஷன் ரூடவ்எல் பெரிய பம்பி என்ஜின் கியர் பெட்டி 1989 இல் தயாரிக்கப்பட்டது 1997 இல் பதிவு செய்யப்பட்டது. 28.50 அல்டோ வேனுக்கு பரிமாற்றம் செய்யப்படலாம். 0718 975 892.

HOKANDARA (Amaragoda Road)
HOUSE FOR SALE
4 BEDROOMS WITH INBUILT WARDROBES, 3 BATHROOMS, LIVING SPACE, TV LOUNGE, SWIMMING POOL, KITCHEN & PANTRY, PARKING FOR 2 VEHICLES, SERVANTS QUARTERS.
LAND EXTENT IS 60 PERCHES.
Price - Rs. 95 Million (Negotiable)
CONTACT – 0772 293 165

THALAPATHPITIYA
HOUSE FOR SALE

3 STORY MODERN HOUSE WITH -5 BEDROOMS AND 3 BATHROOMS MASTER BEDROOM IS AIR CONDITIONED AND WITH AN ATTACHED BATHROOM, ONE STUDY ROOM. TV LOUNGE WITH BALCONY. LIVING AND DINING ROOM. SERVANTS ROOM AND BATHROOM. ROOFTOP WITH A VIEW. ROLLER GATE AND PARKING FOR 3 VEHICLES. QUIET NEIGHBOURHOOD
LAND EXTENT IS 11.1 PERCHES. Price - 52 Million (negotiable)
CONTACT - 0772 293 165

HUMMER H2 FOR SALE

- Cash or Exchange - Yellow
- 2007 - Petrol

CALL NOW - 077 757 2726

Your Trusted Machinery Supplier
WIJESURIYA MARKETING SERVICES (PVT) LTD.
- Screens
- Feeders
- Jaw Crushers
- Cone Crushers
- Cone Cave Mentals
- Jaw Plates, Bearings

WORLD FAMOUS BRANDS AND MODELS FOR CONSTRUCTION INDUSTRY

Bookings accepted in USD also
E-mail : inquiries@huwashi.net
No. 41 B, Horana Road, Katuwawala, Boralesgamuwa.
Tel : 0112 732 962 / 0112 150 669

WAREHOUSE FOR SALE
COLOMBO 14
- Land 30 Perches
- 8000 Sq. Ft.
- Two Storied Office
- Hightension Electricity
- Pipeline Water

Price : Rs. 120 Mn.
+94 777 258 280

PRIYA JEEWAKA CARE RESORTS
Gracious Living with Care .....

Priya Jeewaka Care Resorts in Rajagiriya provides your elderly loved ones with the perfect home with full board accommodation & 24 hour care. With all overseen by professional and experienced Nurses and Care givers, you can rest assured that your loved ones are Comfortable, Safe and Have help available when needed

FACILITIES WE OFFER:
- FOOD ON FULL BOARD BASIS
- DOCTOR VISIT
- MEDICINE DISPENSING
- NURSING CARE ATTENDANT SERVICE
- DAILY PRESSURE MONITORING
- BLOOD SUGAR MONITORING
- DAILY ROOM CLEANING
- LAUNDRY
- BATHROOMS WITH HOT WATER



Rs. 45,000/- PER MONTH UPWARDS

OUR ORGANIZATION PROVIDES CARE TO OLD PEOPLE WHO HAVE ILLNESSES OR ARE AGED

We are equipped with the latest equipment to treat your Elderly Loved Ones. We can provide any medical treatment under our roof and we also specialize on Palliative Care.

Call : +94 777 555 846 (SHEHARA)



* Trusted Marketplace of Classified Advertisers...

SUNDAY OBSERVER
adz it's what you want
Classified

Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

Green Light for Online Transfer
BOC
Lake House Branch
Acc. No. 000000377

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

வர்த்தகம்

209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

எந்தவொரு வியாபாரத்திற்கும் உகந்த கட்டிடமொன்று மாளிகாவத்தையில் நீண்ட கால குத்தகைக்கு / வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. அச்சகமொன்றிற்கு மோட்டார் சைக்கிள் தொழில்நுட்ப நிலையமொன்றிற்கு, கைத்தொழிலொன்றிற்கு களஞ்சியசாலையொன்றிற்கு, உகந்தது. அழைக்கவும் 0723278646 080668

வேலைவாய்ப்பு

312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

அது ஒரு அழகிய கிராமம். அக்கிராமத்தில் ஆலமரம் ஒன்று இருந்தது. அந்த ஆலமரத்தில் இரு காகங்கள் கூடுகட்டி வாழ்ந்து வந்தன. அந்த ஆலமரத்தின் கீழ் பகுதியில் பெரிய பொந்து ஒன்று இருந்தது. அந்தப் பொந்தை ஒரு கருநாகம் உறைவிடமாகக் கொண்டிருந்தது.

பெண் காகம் தனது கூட்டில் முட்டைகள் இட்டுக் குஞ்சுகள் பொறிக்கும். ஆண் காகமும், பெண் காகமும் இரைதேடச் செல்லும் நேரம் பார்த்து பொந்தில் இருக்கும் அந்த பாம்பு மரத்தின் மீது ஏறி காகத்தின் முட்டைகளை தின்றுவிட்டு இறங்கி விடும். திரும்பி வந்து பார்க்கும் போது முட்டைகள் காணாமல் போய் விட்டது கண்டு காகங்கள் மிகவும் மன வேதனை அடையும்.

ஒவ்வொரு தடவையும் பெண் காகம் குஞ்சு முட்டையிடுவதும், அவற்றை கருநாகம் உண்பதும் வழக்கமான நிகழ்ச்சியாகி விட்டன. ஒரு நாள் அந்த பாம்பு முட்டைகளை சாப்பிடப் போகும் நேரத்தில் கூட்டிற்கு வந்த

பெண்காகம் பார்த்துவிட்டது. காகத்தை பார்த்த பாம்பு முட்டைகளை சாப்பிடாமல் சென்று விட்டது.

முட்டைகள் காணாமல் போவதற்கு மரத்தடிப் பொந்தில் வாழும் கருநாகந்தான் காரணம் என்பதைக் காகங்கள் கண்டு கொண்டன. ஆனால் காகங்களால் கருநாகத்தை என்ன செய்ய முடியும்? தலைவிதியே எனச் சில காலத்தை ஓட்டின. திரும்பத் திரும்ப தன் குஞ்சுகளை இழக்கும் அவலத்தைப் பெண் காகத்தால் சகித்துக் கொள்ள இயலவில்லை.

ஒருநாள் பெண் காகம் ஆண் காகத்தை பார்த்து, "நமது முட்டைகளையெல்லாம் ஒவ்வொரு தடவையும் கருநாகம் தின்று விடுகின்றதே! இனியும் இதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. இந்த மரத்தை விட்டுவிட்டு வேறு ஒரு பாதுகாப்பு நிறைந்த மரத்திற்குக் குடி போய் நிம்மதியாக வாழ்க்கை நடத்துவோம்" என்று கண்ணீருடன் கதறியது.

பெண் காகம் கூறியதைக் கேட்டு மன வேதனையுற்ற ஆண் காகம் தன் மனைவியை நோக்கி "உன் மனக்குமுறல் எனக்கு புரிகிறது! சில விஷயங்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கின்றது. நீண்ட காலமாக வசித்து வரும் இந்த இடத்தைவிட்டு வேறு இடத்திற்குச் செல்ல என் மனம் கேட்கவில்லை. ஆனால் அதற்காகக் கரும் பாம்பின் அட்டூழியத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் கூற மாட்டேன். ஏதாவது ஒரு உபாயம் செய்து இந்த பாம்பைக் கொன்றாக வேண்டும்" என்று ஆண் காகம் கூறியது.

"இந்தக்கொடிய விஷ கருநாகத்தை நம்மால் கொல்ல முடியுமா?" என்று சந்தேகத்தோடு பெண்காகம் கேட்டது. "கருநாகத்தைக் கொல்லும் அளவுக்கு வலிமையோ வல்லமையோ எனக்கு இல்லை என்பது உண்மைதான். ஆனால் நல்ல அறிவாற்றல் மிக்க நல்ல நண்பர்கள் பலர் எனக்கு இருக்கிறார்கள். அவர்களிடம் யோசனை கலந்து இந்தக் கருநாகத்தை நிச்சயமாக என்னால் ஒழித்துக் கட்ட முடியும்" என்று ஆவேசத்துடன் கூறியது ஆண் காகம்.

பிறகு பெண் காகத்தை பார்த்து, "பாம்பைக் கொல்ல உடனடியாக நடவடிக்கை மேற் கொண்டாக வேண்டும். நீ பத்திரமாக இரு. நான் நண்பன் ஒருவனைச் சென்று பார்த்துவிட்டு விரைவில் திரும்பி வருகிறேன்" என்று கூறி விட்டு புறப்பட்டது.

சிறிது தொலைவில் வசித்து வந்த ஒரு நரி காகத்தின் நெருக்கமான நண்பன். நல்ல அறிவாற்றலும் தந்திர சுபாவமும் படைத்த அந்த நரியைத் தேடிக்கொண்டு காகம் அங்கு போய்ச் சேர்ந்தது.

நரி தன் நண்பன் காகத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்றது. "நண்பனே, நான் வாழும் மரத்தடியில் வசிக்கும் கருநாகம் செய்யும் அட்டூழியத்தை எல்லாம் மன வேதனையுடன் நரியிடம் எடுத்துக் கூறி, அதை கொல்வதற்கு நீதான் எனக்கு ஏதாவது ஒரு உதவி கூற வேண்டும்" என்று கேட்டுக் கொண்டது.

நரியும் நல்ல உபாயம் ஒன்றைக் காகத்திற்குக் கூறி, "நண்பனே, இந்த யோசனையைச் செயற்படுத்து, கருநாகத்தின் ஆயுள் முடிந்துவிடும்" என்று சொல்லியது. காகம் நண்பன் நரியிடம் விடை பெற்றுக் கொண்டு உடனே அதன் யோசனையைச் செயற்படுத்தும் முயற்சியினைத் தொடங்கியது.

அந்த நாட்டின் அரசி வழக்கமாக நீராடும் குளக்கரைக்குச் சென்று காகம் ஒரு மரத்தில் மறைவாக அமர்ந்து அரசியின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அரசி தனது தோழிகளுடன் குளத்திற்கு வந்து சேர்ந்தாள். தன்னுடைய விலை உயர்ந்த ஆபரணங்களையெல்லாம் கழற்றிக் கூரைமீது வைத்துவிட்டு அரசி நீராடுவதற்காக குளத்தில் இறங்கினாள். காகம் உடனே பறந்து வந்து மிகவும் மதிப்புமிக்க முத்துமாலை ஒன்றைத் தனது அலகால் கொத்தி எடுத்துக் கொண்டு பறந்தோடியது. எதிர்பாராத அந்த நிகழ்ச்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்த அரசியும் தோழிகளும் கூக்குரலிட்டனர். உடனே சில தோழிகள் சென்று காவலர்களிடம் நடந்ததைக் கூறினார்கள்.

காவலர்கள் பறந்து செல்லும் காகத்தைத் துரத்திக் கொண்டு கூச்சலிட்டவாறு பின் தொடர்ந்து சென்றார்கள். காகம் பறந்தவாறு நேராகத் தான் குடியிருக்கும் ஆலமரத்திற்குச் சென்றது. அதற்குள் காவலர்கள் அந்த மரத்தருகே வந்து சேர்ந்தார்கள். காகம் தனது அலகில் கொத்திப் பிடித்திருந்த அரசியின் அணிகலனை காவலர்கள் கண் பார்வையில் படும் விதமாக கருநாகத்தின் பொந்துக்குள் போட்டு விட்டது.

காவலர்கள் கரும் பாம்புப் புற்றை இடித்து நகையைத் தேடினார்கள். புற்றுக்குள் இருந்த கருநாகம் சீறிக் கொண்டு வெளியே வந்தது. காவலர்கள் அந்தக் கருநாகத்தைக் தடியால் அடித்துக் கொன்றனர். பிறகு புற்றை நன்றாக இடித்துப் பெயர்த்து அரசியின் அணிகலனைத் தேடி எடுத்துக் கொண்டு சென்று விட்டனர். அதன் பிறகு காகக் குடும்பம் நிம்மதியாகவும், மகிழ்ச்சியுடனும் வாழ்க்கை நடத்த தொடங்கியது.

மாணிக்கங்கள்

நவரத்தினங்கள் எனப்படுபவை ஒன்பது வகையான இரத்தினக் கற்களாகும். இவை ஆபரணத் தயாரிப்பில் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.
1) மாணிக்கம் – Ruby
2) முத்து – Pearl
3) பவளம் – Coral
4) மரகதம் – Emerald
5) புஷ்பராகம் – Topaz
6) வைரம் – Diamond
7) நீலக்கல் – Blue Sapphire
8) கோமேதகம் – Zircon
9) வைடூரியம் – Cat's Eye ஆகியவை ஆகும்.

சுஸ்மிதன் ஆனந்தன்,
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம், நோர்வூட்.

சசிகாந்தன் - கலைவாணி,
மோதரை, கொழும்பு 15.

எஸ். திவ்யானி,
தரம் 12, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.

றிஸ்பா,
தரம் 05, பு/ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை,
புத்தளம்.

ஏ. தனுஷன்,
தரம் 10, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.



பாத்திமா அமானா வாஸில்
03D, மாறை/ வெலிகம முஸ்லிம்
ஆரம்ப பாடசாலை, வெலிகம.

பதுளை, தெளிவத்தை தோட்டத்தில் இயங்கும் பெண்ணரசிகள் சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டியங்கும் செரண்டிப் சிறுவர் இல்லத்தினரின் அனுசரணையில் தெளிவத்தை இல.01.தமிழ் வித்தியாலயம், ஸ்ரீவாணி தமிழ் வித்தியாலயம், வள்ளுவர் தமிழ் வித்தியாலயம் மற்றும் கலைவாணி தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்கும் 410 மாணவர்களுக்கும் ஸ்ரீராம் முன்பள்ளி மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் செரண்டிப் சிறுவர் இல்லத்தின் பொறுப்பதிகாரி விஜேந்திரன், இணைப்பாளர் சரண்ராஜ் மற்றும் பெண்ணரசிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

விளையாட்டு

13, 14ஆம் திகதிகளில் 'எஸ்எஸ்சி' மைதானத்தில்

டயலொக் அனுசரணையில் 'புனித ஜோசப், புனித பீட்டர்ஸ்' கல்லூரிகளுக்கிடையிலான 87வது மாபெரும் கிரிக்கெட் சமர்

இலங்கையின் முதன்மையான கத்தோலிக்க ஆண்கள் பாடசாலைகளான கொழும்பு புனித ஜோசப் கல்லூரி மற்றும் கொழும்பு புனித பீட்டர்ஸ் கல்லூரி ஆகியன, அருட் தந்தை மொரிஸ் ஜே. லி கொக் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான மாபெரும் கிரிக்கெட் போட்டியில் மோதவுள்ளன. இப்போட்டி நாளை 13ஆம், 14ஆம் திகதிகளில் கொழும்பு எஸ்எஸ்சி மைதானத்தில், நடைபெறவுள்ளது .'Battle of Saints', (புனிதர்களின் சமர்) என அழைக்கப்படும் விறுவிறுப்பான போட்டித்தன்மை கொண்ட இரண்டு நாட்கள் நடைபெறும் மேற்படி வருடாந்த கிரிக்கெட் போட்டியானது மிகுந்த ஆர்வத்தை கொண்ட போட்டியாகும். இப் போட்டியானது முதல் இன்னிங்ஸ் தலா 60 ஓவர்களை கொண்டதாக வரையறுக்கப்பட்டிருக்கும். இதற்கமைய, இம்முறை 2021ஆம் வருடத்திற்கான 19 வயதுக்குட்பட்ட கொழும்பு, டார்லி வீதி, புனித ஜோசப் கல்லூரி அணியானது சகலதுறை ஆட்டக்காரரான துனித் வெல்லலகே தலைமையிலும், பம்பலப்பிட்டி புனித பீட்டர்ஸ் கல்லூரி அணியானது சிறந்த துடுப்பாட்ட வீரரான நிபுனக பொன்சேகாவின் தலைமையிலும் களமிறங்கவுள்ளன.

'கொவிட் தொற்றுநோய் உலகளாவிய ரீதியில் பரவி உலகையே முடக்கியுள்ள ஒரு தருணம் இது. இருப்பினும், நீண்டகால பாரம்பரியங்களை கொண்ட கிரிக்கெட் விளையாட்டுக்களினூடாக, அத்தகைய பாரம்பரியத்தை,வரலாற்றை பாதுகாக்க வல்ல ஒரு தனித்துவத்தை நாம் கொண்டிருப்பதும் அதிர்ஷ்டகரமானதாகும்.' என இம்முறை போட்டியை நடத்தும் கொழும்பு புனித பீட்டர்ஸ் கல்லூரியின் அதிபர் ரோஹித்த ரொட்ரிகோ தெரிவித்துள்ளார். மேலும் அவர் குறிப்பிடுகையில், 'ஜோபீட் (ஜோசப் பீட்டர்ஸ்) பிணைப்பானது சகோதரத்துவம், ஒற்றுமை, அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் தனித்துவமான உணர்வை வளர்க்கின்றது, மேலும், இம்முறை நடைபெறுக்கின்ற போட்டியானது சுகாதார கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கமைய அரங்கில் பார்வையாளர்கள் இல்லாத நிலையில் நடைபெறவுள்ள போதிலும் போட்டியானது எவ்வகையிலும் விறுவிறுப்பும், மிகுந்த போட்டித்தன்மையும் குன்றாத வகையில் அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கொவிட் தொற்றுப் பரவல் சூழ்நிலையிலும்கூட தன்னம்பிக்கை, ஒழுக்கம் மற்றும் பொறுப்புணர்வுடன் சவால்களை சமாளிக்கும் வகையில் போட்டி ஏற்பாடுகளையிட்டு முனைப்புடன் செயற்பட்ட அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் , இப் போட்டிகளை நடத்துவதில் எம்மை ஊக்குவித்து கரம் கொடுக்கின்ற நமது பிரதான அனுசரணையாளர்களான டயலொக் ஆசிஆட்டா நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்ளகின்றேன்.' என்றார்.

கொழும்பு புனித ஜோசப் கல்லூரியின் அதிபர் அருட்தந்தை ரஞ்சித் அந்தராடி தெரிவிக்கையில், "சகோதரத்துவம் மற்றும் தோழமை உணர்வுடன்கூடிய தலைமுறை தலைமுறையாக உடைக்கப்படாத சங்கிலித் தொடராக மற்றொரு 'ஜோபீட்' கிரிக்கெட் போட்டிக்கான களத்தை தயார் செய்வதில் பலரது அயராத உழைப்பும், இறைவனின் ஆசீர்வாதமும் கிட்டியதன் பேரில் அதில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். போட்டிகளையிட்டு கடினமாக பயிற்சிகளை பெற்றுள்ள நமது மாணவர்கள், மேலும் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கு இந்த முக்கியமான வாய்ப்பை அவர்களுக்கு வழங்கியுள்ளோம். இரு அணிகளுக்கும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதுடன், அனுசரணையாளர்களான டயலொக் ஆசிஆட்டா நிறுவனத்திற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்' என்றார்.

இந்த இரண்டு கல்லூரிகளும் இதுவரை நடைபெற்றுள்ள போட்டிகளுள் புனித ஜோசப் கல்லூரி 12 வெற்றிகளுடன் தொடரில் முன்னிலை வகிக்கின்றது, 2008 இல் ருவந்த பெர்னாண்டோபுள்ளே தலைமையிலான போட்டியின்போதே புனித ஜோசப் கல்லூரிக்கு கடைசி வெற்றி கிட்டியிருந்தது. அதேவேளை, புனித பீற்றர்ஸ் கல்லூரி இதுவரை 10 வெற்றிகளை பெற்றுள்ளது. 2016 இல் வினு மொஹொட்டியின் தலைமையிலான போட்டியிலேயே புனித பீற்றர்ஸ் கல்லூரி கடைசியாக வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்திருந்தது. மேற்படி அருட் தந்தை மொரிஸ் ஜே. லெகோக் ஞாபகார்த்த கிண்ணமானது பம்பலப்பிட்டி புனித பீற்றர்ஸ் கல்லூரியில் காட்சி பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது .

1975 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான முதலாவது வரையறுக்கப்பட்ட ஓவர்களைக்கொண்ட போட்டியானது புனித ஜோசப் புனித பீட்டர்ஸ் கல்லூரிகளுக் கிடையிலேயே நடைபெற்றிருந்தது. இதற்கமைய, பாடசாலைகளுக்கியிடையிலான 50 ஓவர்களைக்கொண்ட ஒருநாள் போட்டியானது எப்போதும் அதிக எண்ணிக்கையிலான பார்வையாளர்களை ஈர்க்கும் போட்டியாக இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய கொவிட் தொற்றின் காரணமாக சுகாதார பாதுகாப்பின் நிமித்தம் சுகாதாரத்துறை அமைச்சும் , விளையாட்டுத்துறை அமைச்சும் விதித்துள்ள சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய போட்டிகளின் போது பார்வையாளர் அரங்கில் எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. எனினும், போட்டிகளை உணர்வுபூர்வமாக ரசிக்கும் அதிக எண்ணிக்கையிலான இந்நாள் மாணவர்கள் , பழைய மாணவர்கள், கிரிக்கெட் அபிமானிகள் ஆகியோர் தமது இருப்பிடங்களில் இருந்தவாறும், தொலைதூர இடங்களில் இருந்தவாறும் இணைய வழி ஒளிபரப்புகளினூடே பாதுகாப்பாக போட்டிகளை கண்டுகளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

துனித் வெல்லலகே, ஷெவோன் டேனியல், சதீஷ் ஜெயவர்தன, செயின்ட் ஜோசப்ஸ் மற்றும் வனுஜ சஹான், டனல் ஹேமானந்தா, லஹிரு டெவட்டகே ஆகிய 6 வீரர்கள், சுற்றுலா பங்களாதேஷ் U19 அணிக்கு எதிராக விளையாடியிருப்பது இந்த ஆண்டு ஆட்டங்களுக்கு உற்சாகத்தை அளித்துள்ளது. செயின்ட் ஜோசப் அணியின் கேப்டன் துனித் வெல்லலகே, இரண்டு சுற்றுப்பயணங்களுக்கும் இலங்கை U19 கேப்டனாக நியமிக்கப்பட்டார், செயின்ட் பீட்டர்ஸின் வனுஜா சஹான் மற்றும் செயின்ட் ஜோசப்ஸின் ஷெவோன் டேனியல் ஆகியோர் இரண்டு தொடர்களிலும் வழக்கமான போட்டி வெற்றியாளர்களாக இருந்தனர். இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் விளையாடும் ஐந்து பேர், ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் U19 ஆசியக் கோப்பை மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் U19 உலகக் கோப்பைக்காக டிசம்பர் 19 ஆம் திகதி புறப்படும் இலங்கை அணியில் இடம்பிடிப்பார்கள்.

மேலும், இந்த இரண்டு கல்லூரிகளும் இலங்கை தேசிய கிரிக்கெட் அணிக்கு பல சிறந்த வீரர்களை உருவாக்கிக் கொடுத்துள்ளமையும் ஒரு சிறப்பம்சமாகும் . இலங்கையின் தற்போதைய டெஸ்ட் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, ஏஞ்சலோ மெத்யூஸ் , சமிந்த வாஸ், திசர பெரேரா, ஆஷ்லி டி சில்வா, மைக்கல் வென்டோர்ட் , ரொஷேன் சில்வா, பிரியமல் பெரேரா மற்றும் சதீர சமரவிக்ரம ஆகியோர் இலங்கை அணியில் இடம்பெற்ற புனித ஜோசப் கல்லூரி அணியை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களாவர். அவ்வாறே , புனித பீட்டர்ஸ் கல்லூரியின் றோய் டயஸ், ரொமேஷ் ரத்நாயக்க, வினோதன் ஜோன், அமல் சில்வா, ரசல் ஆர்னோல்ட், கௌஷல் லொக்கு ஆராச்சி, மலிந்த வர்ணபுர மற்றும் ஏஞ்சலோ பெரேரா ஆகியோரும் இலங்கை அணியில் இடம்பெற்ற புனித பீட்டர்ஸ் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களாவர்.

புனித ஜோசப் புனித பீட்டர்ஸ் கல்லூரிகளுக் கிடையிலான மேற்படி மாபெரும் கிரிக்கெட் போட்டியை பிரதான அனுசரனையாளர்களான டயலொக் ஆசி ஆட்டா thepapare.com மற்றும் Dialog VIU மொபைல் App மூலம் நேரலையாக ஒளிபரப்ப ஏற்பாடுகளை செய்துள்ளதுடன், மேற்படி கல்லூரிகளின் மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆதரவாளர்கள், கிரிக்கெட் அபிமானிகள் ஆகியோரின் நலன் கருதி Dialog TV யிலும் இப்போட்டி நேரடியாகக் காண்பிக்கப்படும். நலன்விரும்பிகள் மற்றும் கிரிக்கெட் அபிமானிகள் ஆகியோரும் சுகாதார நெறிமுறைகளுக்கேற்ப பாதுகாப்பான முறையில் இப்போட்டிகளை கண்டுகளிப்பதை இது உறுதி செய்வதாக அமையும்.

ஜோக்கோவிச் தடுப்பூசி போட்டுவிட்டாரா, இல்லையா?

அவுஸ்திரேலியப் பகிரங்க டென்னிஸ் போட்டியில் பங்குபெறும் விளையாட்டாளர்களில் இதுவரை யாருக்கும் தடுப்பூசிக்கான மருத்துவ விலக்கு அளிக்கப்படவில்லை என்று ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியப் பகிரங்கத்தில் கலந்துகொள்ளும் விளையாட்டாளர்கள் அனைவரும் கட்டாயம் கொவிட்19 தடுப்பூசி போட்டிருக்கவேண்டும் என்பதை அது மீண்டும் தெளிவுபடுத்தியது. போட்டிக்கான விளையாட்டாளர்கள் பட்டியலில் நட்சத்திர வீரர் நோவாக் ஜோக்கோவிச்சின் பெயர் இடம்பெற்றுள்ளது.

இருப்பினும் ஜோக்கோவிச் தடுப்பூசி போட்டுவிட்டாரா, இல்லையா என்பது குறித்து எந்த விவரமும் இன்னும் வெளியாகவில்லை. தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் போட்டியில் கலந்துகொள்ள வேண்டுமானால் தடுப்பூசிக்கான மருத்துவ விலக்குப் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் இதுவரை யாருக்கும் அந்த விலக்கு கொடுக்கப்படவில்லை என்று ஏற்பாட்டுக்குழு தெரிவித்தது. விளையாட்டாளர்கள் பட்டியலில் வீரர்கள் பெயர் இருப்பது அவர்கள் போட்டியில் கலந்துகொள்வதை உறுதி செய்யாது என்றும் அது குறிப்பிட்டது. போட்டிகளுக்கு அவுஸ்திரேலியா செல்வது குறித்து வெகு விரைவில் முடிவெடுக்கவிருப்பதாக ஜோக்கோவிச் சென்ற வாரம் கூறியிருந்தார். அவுஸ்திரேலியப் பொதுவிருதுப் போட்டி ஜனவரி 17ஆம் திகதி முதல் ஜனவரி 30ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வேன் –ஐக்கிய நாட்டு நிறுவனத் தலைவர்

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் தாம் கலந்துகொள்ளப்போவதாக ஐக்கிய நாட்டு நிறுவனத் தலைவர் அண்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுகளுக்குத் தமது அரசாங்கப் பிரதிநிதிகளை அனுப்பப்போவதில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ள நிலையில் குட்டரெஸின் அறிவிப்பு வந்துள்ளது.

அவுஸ்திரேலியா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளும் அரசதந்திர ரீதியாக விளையாட்டுகளைப் புறக்கணிக்கவிருப்பதாகத் தெரிவித்துள்ளன.

அந்த முடிவு எடுக்கப்பட்டதற்குச் சீனா புரிந்த மனித உரிமைக் குற்றங்களே காரணம் என்று அந்த 4 நாடுகளும் குறிப்பிட்டன. பீஜிங் அந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது. இந்நிலையில், விளையாட்டுகளைப் புறக்கணிக்கத் திட்டம் ஏதுமில்லை என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

அரசாங்கப் பிரதிநிதிகளை அனுப்பாமல் இருப்பது அர்த்தமில்லாத ஒரு செயல் என்று ரஷ்யா தெரிவித்தது.

விளையாட்டுகளுக்குத் தாம் செல்லவிருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார்.

டாக்கா சர்வதேச மரதனில் பங்குபற்றும் மலையக வீரர்கள்

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மான் அழைப்பு சர்வதேச மரதன் ஓட்டப் போட்டிக்கு இலங்கையைச் சேர்ந்த இரண்டு ஆண் வீரர்களும், இரண்டு பெண் வீராங்கனைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இதில் அண்மைக்காலமாக தேசிய மட்ட அரை மரதன் மற்றும் நீண்ட தூர ஓட்டப் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற மலையக வீரர்களான முத்துசாமி சிவராஜன் மற்றும் வேலு கிரிஷாந்தினி ஆகிய இருவரும் பங்குபற்றவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

முன்னதாக கடந்த மே மாதம் கதிர்காமத்தில் நடைபெற்ற 46 ஆவது தேசிய விளையாட்டு விழா மரதன் ஓட்டத்தில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்ற வீரர்களை பங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மான் அழைப்பு சர்வதேச மரதன் ஓட்டப் போட்டியில் பங்கேற்கச் செய்ய இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, டாக்கா மரதன் ஓட்டப் போட்டிக்கு ஆண்கள் பிரிவில் பரிந்துரைக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த முத்துசாமி சிவராஜன், கதிர்காமத்தில் நடைபெற்ற மரதன் போட்டியை 2 மணித்தியாலம் 29 நிமிடங்கள் 29 செக்கன்களில் நிறைவுசெய்து தங்கப் பதக்கம் வென்றார்.

ஆரம்பத்தில் நீண்ட தூர ஓட்டப் போட்டிகளில் மாத்திரம் பங்கேற்று வந்த அவர், முதல் முறையாக மரதன் ஓட்டத்தில் பங்கேற்று தங்கப் பதக்கம் வென்று அசத்தினார்.

31 வயதான சிவராஜன், அண்மையில் நிறைவுக்கு வந்த தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றரில் 4 ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

46 ஆவது தேசிய விளையாட்டு விழா பெண்களுக்கான மரதன் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற வேலு கிரிஷாந்தினியும் இலங்கை குழாத்தில் இடம் பெற்றுள்ளார். குறித்த போட்டியை அவர் 2 மணித்தியாலயம் 55 நிமிடங்கள் 30 செக்கன்களில் நிறைவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

33 வயதான வேலு கிரிஷாந்தினி, அனுபவம் வாய்ந்த மரதன் ஓட்ட வீராங்கனை ஆவார், இறுதியாக அவர் 2019 ஆம் ஆண்டில் சீனா – மெக்காவு நாட்டில் நடைபெற்ற மரதன் போட்டியில் பங்குபற்றி 17 ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

2017 ஆம் ஆண்டில் டுபாய் மற்றும் சீனாவின் கும்மின் நகரில் நடைபெற்ற இரண்டு சர்வதேச மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றிய அவர், முறையே 15 மற்றும் 4 ஆவது இடங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நிறைவுக்கு வந்த தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றரில் வெண்கலப் பதக்கம் வென்ற வேலு, கிரிஷாந்தினி, 5 ஆயிரம் மீட்டரில் 4 ஆவது இடத்தைப் பிடித்தார். டாக்கா மரதன் போட்டியில் சிவராஜன் மற்றும் வேலு கிரிஷாந்தினியுடன் திஸ்ஸ குணசேகர, வத்ஸலா ஹேரத் ஆகிய இரண்டு வீரர்களும் பங்கேற்கவுள்ளனர்.

டாக்கா மரதன் போட்டியில் பங்கேற்கும் இலங்கை மரதன் அணியின் பயிற்சியாளராக சஜித் ஜெயலால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், முகாமையாளராக, என். ஏ.டி. ஜயசிங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷின் தேச பிதாவான முஜிபுர் ரஹ்மானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு குறைந்த எண்ணிக்கையிலான வீரர்களின் பங்குபற்றலுடன் இந்த மரதன் போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டெக்லிங் டெக்னோலொஜி கெம்பஸ் நிறுவனத்தின் 6வது வருட நிறைவை முன்னிட்டு அந்நிறுவனத்தின் பூரண அனுசரணையில் சாய்ந்தமருது ஒஸ்மானியன் விளையாட்டுக் கழகத்திற்கான கிரிக்கெட் சீருடைகள் வடிவமைக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இன் நிகழ்வின் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தாய்ஸீர் பஷீர் பிரதம அதிதியாகவும், நிறுவனத்தின் முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சர்ஜுன் விசேட அதிதியாகவும், பாடசாலையின் அதிபர் முஹமட் சைபுதீன் கௌரவ அதிதியாகவும் மற்றும் பொலிகிளாஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் ஒஸ்மானியன் விளையாட்டுக்கழக ஆலோசகர்கள், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். *(படங்கள்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசெம்பர் மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

மஞ்சரி களஞ்சியம்

தினகரன் வாரமஞ்சரி

வாழ்வாதாரமா சேதாரமா 202

தமிழ்க் கவி பேசுகின்றார்

திமிரை வளர்த்தால் நிமிர்ந்து வாழலாம்

எதிர்ப்பைக் காட்டுவது என்பது அவ்வளவு சுலபமானதல்ல ஆனால் அது கொஞ்சம் எமது திமிரையும் ஆங்காரத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறதால் எனக்குப் பிடிக்கிறது. எனக்கென்ன எனக்கு... எல்லோருக்குமே அது பிடித்த விசயம்தான்.

தனக்கு ஒவ்வாத எதையும் யாரும் எதுவும் ஏற்க மறுத்தேயாவது இயற்கை. ஒரு குழந்தைக்கு விரும்பாத உணவையோ விரும்பாத நபரையோ உறவாக்க முயலும்போது அது அழுது ஆர்ப்பாட்டம் செய்து தன் எதிர்ப்பைக் காட்டுகிறது. ஒரு நாய்க்குட்டி கூட தனது இடமல்லாத ஒரு இடத்துக்கு செல்வதை மறுத்து ஓலமிடுகிறது. தொடர்ச்சியாக பல நாட்கள் வாள் வாளென்று கத்தி அயலவர்களின் தூக்கத்தையும் சேர்த்தே கொல்கிறது. நாங்கள் சிந்திக்க தெரிந்தவர்கள். நமது துயரங்களுக் கெல்லாம் நாமே காரண கர்த்தாக்கள். 'தீதும் நன்றும் பிறர் தரவ வாரா' அப்படிப் பார்த்தால் எமது துயரங்களும் மகிழ்வுகளும் நாமே உருவாக்கி அனுபவிக்கிறோமா? காரணமில்லாமல் காரியம் இல்லை.

உயிர் வாழ்தல் என்பதும் அவ்வாறே. எந்த உயிர்வாழ் நகரும் உயிருள்ள இனங்களும் நகராமல் நிற்கும் தாவரங்களாயினும், தமக்கு ஆபத்து நேரும்போது, உள்ளூர நடுங்குகின்றன.. வாழ்க்கை கேள்விக்குறியாக நேரும் போது தம்மால் அதை சமாளிக்க முடியாத போது யாரை நோவது என்று தெரியாமல் மக்கள் அந்தரிக்கிறார்கள். வறுமை, எதிர் கொள்ள முடியாத வறுமை பெரும் பணம் படைத்தோரையும் சூழ்கிறது. ஒரு ஏழை தன்னால் இயலாத போது இரந்தோ கடன் பெற்றோ வாழ்வது சாத்தியமாகிறது.

ஆனால் நடுத்தரவர்க்கம் என்று தம்மை வரித்துக் கொண்டு வாழ்கிற ஒரு குடும்பம் சமூதாயத்தில் தனது அந்தஸ்தை விட்டுத்தர முடியாமல் பொழுது போக்காக ஒன்லைனில் சாப்பாட்டுக் கடைகளில் உணவை கொள்வனவு செய்வதும் நடக்கிறது. லோன் போட்டு வீடுகட்டவும், லீசிங்கில ஒரு வாகனம் வாங்கவும். அடிக்கடி வெளியே போக ரெண்டு ஸ்கூட்டி வைத்திருப்பதும், அட ஆமாம். இப்போதெல்லாம் வீட்டுக்கு வீடு விளக்குமாறு கிடப்பது போல ஒவ்வொரு வீட்டிலும் தேவையோ இல்லையோ ஒரு உந்துருளி வைத்திருப்பது வழக்கமாகி வருகிறது. எரிபொருள் விலை ஏறிவிட்டது.

நான் பார்க்கிறேன் நூறு மீட்டர் தொலைவிலுள்ள உணவு விடுதியில் ஒன்லைனில் உணவு பதிவு செய்து வீட்டுக்கு வரவழைத்து சாப்பிடுவதும் மாதம் முடிவுக்கு வரும்போது கைச்செலவுக்கே பணமில்லாமல் திண்டாடுவதும் நடக்கிறது. ஒரு மாதத்தில் தமது அத்தியாவசியமற்ற செலவு பல ஆயிரங்களைக் கடக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அந்த செலவை அவர்களால் நிறுத்த முடியவில்லை. சத்தான உணவுகளை விடுத்து விரைந்து தயாரிக்கும் உணவுகளை உட்கொள்வதால் அவர்களுக்கு அடிக்கடி நோய் வரத்தான் வருகிறது. குழந்தைகள் உட்பட இந்த சிறு சிறு நோய்கள் தலைவலி, காய்ச்சல், மேல் அசதி என்ற போர்வைக்குள் முடங்குகிறது. இப்படி வரும் சிறு நோய்களும் தனியார் மருத்துவமனைகளுக்கு வருவாயை பெற்றுத் தருகிறது. சுக்கு, மிளகு, திப்பிலி எல்லாம் மருந்தா? ஒரு வைத்தியரிடம் வாங்கிய குளிசைகளை கொண்டு வந்து காட்டினால். அரசாங்க மருத்துவ மனையில் அதே நோய்க்கென வழங்கிய அதே குளிசைகள். .நான் இலவசமாக வாங்கியவற்றை அவர் தனியார் மருத்துவ மனையில் ஆயிரத்து நூறு ரூபாவுக்கு வாங்கியிருந்தனர். இது வெறுமனே தமது அந்தஸ்தை காட்டிக் கொள்வதற்கான செலவுதான். ஏனெனில் இதே வைத்தியர்கள்தான் அரசாங்க வைத்தியசாலையிலும் கடமையாற்றுகிறார்கள்.

மிதிவண்டி ஓடினால் என்ன. நாம் போர்க்காலங்களில் வவுனியாவிலிருந்து மன்னார் யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கான தொலை தூரப் பயணங்களைக்கூட மிதி வண்டியில்தானே செய்தோம். எரிபொருள் தேவை இல்லை. யாராய் இருந்தாலும் அவசர தேவைக்கொன ஒரு காத்தடிக்கும் கருவி மிதிவண்டி பஞ்சரானால் ஓட்டிக்கொள்ள ரபர் சொலிசன் போன்றவற்றையும் கையோடு கொண்டு பயணிப்பார்கள். காட்டுவழிகள்தான் பிரதான வீதிகளில் பயணம் செய்வது உயிராபத்தான காலம். மிதிவண்டிகளை பெருங்காட்டின் கீழ் வானமே தெரியாத வழிகளில் ஓட்டிச் செல்வோம். தேநீருக்கான உபகரணங்களும் கையில் இருக்கும் ஒரு உணவுப் பொதி மட்டும் கட்டி எடுப்போம். வழியில் உணவு விடுதிகள் கிடையாது. எதிர்ப்படும் வீடுகளில்தான் தண்ணீரை பெற வேண்டியிருக்கும். அல்லது குளமும் வாய்க்காலும் கோவில் வெளிகளும்தான். அப்போதெல்லாம் நாம் இந்த சந்தைகளை எங்கே கண்டோம். மக்கள் கூடும் இடங்களெல்லாம் குண்டு வீசும் இலக்குகளாக இருந்த காலம். நாம் வாழ்ந்தோம். ஒவ்வொருவரும் அடுத்தவருக்கு சுமையில்லாமல் வாழ்ந்தோம். கடன் கொடுப்பாரும் இல்லை. வாங்குவாரும் இல்லை. இன்று கடன் வழங்க எத்தனை நிறுவனங்கள். கடனில்லாத குடும்பங்கள் எதாவது தேடிப்பிடித்தாலும் விரல் விட்டு எண்ணுமளவில்தான் இருக்கிறது.

இந்த நிலையில் இப்போது எகிறிவரும் வாழ்க்கைச் செல்வுகளை விளையாட்டாகக்கூட விபரித்தால் யாரும் நம்ப வேண்டுமே. கத்தரிக்காய் முந்நூறு ரூபா பயற்றங்காய் முந்நூறு ரூபா. மீன் இறைச்சி என்பவற்றுக்கு கட்டுப்பாட்டு விலை இருக்கிறதாக தெரியவில்லை. அவை அன்றாட வரவை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது. குளத்து மீன்கள் திலாப்பியாவைத் தவிர ஏனையவை அழிந்து விட்டதோ என்று எனக்கொரு சந்தேகம். அந்த திலாப்பியா (யப்பான்) வும் இப்ப கடல் மீன்களளவுக்கு விலை ஏறிக்கிடக்கிறது.

'ஏம்பா?'

'போக்குவரத்து சிலவும் நாட்கூலியும் கூடிப் போச்சே'

மண் சட்டிகளின் விலையே அலுமினிய சட்டியளவுக்கு வந்திருக்கிறது. கேட்டால் மனித உழைப்பின் பெறுமதி அதிகரித்திருக்கிறது. மண்ணால் சக்கரம் வனைந்து கையால் சுழற்றி உருவான மண் பாத்திரங்கள் இப்போது யந்திரங்களின் சுழற்சியால் இயக்கப்படுகிறது. எனவே எரிபொருள் விலையும் அதன் மீது தாக்கம் செலுத்துகிறது. நாட்டில் ஆங்காங்கே போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எதற்கு சம்பள உயர்வு கோரித்தான். பாவப்பட்ட அரசாங்கம் சம்பள உயர்வை வழங்கும் போது அதி பாவப்பட்ட மக்கள் இப்போதுள்ள குறைந்தளவு சம்பளத்தில் வாங்கிய பொருட்களைக்கூட வாங்க முடியாது. போராட்டங்களெல்லாம் புஸ்வாணமாகிவிடும் அவ்வளவுதான் சொல்வேன்.

இப்போதுள்ள நிலைக்கு எதிராக நாங்கள் போராடத்தான் வேண்டும் அந்த போராட்டம், எமது வளங்களை மீட்டெடுப்பதாக அமைய வேண்டும். அவசியமற்ற செலவுகளை குறைப்பதாக அமைய வேண்டும். சிக்கனமாக வாழப் பழகுவதாக அமையவேண்டும். நான் வீட்டுத் தோட்டம் போட்டிருக்கிறேன். அப்படியே கோழிகளை வளர்க்கிறேன். அப்படியே தென்னை மா பலா என்பவற்றையும் நட்டிருக்கிறேன். நானே சமைத்து உண்கிறேன் அந்த ஆணவமும் திமிரும் எனக்கு சின்னவயதிலேயே என் தந்தையால் எனக்கு பயிற்றப்பட்டவைதான் முழுக்க முழுக்க மூலிகை உணவில் வளர்ந்த உடல். அந்த திமிரும் ஆணவமும் எனக்குண்டு. அதை யார் சொன்னாலும் விடமாட்டேன். எந்த நிலைக் கெதிராகவும் நான் போராடுவேன் என்ற திமிரை எல்லோரும் வளர்த்துக் கொண்டால் நிமிர்ந்து வாழ முடியும் அவ்வளவுதான் சொல்வேன்.

குறுங்குறிப்பகள்

கே.எஸ்.சிவகுமாரன்
Sivakumaranks55@gmail.com

பிறமொழிகளில் இலக்கியம் கண்ணுக்குப் புலனாகாத மனிதன்

INVISIBLEMAN

அன்றைய காலத்தில் (அதாவது ஆங்கிலேயர் நம்மை ஆட்சி செலுத்திய வேளையில்) ஆங்கில மொழி தெரிந்த வாசகர்களும், எழுத்தாளர்களும் H.G WELLS என்ற ஆங்கிலேய எழுத்தாளர் எழுதிய புனைகதைகளை வாசித்திருப்பார்கள்.

நானும் அத்தகைய விஞ்ஞான, புனைவுகளைப் படித்து இன்புற்றேன். வளரிளம் பருவத்திலிருந்தே எனது அனுபவமும், அறிவும் விசாலமாக விருத்தியடையத் தொடங்கியது என்பேன்.

எனது பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் ஆங்கில இலக்கியத்தில் ஒரு பாடமான ஒரு நூல் இருந்தது. அதன் பெயரும் INVISIBLEMAN தான். அதனை எழுதியவர் கறுப்பு நிற அமெரிக்கராவர்.

அவர் பெயர் RALF RICHARSON (ரால்ப் ரிச்சர்ட்சன்) அந்த நாவல் விவரணம் சார்ந்த, வீரதீரச் செயல் கொண்ட, விறுவிறுப்பான நாவல், நல்ல ஆங்கிலத்தில் அதியுன்னத தேர்த்தியுடன், இன – உறவுகள் தொடர்பாக எழுதப்பட்டது.

இந்த நாவல் எழுதப்பட்ட 1952க்குப் பின் பல மாற்றங்கள் இவ்வுலகில் இடம் பெற்றபோதிலும், இந்நாவலின் எழுத்து நடை கவினுற அமைந்துள்ளது.

இந்த நாவலின் நாயகனுக்குப் பெயர் எதுவும் கிடையாது. அவன் ஓர் இளம் பையன். திறனாற்றல் நிரம்பிய இலட்சியவாதி அவன் நிறமோ கருமை. அவன் வளரும் பருவத்திலேயே, வாழ்க்கையில் வெறுப்புள்ளவனாக வளர்ந்து விட்டான். நிறத்தவர்கள், வெள்ளையர், ஏனையோர் மீது வெறுப்புக் கொண்டவனாகத் தன்னை ஆக்கிக் கொண்டான் எனலாம்.

நியூயோர்க் நகரில், கைவிடப்பட்ட கட்டடத்தின் கீழ் அடிவாரத்தை அவன் தனது தங்குமிடமாக உருவாக்கிக் கொண்டான். ஆயினும், அவன் தனது இருப்பிடம் எல்லோருக்கும் தெரியவேண்டுமென்பதற்காக, 1000 மின்விளக்குகளை போட்டு வைத்திருந்தான். அவன் தன்னை ஒரு பாதாள உலக மனிதனாகக் கருதிக் கொண்டான்.

கதையை மாத்திரம் வாசிக்காத்தீர்கள். அதனை, நீங்கள் படிக்கும் பொழுது, கதை மாத்திரமன்றி அது கூறும் சமூகப் பிரச்சினையையும் உற்றுக் கவனியுங்கள்.

இந்த நாவல் போன்ற இன்னுமொரு நாவலும் என் நினைவிற்கு வருகிறது. அதனை எழுதியவர் ஏச்.ஜி. வெல்ஸ் போலஞர் என்ற ஆங்கிலேயர் . அவரது படைப்பின் பெயர் The Third man (மூன்றாவது மனிதன்). இந்த நாவலும் அற்புதமான படமாகப் பிடிக்கப்பட்டது. நெறியாளர் பிரபல நடிகரும் நெறியாளருமாகிய Orson welles (ஓர்ஸன் வெல்ஸ்)

THE INVISIBLE MAN, THE THIRD MAN இரண்டிலும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. உதாரணமாக, அடித்தள வாழ்க்கை முறை:

எனவே, இந்த , இரண்டு நாவல்களையும் ஆங்கிலத்தில் படித்துப் பாருங்ள். உங்கள் வாசிப்பு திறனை மேலும் அதிகரிக்கும்.

சுவிற்சர்லாந்து உளவியலாளரும், கல்விமானுமாகிய J.Piaget (ஜே. பியாஜே) 1896இல் பிறந்தவர். அவருடைய திறனாய்வு முறையை உள்வாங்கி, பேராசிரியர் சபா. ஜெயராசா அறிமுகப்படுத்தியுள்ளார். பின்னவரின் நூல், 1987இல் வெளியாகியுள்ளது.

மூலநூலாசிரியர் மத்தியதர வகுப்புப் பிள்ளைகளை மனதில் வைத்து எழுதியிருப்பினும் மற்றைய வகுப்பினருக்கும் பொருத்தமாக எழுத முன்னைத்துள்ளார் என்பது நமது பேராசிரியரின் கணிப்பு. பேராசிரியர் ஜெயராசாவின் சமீபத்திய நூல்களும், மேடைப்பேச்சுகளும் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தெளிவாகவும், இலகுபடுத்தியும் வெளிப்படுத்தப்படுவதனால், என்போன்றவர்கள் நிறையப் பயன்பெறுகிறோம்.

CHANNEL 3
Vol No 2

இது ஆங்கிலத்தில் வெளிவரும் இலங்கையர் படைப்புகளுக்கான ஓர் ஏடு.

கமலா விஜேரத்ன, குறிப்பிட்ட இந்த இதழின் ஆசிரியர். ஆங்கிலத்தில் எழுதும் முன்னணிக் கவிஞர்களுள் இவரும் ஒருவர். இந்த இதழில் 12 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

புண்யகாந்தி விஜேரத்னவின் கவிதைகளும் அவற்றுள் ஒன்று. எளிமையும், அடங்கிய பொருட் செறிவும் அவற்றில் காணப்படும். அவர் புனைகதையாளர் என்றே பெரிதும் அறியப்பட்டவர். அதனால், சொற்ப கவிதைகளையும் அவர் எழுதியுள்ளார். ..... உணர்ச்சிப் பிழம்புகளையும், சிந்தனைகளையும் அவர் கவிதைகளில் நாம் காணமுடியும்.

“மரணம் ஆறொன்றில் அலைக்கழிக்கிறது. பருவக்காற்று மழையினால் வீங்கியுள்ளது. மரணம் என்பது அம்மணமானது. இனம் காணக்கூடியதல்ல.

"வாழும் உயிர்களுக்கு ஓர் எச்சரிக்கை பாலமொன்றிலிருந்து பார்க்கும் பொழுது"

"ஒரு ஞாயிற்றுக் கிழமை பிற்பகலில்" பார்வதி அரசநாயகத்தின் அங்கக் கவிதை, அவுஸ்திரேலியாவில், வெளியே நஞ்சூட்டப்பட்ட காகங்கள் மரணிக்கும் சூழ்நிலையில்,

உள்ளே விருந்து நடக்கிறது என்பதை முரண் நிகழ்வாக எடுத்துக்காட்டுகிறார்.

பார்வதியின் தாயாரான ஜீன் அரசநாயகமும், கதை நீண்ட, கவிதையில், அவுஸ்திரேலியாவுக்கு குடியேறுவதும்,பின்பு அங்கிருந்து, இங்கு வருவதுமான சித்திரத்தை தனது அங்கத தோரணையில் காட்டி நிற்கிறார்.

இந்த இதழிலுள்ள ஏனைய விடயங்கள் தொடர்பாக,The Island பத்திரிகையில் 11. 04. 1990 இல் நான் எழுதியுள்ளேன்.

நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

ஒளவியம்

அது ஒரு வினோதமான அலாரம்தான்; இருந்திருந்துவிட்டு, ஒலி காதுகளில் அலை மோதக் கண்விழித்தல் என்பதும் ஓர் அற்புதம் நிறைந்ததுதான்; அயல் வாசிகளின் கொதுகொதுப்பு, எல்லாக் காலைகளிலும் வீதிச் சண்டை என்ற பெயரில் கொப்பளித்துத் தெறிக்கும் கடுப்பம் கூடிய கெட்ட வார்த்தைகளின் கூச்சல் சிலருக்குச் சங்கடம்; பலருக்குப் பழகிப்போன மழைச் சாரல்; தீ'க்கு முகத்தைக் காட்டாமல் திரும்பிக் கொண்டே கடப்பதுபோல், அந்த இடத்தைவிட்டும் நகர்வதில், வேகத்தை அதிகப்படுத்தி அவசரம் காட்டும் மனிதர்களும் அன்று வாழ்ந்திருக்கிறார்கள்...

பொருட்களைத் தூக்கிவந்து வெளியில் போட்டு எரிப்பதிலும் சுவரை ஒட்டி அடுக்கி வைப்பதிலும் குழுவாக இயங்கி வாய்த் தர்க்கத்தில் வசை மாரிபொழியும் நபர்களைப் பாடசாலை போகும் காலங்களில் கண்டிருக்கிறேன்; எப்போதும் அங்கு முழுக்கப் பெண்களையும் பெண் உறுப்புகளையும் முதன்மைப் படுத்தியே மோதல்கள் தொடரும்; கூடிக் கிடந்தவர்களின் கண்களில் ஒருவித ஆர்வமும் பின் அர்த்த பூர்வமான சலிப்பும் மாறி மாறி வெளிப்படும்; அந்த ஓசை கேட்டுக் குழுமிய பெண்கள் முகம் வெலவெலத்து மறுபுறம் திரும்பி நிற்பார்கள்; ஓரிருவர் துணிவோடு "நாறப் பயலுகள், "சாளவாய் நாம்பனுகள்", பிச்சைப் புண்ணணுகள்.." என்று நேரே பார்த்துத் திட்டவும் செய்வார்கள்...

மாறிப் பேசும் ஆண்கள் பெண்களின் நெஞ்சுக்கு நேரே கை நீட்டி," அறுப்பன் ஓ!" என்பார்கள்; பால் கொடுத்த உறுப்பை எதற்காக அறுக்க வேண்டும்? அவை என்ன பாவம் செய்தன? பிறப்புக் கொடுத்த கருப்பையை அறுத்தெறியச் சாத்தியமில்லை என்பதாலா? குளிப்பாட்டிய, மலம் துடைத்த, எண்ணெய் வைத்துத் தலை வாரிய, சோறு சமைத்து ஊட்டிய கரங்களை வெட்டி இருக்கலாம் அல்லவா? முத்தம் கொடுத்த உதடுகளை, உச்சிமுகர்ந்த நாசியைத் துண்டித்திருக்கலாமே? பெண்ணின் மார்பகங்கள் மீது மனிதனுக்கு இத்தனை பகை ஏன் வந்து சேர்ந்தது என்று தெரியவில்லை; இதனை முன்னிறுத்தி நமது கிராமங்களிலும் நகரங்களிலும் ஒட்டப்பட்டிருக்கும் திரைப்படச் சுவரொட்டிகளில் முலைப்பாகம் கிழிக்கப்பட்டோ, சேதப்படுத்தப்பட்டோ, கரி பூசப்பட்டோ காட்சி தருகின்றன...

பெண்களுக்குள்ளும் சண்டைகள் மூண்டன; தமக்குள் மல்லுப் பொருதும்போது, எதிர் தரப்புப் பெண்ணைக் கூசச் செய்யும் மொழிப் பயன்பாடுகள் உண்டு; "வாடி என் சக்களத்தி" என்பது; அதாவது, எனது கணவனுக்கு மற்றுமொரு பெண்ணாக இருப்பவளே என்று அர்த்தம் கொண்டனர்; மற்றொன்று, "கொண்டையை அறுத்திருவேன்" என்பது; இது மானபங்கப் படுத்துவதன் முகாந்திரம்; இன்னொன்று "வாறா பாரு, ஆனைத்தலை போல முலையை ஆட்டிகிட்டு" என்று பெருந் தனங்கள் உடையவளைக் கேவலப்படுத்துவது; இது கிராமப் புறங்களில் வாழும் பெண்களின் அறியாமை மூடத் தனம் எனச் சமாதானம் சொல்லலாம்தான்; என்றாலும் நமக்குள் பதிந்துள்ள நாட்டுப் பாடல்களும் இலக்கிய இதிகாசங்களும் இதனைப் பேசாமலில்லையே; பட்டினத்தடிகள் "கறந்த இடத்தை நாடுதே கண்" என்கிறார்; உமறுப் புலவர் பாடிய சீராப்புராணம், "வார் அறுத்து எழுந்து வீங்கும் வன முலை மடந்தையும்" என்கிறது...

முதலில் அகலமான சால்வை ஒன்றை இடது தோள் மீது சார்த்திக் கொள்வர்; குழந்தையை இடது மார்பில் அணைத்துப் போர்வையால் மூடி மேலாடையைத் தூக்கி பால் கொடுக்கத் துவங்குவார்கள்; பாலூட்டத் தோதான உடை, பழைய ரவிக்கையும் சேலையும்தான்; தாய் மாருக்கு இது தெரியும்; பாலூட்டும் பாசமுள்ள உறுப்பு என்று புரிந்து கொள்ளாமல் தலை நீட்டி யாராவது பார்த்து விட்டால் அவனைக் கண்டு சரியான "முலை கொத்திப் பாம்பு" என்று திமிறுவார்கள்; கிறுகிறுப்புக்கு ஆளாகிச் சிலர் வதனம், நாசி, கண்கள், நெற்றி, இடை, கால்கள் என அவற்றில் குறை வைத்து ஆள் மன வஞ்சத்தில் எதிர் தரப்புப் பெண்களைக் குலையச் செய்யும் புனைவுகளுடன் முன் நிற்பர்....

வெற்றுடலில் அலட்சியமாகச் சுற்றி விடப்பட்டிருந்த பழைய சாறமோடு துள்ளிப் பாய்ந்தார் வாணம் சுட்டார்; மர வேர்கள்போல் கைகளில் நரம்புகள் படர்ந்து தெரிந்தன; நரையோடிய ரோமங்கள் மார்போடு ஒட்டிக் கிடந்து வயோதிகத்தைக் காட்டின; விரியத் திறந்திருந்த கண்கள் அர்த்தமற்று வெறித்திருந்தன; பக்கத்து வீட்டுக் கோழி காணாமல் போனதற்கு, , "இவர்தான் அறுத்து உண்டிருக்கிறார்" என்ற குற்றச்சாட்டுப் பலத்ததை உள்ளுணர்வால் விளங்கிக் கொண்டவர் கிளம்புகிறார்; இவரோடு மல்லுக்கு நிற்க வேலிக் காலுக்குள் ஒருவர் தயாராகி வருகிறார் என்று தெரிந்ததும் அவர் வாயிலிருந்து அழுகிய புழுப்போல வார்த்தைகள் வந்து வெளியே விழுந்தன; மனைவி கதவைச் சாத்திக் கொண்டு கத்தினாள்; ஊர் கூடிப் புதினம் பார்க்க ஒரு பகல் முழுக்க இந்தச் சண்டை தொடரும்...

எங்கள் வண்டுப் பெரியப்பாவின் அறை எந்நேரமும் சாத்தியே கிடக்கும்; முனகல் மட்டும் மிகத் தெளிவாக ஒலித்துக் கொண்டிருக்கும்; எல்லாப் பொழுதுகளிலும் வீட்டுக் குள்ளேயே தன்னை இருத்திக் கொண்டு நாள் முழுக்க யாரையாவது சபித்துக் கொண்டும் திட்டிக் கொண்டும் ஒளவிய வார்த்தைகளைப் பொரிந்து தள்ளுவார்...

இரவில் எல்லோரும் வரிசையாகப் படுத்து ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது, சீனத்துப் பெரியம்மாவுடன் போராடிக் கொண்டு தூஷண வார்த்தைகளை அள்ளி இறைப்பார்; வாப்பா ஒருக்களித்துப் படுத்தபடி குறட்டை ஒலியில் தொலைந்திருக்கும் தருணத்தில் எனக்கு விழிப்புத் தட்டி விடும்: எழுந்ததும் வீட்டின் கூரையை வெறித்துக் கொண்டு வண்டுப் பெரியப்பாவின் இரவு இராவலைக் கேட்டுக் கொண்டிருப்பேன்; "பகல், கள்ளன் வந்து போறானே; என்ன சொன்னாய்.." என்பார்; அவர் கள்ளன் என்று சொல்வது, கடன் காரனைத்தான் என்பது சீனத்துப் பெரியம்மாவுக்கு நன்றாகவே தெரியும்; "அவருக்கு நரம்புத் தளர்ச்சி பேச்சு வராது.." என்று பதிவு செய்து வைத்த வானொலிபோல சொல்லிக் கொண்டிருப்பார்;

சுருட்டை எரித்து வாயில் வைத்து ஒரு இழுவை இழுத்துவிட்டு, வேலி ஓரங்களுக்கு காலால் மண் சாத்திக் கொண்டிருப்பார் சங்கிலியர்; சுருட்டுத் தணலாகிப் புகைந்து பழுப்பாகி இருப்பதை அறியாதவர்போல் கையைப் பின்னிழுத்து வேலைகளோடு ஊறியிருப்பார்; சுருட்டின் நுனி அவரின் சாரனின் பின்புறத்தை நோக்கி வருவதைக் கண்டதும் கையைத் தட்டி விட்டு ஓடியது இன்னும் மறக்காமல் நினைவிருக்கிறது; சுருட்டு கீழே விழுந்ததும் எதற்கென்று புரியாமல் சொல்லச் சொல்ல மிரட்டிக் கொண்டு வருவார்...

சங்கிலியருக்கு நிறையத் தென்னை மரங்கள் அவர் வீட்டைச் சுற்றி நின்றன; அவற்றின் வட்டுகளில் காகங்கள் அலகில் பற்றிக் கொண்டுவரும் மீன்களைக் கால்களுக்கிடையே வைத்து வயிற்றைக் கிழித்துக் குடலை வெளியே இழுத்துப் போடும்போது வயிற்றைப் புரட்டும்; கையில் சிக்கிய கல்லை எடுத்து எறிந்ததும் பறப்பதுபோல் பாவனை காட்டி, ஒரு வளையம் அடித்துவிட்டு தத்தித் தத்தித் மீளவும் வந்து மீனின் பிரிந்த பாகத்தைக் கனக்குப் பார்க்கும்; இப்படித்தான் நண்பர்களுடன் சேர்ந்திருந்த ஒரு நாளில், எறிந்த கல் தரையை அடையவும் சங்கிலியர் வரவும் சரியாகயிருந்தது; அவருடைய வழுக்குத் தலை தப்பிற்று என்றுதான் எண்ணினோம்; இல்லை; அவர் புட்டுப் புட்டு வைக்கும் செய்யுள்களில் அட்சரம் சுத்தமாவே வந்துவிழுந்தன; ஐந்தாறு அறுப்பு வசனங்களுடன் வசவுகளும் கேட்டன; "ஹராமிகள், ஹராமிகள் உம்மா வாப்பா அதவா வளக்கல்ல"....

சாயங்கால நேரமாயிற்று நான்கு மணி வாக்கில் எனக்குத் தூக்கம் தெளிந்தது; கண் விழித்தபோது எவரோ கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தது போலிருந்தது; சட்டென்று எழுந்து பார்த்தால் எதிரில் சங்கிலியர் அழுக்கடைந்த உடுப்புகளுடன் இடுப்பில் மாற்றுத் துண்டைச் சுற்றிக் கொண்டு நின்றார்; குனிந்து வளைந்த இடுப்பு, வாரிவிடப்படாத தலை வெயிலில் அலைந்துவிட்டு வந்தார் போலிருக்கிறது; ஏன் வந்தாரென்று யாருமே கேட்கவில்லை; விஷயம் புரிந்தவர்கள்போல் வீட்டார் நின்றிருந்தனர்; சீலையால் தலயில் ஒரு கட்டுப் போட்டிருந்தார்; எனக்கென்றால் உடம்பெல்லாம் வியர்வை ஒழுகியது; "உருப்படாத பயலுகள்; அக்கச்சாட கொல்லையில எறியுறானே.." ஆனாலும் அந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு என்னையே ஒரு கணம் உற்றுப் பார்த்தார்; துண்டை உசத்திக் காலை நீட்டி அருவருப்பு மிகைக்க "அவனுகள்ர உறுப்பு இருக்காது" என்றார்; விரிந்த கால்களுக்கிடையே அப்படியே தெரிந்தது அவரின் பத்திய சுருட்டும்; கோப்பி வறுத்த ஓடும்; அதில் ஒரு உதை கொடுத்துவிட்டு, "உலுசுருவால் போடாத கிழவா.." என்று கத்திவிட்டு வெளியே ஓட, முதலில் ஒரு வலுவான உடலை அன்று நான் அடைந்திருக்கவில்லை.

'Just Like Mom' சமையல் சம்பியனுக்கு மகுடம் சூட்டிய சிங்கர்

சிங்கரினால் இவ்வருடம் அன்னையர் தினத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட 'Just Like Mom' (அம்மாவைப் போலவே) ஊக்குவிப்பு பிரசார நிகழ்வின் இரண்டாம் கட்ட சமையல் போட்டியின் இறுதிப் போட்டி சமீபத்தில் நிறைவடைந்திருந்தது. சமையல் போட்டியின் பங்கேற்பாளர்களில், Labu Kola Pirawuma (பூசணி இலை கூட்டு) எனும் உணவைத் தயாரித்த ச்சிளி நுவரபகே சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு, பெறுமதியான தங்க நாணயத்தைப் பரிசாகப் பெற்றார். 'Just Like Mom' பிரசாரமானது, தாய்மார்கள் சமைக்கும் உணவுகளில் தங்களுக்குப் பிடித்த உணவுகளை தனியாக தயாரித்து, தங்கள் தாய்மார்களுக்கு அன்புடன் பரிமாறும் மறக்க முடியாத அனுபவத்தை வழங்குவதற்காக, நாடு முழுவதும் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. சிங்கர் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஷனில் பெரேரா இது தொடர்பில் தெரிவிக்கையில், "நுகர்வோர் கொள்வனவு பொருட்கள் மற்றும் உபகரணங்களின் சந்தையில் முன்னணியில் உள்ள நாம், எமது தயாரிப்புகளை சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் என்பவற்றிற்கு அப்பால், எமது நுகர்வோருடன் தொடர்பைப் பேண வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளோம். அந்த வகையில் இவ்வருடம் நாம் நடாத்திய அன்னையர் தின நிகழ்வின் ஒரு அங்கமாக, நாம் இளைஞர், யுவதிகளை அணுகி, தனித்துவம் வாய்ந்த சமையல் அனுபவத்தை உருவாக்கவும், அவர்களின் தாய்மாருக்காக சமைக்க அவர்களுக்கு வாய்ப்பளிக்கவுமான சந்தர்ப்பத்தை வழங்கினோம். சமையல் என வரும்போது குடும்பங்களில் அன்பைப் பரிமாறும் தருணங்களை ஊக்குவிப்பதும் அதன் மூலம் பிணைப்பை ஏற்படுத்துவதுமே எமது இலக்காக இருந்தது. 'Just Like Mom' போட்டிக்காக வெவ்வேறு வயதுகளுடைய, 200 இற்கும் மேற்பட்ட ஆண், பெண் இருபாலரினதும் விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. இதில் ஐந்து இறுதிப் போட்டியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, அவர்கள் நேரடியான சமையலில் பங்கேற்று, இறுதி வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டார். மாபெரும் பரிசு தவிர்ந்த, இறுதிப் போட்டி வரை பங்குபற்றிய ஏனைய நான்கு போட்டியாளருக்கும் தலா ரூ. 20,000 பெறுமதியான SINGER வவுச்சர்களும் வழங்கப்பட்டன.

Nestomalt SALARY for LIFE போட்டியின் இரண்டாவது வெற்றியாளர் அறிவிப்பு

நெஸ்டமோல்ற்று தனித்துவமாக முன்னெடுத்து வருகின்ற நுகர்வோர் ஊக்குவிப்பான 'SALARY for LIFE' 2021 போட்டியின் இரண்டாவது வெற்றியாளரின் விபரங்களை அறிவித்துள்ளது. தம்புள்ளையைச் சேர்ந்த, 29 வயது நிரம்பிய, ஒரு பிள்ளையின் தாயான. டி. டி. எம். துலாகல இந்த ஆண்டின் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், போட்டியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, 55 வயது வரை நெஸ்டமோல்ற்றிடமிருந்து மாதந்தோறும் ரூபா 50,000 தொகையைப் பெற்றுக்கொள்வார். தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் முன்னெடுக்கப்பட்ட Nestomalt 'SALARY for LIFE' போட்டியானது விசுவாசம் மிக்க தனது வாடிக்கையாளர்கள் தமது இலட்சியங்களை நனவாக்கி, வாழ்வில் முன்னேற்றம் காண்பதற்கான பயணத்தை ஆரம்பிக்க உதவுவதற்கான அத்திவாரத்தை அவர்களுக்கு வழங்குகின்றது.

"ஒரு தொழிலதிபராக மாறி, நிர்மாணத் தொழிற்துறையில் எனது பெயரை முத்திரை பொறித்துக் கொள்வதே எனது அவா. ஆகவே, Nestomalt 'SALARY for LIFE' போட்டியில் வென்றுள்ளமை, எனதும், எனது குடும்பத்தினதும் கனவை நனவாக்கியுள்ளது. சொந்த வியாபாரத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற எனது வாழ்வின் நீண்ட நாள் இலட்சியத்தில் ஒரு படி முன்னேறுவதற்கு வழிவகுத்த நெஸ்டமோல்ற்றுக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன்," என்று டி. டி. எம். தலாகல குறிப்பிட்டார்.

SALARY for LIFE' 2021 போட்டியின் அதிர்ஷ்டக் குலுக்கல் சீட்டிழுப்பிற்குத் தகைமை பெறுவதற்கு 18 முதல் 50 வயதிற்குட்பட்ட நுகர்வோர் 400 கிராம் நெஸ்டமோல்ற்று பக்கெட்டின் மேலுறையை அனுப்பி வைத்தல் வேண்டும். எழுந்தமானமாக ஒரு வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டு, போட்டியின் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக, 55 வயது வரையில் நெஸ்டமோல்ற்றிடமிருந்து மாதந்தோறும் ரூபா 50,000 தொகையைப் பெற்றுக்கொள்வார்.

Huawei MateView GT 27 அங்குல வைளந்த Monitor விரைவில் இலங்கையில்

முன்னணி தொழில்நுட்ப நிர்வுகன் வழங்குநரான Huawei, அதன் Huawei MateView GT 27 அங்குல வளைந்த உயர்புதுப்பிப்பு கணனித் திரையை (Huawei MateView GT 27inch curved highrefresh monitor) விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது. இது இலங்கை நுகர்வோருக்கு 2K தெளிவுத்திறன், கேமிங் திலைக்கான 165Hz புதுப்பிப்பு வீதம் மற்றும் சினிமா வண்ணத்துடன் கூடிய பெரிய அளவிலான பார்வையிடல் அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குகிறது. 27 அங்குல திரை மற்றும் 16.9 எனும் பிரதான வகை திரை விகிதத்துடன் முழுமையாக அதில் ஆழ்ந்து போகும் வகையிலான சக்தியை நுகரச் செய்வதுடன், 1500R உயர் வளைவைக் கொண்ட வடிவமைப்பு உங்களை மேலும் ஆழந்த்து மூழ்கடிக்கும் வகையிலான பார்வையிடலின் புதிய உலகத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் உங்கள் பார்வையிடும் அனுபவத்தை முழுமைப்படுத்துகிறது.

Huawei MateView GT 27 அங்குல வளைந்த உயர்புதுப்பிப்பு உடான திரையின் புத்துணர்ச்சியூட்டும் (refreshing) வேகமானது, QHD 2560 X 1440 திரை மூலம் உங்கள் கண்களுக்கு முன்பாகவே படங்களை உயிர்ப்பிப்பதுடன், சிறந்த கேமிங் மற்றும் பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்குகிறது. இந்த monitor ஒரு சினிமா தரத்தில் அமைந்த 90% DCIP3 வண்ண எல்லைகளுடன் வருவதுடன், துல்லியமான வண்ண மீள் வெளிப்பாடு மற்றும் துடிப்பான மற்றும் உண்மையான காட்சியை வழங்குகிறது. மிகக் குறைந்த தாமத நிலை, 165Hz refresh வீதம் வழியாக காட்சிகளைத் தடையின்றியதாகவும் சீராகவும் காண்பிக்கும். அது மாத்திரமன்றி, இது 8 bit வண்ண ஆழத்திற்கு ஒத்துழைப்பதுடன், இந்த 27 அங்குல monitor இனை 1.67 மில்லியன் வண்ண காட்சிகளை வழங்க அனுமதிக்கிறது. இதன் மூலம் monitor ஆனது மிகவும் துல்லியமான, உண்மையான அனுபவ ரீதியான காட்சிகளை அனுமதிக்கிறது. பயனர்கள் விளையாட்டின் உள்ளேயே இருப்பதைப் போன்று அல்லது அவர்கள் பார்க்கும் திரைப்படம் அல்லது வீடியோவில் இருப்பதைப் போல உணர வைக்கிறது.

விளையாட்டாளர்கள் எப்போதுமே விளையாடும் போது சிறந்த அனுபவத்தை பெற விரும்புகிறார்கள் என்பதுடன், monitor என வரும்போது, அதிக புதுப்பிப்பு விகிதம் (refresh rate), சிறந்த தன்மை ஆகியன முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. Huawei MateView GT 27" மூலம் எதிரி எங்கே இருக்கிறார் என்று தேடிக்கொண்டு விளையாட்டாளர்கள் இருட்டில் இருக்க வேண்டியதில்லை. 'The Dark Field Control' எனும் அம்சமானது குறைந்த ஒளியுடனான காட்சிகளில் காட்சிப் பிரகாசத்தைச் சரிசெய்வதற்கு அனுமதிக்கிறது. இதனால் அவர்கள் முதலில் எதிரியைக் இலகுவாகக் கண்டுபிடிக்க முடியும்.

புதிதாக குழந்தைகளை பெற்ற தாய்மார்களுக்கு பரிசு வழங்கும் Khomba Baby மற்றும் HNB

80 ஆண்டுகளாக இலங்கையின் முதற் தர மூலிகை பராமரிப்பு வர்த்தக நாமமான சுதேஷி கொஹோம்பவின் குழந்தைகளுக்கான தரக்குறியீடான Khomba Baby ஆனது, Hatton National Bank உடன் இணைந்து புதிதாக குழந்தைகளை பெற்ற தாய்மார்களுக்கு பரிசு வழங்குகிறது. இத்திட்டத்தில், சுதேசி கொஹோம்ப பேபி (Swadeshi Khomba Baby) ஆனது, கவர்ச்சிகரமான கொஹோம்ப பேபி தனிப்பட்ட பராமரிப்பு பாதுகாப்பு பரிசுப் பொதியை பரிசளிக்கும் அதே வேளையில் Hatton National Bank ஆனது, HNB கிரிகட்டியோ கிப்ட் வவுச்சரை வழங்குகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த Swadeshi Industrial Works PLC நிறுவனத்தின் பிரதித் தலைவரும் நிர்வாக பணிப்பாளருமான திருமதி. CSM சமரசிங்க, "இலங்கைத் தாய்மார்கள் மற்றும் அவர்களின் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு, பிறந்த குழந்தையின் தனிப்பட்ட பராமரிப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பரிசுப் பொதியை பரிசளிக்க Hatton National Bank உடன் கைகோர்ப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இளம் தாய்மார்களுக்கு இயற்கையான மூலப்பொருள் அடிப்படையிலான, குழந்தைகளின் தனிப்பட்ட பராமரிப்புப் பொருட்களைப் பயன்படுத்துவதன் நற்குணத்தைப் பற்றி விழிப்புணர்வூட்டும் முயற்சியின் அடிப்படையில், நாடு முழுவதும் உள்ள மகப்பேற்று மருத்துவமனைகளுக்கு சுதேசி இந்த பங்களிப்பை வழங்கும். பரிசுப் பொதிகளுடன் சுதேசி கொஹோம்ப பேபி குழந்தை பராமரிப்பு பற்றிய பயனுள்ள தகவல் புத்தகத்தையும் அது வழங்குகிறது. இயற்கையோடும் புதிதாகப் பிறந்த குழந்தையோடும் எவ்வாறு இணைந்திருக்க வேண்டும் என்பதை இளம் தாய்மார்களுக்கு அப்புத்தகம் கற்பிக்கிறது" என்றார்.

இலங்கையில் வாழும் சமூகங்களின் வாழ்வை வளப்படுத்தும் பல்வேறு பெருநிறுவன சமூக பொறுப்பு (CSR) திட்டங்களில் உள்ளூர் சமூகங்களுக்கு உதவுவதில் சுதேசி ஒரு சிறந்த பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இலங்கைத் தாய்மார்கள் புதிதாகப் பிறந்த குழந்தையின் மென்மையான சருமத்தில் இயற்கையான, பாதுகாப்பான மற்றும் மென்மையான குழந்தைகளின் தனிப்பட்ட பராமரிப்புப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டுமென யோசனை கொண்டுள்ள எமது இதயத்தில் இருந்து இந்த கூட்டாண்மைக்கான யோசனை எழுகிறது. அவ்வாறு சிறந்த இயற்கை மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்ட சந்தையிலுள்ள சவர்க்காரமாக சுதேசியின் கொஹோம்ப பேபி திகழ்கின்றது. அத்துடன், 1941 ஆம் ஆண்டு முதல் சிறந்த தரமான மூலிகை தனிப்பட்ட பராமரிப்பு பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களை உற்பத்தி செய்யும் பாரம்பரியத்தையும் அது கொண்டுள்ளது.

சுதேசி எனும் வகையில் நாம் 1941 ஆம் ஆண்டு முதல் மிருதுவான மூலிகை சவர்க்காரங்களை தயாரித்து வருகிறோம் என்பதுடன், சிறந்த மூலிகைப் பொருட்களைக் கொண்ட Khomba Baby தயாரிப்புகள் எமது நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்கிறது. சவர்க்காரம், கொலோன், க்ரீம், பவுடர், எண்ணெய், ஷாம்பு, கிப்ட் பெக் ஆகியவற்றை உள்ளடக்கிய Khomba Baby தயாரிப்பு வகைகள், காலத்திற்கேற்ற, ஒரேயொரு மூலிகைப் பொருட்களைக் கொண்ட உள்ளூர் சந்தையில் உள்ள தயாரிப்புகளாகும். சுதேசியின் தயாரிப்புகள் யாவும், சிறந்த ஆரோக்கியம், சுகாதாரம், பாதுகாப்பு, சருமத்தில் மென்மையாக செயற்படும் தன்மை போன்ற, இயற்கைக்கு உகந்த தயாரிப்புகளைத் தேடிவரும் நுகர்வோரின் அதிகரித்து வரும் சந்தைக் கேள்வியை பூர்த்தி செய்கிறது.

ESOFT மெட்ரோ கம்பஸ் பட்டமளிப்பு விழா 2021 சிறப்பாக முன்னெடுப்பு

ESOFT மெட்ரோ கம்பஸின் வருடாந்த பட்டமளிப்பு வைபவம், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) 2021 நவம்பர் 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் இடம்பெற்றது. இந்த ஆண்டின் பட்டமளிப்பு வைபவத்தில் மொத்தமாக 1800 மாணவர்கள் தமது பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். வெற்றிகரமாக தமது கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு Pearson BTEC உயர் தேசிய டிப்ளோமாக்கள், Pearson Level 7 தகைமைகள், லண்டன் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழக (பிரித்தானியா) பட்டங்கள் மற்றும் MBA கள், இங்கிலாந்து பல்கலைக்கழக (UK) பட்டங்கள் மற்றும் MSகள் போன்றன வழங்கப்பட்டிருந்தன.

இரண்டு நாட்களில் 9 அமர்வுகளாக இந்த வைபவம் இடம்பெற்றதுடன், சகல சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளையும் பின்பற்றி இடம்பெற்றது. பட்டமளிப்புக்கு மேலதிகமாக, ஒவ்வொரு பிரிவிலும் உயர்ந்த பெறுபேறுகளைப் பதிவு செய்தவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் மற்றும் விசேட விருதுகள் போன்றவும் வழங்கப்பட்டிருந்தன.

நிகழ்வின் பிரதான உரைகளை கல்விமான்கள் மற்றும் தொழிற்துறையின் முன்னோடிகளான LOLC சிலோன் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி கௌரவ் டலல், Axiata Digital Labs இன் பிரதம நிறைவேற்று அதிகாரி துஷேர கம்தவத்த, ESOFT குழுமத்தின் தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளருமான கலாநிதி. தயான் ரணுபக்க, இலங்கை கட்டடங்கள் சபையின் தலைவர் கலாநிதி. சம்பத் வதுரல, Moore Stephens Consulting பிரைவட் லிமிடெட் மற்றும் Moore Stephens Aiyar இன் முகாமைத்துவ பணிப்பாளரும், இணைப் பங்காளருமான திஷான் கபரிங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் PhD கற்கையின் ஒழுங்கிணைப்பாளருமான பேராசிரியர். ஏ.ஏ.சி. அபேசிங்க M.Phil. ஆகியோர் ஆற்றியிருந்தனர்.

பல்கலைக்கழக பங்காளர்களின் வெளிநாட்டு பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் மெய்நிகர் முறையில் இணைந்து கொண்டு, பட்டதாரிகளுக்கு வீடியோ வாயிலாக தமது வாழ்த்துகளையும், உரைகளையும் தெரிவித்தனர். இரு தினங்களிலும் Virtual தொழில் வாய்ப்புகளை வழங்கும் அணியினர் பிரசன்னமாகியிருந்ததுடன், இளம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். புதிய பொருளாதாரத்தினால் எழுந்துள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையிலான பட்டதாரிகளை தயார்படுத்துகின்றமை தொடர்பில் ESOFT பெருமை கொள்கின்றது.

வெள்ளவத்தை ரோயலில் டயலிசிஸ் சேவைகள் ஆரம்பம்

வெள்ளவத்தை மற்றும் அதை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்களின் நம்பிக்கை பெற்ற வைத்தியசாலையாக விளங்கும் ரோயல் வைத்தியசாலையில், புத்தம் புதிய 'டயலிசிஸ்' பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 3, 4, 5, 6 மற்றும் தெஹிவளை முதல் இரத்மலானை வரையிலான பகுதிகளில் வாழும் மக்கள், தமது வைத்தியத் தேவைகளை வெள்ளவத்தை ரோயல் வைத்தியசாலையில் பூர்த்தி செய்துகொள்கிறார்கள். சகல மருத்துவத் துறைகளிலும் விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனை (சேனலிங்), ஆய்வுகூட சேவைகள், மகப்பேறு சேவைகள், குழந்தையின்மைக்கான சிகிச்சைகள், அம்பியூலன்ஸ் மற்றும் மருத்துவ வசதிகள் என, ஏறக்குறைய அனைத்து மருத்துவ வசதிகளையும் ரோயல் வைத்தியசாலை வழங்கி வருகிறது. இப்போது, சிறுநீரக நோயினால் அவதிப்படுபவர்களுக்கான இந்த கத்திரிப்புச் சேவை, அதாவது டயலிசிஸ் சேவையும் ரோயல் வைத்தியசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பயிற்றப்பட்ட தாதியரின் உதவியுடன், நியாயமான கட்டணத்தில் டயலிசிஸ் சேவைகள் வழங்கப்படுவதாக ரோயல் வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரி தெரிவித்தார். "வெள்ளவத்தை முதல் இரத்மலானை வரையிலான பகுதிகளில் வாழும் சிறுநீரக நோயாளிகள், டயலிசிஸ் சேவையைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். அவர்களது சிரமத்தைக் குறைக்கும் வகையில், நியாயமான கட்டணத்தில், உயர் தரத்தில் டயலிசிஸ் சேவைகளை வழங்க ஆரம்பித்திருக்கிறோம். எனவே, இனி, இந்தப் பகுதிகளில் வாழும் சிறுநீரக நோயாளிகள், அதிக அலைச்சலின்றி டயலிசிஸ் சிகிச்சைகளை ரோயல் வைத்தியசாலையிலேயே பெற்றுக்கொள்ள முடியும்" என்றும் அவர் தெரிவித்தார்.

செ.கணேசலிங்கன்: ஒரு மார்க்ஸியவாதியின் நீண்ட பயணம்



1985 ஆம் ஆண்டாக இருக்க வேண்டும். சென்னையில், சீனத் திரைப்பட விழா ஒன்றில்தான், செ.கணேசலிங்கனோடு நான் முதன்முதலில் உரையாடினேன். கொழும்பில், அவரது புத்தக நிலையத்தில் அடிக்கடி பார்த்திருக்கிறேன் என்றாலும், அவரோடு பேசியது கிடையாது. கொழும்பில், அவர் பேசிய பல கூட்டங்களில், அவரது உரையைக் கேட்டிருக்கிறேன்.

எனது பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக் காலத்தில், அவரது நாவல்கள் முதன்முதலில் வெளியாகின. நீண்ட பயணம் (1965), செவ்வானம் (1966), சடங்கு (1966) ஆகிய நாவல்கள் வெளிவந்த காலத்தில், ஒரு நாவலாசிரியராக செ.கணேசலிங்கன் மிகுந்த புகழ் பெற்ற ஓர் எழுத்தாளராக அறியப்பட்டிருந்தார். அக்காலப்பகுதியில் செ.கணேசலிங்கனைப் போல உச்சப் புகழ்பெற்ற பிறிதொரு எழுத்தாளர் ஒருவரைச் சொல்வதற்கில்லை. ஈழத்து இலக்கிய உலகில் பொதுவாகவும், மார்க்சிய – இடதுசாரி வட்டாரத்தில் சிறப்பாகவும் மதிக்கப்பட்டவர் அவர். 'குமரன்' (1971_1990) என்ற மார்க்சிய சஞ்சிகை மூலமாக, மார்க்சிய வாசகப் பரப்பில் அவர் அழுத்தமான தடத்தைப் பதித்திருந்தார்.

சென்னையில் அவருடன் நெருங்கிப் பழக ஆரம்பித்த பின்புதான், அப்பெருமனிதனின் அதிஉயர் பண்புகளை நான் உணர முடிந்தது. எனக்கு அவர் ஒரு இனிய தந்தை போலிருந்தார், உற்ற நண்பனைப் போலிருந்தார்.

உலகின் தலைசிறந்த கலைப்படங்களை, அவருடைய வீட்டில்தான் தொடர்ந்து பார்த்து வந்தேன். அவரிடம் உன்னத கலைப்படங்களின் பெரும் சேகரம் இருந்தது. அவருடைய சினிமா அறிவு மிகமிக நுட்பமானது.

வெறும் பட ரசனை என்பதிலிருந்து, நடைமுறை சார்ந்த சினிமா அனுபவமும் அவரை நன்கு புடம்போட்டிருந்தன. அவர் மூலமாகவே, பாலு மகேந்திராவுடன் எனக்கு நெருக்கமான உறவு ஏற்பட்டது. பாலு மகேந்திரா பற்றிய அவரது நூல், உண்மையில் அவ்விருவருக்குமான உறவில் ஒருசிறு துளி என்றுதான் சொல்வேன்.

பாலு மகேந்திரா தனிப்பட்டமுறையில் இறுதிவரை பெரும் நம்பிக்கை வைத்திருந்தார் என்றால், அது கணேசலிங்கன் ஒருவரிடம் மட்டும்தான். அதற்கு, அவர் உரியவர்தான். பாலு மகேந்திராவின் பலத்தையும், பலவீனங்களையும் பூரணமாக விளங்கியவராகவும், அவரது படைப்பாற்றல் விரயமாகிக் கொண்டிருக்கிறது என்று நாளெல்லாம் ஏங்கியவராகவும் கணேசலிங்கன் திகழ்ந்தார். யாராவது ஒருவர்மீது நீங்கள் நம்பிக்கை வைத்துப் பழகலாம் என்றால், கேள்விக்கிடமில்லாமல் என் மனதில் வருபவர் கணேசலிங்கன்தான். ஒரு மார்க்சியவாதியிடம் இருக்க வேண்டிய மனிதாபிமான உணர்வின் பிம்பமாக அவர் திகழ்ந்தார். எழுத்தாளர்கள் அனைவருடனும் அவர் அன்பு பூண்டவராக – அவலநிலைகளில் முன்நிற்பவராக அவர் செயற்பட்டிருக்கிறார். அவரவர் கருத்துநிலைப்பாடுகளை அவர் மதித்திருக்கிறார்.

மு.நித்தியானந்தன் ....✍

ஆனால், தனது மார்க்சிய சிந்தனையில், இடதுசாரி அணுகுமுறையில் அவர் ஒருபோதும் விலகிச் சென்றது கிடையாது. ஓடும் பொன்னும் ஒப்பென நோக்கும் பண்பு அவருக்குச் சித்தித்திருந்தது. வெவ்வேறு வர்க்கநிலைகளைச் சார்ந்தோர்களிடம் எல்லாம் அவர் நெருக்கமான உறவு கொண்டிருந்த போதும், ஆலமரத்துப் பறவையாய் அவர் தனது இடத்திற்கு, மிக இலகுவாக வந்து சேர்ந்து விடுவார்.

எளிமை, நிதானம், அன்பு செலுத்துதல், அதிர்ந்து பேசாமை அவரிடம் காணப்படும் அரிய பண்புகள். ஆரவாரம் இல்லாமல் செயற்படுபவர். தன்னை முன்னிறுத்தி எதனையும் செய்யத் தெரியாதவர். தனது நூல்கள் எதற்கும், வெளியீட்டு நிகழ்வுகளை அவர் நடத்தியதில்லை. எந்தப் பட்டங்களுக்கும், சால்வைகளுக்கும் அவர் போய் நின்றதில்லை. கமலஹாசனிலிருந்து, இளையராஜாவிலிருந்து, புகழ்மிக்க பல மலையாள இயக்குநர்கள் வரை கணேசலிங்கனுக்கு நெருக்கமானவர்கள் மிகப் பலர். தமிழக இடதுசாரித் தோழர்களிடம் அவர் எப்போதும் நேசம் பூண்டவர்.

பெண்ணியவாதியும், இடதுசாரி அறிஞருமான குமாரி ஜெயவர்த்தன, தமிழகத்திற்குச் சென்றிருந்தபோது, அங்கிருந்த இடதுசாரித் தோழர்கள் மூலமே கணேசலிங்கனை அறியவந்து, இலங்கை வந்ததும் முதல் வேலையாக கணேசலிங்கனைப் போய்ப் பார்த்திருக்கிறார்.

ஈழத்தின் இடதுசாரி எழுத்தாளர்களில், எஸ்.பொ.வின் கண்டனங்களுக்கு இலக்காகாதவர்கள் யாருமில்லை என்று சொல்லலாம். ஆனால், ஈழத்தின் முற்போக்கு இலக்கியத்தின் பிதாமகர் எனப் போற்றப்படும் கணேசலிங்கன் மீது எஸ்.பொ. எங்கேயும் கண்டனம் செய்ததில்லை. தனிநபர் விவகாரங்களில் கணேசலிங்கன் ஒருபோதும் நேரம் செலவழித்ததில்லை. ஒரு வரியும் எழுதியதில்லை. குமரனில் அவர் எழுதிய குறிப்புகள் கூட, பொதுவான குறிப்புகள்தான்.

இறுதிக்காலம் வரை அவர் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருந்தார். கொன்பியூசியஸ், மார்க்கியவல்லி, பிராய்ட், லாக்கன், சிவவாக்கியர், சூபிகள் என்று, அவர் வாசித்தறிய முயலாத துறைகள் இல்லை எனலாம். அவர் ஹிந்து ஆங்கில நாளிதழுக்கு விமர்சனம் எழுதிக்கொண்டிருந்த நாட்களில், அவருக்குத் தரப்பட்ட விதம்விதமான நூல்களை, அவர் கருத்தூன்றி வாசித்துக் கொண்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

தான் வாசித்து, கிரஹித்த நூல்களின் சாரத்தை எளிமையாக, வாசகனுக்கு எளிதில் விளங்கத்தக்கதாக எழுதுவதை, அவர் வாழ்நாள் முழுதும் கைக்கொண்டிருக்கிறார். அது வெறும் பெயர் உதிர்ப்புகளாக இருக்க மாட்டாது.

இலக்கிய வேள்வி நடத்துவதாக அவரிடம் எந்தப் பிரமையும் இல்லை. எழுதுவது அவருக்கு இயல்பாக வந்தது. ஒருமாதத்தில் ஒரு நாவலை எழுதி முடிப்பது, அவருக்கு மிகச் சுளுவான விஷயம். அவரது நூல்கள் பட்டியலிட்டு மாளாதவை.

நூல்கள் வெளியிடுவதில் அவர் மிகுந்த பயன்பாட்டுக் கொள்கை (utilitarian values) கொண்டவராகவே இருந்தார். மிகமிகக் குறைந்த விலையில், வாசகனுக்குப் புத்தகத்தை வழங்க வேண்டும் என்பது அவரது கொள்கை. நூலை அதிக செலவில் அச்சிடுவதை அவர் ஒருபோதும் ஏற்பதில்லை. வண்ண அட்டைகள், கெட்டி மட்டைகள், உயர்ரகத் தாள்கள், அழகியல் வேலைப்பாடுகள், ஜிஹினா மினுமினுப்புகள் எவையும் அவரை அண்டாது. புத்தகம் வெறும் வாசிப்புக்கு மட்டும்தான். ஆக, அவரது நூலுக்கான முன் அட்டைக்கான ஓவியங்களை வரைந்து தர மணியன் செல்வம் எப்போதும் தயாராயிருந்தார். அந்த ஓவியங்களில் வெளிப்படும் மனித உருக்களில் மூக்கின் கூர்மைமீது கணேசலிங்கனுக்கு ஒரு லயிப்பு இருந்தது.

பின்னாளில், அவரது நாவல்கள் என்பன கருத்துகளை விவாதிக்கும் களமாக – அவற்றை வெளிப்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்ட கதாபாத்திரங்கள் உலவும் அரங்காக மாற்றமுற்றன. சமூக இழிவுகளை, ஏற்றத்தாழ்வுகளை, அடக்குமுறைகளை, அசமத்துவங்களை, பால்சமத்துவத்தை, சமூகநீதிகளை வலியுறுத்தும் பிரகடனங்களாக அவரது நூல்கள் அமைந்தன.

சாதிய அடக்குமுறைக்கெதிரான போர்க்குரலாக, அவரது எழுத்துகள் ஆரம்ப காலத்திலிருந்தே ஒலித்துள்ளன. பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில், காந்தி சுட்டுக்கொல்லப்பட்ட நாளின்போது, 'அவர் மறைந்தாலும், அவரது கொள்கைகளை நாம் கடைப்பிடிப்பதானால், இங்கே நிலவும் சாதிவெறி ஒழிக்கப்பட வேண்டும்' என்று உரை நிகழ்த்திய கணேசலிங்கனிடம், அந்த மாணவன் இறுதிவரை உயிர்ப்புடன் இருந்தான். அவரது 'நீண்ட பயணம்' சாதி ஒழிப்பிற்கு எதிரான போர்ப் பிரகடனம்தான். முற்போக்கு எழுத்தின் மூலவராகவிருந்த ஒருவரிடமிருந்து இந்தக் குரல் எழுந்ததில் வியப்படைய எதுவுமில்லை.

பெண்ணியம் தொடர்பான சிந்தனையில், அவரைப் போல தெளிவான, உறுதியான, நடைமுறை சார்ந்து கருத்துகள் கொண்டோரை, நாம் அவ்வளவாகக் காண்பதற்கில்லை. முற்போக்கு எழுத்தாளர்கள் பலர், பெண்ணியம் என்று வருகையில், பழமைவாதிகளாக இருக்கிறார்கள் என்பது புதியதல்ல. பெண் விடுதலை என்பது அவரது பல நூல்களின் ஆதார சுருதியாக அமைந்துள்ளது. அதனை, அவர் எழுத்திலும், பேச்சிலும், நடைமுறையிலும் செயற்படுத்திவந்த பெருமகனாவார்.

மு.வரதராசன், அகிலன், காண்டேகர் என்று வெவ்வேறுபட்ட இலக்கிய ஆளுமைகளுடன் அவர் நல்லுறவு பேணிவந்துள்ளார். மு.வ.வின் வாழ்க்கை நடைமுறைகளை, அவரது எழுத்துப் பாணியைக் கைக்கொண்டு ஒழுகுபவர் கணேசலிங்கன்.

1958ஆம் ஆண்டளவில் அகிலன், 'வேங்கையின் மைந்தன்' என்ற வரலாற்று நாவலை எழுதிக்கொண்டிருந்தபோது, இலங்கை வந்திருந்த வேளையில், அகிலனுக்கு இலங்கையைச் சுற்றிக் காண்பித்து நட்புப்பேணியவர். காண்டேகரை, இந்தியாவிற்குச் சென்று சந்தித்து, நட்புக்கொண்டவர். சென்னைத் தமிழ்ப் பதிப்பாளர்களிடமும் நல்லுறவு கொண்டிருந்தவர். கைலாசபதி, சிவத்தம்பி, பெனடிக்ட் பாலன் போன்றோரின் நூல்கள், தமிழகத்தில் வெளியாவதற்கு கணேசலிங்கனே காரணராகவிருந்தார்.

தமிழகத்தைத் தங்கள் வாழ்விடமாகக் கொண்டவர்களில் தர்மு சிவராமு, சோ.சிவபாதசுந்தரம் ஆகியோரின் வரிசையில், கணேசலிங்கனும் வந்து சேர்கிறார். முப்பது ஆண்டுகளுக்கு மேல் அவர் சென்னைவாசியாகவே திகழ்ந்திருக்கிறார். ஹிந்து ஆங்கில நாளேட்டின் ஆசிரியராகவிருந்த என்.ராமின் நெருங்கிய நண்பராகத் திகழ்ந்த கணேசலிங்கனுக்கு, Frontline அலுவலகத்தில், தனி இருக்கையே வழங்கி கௌரவித்திருக்கிறார், என்.ராம்.

தமிழில் 71 நாவல்களும், 7 சிறுகதைத் தொகுப்புகளும், 22 கட்டுரைத் தொகுப்புகளும், 8 சிறுவர் நூல்களும் என்று, எழுத்தையே தன் வாழ்வாகக் கொண்டு வாழ்ந்த கணேசலிங்கன், மாண்புமிக்க மனிதராக, எண்ணத்திலும் வாழ்க்கையிலும் நேர்மை பேணிய கண்ணியவானாக வாழ்ந்தார் என்பதைவிட, வாழ்வில் என்ன பேறு கிடைத்திட முடியும்?

மனிதாபிமானம் மிகுந்த அந்தப் பெருமகனின் மலர்ப் பாதங்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி.

மேஷம்

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிநாதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் மிகுந்த கவனத்தோடு செயல்பட வேண்டும். மனக்குழப்பங்கள் அதிகமாக ஏற்படும். உத்தியோகத்தில் கடுமையாகப் பணிபுரிந்தும் மேலிடத்து ஆதரவு கிடைக்காது. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். வெற்றிகள் வந்து சேர குரு பகவானை வழிபடவும்.

அதிஷ்ட நிறம் : ஊதா

ரிஷபம்

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 7ம் இடத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் சகோதர ஒற்றுமை பலப்படும். எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும். இடம், பூமி சேர்க்கையும் ஏற்படும். உற்சாகத்துடன் செயல்படும் விதத்தில் உடல்நலனும் இடம் கொடுக்கும். துர்க்கையை வழிபடுவதன் மூலம் துயரங்களிலிருந்து விடுபடலாம்.

அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு

மிதுனம்

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 6ம் இடத்திற்கு செவ்வாய் செல்வதால் உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. உற்சாகம் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எதையும் எளிதில் நம்பிச் செயல்படுவதால் துயரங்கள் கூடும். பல காரியங்கள் தாமதப்படலாம். ஆனந்த வாழ்வமைய அனுமனை வழிபடுவது நல்லது.

அதிஷ்ட நிறம் : கிளிப்பச்சை

கடகம்

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாயாகும். அவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் புதிய திருப்பங்களைக் காணப்போகிறீர்கள். தொழிலில் புதிய பங்குதாரர்கள் இணையலாம். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குப் பொறுப்புகள் மாற்றப்படும். பணி ஓய்வு பெற்றவர்கள் கூட மீண்டும் பணியில் சேர வாய்ப்புக் கிட்டும். சிவன் வழிபாடு சிறப்புகளை வழங்கும்.

அதிஷ்ட நிறம் : நீலம்

சிம்மம்

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாயாகும். அவர் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் எடுத்த முயற்சிகள் கைகூடும். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். வாரிசுகளின் திருமணங்களை சிறப்பாக நடத்தி வைப்பீர்கள். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும். முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும்.

அதிஷ்ட நிறம் : மஞ்சள்

கன்னி

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 3ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும். பெரிய மனிதர்களின் தொடர்பு பகையாகிப் போகலாம். பொருளாதாரத்தில் சில இழப்புகளைச் சந்திக்கும் சூழ்நிலை உண்டு. மகிழ்ச்சி அதிகரிக்க மகாலட்சுமியை வழிபடுவது நல்லது.

அதிஷ்ட நிறம் : செம்மஞ்சள்

துலாம்

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். இக்காலம் உங்களுக்கு ஒரு இனிய காலமாக அமையும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்ற தொழிலை இப்பொழுது சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றும் யோகம் உண்டு. ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். ஒப்பந்தங்களும் படிப்படியாக வந்து சேரும். அனைத்து யோகங்களும் வந்து சேர அபிராமி அம்மனை வழிபடுவோம். அதிஷ்ட நிறம் : கருநீலம்

விருச்சிகம்

கார்த்திகை 20ந் திகதி(டிசம்பர் 06) விருச்சி ராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் ராசிநாதன் செவ்வாய் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் உடல் நலம் சீராகும். தனவரவும் திருப்தி தரும். நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும். கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு முன்னேற்றம் அதிகரிக்கும். துணிந்து நீங்கள் எடுத்த முடிவால் வெற்றிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். காரிய வெற்றிக்கு கலைமகள் வழிபாட்டை மேற்கொள்ளவும். அதிஷ்ட நிறம் : சிவப்பு

தனுசு

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு விரயாதிபதி விரய ஸ்தானத்தில் வரும் இந்த நேரம் மிகமிக விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டும். வரவைக் காட்டிலும் செலவு கூடும். குடும்பத்தில் உள்ளவர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். தொழில் போட்டிகள் அதிகரிக்கும். வராஹி வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

அதிஷ்ட நிறம் : மஞ்சள்

மகரம்

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் ஓர் அற்புதமான நேரமாகும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். தகராறுகள் தானாக விலகும். வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் வாயிலாக உதவிகள் கிடைக்கலாம். பூமி விற்பனையால் லாபம் கிடைக்கும். சனி பகவான் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

அதிஷ்ட நிறம் : பச்சை

கும்பம்

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் நல்ல நேரமாகும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். உடன்பிறப்புகளும், உடனிருப்பவர்களும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். கண்ணன் வழிபாடு கவலையைப் போக்கும். அதிஷ்ட நிறம் : பழுப்பு

மீனம்

கார்த்திகை 20ந் திகதி (டிசம்பர் 06) விருச்சிக ராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். சொத்துக்களை பங்கு பிரித்துக் கொள்வதில்இருந்த பிரச்சினை அகலும். வீடு, இடம் வாங்கும் முயற்சி வெற்றி தரும். நடராஜர் வழிபாடு நலம் சேர்க்கும்.

அதிஷ்ட நிறம் : கரும்பச்சை

ஆளுநர் வுயிஸ்டுக்கு அளிக்கப்பட்ட படு பயங்கரமான மரணதண்டனை

7 கொழும்பின் கதை

என். சரவணன்


வுயிஸ்டுக்கு மரண தண்டனை

ஆளுநர் வுயிஸ்ட்டை கைது செய்வதற்காக ஒல்லாந்திலிருந்து ஒரு குழு இலங்கைக்கு வந்தது. அவர் 3ஆம் திகதி மே, 1729இல் கொழும்பில் சிறைபிடிக்கப்பட்டு பத்தாவியாவுக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கு அவர் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டு தொடர் விசாரணைகள் நடந்தன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விசாரணை அது. மே 1729 இல் உச்சநீதி மன்றம் மூன்றாண்டுகாலம் ஆளுநர் பதவி வகித்த வுயிஸ்டை அப்பதவியில் இருந்து நீக்க உத்தரவிட்டது. 1730 பெப்ரவரி28 அன்று 19 பேர் கொல்லப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டார். அவரின் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.

இரண்டு ஆண்டுகள் வுயிஸ்ட் இரும்பு விலங்குகளால் பூட்டப்பட்டு அடைக்கப்பட்டிருந்தார். வுயிஸ்ட் மீது நடந்த விசாரணை பற்றிய மூன்று விரிவான ஆவணங்களை டச்சு அரசாங்கம் வெளியிட்டது. தமது கண்டிப்பான நீதித்துறைக்கு முன்னுதாரணமாக டச்சு அரசாங்கம் இந்த வழக்கு பற்றியும், அதற்கு வழங்கப்பட்ட தீர்ப்பு, நிறைவேற்றப்பட்ட தண்டனை என்பவற்றையும் உள்ளடக்கிய ஆவணத்தைத் தயாரித்து வெளியிட்டது. சிறு நூல் வடிவில் அமைந்த அறிக்கைகள்; பல விபரங்களை உள்ளடக்கியிருந்தன. அந்த மூல ஆவணங்களை இந்தக் கட்டுரைக்கான ஆய்வின் போது தேடிக் கண்டெடுக்க முடிந்தது.

1. Sententie, gewezen by den Wel Ed: Raade van India, tegens den Heere en Mr. Petrus Vuyst, gewezene gouveneur van Ceylon – என்கிற தலைப்பைக் கொண்ட ஆவணம் இது. மே 19, 1732 அன்று பேத்ருஸ் வுய்ஸ்டுக்கு எதிரான மரணதண்டனைத் தீர்ப்பு, பத்தாவியா நீதி மன்றத்தால் அறிவிக்கப்பட்டது. வுயிஸ்ட் 19 அப்பாவி மக்களுக்கு மரண தண்டனை விதித்தது, இதுபோக, இன்னும் பலரைத் தவறாக நடத்தியது, பலரை சித்திரவதை செய்தது போன்ற கடுமையான குற்றச்சாட்டுகளுக்காக அவர் விசாரணையை எதிர்கொண்டார், குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு அதன் விளைவாக 3 ஜூன், 1732 அன்று பத்தாவியா கோட்டையில் வுயிஸ்ட் தூக்கிலிடப்பட்டார்.


SENTENTIE,
Gewezen by den Wel Ed: RAADE van
INDIA,
Tegens den Heere en
Mr. PETRUS VUYST,
Gewezene Gouverneur van
CEYLON.
Geëxecuteert tot BATAVIA, den 19. Mey, 1732.
Waar agter gevoegt is de LYST der Opontbodene en Particuliere PERZOONEN, die met deze in den Jare 1733. ingekomene elf Oost-Indische Retourschepen zyn Gerepatriëert.


KORT EN NAAUWKEURIG
VERHAAL,
Van 't Leven en Opkomst van den Heer en
Mr. PETRUS VUYST.
Gewezene Gouverneur op 't Eiland CEILON.
Als mede
Waaragtig Berigt, van alle zyne gepleegde Misdrijven: als ook de namen van die geene die door hem onschuldig ter Dood zyn gebragt.


De onregtveerdige
JUSTITIE,
Uytgevoert door den
GOUVERNEUR
PETRUS VUYST,
TOT
CEYLON.
Nevens het Regtveerdig Vonnis en Regt, aan hem Gouverneur gedaan, door den Achtbaren
RAAD VAN JUSTITIE,
DES
CASTEELS BATAVIA.
Te ROTTERDAM,
By CATHARINA SAMPERMAN, Wed: van D. Koelman, in de West-wagestraet, in 't vergulde Tafel-boek, 1733.

இந்த மூன்று நூல்களும் அன்றைய பழைய டச்சு மொழியைக் கொண்டவை. இன்று புழக்கத்தில் இல்லாதவை. அவற்றை இன்றைய நெதர்லாந்து மக்கள் புரிந்துகொள்ளக் கடினப்படுவார்கள். இதனை நெதர்லாந்திலிருந்து எனக்காக நாட்கணக்காக கடின உழைப்புடன் பொறுமையாக வாசித்து விளக்கம் பல தந்த Cornolis Broers அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

தீர்ப்பை வழங்கிய எட்டு ஜூரிகளின் பெயர்களும் இறுதியில் உள்ளன.

- *Mr.Gualter Schutten.*
- *Mr. Jacob Van Den Bosch.*
- *Mr. Jan Blaaukamer.*
- *Mr. Jan Rudolph Sappius*
- *Mr. Jacob Lakeman.*
- *Mr. Bernard Jacob De Lavaille.*
- *Mr. David Joan Bake,*

2. De onregtveerde justitie, uytgevoert door den Gouverneur Petrus Vuyst, tot Ceylon– அநீதி வழங்கிய இலங்கை ஆளுநர் பேத்ருஸ் வுயிஸ்ட் தொடர்பாக பத்தாவியா கோட்டையில் கனம்பொருந்திய நீதிக்கவுன்சில் வழங்கிய தீர்ப்பு. –1733

3. Kort en naauwkeurig verhaal van 't leven en opkomst vanden Heer en Mr. Petrus Vuyst, gewezen Gouverneur op 't Eiland Ceilon.

இலங்கைத் தீவின் முன்னாள் ஆளுநர் பேத்ருஸ் வுயிட்ஸ் வாழ்க்கை வரலாறும், அவர் நடத்திய கொடூரங்கள் பற்றியும் விளக்கும் நூல். – 1732 (டச்சு தேசிய நூலகம்)

இறுதியில் மூன்றாண்டுகளின் பின் நீதிமன்றம் அவரை குற்றவாளி என்று கண்டறிந்து 1732மே 22ஆம் திகதி அவரின் குற்றங்களை தேசத்துரோகக் குற்றமாக அறிவித்து அவருக்கு மரண தண்டனை விதித்தது. அந்தத் தண்டனை மிகக் கொடூரமான தண்டனையாக இருந்தது. மேற்படி மூன்றாவது அறிக்கையில் வுயிஸ்டுக்கு எப்படிப்பட்ட மரண தண்டனை வழங்கப்பட்டது என்பது பற்றி விபரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக அந்த 19 அப்பாவிகள் மீது அவர் மேற்கொண்ட சித்திரவதைகள், மரண தண்டனைகள் பற்றிய தீர்ப்பு இது. இலங்கைத் தீவு அவரின் ஆட்சியின் கீழ் மோசமான கொடுங்கோன்மைக்கு உட்பட்டது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வுயிஸ்டுக்கு அளிக்கப்பட்ட அந்த மரண தண்டனையை நேரில் கண்ட சாட்சியொருவரின் பதிவை பிற்காலத்தில் E.C.Buultjens மொழிபெயர்த்தார். 1732 யூன் 3 ஆம் திகதி பத்தாவிய நகரத்தில் குழுமியிருந்த பொது மக்கள் முன்னிலையில் இந்த மரண தண்டனையை நிறைவேற்ற பிரேத்தியேகமாக செய்யப்பட்டிருந்த மேடையில் ஒரு நாற்காலி வைக்கப்பட்டிருந்தது. அதிகாலை நான்கு மணியிலிருந்து இதற்கான ஏற்பாடுகள் நடந்தன. இறுதி நேரத்தில் வுயிஸ்ட் தான் செய்த அத்தனையும் கம்பனியின் பாதுகாப்புக்காகவும், நலனுக்காக்கவுமே என்று தெரிவித்தார். காலம் கடந்துவிட்ட அறிவிப்புகளாக அவை இருந்தன. மதப் பிரார்த்தனை முதலில் நிகழ்ந்தது. அது முடிந்ததும். ஜூரிகளும், மக்களும் பார்த்திருக்க அவரை நிர்வாணப்படுத்தி, மேடையில் இருந்த கதிரையில் அமர்த்தி இறுகக் கட்டினார்கள். பின்னர் கத்தியுடன் வந்த தண்டனை நிறைவேற்றுபவர் வுயிஸ்டின் தலையை பின்புறமாக இழுத்துப் பிடித்து தொண்டையை அறுத்தார். வுயிஸ்ட் துடித்து இறந்தார்.

அதன்பின் அப்படியே கழுத்தெலும் போடு அறுத்து துண்டித்தார். அதன் பின் உடல் ஒரு பலகையின் மேல் எறியப்பட்டது. உடல் பாகங்களை வெட்டி கீழே வைக்கப்பட்டிருந்த ஒரு வாளியில் அப்பாகங்களை இட்டார். அப்பாகங்கள் அங்கிருந்த அடிமைகளிடம் கொடுக்கப்பட்டன. அவர்கள் அங்கே எரிந்துகொண்டிருந்த தீயில் அவற்றை எறிந்தனர். அதே தீயில் அக்கதிரையும், பலகையும் உடைத்து போடப்பட்டன. வுயிஸ்டின் உடைகளும் அதிலேயே போட்டு எரிக்கப்பட்டன.

இவையனைத்தும் காலை எட்டு மணிக்கு முன்னர் முடிந்துவிட்டன. மதியம் வுயிஸ்ட் இருந்த இடமும் தெரியாமல் சாம்பலாகிப் போயிருந்தார்.

எரித்த அஸ்தி கூட ஒல்லாந்துக்கு போகக் கூடாது என்று அந்த அஸ்தியை அள்ளிச் சென்று பத்தாவியா கடலில் கொட்டினார்கள். அவரின் மனைவியும் பிள்ளைகளும் பத்தாவியாவில் தான் தங்கியிருந்தனர். கிறிஸ்தவ முறைப்படி வுயிஸ்டை அடக்கம் செய்ய அனுமதிக்கவில்லை. அவர்களுக்கு அவரின் சாம்பலைக் கூடக் கொடுக்கவில்லை.

தொடரும்

சமூக அசைவுக்கும் மாற்றத்துக்கான கவிதைகள்

'மைக்கல் கொலின்' கவிதை, சிறுகதை, நாவல் போன்ற ஆக்க இலக்கியத்தில் தன்னையே ஆழப் பதித்துக்கொண்டவர். அதற்கப்பால் 'மகுடம்' எனும் அரையாண்டு இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியரும், பதிப்பாசிரியருமாவார். 'மகுடம்' பதிப்பகத்தின் வாயிலாக பலரது நூல்களை வெளிக்கொணர்வதில் ஆர்வமுடன் செயற்படுகின்றவர். இன்று மட்டக்களப்பில் இருந்துகொண்டு தமிழின் ஆக்க இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்புச் செய்கின்ற மைக்கல் கொலின் என்றுமே எமது பாராட்டுக்குரியவரே!

வரலாற்றுத் தொன்மங்களை மறந்து போகின்ற கால கட்டத்தில், தொன்மங்களைத் தேடிப்படிப்பதில் கொலினுக்கு தனியொரு விருப்புண்டு. அவற்றை வெறுமனே படிப்பதோடு மட்டுமல்லாது, அவற்றிற்கான மீள்வாசிப்பினூடாக தான் அறிகின்ற, சொல்ல விளைகின்ற கருத்துக்களை தனது கதைகள், கவிதைகளூடாகச் சொல்வதில் சாமர்த்தியத் திறமை கொண்டவர்தான் மைக்கல் கொலின். அவரது சிறுகதைத் தொகுப்பாகிய 'பரசுராம பூமி' அத்தகைய இலக்கிய வடிவத்தினை ஒத்தது. அந்த வரிசையில் 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்கிற புதுக்கவிதைத் தொகுப்பு விவிலியத் தொன்மங்களை மீள்வாசிப்பு செய்ததனால் பிறந்ததாகும்.

'பரசுராமபூமி'யில் விவிலியக் கதைகளைப் பயன்படுத்தி அவற்றிற்கான மீள்வாசிப்பினூடாக புதிய கருத்துக்களை விதைத்த கொலின் 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்கிற கவிதைத் தொகுதியின் வாயிலாக இன்னும் பல செய்திகளை நம்மோடு புதிதாக பகிர்ந்து கொள்கிறார். ஒரு நூலின் தொன்மத்தினை அறிந்து கொள்ள வேண்டுமாயின் அந்நூல் எழுதப்பட்ட காலம், அக்கால மக்களின் வாழ்க்கைமுறை, அக்காலகட்ட மக்கள் பேசிய மொழி, அக்கால சமூக, சமய, அரசியல் பின்னணிகள் போன்றவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய திருவிவிலியத்தின் பகுதிகளை அறிய வேண்டுமாயின் நாமும் அக்காலகட்ட மக்களின் வாழ்வியலை அறிந்து கொண்டால் மட்டுமே உண்மையான, சரியான விளக்கத்தினை வழங்க முடியும். அந்தவகையில் 'விவிலியப் பொருள்கோள் முறை' விவிலியப் பகுதிகளுக்கான விளக்கத்தினை அறிந்து கொள்வதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. விவிலியப் பொருள்கோள் முறையினைப் பயன்படுத்தி விவிலியப் பகுதிகளை பகுப்பாய்வு செய்வது விவிலிய வல்லுநர்களினதும், இறையியலாளர்களினதும் பணியாகும். ஆயினும் சாதாரண பாமரனும் விவிலியத்தினை வாசித்து அதனைத் தியானிப்பதினூடாக தனக்கு கிடைக்கின்ற செய்தியினை பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பினைப் பெறுகின்றான். விவிலியமானது ஒவ்வொரு தடவையும் வாசிக்கின்றபோது அதில் நம்பிக்கை கொள்வோருக்கு அவர்கள் வாழ்கின்ற சூழமைவுக்கேற்ப புதிய புதிய செய்தியினைக் கொடுக்கின்றது. விவிலிய வாசிப்பானது அத்தகைய புதிய புதிய செய்தியினை நம்பிக்கையாளர்களுக்கு கொடுக்க வேண்டியது கட்டாயமாகும். ஏனென்றால் விவிலியம் என்பது வெறும் தொன்மம் கிடையாது, மாறாக அது இன்றும் வாழ்கின்ற நூலாகும்.

எல்லா சமயத்தவரையும் போன்று கிறிஸ்தவ சமயத்திலும் பல்வேறுபட்ட வழிபாட்டுக் காலங்களும், வழிபாட்டுச் செயற்பாடுகளும் காணப்படுகின்றன. கிறிஸ்தவர்களின் வழிபாட்டுக் காலத்தில் அதிக கவனத்தை ஈர்க்கின்ற காலம் தவக்காலமாகும். இத்தவக்காலமானது நாற்பது நாட்களைக் கொண்ட இயேசுகிறிஸ்துவின் பாடுகள், மரணம் போன்றவற்றை தியானிக்கின்ற காலமாகும். இத்தியானமானது இறுதியில் அவரின் உயிர்ப்புடன் நிறைவு காண்கிறது. இத்தவக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பல்வேறு விதமான வழிபாட்டு மற்றும் பக்தி முயற்சிகளிலும் ஈடுபடுவார்கள். அவற்றுள் சிலவாக, நாற்பது நாட்களும் திருப்பலியில் பங்கெடுத்தல், சிலுவைப்பாதை பக்தி முயற்சியில் ஈடுபடுதல், உண்ணா நோன்பினை மேற்கொள்ளுதல், மாமிச உணவினைத் தவிர்த்தல், உடலுக்கும் உள்ளத்திற்கும் கெடுதல் தரக்கூடிய செயல்களைத் தவிர்த்தல், கல்வாரித் திருத்தலங்களை நோக்கி பயணங்களை மேற்கொள்ளுதல், புகழ்பூத்த யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரால் எழுதப்பட்ட 'வியாகுல பிரசங்க'த்தினை படிப்பதன் வாயிலாக இயேசுவின் பாடுகள், மரணத்துடன் ஒன்றித்தல், இவை போன்ற இன்னும் பல செயற்பாடுகளில் ஈடுபடுவர். இச்செயற்பாடுகளில் தனியாகவோ, குழுவாகவோ ஈடுபடுவார்கள்.

கடந்த இரண்டு வருடங்களாக 'கொவிட் 19' பெருந்தொற்று காரணமாக அவ்வப்போது ஆலய வழிபாடுகள் முடக்கப்படுவதும் பின்னர் திறந்து விடப்படுவதுமான சூழ்நிலையில் 2021ஆம் ஆண்டின் தவக்காலக் சூழலில் மைக்கல் கொலினால் முகநூலில் நாற்பத்தேழு நாட்களாக எழுதப்பட்ட தவக்காலக் கவிதைகளின் தொகுப்பே 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்பதாகும். அக்கவிதைகளினூடாக மைக்கல் கொலினும் தனது தவக்காலப் பயணத்தினை மேற்கொண்டுள்ளார் என்றுதான் சொல்ல வேண்டும். நான் அறிந்த வகையில் 80களின் பிற்பாடு இயேசுவின் வாழ்வினை மையப்படுத்திய நற்செய்தி நூல்களை ஒரு சிலர் காவியங்களாக வடித்துள்ளார்.

அந்தவகையில் 1982இல் வெளிவந்த கவியரசர் கண்ணதாசனின் இறுதிக்காவியமாகிய 'இயேசு காவியம்', அதனைத்தொடர்ந்து 2002ஆம் ஆண்டில் அருட்தந்தை வின்சன்ட் சின்னதுரை என்பவரின் 'புதிய சாசனம்', தொடர்ந்து பெண் கவிஞர் நிர்மலா சுரேஸின் 'இயேசு மா காவியம்', புலவர் ம. அருள்சாமி என்பவர் எழுதிய 'இதோ மானிடம்' என்கிற தொகுப்புக்களும் வெளிவந்துள்ளன. இவற்றைவிட இயேசுவின் வாழ்வினைக் குறித்த பல காவியங்கள் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் பாடப்பட்டுள்ளன.

மைக்கல் கொலினின் இத்தொகுப்பானது இயேசுவின் வாழ்வினை முழுமையாகத் தருகின்ற ஒரு காவியம் கிடையாது. அத்தோடு நற்செய்தியினை புதுக்கவிதை வடிவில் இயக்கித் தருகின்ற முயற்சியும் கிடையாது. இது இயேசுவின் நற்செய்தியினை மீள் வாசிப்புக்கு உட்படுத்திய முயற்சியாகும். தவக்கால இறைவார்த்தைப் பகுதிகளை தன்பாணியில் சிந்தித்து சமூக அசைவுகளுக்கும், வாழ்வியலுக்குமேற்ப மீள்வாசிப்பினை மேற்கொண்டு நமது சிந்தனையைத் தூண்டியெழுப்பி, நம்மையும் சிந்திக்க வைக்கின்ற புதிய முயற்சியாகும்

கொலினின் விவிலிய மீள்வாசிப்பானது பாரம்பரியத்தினைப் பேணுகின்றவர்களுக்கு சற்று நெருக்கடியாகவே இருக்கும் என்பதில் அவரது கவிதைகள் பேசும். இயேசுவின் வார்த்தைகள் "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்றிருக்க கொலின் தனது மீள் வாசிப்பினூடாக "திறக்காவிட்டால் உடையுங்கள், கொடுக்காவிட்டால் பறித்துக் கொடுங்கள், கிடைக்காவிட்டால் போராடிப் பெறுங்கள்" என்பதனூடாக தற்கால சமூகப் போக்கினை படம் பிடித்துக் காண்பிக்கின்றார். அதுமட்டுமல்லாது இயேசுவை ஒரு சமூகப் போராளியாகவும், மார்க்சிய சித்தாந்தவாதியாகவும் காண்பிக்கின்றார். பாட்டாளி மனித வர்க்கம் தனது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள தட்டி, கேட்டு, தேடிப் பெறமுடியாது மாறாக உடைத்து, பறித்து, போராடித்தான் பெறமுடியுமென்கிற யதார்த்தத்தைக் காண்பிக்கின்றார்.

அவ்வாறே மற்றுமொரு கவிதையாகிய விபசாரத்தில் பிடிபட்ட பெண் என்பதில் விவிலிய உரையாடலில் இயேசு குற்றம் சுமத்தியவர்களை குற்றவாளிகளாக தமது வார்த்தைகளால் இனம் காட்டியபோது அவர்கள் அவ்விடமிருந்து அகன்றார்கள் என்றுவர, கொலினோ 'உங்களில் பாவம் இல்லாதவர் முதலில் கல் எறியட்டும்' என்று கூறிவிட்டு இயேசு குனிந்து மனிதத்தைத் தேடினார் என்கிறபோது பெண்ணின் தலையில் எறியப்பட்ட கல்பட்டு இரத்தம் சிந்தியது என்பதனூடாக பாவம் செய்து மரத்துப்போய்விட்ட மனித சமூகத்தினுள்தான் வாழ்கின்றோம், அது திருந்துவதற்கான வாய்ப்பினை இழந்துவிட்டது, அது தொடர்ந்தும் பாவங்களை செய்த வண்ணமேயிருக்கும் என்கிற யதார்த்த நிலையினை புடம்போட்டு காட்டுகின்றார்.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதற்கொப்ப கொலினின் விவிலிய மீள் வாசிப்பு கவிதைகளான 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' இன்றைய நவீன கால வாழ்வியல் போக்கினையும், அறம் விலகிய சமயப் பாங்கினையும் சாடுகின்றதாக அமைவதும் நோக்கத்தக்கதாகும். தனது புதுக்கவிதைகள் ஊடாக சமூக மாற்றத்திற்கான செய்தியினையும் தொட்டுச் செல்வது அவரது சமூகம் சார்ந்த பார்வையினையும் வெளிக்காட்டுகின்றது. காலத்தின் புதிய வரவாகிய 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்கிற மைக்கல் கொலினின் விவிலிய மீள்வாசிப்பு கவிதைத் தொகுப்பானது புதிய முறையில் விவிலியத்தினை சிந்திக்கத் தூண்டுகின்ற தூண்டிலாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

இலக்கிய நற்பணி தொடர வாழ்த்துக்கள்.

அருப்பணி அ. அகஸ்தீன் நவரெத்தினம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

பெறுகை அறிவித்தல்

வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றிற்கு ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

விபரங்கள்	ஒப்பந்த இலக்கம்	விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா)	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)
வடக்கு மாகாணம், முல்லைத்தீவு மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் கோழிகூட்டு வாழைச் செய்கைக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் 50 எண்ணிக்கைகள்	LK-MOA-PMU-260929-GO-RFB	240,000.00	5,000.00
மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் மாம்பழச் செய்கைக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர் முறைமைகள் 200 எண்ணிக்கைகள்	LK-MOA-PMU-260967-GO-RFB	960,000.00	15,000.00
வடக்கு மாகாணம், முல்லைத்தீவு மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் கோழிகூட்டு வாழைச் செய்கைக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் 50 எண்ணிக்கைகள்	LK-MOA-PMU-247012-GO-RFB	140,000.00	5,000.00
வடக்கு மாகாணம், முத்தையன்கட்டுவயில் மிளகாய் செய்கைக்கு 50 எண்ணிக்கையான Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் Cavendish வாழைச் செய்கைக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் 200 எண்ணிக்கைகள்	LK-MOA-PMU-260938-GO-RFB	480,000.00	7,500.00
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் மாதுளம் செய்கைக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் 150 எண்ணிக்கைள்	LK-MOA- PMU-260835-GO-RFB	720,000.00	10,000.00
ஊவா மாகணத்தின் மொனராகலை மாவட்டத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் மாம்பழச் செய்கைக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் 200 எண்ணிக்கைகள்	LK-MOA- PMU-260958-GO-RFB	960,000.00	15,000.00
வடக்கு மாகாணம், யாழ்ப்பாணத்தில் இயற்கை வாழைச் செய்கைக்கு 50 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள்	LK-MOA- PMU-260918-GO-RFB	180,000.00	5,000.00
கிழக்கு மாகணத்தின் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் Cavendish வாழைச் செய்கைக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர் முறைமைகள் 200 எண்ணிக்கைகள்	LK-MOA-PMU-260845-GO-RFB	480,000.00	7,500.00
வடக்கு மாகாணம், யாழ்ப்பாணத்தில் உருளைக் கிழங்கு மற்றும் சின்ன வெங்காயச் செய்கைக்கு 500 எண்ணிக்கையான Drip Tape நீர்ப்பாசன முறைமைகள்	LK-MOA-PMU-260838-GO-RFB	900,000.00	15,000.00

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2021-12-13ஆம் திகதியிலிருந்து 2022-01-03ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2021-12-22ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு பத்தரமுல்ல, இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, கமத்தொழில் துறையை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்தில் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. 2022-01-03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022-01-03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Mini Sprinkler Irrigation Systems) மற்றும் சொட்டு நீர் நீர்ப்பாசன முறைமைகளை (Drip Tape Irrigation Systems) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
9. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக் குழு,
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.
தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521

திகதி: 2021-12-12

it's what you want
www.adz.lk
Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

களனி பல்கலைக்கழகம்
மருத்துவ பீடம்

விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்டவாறு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

Contract Number	Name of Contract	Estimated Cost	Bid Security	Non-refundable Fee
UOK/FM/DO/02/ CONS/21/2/02	Supplying & installing Lightning Surge Protecting systems for Electrical Main Panels of existing building at Medical Faculty, University of Kelaniya	3.5 Million	Rs.35,000.00	Rs.2,000.00
UOK/FM/DO/02/ CONS/21/1/08	Supplying & installing Main Panel Earthling System & Lightning Protecting System of DDS Building at Medical Faculty, University of Kelaniya.	0.6 Million	Rs.6,000.00	Rs.500.00

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தலை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   ICTAD பதிவு – **(EM)ICTAD** தரம் **EM** -5 அல்லது மேற்பட்டது.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை களனி பல்கலைக்கழக வேலைகள் திணைக்களம், வேலைகளுக்கான பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2903164) 2021 டிசம்பர் 13 ஆம் திகதியிலிருந்து 2021 டிசம்பர் 28 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் பி.ப. 1.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் இறாகம-11010, தளகொள்ள பாதை, களனி பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2021 டிசம்பர் 13 ஆம் திகதியிலிருந்து 2021 டிசம்பர் 28 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் பி.ப. 1.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் மருத்துவ பீட சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், மேலேயுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டியவாறு இறாகம-11010, தளகொள்ள பாதை, களனி பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2021 டிசம்பர் 29 ஆம் திகதயன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டியவாறு இறாகம-11010, தளகொள்ள பாதை, களனி பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட உதவி நிதியாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் அவைகளுக்கான மூடும் நேரத்தின் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
களனி பல்கலைக்கழகம், களனி.
07.12.2021.

ஒப்பந்தம் (டென்டர்)
ஊடாக வாகன விற்பனை

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)
Company No. PB 917 PQ

வாகன இல.	வகை மற்றும் மாதிரி	விபரம்	மார்ட்
மோட்டார் கார்			
JM-1xxx	MITSUBISHI SPACE GDI-Y	2000, 1970CC, JAPAN, DIESEL, RED	A
WP JB-3xxx	KIA RIO 1.5	2006, 1493CC, SINGAPORE, PETROL, SILVER	A
CAE-5xxx	HONDA DAA-RU3 VEZEL	2015, 1490CC, JAPAN, PETROL/ELE, PERAL WHITE	A
WP 18-7xxx	MAZDA BG5P	1991, 1490CC, JAPAN, PETROL, GREY	A
WP KP-6xxx	HONDA DBA-GJ1	2007, 1400CC, JAPAN, PETROL, SILVER	A
WP HH-6xxx	MITSUBISHI LANCER	2000, 1468CC, JAPAN, PETROL, BLACK	A
CAU-1xxx	SUZUKI DAA-MH44S WAGON R	2016, 660CC, JAPAN, PETROL/ELE, RED	A
CAJ-3xxx	SUZUKI ALTO LXI 800	2015, 796CC, INDIA, PETROL, SILKY SILVER	A
WP 301-6xxx	MAZDA FAMILIA	1995, 1490CC, JAPAN, PETROL, WHITE	A
15-1xxx	NISSAN WHB11-SUNNY	1984, 1500CC, JAPAN, PETROL, WHITE	A
CAB-1xxx	TATA NANO TWIST	2014, 624CC, INDIA, PETROL, ROYAL GOLD	A
KP-9xxx	MICRO PANDA LC 1.3	2011, 1342CC, SRI LANKA, PETROL, BROWN BLACK	A
CAL-5xxx	MICRO SSANGYONG REXTON 2L	2013, 1998CC, SRI LANKA, DIESEL, DANDY BLUE	A
HF-2xxx	TATA INDICA LXI	2003, 1405CC, INDIA, PETROL, GREEN	D
WP 65-2xxx	BMW E36	1995, 2494CC, JERMANY, DIESEL, WHITE	A
KA-0xxx	MAHINDRA SCORPIO	2005, 2609CC, INDIA, DIESEL, DIMND WHITE	A
17-4xxx	NISSAN BCAB13	1992, 1400CC, JAPAN, PETROL, GREY PEARL	A
டுவெல் பேப்பர்ஸ்			
DAH-5xxx	ASHOKE LAYLEND DOST+LS	2019, 1478CC, INDIA, DIESEL, WHITE	B
59-5xxx	MAZDA SR29V	1992, 2180CC, JAPAN, DIESEL, WHITE	B
JJ-7xxx	NISSAN GC SK82VN	1999, 1780CC, JAPAN, PETROL, SILVER	B
DAA-5xxx	MAHINDRA MAXXIMO PLUS	2015, 909CC, INDIA, DIESEL, BLACK	B
PW-8xxx	MAHINDRA MAXXIMO PLUS	2013, 909CC, INDIA, DIESEL, BLACK	D
முச்சக்கர வண்டி			
YQ-1xxx	BAJAJ RE 205	2011, 198CC, INDIA, PETROL, BRIGHT RED	C
YZ-8xxx	BAJAJ RE 205	2012, 199CC, INDIA, PETROL, BRIGHT RED	A
YA-0xxx	BAJAJ AR4S UG	2010, 173CC, INDIA, PETROL, JET BLACK	D
YS-9xxx	BAJAJ RE 205	2011, 198CC, INDIA, PETROL, ECO GREEN	D
QL-3xxx	BAJAJ AUTO AR4S	2007, 173CC, INDIA, PETROL, BRIGHT RED	A
மோட்டார் லொறி மற்றும் பஸ்			
NC-7xxx	TATA LP 709	2016, 3783CC, INDIA, DIESEL, WHITE	B
HQ-9xxx	TATA LP 1510	2003, 5675CC, INDIA, DIESEL, IVORY	D
NA-3xxx	TEMPO 3700WB	2005, 2850CC, INDIA, DIESEL, GOLD	B
SP NB-5xxx	LANKA ASHOK LEYLAND VIKING	2012, 6540CC, INDIA, DIESEL, WHITE	B
LP-0xxx	MITSUBISHI SKG-FEA50	2011, 2990CC, JAPAN, DIESEL, WHITE	D
LA-8xxx	TATA 207DI	2005, 2956, INDIA, DIESEL, WHITE	A

மேலே குறிப்பிட்ட வாகனங்களை பரிசீலிக்கும் இடம்:

முற்றம் "A"
இல. 01, ஸ்ரீ மஹா விஹார வீதி,
பாமன்கட, தெஹிவளை.
(ஸ்ரீ மஹா விஹாரயின் உள்ளே)
விசாரனை: 0117 209 358
ஸ்ரீலால் - 076 573 1397, சுரன்ஜித் - 076 324 1184

முற்றம் "B"
இல. 344, ஸ்ரீ மங்கலவத்த,
மம்பே, பிலியந்தல.
ஸ்ரீலால் - 076 573 1397
சுரன்ஜித் - 076 324 1184

முற்றம் "C"
12வது மைல்கல்,
கல்முனை வீதி,
வலதபிடிய, அம்பாறை
தமித் 0769 665 224
அநுர 0762 775 942

முற்றம் "D"
இல. 516, பிரிவென சந்தி,
குருநாகல வீதி, தம்புள்ளை.
சரித் 0762 092187

ஒவ்வொரு பத்திரங்களின் மீள செலுத்தப்படாத கட்டணமான ரூ. 400/- ஐ செலுத்தி ஒப்பந்த விண்ணப்பத்தை வாகன முற்றத்திலிருந்து பெறலாம். (பூரணப்படுத்தப்படாத அல்லது தவறான வடிவத்தில் இருக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

2021 டிசம்பர் 12 (ஞாயிறு) முதல் டிசம்பர் 16ம் திகதி (வியாழன்) வரை
மு.ப. 8.30-பி.ப. 5.00 வரை (இரு தினங்களும் உட்பட)

2021 டிசம்பர் 16ம் திகதி பி.ப. 5.00 மணிக்கு டென்டர் மூடப்படும்

விசாரனைகள்: தலைமை - மீள்பெறுகை,
சியபத்த பினான்ஸ் பீஎல்சீ,
சயுரு செவன, இல. 46/12, நவம் மாவத்தை, கொழும்பு 02.
தொலைபேசி: **011 7 605 605** நீட்சி. **1104**

எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தல் இன்றி எவரிடமிருந்து விலக்கி கொள்ள அல்லது உரிமையுண்டு

Best way to fulfil your Future Dreams
classified@lakehouse.lk
Piyani- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
Marriage Proposals

பயண முடக்கம் தந்த படிப்பினை

தேன்மொழி சபா....✍

உலகை முடக்கிப்போட்ட கொரோனா வால நாம் கற்றுக்கொண்டதுதான் அதிகம்', என வேலாயுதம் கூற, மனைவியும் 'எல்லாம் படிப்பனவுதான்....., நாங்கள் தான் நம்மட பிள்ளைகளின்ர பாதுகாப்பைத் தேட வேணும்,... எல்லாத்துக்கும் மேல ஒருத்தன் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறான்,... எல்லாம் இறைவன் செயல், எனக்கூறி கதிரையில் அமர்ந்து கண்மூடினாள். நினைவலைகள் பாடம் புகட்டின

உள்ளம் உவகை கொள்ள வாசலை பார்த்தபடி கோகிலா நின்றாள்.

'அம்மா எனக்கு மெடிசின் கிடைச்சுட்டு' எனக் கூறிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தவள், தாயைக் கட்டிப்பிடித்தாள் அவளுக்கு தலைகால் தெரியாத சந்தோசம். 'மெடிசின்'கிடைக்குமா இல்லையா எனத் தள்ளாடியவளுக்கு, கிடைச்சதும் சந்தோசத்தில குதித்தாள். தாய்க்கு ஒருபடி மேல. தகப்பன் 'எதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும், திரும்பச்சோதினை எடுக்கிற கதை இருக்கப் படாது, வாறது எதுவோ அதுக்குப் போயிட வேணும், கிடைச்சதோடு திருப்தியாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும்,' எனக் கண்டிப்புடன் கூறியதாலதான் றாகினிக்கு இந்தச் சந்தோசம். அப்போ ரெலிபோன் அடிக்க கோகிலா எடுத்து 'அப்பா அவளுக்கு மெடிசின் கிடைச்சிருக்கு,'எனக்கூறினாள்

இண்டைக்கு உனக்கு விருப்பமான சாப்பாடுதான், அண்ணனும் அறிந்தால் சந்தோசப்படுவான், அவனுக்கும் சொன் ணனியா' எனக் கேட்கும் போது ரமேஸ் வாசல்படி ஏறினான். அவனைக்கண்டதும் 'அவள் பட்ட கஷ்டத்துக்கு பலன் கிடைச்சுவிட்டுது' என்றாள். ரமேஸின் கண்கள் றாகினியைத் தேட, அறைக்குள் இருந்து அவள் வந்தாள். மிகுந்த சந்தோசத்தோடு றாகினியைப்பார்த்து 'கங்கிராஜுலேசன்' என்றவாறு தங்கையின் கையைகுலுக்கி வாழ்த்துச் சொன்னதோடு, அவளது முதுகில தட்டி தனது சந்தோசத்தையும் வெளிப்படுத்தினான். கையில இருந்த ஐஸ்கிரீம் பெட்டியையும் கொடுத்தான்.

'என்னடா இப்ப நீ வந்திருக்கிறாய், என்ன 'லீவா?' எனத்தாய் கேட்கவும் 'இல்லையம்மா, ஒருமணித்தியாலம் 'ஷோட்லீவு'எடுத்துக் கொண்டு வந்தனனான்.

அவளுக்கு மெடிசின் கிடைச்சது எண்டதும் என்னால இருக்க முடியேலை, மனேச்சரிட்ட விசயத்தைச் சொல்ல, அவரும் வாழ்த்துச் சொல்லி லீவு தந்துட்டார்', எனச் சொல்லவும். 'என்ன இருந்தாலும் பைக்க நிதானமாய் ஓட வேணும், அவசரம் ஆபத்தை விளைவிக்கும், நிதானம் முக்கியம்' எனக் கூறினாள். ஐஸ் கிரீமை கப்பிலபோட்டு தாய் தமையனுக்கு கொடுத்துத் தானும் குடிக்கத் தொடங்கினாள் றாகினி. தனது சைக்கிலை உருட்டிக் கொண்டு தகப்பன் வர காற்றாய் பறந்து 'அப்பா எனக் கட்டிப்பிடிக்க, தகப்பனும் சைக்கிலை மரத்தோட சாய்த்து, மகளின் சந்தோசத்தை பகிர்ந்து கொண்டார்.

ரமேஸைக் கண்டவுடன் 'என்னடா நீயும் வந்துவிட்டாயா?, மனேச்சர் விட்டுவிடாரா?, எனக்கேட்க 'நான் போகப்போறன்.

அப்பா! இவளை வந்து பாக்கவேணும் போல இருந்துது, அதுதான் வந்தனான்', எனக்கூறியபடி தனது கப்பை தகப்பனுக்கு நீட்ட 'என்ன அதுக்கிடையில இதுவும் வாங்கியந்தனியா?'என ஒரு சிரிப்புடன்கதிரையில் அமர்ந்தார். 'நான் நம்பவே இல்லை, எனக்கு மெடிசின் கிடைக்குமெண்டு', என றாகினி கூறவும், தகப்பன் 'இங்க பாரம்மா, எல்லாம் இறைவன்ர செயல், அவன் மனம் விரும்பினால் தான் எதுவும் நடக்கும், நீ என்னதான் கிடைக்கப் போகுதோ எண்டு பயந்து பயந்து இருந்தாய், அந்தப்பயத்தால உன்னிடத்தில ஒருவிதமான பணிவு இருந்தது.

உன்ர செயலிலையும் ஒரு அமைதி இருந்தது, அதாலதான் உனக்கு இந்தப் பெறுமதிமிக்க பரிசு கிடைச்சிருக்குது. இனித் தான் உனக்கு பணிவும் அடக்கமும் அதிகம் வேணும். சந்தோசத்தில துள்ளக்கூடாது, அதிக சந்தோசம் நமது வாழ்க்கையை திசை திருப்பிப் போடும், நான் இப்ப சொல்லிறத உன்ர வாழ்க்கையில வேதவாக்காக கடைப்பிடிக்க வேணும்' எனக் கூறிக்கொண்டு, தனது கையிலுள்ள கப்பில கவனம் செலுத்தினார்.

நாட்கள் உருண்டோடின, செல்வி டொக்டர் றாகனி வேலாயுதம் ஒரு புதிய சேவைக்கு புறப்பட ஆயத்தமானாள். 'அம்மா நீங்களும் வாறீங்களா?, உங்கட ஊர்தானே, வாங்கோ, எனத்தாயை அழைத்தவள், தகப்பனின் முகத்தையும் ஆவலோடு பார்த்தாள்,'அப்பா' என அன்போடு அழைத்தபடி தகப்பனின் கைகளைப்பிடிக்க 'நானும் வாறன் பிள்ளை, நீ,என்ன செய்யிறாய் எண்டு பாக்கத் தானே வேணும்', என்றவாறு புறப்படத் தயாரானார், அப்போது வாகனம் ஒலி எழுப்ப தனது பொருட்களை தமையனிடம் ஒப்படைத்து விட்டு, தாய் தந்தையுடன் தானும் வாகனத்தில் ஏறிக்கொண்டாள்.

எல்லோரும் தாயின் சொந்த ஊரான வல்லைபுர வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பாடசாலையில் இறங்கினர். ஊரவர்கள் வரவேற்றனர்.

அந்த ஊர் வைத்தியர், தாதியர்களும் நின்றனர். எல்லோரையும் அன்புடன் அழைத்துக் கொண்டு பாடசாலைக்குள் நுழைந்தாள். எல்லாருடனும் அன்பாகப் பேசி அவர்களுடன் உறவாடினாள்.. வைத்தியப் பரிசோதனைகளை மேற்கொண்டு மாத்திரைகளையும் வழங்கினாள். ஊர் வைத்தியரின் உதவியுடன் சிலருக்கு கிளினிக் வசதியையும் செய்து கொடுத்தாள்.

பகல் உணவை உறவினர் வீட்டில் முடித்துக்கொண்டு திரும்புவதற்கு முயன்ற போது, ஒரு முதியவர் தாயின் கைகளை கண்ணில் ஒற்றி 'நீ பெரிய பாக்கியசாலி; பிள்ளை, கடவுள் உனக்கு தங்கமான பிள்ளைகளைத் தந்திருக்கிறார்.... நீங்களும் பிள்ளையளை நல்லபடியாய் வளத்திருக்கிறீங்கள். முக்கியமாய் மனிசரை மதிக்கச் சொல்லிக் கொடுத்து இருக்கிறீங்கள், இந்தச் சேவை மனப்பாங்கு எல்லாருக்கும் வராது, நல்லாய் இருப்பாயம்மா!' எனக் கண்ணீர் தழும்ப நிறைஞ்ச மனசோடு வாழ்த்தினார்.

அவரது வாழ்த்தை செவிமடுத்த தந்தையின் உள்ளம் குளிர்ந்தது . அவர்களிடம் இருந்து விடைபெற்று வீடு திரும்பினர்.

வேலாயுதம் மகளைப் பார்த்து 'றாகினி! பாத்தியா அந்தப் பெரியவரின்ர சந்தோசத்தை, இது தானம்மா உண்மை யான மகிழ்ச்சி, நாங்கள் வரேக்க எதையும் கொண்டு வரேலை, அதேபோல போகேக்கையும் எதையும் கொண்டு போகப் போவதுமில்லை, நீ கஷ்டப்பட்டு படிச்சதுக்கு கடவுள் இந்தத் தொழிலை தந்திருக்கிறான்.

அவன் மனம் விரும்பி உனக்கு தந்ததை நீ மற்றவருக்கு கொடுக்கவேணும். இந்த உலக வாழ்க்கையே அப்படித்தான். இறைவன் எங்களுக்குத் தந்ததை நாம் மட்டும் பயன்படுத்தக்கூடாது.

மற்றவர்களும் அதனால் ஓரளவு பயன் பெற்றால்தான் அதின்ர பலன் நமக்கு பூரணமாகக் கிடைக்கும். அந்த சந்தோசத்தைப் போல வேறொன்றும் கிடையாது, இண்டைக்கு என்ர மனம் நிறைஞ்சு இருக்குது, என்று கூறவும், தாய் றாகினியின் முகத்தை தடவி கைகளால் நெட்டி முறித்தாள்.

நாட்கள் நகர்ந்தன. நாடு கொரோனா வைரஸினால் முடங்கியது. அத்தியாவசிய சேவையில் உள்ளவர்கள் மட்டும் வேலைக்குச் சென்றனர். ஏனையோர் தமது பணிகளைவீட்டில் இருந்தவாறு மேற்கொண்டனர்.

வேலாயுதம் வீட்டிலையும் எல்லோரும் இருந்தனர்.

அந்த நேரம் பக்கத்து வீட்டில் இருந்து திடீரென அழுகுரலும், அகல்யாவின் சத்தமும் கேட்க, ரமேஸ் அந்த வீட்டிற்குள் நுழைந்தான். அங்கு அவர்களது ஒரே மகள் கைகால் நடுங்கியவண்ணம் எழும்ப முடியாமல்த் தள்ளாடினாள்.

அவள் தள்ளாடித் தடுமாறி விழுகின்ற நிலையைப் பார்த்த அந்தத் தாய், தந்தை மனம் தாங்க முடியாது தவித்தனர்.

அவர்களது தவிப்பை பார்த்த ரமேஸ் றாகினிக்கு கூற, அவளும் அவரகளது வீட்டிற்குச் சென்று சில மருந்துகளை கொடுத்து, தூங்க வைத்தாள். ரமேஸ் 'என்னதான் ஒரு பிள்ளையாக செல்லமாக இருந்தாலும் அவாவையும் இந்த உலகத்தோடு ஒத்து வாழ வழிப்படுத்தியிருக்க வேணும்., வாழ்க்கையை பற்றி எதுவும் தெரியாமல் போயிட்டு, நினைச்சது எல்லாம் கிடைக்க,எது சரி, எது தவறு எண்டு ஒண்டும் புரியேலை... அகல்யாவைச் சுகப்படுத்துகிறது உங்கட கையிலைதான் இருக்குதன்ரி.... நீங்கள் தான் இனி நல்லாய்க்க வனிக்கவேணும் எனக்கூறி, றாகினியுடன் வீட்டுக்குத் திரும்பினான்.

அவர்களுக்கு நன்றி சொல்லி அனுப்பிய தகப்பன், மிகுந்த மன வேதனையுடன் தலையில கைவைத்து அழத்தொடங்கினார். அவருடன் மனைவியும் சேர்ந்து கொண்டாள்.

அப்போது கதிரவேலர் மனைவியைப் பார்த்து 'பார் அந்தப் பிள்ளையளை, தகப்பன் சாதாரண லேபர், தாயும் ஏதோ ஒரு ஆபிஸில கிளார்க், ஆனால் பிள்ளையள், ம்... எல்லாம் நாங்கள் விட்ட தவறுகள் தான் காரணம்,... உனக்கு நினைவிருக்கா? இப்ப வந்து போறானே ரமேஸ், அந்தப்பிள்ளை அப்ப ஆறாம்,ஏழாம் ஆண்டு படித்திருப்பான். நான் கார் வாங்கி கோயிலுக்கு கொண்டு போவதற்காக றோட்டில விட்டப்போ, இந்தப் பிள்ளை அதை ஆசையோடு தொட்டுப்பார்த்தது.

அதுக்கு நீயும் அகல்யாவும் வாயில வந்தபடிஎல்லாம் பேசினனீங்கள், அந்தச் சம்பவத்திற்கு பிறகு இந்தப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கிறேலை அவன், ஆனால் இண்டைக்கு அந்தப் பிள்ளை எங்கட வீட்டுச்சத்தம் கேட்டதும் ஏதோ ஆபத்து எனடு ஓடி வந்திருக்கிறான்... இப்பத்தே நிலையில மருந்து மாத்திரைக்கெண்டு இவளை எங்க கூட்டிக்கொண்டு போகமுடியும், இவள் போடிற சத்தத்திற்கு வேற ஆக்கள் என்ன நினைப்பார்கள்.

இந்தப் பிள்ளைகள் எதையும் யோசிக்காமல்... வந்து உதவி செய்து போட்டுதுகள்.... இதே நிலை மாறி நடந்திருந்தால் அகல்யா போய் உதவி செய்திருப்பாளா?... இல்லை அவள் போக விரும்பினாலும் நாங்கள் விட்டு விடுவோமா?.. யோசிச்சுப்பார்... 'சீ... வெட்கமாய் இருக்கு.... அந்தத் தாய் தகப்பனும் விட்டுவிட்டினம்.... இப்ப எங்களுக்கு அதுகளின்ர உதவி தேவைப்படுகுது... றாகினி சொன்னதைப் பார்த்தியா? எந்த உதவி எப்ப தேவைப்பட்டாலும் தயங்காமல் போன் பண்ணச் சொல்லி நம்பரும் தந்திருக்கிறா... பெரிய பதவியில இருந்தாலும் இந்தப்பணிவும் உதவிசெய்யிற மனப்பக்குவமும் எங்களிட்ட எள்ளவும் இதுவரைகாலமும் இருக்கேலை... இந்தச் சிறுசுகளிட்ட இருந்து தான் படிக்க வேணும் எண்டு இறைவன் பாடம் புகட்டியிருக்கிறான்.

சுருங்கச் சொல்லப்போனால் மகாபாரதத்தில திருதராஷ்டிரர் போல நாங்கள் இருந்திருக்கிறம்... என அவர் கூறியதை மறுத்து 'என்ன நாங்களும் அடுத்தவன்ர சொத்தை பறிச்சோமா?' என மனைவி கேட்க... 'சொத்தைப் பறிச்சதுதான் உனக்குத் தெரிஞ்சிருக்கு.... மகாபாரதம் ஒரு கடல், அதில எவ்வளவோ கருத்துக்கள் இருக்குது, அதில ஒரு துளியாவது உணர்ந்து கொண்டு நடந்தாலே போதும் நம்மட வாழ்க்கை சிறப்பாய் அமைஞ்சு விடும்.... பாரதம் தெரிந்தால், மனத்தில பயம் வரும், பயம் வர பணிவு வரும், பணிவு வந்தால், எல்லாப் பண்புகளும் தன்னாலே வரும்..... அமைதி நிலவியது .

மேலும் 'துரியோதனனும் அவனது சகோதரர்களினதும் அழிவுக்கு யார் காரணமம் எண்டு நீங்கள் நினைக்கிறீங்க? அவர்களின் அழிவுக்கு வேற ஒருத்தரும் காரணமில்லை... அவர்களது தாய் தந்தையர் தான் காரணம். துரியோதனன் துச்சோதனன் போன்றவர்கள் தப்பு செய்யும்போது, தவறான பாதையில செல்லும் போது அவர்களைத் தடுக்காமல்... பெரியவர்கள் கூறிய விடயங்களை காது குடுத்துக் கேட்காமல், குருவினது, பெரியப்பா சித்தப்பாவினது கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்காமல்... பிள்ளைகளின்ர போக்கில போகவிட்டதால தான் அவர்கள் அனைவரும் அழிந்தார்கள்.

அதே வேலையைத்தான் நாங்களும் செய்திருக்கிறம்.... அவளைப்பற்றி யாராவது ஏதாவது தப்பாச் சொன்னால் அவர்கள் திரும்பகிட்ட வராதபடி முகத்தில அடிச்சாப் போல பேசி அனுப்பிப்போடுவம். ரீச்சமார் கூட தண்டித்தால், என்னதப்பு நீ செய்தாய்? ஏன் அடிச்சவா? எண்டு எப்பவாவது அவளிட்ட கேட்டிருப்போமா?... ஆனால் அவையளோட போய் எத்தனைநாள் சண்டை போட்டிருக்கிறோம், அதனால தான் பிள்ளையை பற்றி எதுவும் எங்களுக்குச் சொல்லாமலே அவர்களும் விட்டுவிட்டினம்... சொந்த பந்தமும் எங்களிட்ட அவளைப்பற்றி கதைக்க பயப்பிட்டினம்... ஏன் நாங்கள் அவர்களுக்கு குடுத்த மரியாதை அவ்வளவு... அதுதான், எல்லாத்துக்கும் சேர்த்து கிடைச்ச பரிசுதான் இது... இனியாதல் நாங்கள் மாறவேணும்... என அவர் கூறும்போது மகள் மெதுவாக அசைந்து 'அம்மா!' எனக் குரல் கொடுத்தாள்.

இருவரும் அவளுக்கருகில் சென்றனர். 'அம்மா எனக்கு யூஸ் வேணும்... என்று சொல்லவும், யூஸ் எடுப்பதற்காகச் சென்றவள், றாகினி கொடுத்த மாத்திரையையும் கலந்துகொடுத்தாள்.

அகல்யாவும் விருப்பத்தோடு வாங்கிப் பருகி எழும்புவதற்கும் முயற்சி செய்தாள். அப்போ தாயும் உதவி செய்ய 'அம்மா எனக்கு என்ன ஆயிற்று? கை கால் எல்லாம் சோருது, பெலம் இல்லாத மாதிரி இருக்குது, ஏனம்மா? என ஒன்றும் அறியாத மாதிரிக் கேட்க, மகளின் நிலையைக் கண்ணுற்ற தாய்மனம் வேதனைப்பட 'ஒண்டு மில்லையம்மா, நீ... உனக்கு ஆரோ... என்னவோ சாப்பிடத் தந்துவிட்டினம் போல... அதின்ர தாக்கந் தான் இது, எனக் கண்ணீருடன் கூறினாள்.

அகல்யா தாய் கூறியதன் காரணத்தை புரிந்து கொண்டாள். எதுவும் பேசாது அமைதியாக தாயின் தோளில் சாய்ந்தபடி பாத்ரூமுக்குள் சென்று கதவை மூடிக்கொண்டாள்.

அவள் வெளிய வரும்வரை காத்திருந்து அவளைத் திரும்பவும் அழைத்து வந்து சாப்பாட்டைக் கொடுக்க, வேண்டாவெறுப்போடு வாங்கிச் சாப்பிட்டாள்.

அவளது நடவடிக்கை தாய்க்கு வேதனையைக் கொடுக்க சாப்பாட்டை வாங்கி ஊட்டி விட்டாள். 'அம்மா! எனக்கு ஊட்டிவிட்டது ஞாபகம் இருக்கா?' எனவினாவ தலைகுனிந்தாள் தாய்.. 'கமலா அன்ரி தானே எனக்கு ஊட்டி விடுவா, எங்க?... அவா வரேலையா?' எனக் கேட்கவும,; 'இல்லையம்மா இனி அவா வரமாட்டா... நானும் வேலைக்கு... இனிப் போகமாட்டன்' எனக் கூறவும்,'என்னம்மா சொல்லுறீங்கள், நான் ஏதாவது தப்பா நடந்திட்டானா?... சொறியம்மா,' எனக் கூறி மௌனமானாள். 'இல்லையம்மா, எனக்கு இப்பதான் நான் விட்ட தவறுகள் புரியுது, அது தான் இப்ப நான் பென்சனுக்கு போடப் போறன்', என்று தாய் கூறவும் அகல்யா தாயின் முகத்தைப் பார்த்து புன்னகை புரிந்தாள். இதை அவதானித்த தாய்,தகப்பனின் முகம் மலர்ந்தது நாட்கள் உருண்டோடின. இரு வீட்டாரும் நட்புறவோடு பழகினர். றாகினியோடு அகல்யா நெருக்கமாகி விட்டாள்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இருவரும் ஒன்றாகச்சேர்ந்து அரட்டை அடித்து மகிழ்ந்தனர். இதனால் அகல்யாவின் வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின .கதிரவேலரும் மனைவியும் தமது தற்பெருமைகளை மறந்து அவர்களுடன் நெருக்கமாகினர்.

அன்றும் வழமைபோல வேலாயுதம் மதியச்சாப்பாட்டை முடித்துக் கொண்டு மாமரத்தின் கீழ் போடப்பட்டிருந்த சாய்மனைக் கதிரையில் படுத்துக் கண்மூடினார்.

அப்போ கதிரவேலர் வந்து முன்னுக்கு இருந்த மரக் குற்றியில் அமைதியாக அமர்ந்தார்.

அங்கு ஏற்பட்ட சிறு சலசலப்பினால் வேலாயுதம் கண்விழித்தார், அருகில் கதிரவேலரைக் கண்டதும் பதட்டத்தோடு 'என்ன சார்;? இங்க வந்து...' என இழுக்க,'பயண முடக்கம் தானே, வீட்டிலை இருக்க போர் அடிக்குது, அதுதான் உங்களோட கொஞ்ச நேரம் இருந்துவிட்டுப் போகலாம் என நினைச்சு வந்தனான்,' எனக்கூறவும்,' வாங்க உள்ளுக்க போவோம்.' எனக்கூறிய வண்ணம்,'அம்மா..! யார் வந்திருக்கிறாங்க என்று பாரன்', என்று படி ஏற,'வாங்க... எப்படி நல்லாய் இருக்கிறீங்களா?... மகள் எப்படிச் சுகமாய் இருக்கிறாளா? எனக் கேள்விகளை அடுக்க,'என்னம்மா வந்தவரை வாசல்லவைச்சு கேள்வி கேட்கிறாய்', எனக் கூறவும், மூவரும் சிரித்துக் கொண்டு கதிரைகளில் அமர்ந்தனர்.

ஓடியோடி வேலை செய்து என்னத்தை கண்டது,இந்தக் கொரோனா வைரஸ் வந்ததும் வந்துது, எல்லாத்தையும் புரியவைச்சுவிட்டுது தம்பி. அதுமட்டுமில்லை... என்னை பெரிய ஆபத்திலையிருந்தும் காப்பாற்றியிருக்குது.

இந்தப் பயணமுடக்கம் இல்லையெண்டால் மகளைப்பற்றிய விஷயங்கள் எதுவுமே தெரியாமல் போயிருக்கும். உங்கட அன்பும் கிடைக்காமல் போயிருக்கும், எல்லாத்துக்கும் மேல என்ர மகளை நான் திரும்பப் பெறமுடிஞ்சுது. அதுக்கு நீங்களும் ஒருகாரணம், எனக்கூறி அமைதியானார்,' ஒண்டுமில்லை சேர், ஏதோ நீங்கள் கும்பிட்ட கடவுள் கைவிடேலை, என ஆறுதல் கூறினார் கதிரவேலர்; தலையாட்டி அதைப் புரிந்து கொண்டார்.

அதென்ன தம்பி! யானைக்குட்டி பொம்மைகளிலை இரண்டு பேருடைய போட்டோவையும் ஒட்டி இருக்கிறீங்கள், என ஒரு சிரிப்போடு வினாவ, கணவன் மனைவி இருவரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தனர். பின் வேலாயுதம் ஒருசிரிப்போடு 'அதுவா அந்த உண்டியலுக்கு வயசு இருபத்தேழு, பின் பக்கத்தில திறந்து மூடக் கூடிய வசதியும் இருக்குது', எனக்கூற,'அப்படியா என்னத்துக்காக?' என ஆவலோடு கதிரவேலர் வினவினார்.

'எனக்கு முதல் முதலாக இவர் வேண்டித்தந்தது, இந்த உண்டியல் தான், மற்றது அவரோட அம்மா கொடுத்தது', என மனைவி கூறினாள்...'ஒண்டுமில்லை சேர், நான் தனிப்பிள்ளை, அம்மா எனக்கு சின்ன வய சிலையிருந்தே உண்டியல்ல காசு போடுகிற பழக்கத்தையும், சேர்த்த பணத்தை யாருக்காவது, தாய் தகப்பன் இல்லாத படிக்கிற பிள்ளையளுக்கு குடுக்கச் சொல்லியும் சொன்னவா.

அந்தப் பழக்கம் இப்ப எங்கள் எல்லாருக்கும் தொத்திக் கொண்டு விட்டது, என்ன இரண்டு பேரும் சம்பளம் கிடைச்சதும் ஒவ்வொரு மாதமும் ஐந்நூறு, அறுநூறு ரூபாய் போடுவம், வரிஷத்தில ஒருநாளைக்கு எல்லாரும் முதியோர் இல்லத்திற்கோ, அல்லது சிறுவர் இல்லத்திற்கோ போய், அந்தப்பணத்தில பொருட்களை வாங்கிக் கொடுத்து அவர்களுடன் சேர்ந்து சாப்பிடுவம்.

சின்னாக்களாய் இவர்கள் இருக்கும்போது அவர்களுடன் விளையாடுவார்கள், அங்க போய் வந்ததால இந்தப் பிள்ளையளுக்கு தங்களைப் பற்றிய தெளிவு, உதவி செய்யிற மனப்பாங்கு.. செலவில சிக்கனம், பணிவு, மற்றவர்களுக்கு மரியாதை கொடுக்க வேணும் எண்ட பண்புகள் என நிறைய கற்றுக்கொள்ள முடிந்தது... அதொரு சந்தோசம், பிள்ளைகள் தங்களைப் பற்றி உணர்ந்தால் தவறுகள் செய்ய மாட்டினம், அதுக்கான ஒரு வழிதான் இந்த உண்டியல்ல பணம் சேர்க்கிறது, இது இப்பவும் தொடருது, பிள்ளையளின்ர உண்டியல்கள் அவையளின்ர றூமுக்க இருக்குது', எனப் பெருமையோடு கூறினார்.

கதிரவேலர் எதுவும் பேசாது அமர்ந்திருந்தார்,'அம்மா சொல்லுவா,'தருமம், தரும்' தருமத்திலையே ஒளிந்திருக்கிற 'தரும்' எண்ட சொல்லை நினைவில வைச்சிரு, அது உனக்கு எல்லாந் தரும், படிக்காத மனிசிதான், ஆனால் தர்மத்தின் பலனை முழுக்க அறிஞ்சு எனக்கு வற்புறுத்திய தால, அதை நான் தொடர, என்னைப் பார்த்து பிள்ளையளும் தொடருகிறார்கள்' எனப் பெருமையோடு கூறினார். இப்போது தான் கதிரவேலருக்கு தான் விட்ட தவறுகள் புரிந்தன. வெட்கப்பட்டார், வேதனைப்பட்டார்,'

தம்பி! நான் இந்தப்பக்கத்தை பார்த்ததே இல்லை வெளிக்கிட்டால் தியேட்டர்... அல்லாட்டால் மலைப் பிரதேசப் பக்கம்போய், ஜாலியாய் இரண்டு மூன்று நாளைக் கழிச்சுப் போட்டு வருவம்... இதுதான் சந்தோசம் நிம்மதி என்று நினைச்சுப்போட்டன், இதெல்லாம் தப்பு என்டு எனக்கு இப்ப புரியுது,'தருமம்... தரும்' எவ்வளவு பொருத்தமான வாக்கு, நிம்மதியை சந்தோசத்தை அழியாச் செல்வத்தை தரும்.

ஆடம்பரமும் பகட்டும் அழிவைத்தான் ஆபத்தைத்தான் தரும் என்பதை உணர வைத்து விட்டீங்கள்', கலங்கிய கண்களுடன் எழுந்த கதிரவேலர், வேலாயுதத்தாரின் கைகளைப் பற்றி தனது கண்களில் ஒற்றிக் கொண்டு,'என்ர கண்ணைத் திறந்துட்டீங்கள்... 'உங்களோட கதைச்சதில எனக்கு இப்பஒரு தொம்பு வந்திருக்குது தம்பி... வாறன்' எனக் கூறிக்கொண்டு எழும்ப. வேலாயுதமும் மனைவியும் இன்முகத்துடன் அவரை வழியனுப்பினர்.

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 01



திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :01

இடமிருந்து வலம்

(01) கொரோனா தொற்று அதிகரிக்கும் போது இதுவும் நடைமுறைப்படுத்தப்படும்.
(06) குற்றமற்றவன்.
(08) வழிபடுதல், போற்றுதலையும் குறிக்கும்.
(10) குறிப்பிட்ட ஒரு பகுதியை நீக்குதல் அல்லது கட்டுப்படுத்தல்.
(11) மரியாதைக்குரியதாக இருந்தாலும் பாரத்தையும் குறிக்கும்.
(13) ஒரு தமிழ் மாதம். (குழம்பியுள்ளது)
(14) விடியல் பொழுது.
(15) உண்மையற்றது.
(16) சோகம். (குழம்பியுள்ளது)
(18) விவசாயம்.
(21) முகத்தின் பக்கவாட்டுப் பகுதி. (குழம்பியுள்ளது)
(22) வீடு திரும்பிவிட்டது.
(23) பாசறை.
(24) திறப்பு. (திரும்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

(01) விளையாட்டு வீரர்களுக்கு தேவையானது.
(02) தினந்தோறும். (குழம்பியுள்ளது)
(03) உலகம்.
(04) சூதாட்டத்தின்போது பயன்படுத்தப்படுவது. (குழம்பியுள்ளது)
(05) வழக்குத் தொடுப்பவர்.
(07) கரம் வழியாக உண்டாவதாகக் கருதப்படும் நன்மைதரும் பேறு. இந்தப் பெயரில் ஒரு திரைப்படமும் வெளிவந்தது. (குழம்பியுள்ளது)
(09) சூரியன்.
(12) கப்பல் தரித்து நிற்கும் கரையோரத்து இடம். (குழம்பியுள்ளது)
(14) மண்ணுலகம்.
(17) இசை மேலெழுகிறது.
(19) இல்லாள்.
(20) இரவுப்பொழுது தலைகீழாகி விட்டது.

நாட்டின் நிலைமை காரணமாக தபால் சேவை சீராக இயங்காமையால் மஞ்சரி குறுக்கெழுத்துப்போட்டி இதுகாலவரையில் இடம்பெறவில்லை. இவ்வாரம் முதல் குறுக்கெழுத்துப் மீண்டும் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்றது.

இந்த முதல் பத்தி எழுத்து முழுக்கவும் கசப்பாக அல்லாமல் இனிப்புச் சுவையும் கலந்த ஒன்று!.முதலில் இனிப்பை வழங்கி விடுகின்றேன்.

நேற்றைய சனிக்கிழமை, (11.12.2021) நம் காலத்தில் நாம் அறிந்து வியந்து போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மகா கவியின் பிறந்த நாள். அதுவும் 139ஆம் அகவை. அவன் 1882ல் பிறந்தவன்.

அந்த **'முண்டாசுக்கவி'** பாரதியாருக்கு ஆசை தீர நேற்று பிறந்த நாள் பலரும் வழங்கியிருப்பார்கள்.

என் பேனை கூட **"ஒரு முண்டாசுக்கவிஞரின் முஸ்லிம் நேசம்"** என வாயார வாழ்த்தி ஓர் ஆய்வுக்கட்டுரையை **'ஞானம்'** இலக்கிய இதழிலும், நேற்று வெளியான மூத்த **'தினகரன்'** பக்கத்திலும் பளிச்சிட்டு, மறைக்கப்பட்ட ஒரு தனித்துவமான பரிணாமத்தைப் பளிச்சிடச் செய்து விட்டது.

இங்கே அந்த 'முண்டாசுக் கவியின் ஒரு வித்தியாசமான படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவனது உயரத்திற்கு கம்பு ஒன்றைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு யாரையோ அடிக்க வருவது போல் தோற்றம்!அவனைப் பொறுத்த வரையில் உணர்ச்சிமிக்கவன், ஆக்ரோசக்காரன்.

நீண்ட கம்பு ஒன்றை காரணம் இல்லாமல் உயர்த்திப் பிடித்திருக்க மாட்டான்.

என் அனுமானத்தில் தெரிவது "தமிழ் தமிழ் என்று வாய் கிழிய கத்தி, தமிழுக்கு அமுதென்றும் பெயரிட்டு உரக்கக் கூவி த்திரிகிறீர்களே, உங்கள் மத்தியில் நடக்கும் தமிழ்க் கொலைகளுக்கு என்ன பெயர் சொல்லுங்கடா பயல்களா?" என உரக்கச் சத்தமிட்டு கம்பை உயர்த்தி அடிக்கப்போவது போல் இருக்கிறது!

139 அகவை பாரதி நிச்சயமாக செய்யக் கூடியவன்தான்.

இங்கே பிரசுரமாகியுள்ள மூன்று படங்களையும், தமிழ் வரிகளையும் படித்து திருத்த முடிந்தால் திருத்தி அந்த முண்டாசு கவியின் 'தமிழ் ஆத்மா' சாந்தி அடைய ஏதாவது செய்யப்பாருங்கள்.

கசப்பு–2

வருகை தராத தமிழகச் சட்டமன்ற (MLA) உறுப்பினர். வந்திருப்பதாகச் செய்தியும் படமும்...!?

கடந்த 04.12.2021 சனிக்கிழமைப் பொழுதில் தமிழகத்திலிருந்து வருகை புரிந்திருந்த **தமிழறிஞர், ஆய்வெழுத்தாளர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத்தலைவர், பேராசிரியர் காதர் முஹிதீன்,** திருச்சி நகரப் பள்ளிவாசல்கள் சம்மேளன காஜி சுல்தான் மன்பா மற்றும் குழுவினர் இங்கு நூல் வெளியீட்டு நிகழ்வுகளிலும், ஓரிரு வரவேற்புபசாரங்களிலும், தனிப்பட்ட ரீதியாக சந்தித்து கலந்து சிறப்பித்துச் சென்றிருக்கின்றனர்.

அந்த வகையில் இரு முக்கிய விஐபிக்களின் சந்திப்பில், தமிழகத் தேர்தலில் வாகை சூடி, தமிழ் நாடு சட்டசபையில் ஓர் உறுப்பினராக (MLA) ஜொலிக்கும் எனதினியவரான இளவல், **ஆளூர் ஷாநவாஸ், முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் முஹதீனுடன்** இங்கு வந்திருப்பதாக கருத்துத் தரும் நிழற்படமும் குறிப்பும் வெளியானது.!

அடக்கன்றாவியே!

தமிழக மழை, வெள்ள கஷ்டத்தில் மக்களுடன் மக்களால் திரியும் ஆளூர் ஷாநவாஸ், இலங்கை மழை, வெள்ளத்துடன் ஐக்கியப்பட வந்து விட்டதாய் கனவு கண்டு அல்லது கற்பனையில் பார்த்து செய்தியும் படமும் போட்ட **"மாமனிதன்'** யார் அய்யா?

உண்மையில் இடம்பெற்றிருக்க வேண்டிய படக்குறிப்பு இப்படி:

"இந்திய யூனியன் மு. லீ. தேசியத் தலைவர் **காதர் மொய்தீன்,** திருச்சி நகரப் பள்ளி வாசல்கள் சம்மேளன **காஜி சுல்தான் மன்பா** ஆகியோர்..." என்று இருக்க வேண்டும்.

இவ்வாறான மாபெரும் தவறோ, சறுக்கலோ ஏற்படுவதற்கு நிச்சயமாக நாளேடுகள் பொறுப்பாகாது.

அலைகடலுக்கப்பால் தமிழ்நாட்டின் அத்தனை முகங்களையும் பெயர்களையும், இலங்கைத் தமிழ் ஊடகத்தினர் தெரிந்திருப்பர் என எதிர்பார்க்க இயலாது.

அந்த வகையில், நிழற்படத்தையும் தகவல் குறிப்பையும் எழுதி ஆசிரிய பீடத்தில் ஒப்படைத்த "ஆசாமி" யே முழுப் பொறுப்பு.

எமக்கும் அந்த அறிவு சூனியத்தை அறிந்து வைத்துக்கொள்ள ஆவல்! ஆவல்!

இனிப்பு 1

இலங்கையுடன் நூற்றாண்டு காலத் தொடர்புகள் கொண்ட தமிழக ஊர்களுள் **"கீழக்கரை"** யும் ஒன்று.

இது, புகழ் பெற்ற இராமேஸ்வரம் சென்றடையும் வழித்தடத்தில் இராமநாதபுரத்தை ஊடறுத்து 12 கி.மீ தூரத்தில் உள்ளது.

இந்த ஊரின் கீர்த்தியையும் பெருமையையும் பல கள ஆய்வுகளில் அறிந்து மொத்தமாக ஐந்து தலைப்புகளில் ஐந்து நூல்களை என் பேனை உழ, அறுவடை செய்துள்ளேன். இந்தத் தொகையை எந்தத் தமிழ் நாட்டு எழுத்தாளர்களும் எட்ட இயலவில்லை என்பது வரலாற்றுப் பதிவு.

கடைசியான ஐந்தாவது,

"கீர்த்திமிகு கீழக்கரைக் கல்வி முன்னோடி" (2015) நூலை அர்ப்பணித்திருக்கிறது **'அல் –கலம்'** (பேனை) ஒருவருக்கு.

அதன் அர்ப்பணிப்பு வரிகள் சில இவ்வாறு அமைந்திருந்தன.

★ "கீர்த்திமிகு கீழை (கீழக்கரை) யில் மாணிக்க மனங்கொண்ட மாமனிதர்களுக்குப் பஞ்சம் இல்லை. **'அல் கலம்'** பிடித்து உழுவோருக்கும், அருந்தமிழை நாவுக்குள் நடமாடவிட்டு அரங்குகளில் ஒலிக்கச் செய்வோருக்கும் தமது இதயக் கமலங்களில் தனியிடம் வைத்திருப்பவர்களில் மிகச் சிலருள் ஒரு பெருமகனார் **'செரந்தீப்' ஹாஜி பி. ஆர்.எல். சதக் அப்துல் காதர்.**

இப்படி, எனது பேனையால் பதியப் பெற்ற ஹாஜி சதக் அப்துல் காதர் பெருந்தகைக்குக் கடந்த 05.12. 2021ல் இலங்கையில், அமெரிக்க தேசிய வணிகப் பல்கலைக்கழகம் ஏற்பாட்டில்,

சிறந்த சமூகப்பணிகளுக்கான **"கௌரவ டாக்டர்" பட்டம்** வழங்கப்பட்டது.

அன்னார் ஏக காலத்தில் தமிழகத்திலும் இங்கும் புரியும் நற்பணிகள் ஏராளம், ஏராளம்! இந்தக் கௌரவ டாக்டர் பட்டம் மிகப்பொருத்தமானதே.

பாராட்டி, வாழ்த்தி மகிழும் நல் லிதயங்களுடன் நமது பேனையும் இணைகிறது. தொய்வின்றி சேவைகள் தொடரவும் விரும்பி நிற்கிறது.

பல்கலைக்கழகத்திற்குள் இருக்கிறான் கொலைகாரன் அவனை வேட்டையாட வந்துவிட்டான் வேட்டைக்காரன்

6

"இதற்கு முன்பும் இந்த மாதிரியான பலகேஸ்களில் இப்படியான கடிதங்களை நான் பார்த்திருக்கிறேன். அதனால் இந்தக் கடிதத்தை பார்த்த உடனேயே என்னால் அதைச் சொல்ல முடியும் சேர்!"

"சரி... இந்தக் கவரில் இருக்கும் கை எழுத்து தீபிகாவுடையதல்ல என்று எப்படி கண்டு பிடித்தீர்கள்?"

"அதுக்கு இரண்டு மூன்று காரணங்கள் இருக்குது சேர். அதை சொல்வதற்கு முதல் இந்த கவரில் இருக்கும் கை எழுத்தையும் கடிதத்தில் இருக்கும் கையெழுத்தையும் கொஞ்சம் நன்றாக உற்றுப் பாருங்கள்!" என்றார் துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

அவர் இப்படிக் சொன்னதும், கவரில் எழுதப்பட்டிருந்த முகவரியில் இருந்த எழுத்துக்களையும் "கடிதத்தில் இருந்த எழுத்துக்களையும்,

மாறி மாறிப்பார்த்தார்.

ராமன் கஜன்.

இலக்கம் 170/ 10

ரிதீகம,

கேகல்ல.

என்று அந்தக் கவரில் முகவரி எழுதப்பட்டிருந்தது.

"என்ன சேர் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா?"

"இல்லையே.... இரண்டிலும் இருப்பது ஒரே கையெழுத்து தானே...!"

"இல்ல சேர் நன்றாகப் பாருங்க இந்த கவரில் எழுதப்பட்டிருக்கும் முகவரியில் ஐந்து இடங்களில் குத்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்த குத்துப் பாருங்கள்... ஒரு வட்டம் போட்டு குத்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த கட்டத்தில் உள்ள குத்துக்களைப் பாருங்கள். அதில் வெறும் குத்து மட்டும் தான் வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது அதில் அந்த வட்டம் இல்லை!

இதோ இந்த கடிதத்தில் போடப்பட்டிருக்கும் குத்துக்களை நான் சிவப்பு பேனாவால் வட்டம் போட்டிருக்கிறேன். பாருங்கள்!"

அவர் இப்படி சொன்னபிறகு தான்,

அந்த வித்தியாசத்தை ரஞ்சன் கவனித்தார்.

அப்போதுதான்,

துப்பறியும் இன்ஸ்பெக்டரின் மதி நுட்பம் அவருக்குப் புரிந்தது.

"ம்... உண்மைதான் இன்பராஜ்... நான் அவசரப் பட்டுவிட்டேனோ என்று கூடத் தோன்று!" நாடியைத் தடவிய படியே சொன்னார் ராகவன்.

"இதில் இன்னுமொரு முக்கியமான விஷயமும் இருக்கிறது!"

"அது என்ன?"

"இந்த கொலைகாரன் அல்லது கொலையில் சம்பந்தப்பட்டவன் அவ்வளவு படித்தவனாக இருக்க முடியாது!"

"அதெப்படி இன்பராஜ் அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீர்கள்?"

"தீபிகா படித்த இந்த பல்கலைக்கழகத்தில் 'கலாசங்கம்' ஒன்று இருக்கிறது அதற்கு தீபிகா தான் செயலாளர். இந்த கலாசங்கம் அடுத்தமாதம் 20ம் திகதி ஒரு கலை நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. அதற்காக ஐந்து அதிதிகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கான அழைப்பிதழ்களில் எல்லாம் அவர்களது முகவரியை எழுதப்பட்டிருக்கிறது. இதோ பாருங்கள் சேர் ஐந்து கவர்களையும்!"

"நீங்கள் சொல்வது புரிகிறது இன்பராஜ். ஆனால் இந்த ஐந்து கவர்களையும் வைத்து கொலைகாரன் படிப்பறிவு இல்லாதவன் என்று எப்படி முடிவு செய்தீர்கள்?"

"அது வந்து சேர்... நாங்கள் பொதுவாக யாருக்காவது கடிதக் கவரை எழுதும் போது திரு, திருமதி, அல்லது செல்வி என்று எழுதுவோம்.... ஆங்கிலத்தில் என்றால் மிஸ், மிஸிஸ் மிஸ்டர் என்று எழுதுவோம். ஆனால் தீபிகா தயார்ப்படுத்தியிருந்த இந்த கடித கவர்களில் அப்படி எதுவும் இல்லாமல் மொட்டையாக பெயர் மட்டும் எழுதப்பட்டிருக்கிறது. இதையும் முக்கியமான ஒரு சாட்சியாக எடுத்துக் கொள்ளலாம்...!'

"வேறு ஏதும் சாட்சிகள் இருக்கிறனவா இன்பராஜ்?"

"கொலைகாரன் திட்டமிட்டே இந்தக் கொலையை செய்திருந்தாலும் சுவரில் எழுதப்பட்டிருந்த முகவரியை பொலிஸார் இவ்வளவு தீவிரமாக ஆராய்ந்து பார்த்திருப்பார்கள் என்று அவன் எதிர்பார்த்திருக்கமாட்டான். இன்னுமொரு முக்கியமான விஷயம் அதில் உள்ள எண்களில் கூட வித்தியாசம். குறிப்பாக 7ஆம் எண்ணை தீபிகா எழுதும் போது நடுவில் மெல்லிய (7) ஒரு கோடு போட்டு தான் எழுதுவாள் ஆனால் இந்த கவரில் உள்ள 7ஆம் எண்ணில் அப்படி (7) கோடு போடப்படாமல் வெறுமனே எழுதப்பட்டிருக்கிறது. இது கூட எங்களுக்கு ஒரு சாட்சியாக அமையும்"

"நீங்கள் சொல்லுவது சரி தான் இன்பராஜ் ஆனால் இந்த கையெழுத்தில் இவ்வளவு விஷயம் இருக்கிறது என்று நீங்கள் எப்போது கற்றீர்கள் என்று தான் எனக்குத் தெரியவில்லை. இவ்வளவு நுணுக்கமாக எப்படி நீங்கள் நினைக்கிறீர்கள்?" வியப்பை விழிகளில் கட்டிக் கொண்டு கேட்டார் O.I.C ரஞ்சன்.

"இது எனது தொழில் சேர்... எனது தொழிலோடு சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றி நான் நிறையவே ஆய்வு செய்வேன். இந்த கை எழுத்து தொடர்பாக பேராசிரியர் எட்லி கொலின் என்ற துப்பறியும் நிபுணர் எழுதிய "குற்றப் புலனாய்வும் கை எழுத்து ஆய்வும்" என்ற நூலை நானும் படித்திருக்கிறேன். அந்த நூலில் இது சம்பந்தமான நிறைய விஷயங்கள் எழுதப்பட்டிருக்கு!"

"உண்மையிலேயே நீங்கள் ஒரு சிறந்த துப்பறியும் நிபுணர்தான் இன்பராஜ். இந்த கொலை சம்பந்தமாக விசாரிக்கும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன். ஆனாலும் எனக்கு இன்னுமொரு பிரச்சினை இருக்கிறது?"

"அது என்ன சேர் அது?"

"நீங்கள் சொல்வதைப்போல் இந்தக் கவரில் உள்ள முகவரியை எழுதியிருப்பது கொலைகாரனாக இருந்தாலும் உள்ளே இருந்த கடிதத்தை எழுதியது தீபிகாதானே?"

"ஆமாம்.... அது உண்மை தானே"

"அப்படியானால் தீபிகா எழுதிய கடிதம் எவ்வாறு கொலைகாரன் கைக்குப் போனது?"

"அதை அவ்வளவு எளிதாகச் சொல்லிவிட முடியாது சேர். அதைப்பற்றி இன்னும் நிறைய விசாரணை செய்ய வேண்டியதிருக்கும். அந்த ரகசியம் எங்களுக்குத் தெரிய வரும் போது, கொலைகாரனும் எங்கள் கையில் சிக்கியிருப்பான்!"

"ஆமாம்... அதென்றால் உண்மை தன் இன்பராஜ்...!"

"சரி சேர்... அப்போ நான் இப்போதிலிருந்தே எனது விசாரணையை ஆரம்பிக்கிறேன்...!"

"ஆகட்டும்... வேறு ஏதாவது உதவி தேவையா?"

"இந்த கேஸ் சம்பந்தமாக இருவரையில் விசாரணை செய்த இன்ஸ்பெக்டர் ராகவன் இருக்கிறாரா?"

"ஆமாம் அவர் பக்கத்து பொலிஸ் ஸ்டேஷனில் தான் இருக்கிறார்!"

"சரி... அவரைக்கண்டு நான் கொஞ்சம் பேசவேண்டும். இந்த கேசில் அவருடைய ஒத்துழைப்பும் இன்னும் இரண்டு கான்ஸ்டபில்களுடைய உதவியும் எனக்கு தேவைப்படும் அதே போல் இன்னுமொரு பெண் பொலிஸும் அவசிம் தேவை. மேலும் தேவைப்பட்டால் எனது துப்பறியும் பிரிவில் இருந்து இரண்டு பேரை எடுத்துக் கொள்கிறேன்."சரி இன்பராஜ். இந்த பைல்களையும் வைத்துக் கொண்டு உங்கள் விசாரணையை ஆரம்பியுங்கள்.. ஓல்த பெஸ்ட்!"

"நன்றி சேர்!" என்று கூறிவிட்டு,

இன்னுமொரு மர்மத்தைத் துலக்குவதற்காக அங்கிருந்து வெளியேறினார், இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

மறுநாள் காலையில்,

தீபிகா தீபன் கொலை வழக்கு விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னால்,

இன்ஸ்பெக்டர் ராகவனை அழைத்து அவருடன் கலந்துரையாடினார் அதே நேரம்,

இந்த விசாரணைகளில் பங்களிப்பு செய்த சார்ஜன் வஸந்தனும் அதில் கலந்து கொண்டார்.

"அப்போ உங்கள் விசாரணைகளின் முடிவு படி இதுகொலை இல்லை தற்கொலை... அப்படித்தானே ராகவன்!"

"ஆமாம் சேர்!"

"ஆனாலும் இது ஒரு கொலைதான் இன்ஸ்பெக்டர் ராகவன். இதை நான் சாட்சியங்களோடு ரஞ்சன் சேருக்கு எடுத்துக் கூறிவிட்டேன். இது பற்றி நீங்களும் கேள்விப் பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்!"

"ஆமாம் ரஞ்சன் சேர் அதுபற்றிய முழுவிபரங்களையும் எனக்குத் தெரிவித்தார். இது சம்பந்தமாக உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும் சொன்னார். ம்... சேர் இவர் சார்ஜன் வஸந்தன். இந்த கொலை கேசில் இவரும் விசாரணைகளை நடத்தியுள்ளார்.

"சரி இப்போது உங்கள் இருவருக்கும் ஒருவேலை கொடுக்கப்போறேன்... நீங்கள் இருவரும் அதை திறமையாக செய்து முடிக்க வேண்டும். ஒரு வாரத்திற்குள் எனக்கு ரிப்போட்வேண்டும்!"

"ஆகட்டும் சேர்!"

"ம்... இன்ஸ்பெக்டர் ராகவன் இந்த கேஸ் சம்பந்தமாக நீங்கள் செய்த விசாரணை போதாது. அதனால் தான் கொலையை தற்கொலை என்று முடிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் தீபிகாவின் அண்ணன், கஜனின் உறுதியான நிலைப்பாட்டினால் அந்த நிலை மாறியது. எங்களுக்கு இப்போது என்ன தேவை என்றால் இந்த இருவரையும் கொன்ற கொலைகாரன் யார் என்பதை கண்டுபிடிப்பது தான். நீங்கள் கண்டுபிடித்த சாட்சிகளின் படி இது தற்கொலைதான் என்று நிரூபணமாகி இருந்தால், உண்மையான ஒரு கொலைகாரன் தப்பிச் சென்றிருக்கலாம் இல்லையா?"

"உண்மைதான் சேர்!" இருந்த படியே சொன்னார் இன்ஸ்பெக்டர் ராகவன்

"சரி... நீங்கள் இருவரும் முதலில் என்ன செய்ய வேண்டுமென்று நான் இப்போது சொல்லுகிறேன்!"

அவர் சொல்வதைக் கேட்பதற்கு இருவரும் ஆவலருடன் காத்திருந்தார்கள்!

(இளமை வளரும்)

யாவரும் கேளீர்

பல்சுவை இலக்கியத் திரட்டு 69

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

("யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்)

ஈழத்து நவீன இலக்கியச் செல்நெறியில் மார்க்சியக் கருத்தியலை முன்வைத்த முதல்வர் பேராசிரியர் கைலாசபதி

பேராசிரியர் க. கைலாசபதியின் 39ஆவது அமரத்துவ ஆண்டு இதுவாகும். அன்னாரது நினைவுகளை மீட்டி அஞ்சலி செலுத்துவதாக இப்பத்தி அமைகிறது.

பேராசிரியர் கைலாசபதி மலேசியா கோலாலம்பூரில் 0504 1933இல் கனகசபாபதி தில்லைநாயகி தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை மலேசியாவில் பெற்ற இவர், 1945இல் இலங்கை வந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியிலும் பயின்றவர். தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பட்டப்படிப்பை நிறைவு செய்தவர். பின்னர், பேர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவுசெய்து இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வித்தியாலங்கார வளாகத்தில் தமிழ் மற்றும் இந்து சமயபீடத்திற்குத் தலைவராகப் பணியாற்றிவர்.

பேராசிரியர் கைலாசபதி தினகரன் பத்திரிகையில் பொறுப்பாசிரியராக 1957 முதல் 1961வரை பணியாற்றியவர். அக்காலத்தில் தினகரனை ஓர் இலக்கிய இதழாக ஆற்றிய பெருமை பேராசியருக்கே உரியது.

1974இல் அவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் தலைவராகப் பணியேற்றார்.

பேராசிரியர் 1964இல் மாணிக்க இடைக்காடரின் மகள் சர்வமங்களத்தைத் திருமணம் செய்தவர். இவர்களுக்கு சுமங்களா, பவித்திரா ஆகியோர் புதல்விகளாவர்.

பேராசிரியர் மார்க்சிய அறிவியல் தளத்திலிருந்து தமிழ் இலக்கியங்களையும் அவற்றின் சமுதாயச் சூழலையும் காலகட்டங்களாக வகைப்படுத்தியவர். தமிழ் இலக்கியப்பரப்பில் ஏறத்தாழ எல்லாக் காலகட்ட இலக்கியங்களையும் சங்ககாலம் முதல் நவீன இலக்கிய காலகட்டம் வரை கருத்தில் கொண்டு ஆய்வு செய்தவர். இலக்கியத்தில் சமூகவியல் நோக்கிற்கு அழுத்தம் கொடுத்தவர். ஒப்பியல் ஆய்வினை மேற்கொண்டவர், இலக்கியங்களை வரலாற்றுச் சூழலில் பொருத்தி நோக்கியவர். தேசிய இலக்கியம் என்னும் கருதுகோளை முன்வைத்து எழுத்தாளர்களை ஊக்குவித்தவர். இலக்கியம், இலக்கியத்திறனாய்வுத் துறையில் இருபது நூல்கள்வரை எழுதியவர். பேராசிரியர் இலங்கையிலும் தமிழகத்திலும் இலக்கியவாதிகளின் மதிப்புக்குரியவராகத் திகழ்ந்தார்.

பேராசிரியர் கைலாசபதி தனது 49ஆவது வயதில் 06.12.1982இல் அமரரானார்

மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளம்

யாழ் மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் அவர்களின் தூய கரங்கள் தூய நகரம் என்னும் திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாக யாழ்நகரில் அமைந்துள்ள நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியமுடைய ஆரியகுளம் புனரமைக்கப்பட்டுள்ளது. தியாகி அறக்கொடை நிறுவனத்தின் உரிமையாளர் வாமதேவா தியாகேந்திரனின் நிதி அனுசரணையுடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு, டிசம்பர் 2ஆம் திகதி பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வெளிவந்த தமிழ் ஊடகங்கள் தூரநோக்குடன் தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்தும் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்ற வேண்டுதலை முன்னெடுத்து வந்திருக்கிறது. அவ்வேண்டுதலில் ஒன்றை நிறைவு செய்திருக்கும் அரிய வரலாற்றுப் பணியாகவே இன்று யாழ்ப்பாண மாநகர சபையால் முன்னெடுத்துள்ள

ஆரியகுளம் மீள்புனரமைப்புப் பணியாகும். இது யாழ்ப்பாண நகரை அழகுபடுத்தும் இயற்கை சார்ந்த மரபுரிமைச் சின்னம் என்பதற்கும் அப்பால் இது யாழ்ப்பாண அரசகால வரலாற்றையும், பண்பாட்டையும் நினைவுபடுத்திக்காட்டும் மரபுரிமைச் சின்னம் என அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆரியகுளத்தை யாழ்ப்பாண அரசுடனும், அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும்போது, ஆரியகுளம் என்ற பெயர் எவ்வாறு வந்தது? என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தில் சோழப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து எழுச்சியடைந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு அதன் சமகாலத்தில் தென்னிலங்கை மீதும், வட இலங்கைமீதும் ஆறு தடவைகளுக்கு மேல் படையெடுத்தது. இப்படையெடுப்புக்களின் தளபதிகளாக, இருந்தவர்களே ஆரியச்சக்கரவர்த்திகள். இவர்கள் கி.பி.13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர். இதனால் இவ்வரசு ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு என்றே அழைக்கப்படுகின்றது. யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த தொடக்ககால மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்பதை ஒரு வம்சப் பெயராகக் கொண்டு தமது பெயருடன் ஆரியன் என்ற பெயரையும் இணைத்துக் கொண்டனர்.

ஆரியச்சக்கரவர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசைக் காலப்போக்கில் சுதேச மன்னர்களும் ஆட்சி செய்தனர். இவ்வரசு போத்துக்கேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை (1619 இல்) ஏறத்தாழ 350 ஆண்டுகள் சுதந்திர தமிழரசாக ஆட்சியில் இருந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் ஆரியச்சக்கர வர்த்திகளின் ஆட்சியை நினைவுபடுத்தத் தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. கிடைக்கும் ஆதாரங்களை வைத்துப் பார்க்கும்போது ஆரியகுளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவரத்திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகத் தெரிகின்றது.

மரபுரிமைச் சின்னம் என்பது அது சார்ந்த இனத்தின், பண்பாட்டின் அடையாளம், ஆணிவேர் எனப் பார்க்கப்படுகின்றது. விலைமதிக்க முடியாத இம்மரபுரிமைச் சொத்துக்களைச் சிறிதும் பிசகாமல், எதிர்காலச் சந்ததியிடம்; கையளிக்க வேண்டிய நம்பிக்கை நாற்றுக்களாகவும் இவை காணப்படுகின்றன. தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒருமித்த கருத்துக்கள் இருப்பதையே காணமுடிகின்றது. யாழ் மாநகரசபை சிறந்ததொரு பணியை நிறைவேற்றியிருக்கிறது.

இந்தியாவில் இஸ்லாத்தின் பெருமையைப் பறைசாற்றும் குதுப்மினார் கோபுரம்

டெல்கி இந்தியாவின் தலைநகராக விளங்குகிறது. இதற்கு 3000 வருட வரலாறு உண்டு. மகாபாரதத்தில் வரும் இந்திரப்பிரஸ்தம்தான் இப்போதுள்ள டெல்லி எனக் கூறுகிறார்கள்.

டெல்கியில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இடங்களில், 'குதுப்மினார்' என்னும் கோபுரமும் ஒன்றாகும். உலகில் உள்ள செங்கற் கோபுரங்களில் இதுவே மிக உயரமானது. இதன் உயரம் 237.8 அடியாகும். இந்தியாவின் முதலாவது முஸ்லிம் மன்னனான குத்புத்தீன் என்பவனால் 1193இல் இதன் கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட்டு அவனது வழித்தோன்றல்களால் 1386இல் கட்டி முடிக்கப்பட்டதாம்.

உருளை வடிவமான இந்தக் கோபுரத்தின் அடிப்பாகம் 14.3

மீற்றர் விட்டமும், மேற்பகுதி 2.75 மீற்றர் விட்டமும் உடையது. தூரத்திலிருந்து பார்க்கும்போதே இதன் கம்பீரம் பிரமிக்க வைக்கிறது.

இந்தக் கோபுரத்தோடு இணைந்த ஒரு முஸ்லிம் பள்ளிவாசல் உள்ளது. இந்தப் பள்ளிவாசல் 'குவ்வாத், துல் இஸ்லாம் மசூதி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதுவே இந்தியாவின் முதலாவது பள்ளிவாசலாகும். இது 1198இல் கட்டப்பட்டது. இஸ்லாத்தின் பெருமையைப் பறைசாற்றுவதற்காக இக்கோபுரம் கட்டப்பட்டதாகவும் கருத்து நிலவுகிறது.

இந்தக் குதுப்மினார் வளாகத்தின் கிழக்கு வாசலில் ஒரு கல்வெட்டு ஆங்கில மொழியில் உள்ளது. அதில் 27 இந்துக் கோயில்களை இடித்து அந்த இடிபாடுகளைக் கொண்டே இங்குள்ள முஸ்லிம் பள்ளிவாசலும் குதுப்மினார் கோபுரமும் கட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குதுப்மினார் கோபுரத்தின் ஒவ்வொரு மாடியைச் சுற்றியும் 'பல்கணிகள்' உள்ளன. இந்தப் பல்கணிகளை கற்களால் செதுக்கப்பட்ட முண்டுகோல்கள் தாங்கிப் பிடிக்கின்றன.

இந்த முண்டுகோல்களுக்கு இடையே தேன்கூடுகள் போன்ற அமைப்பில் சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கோபுரத்தின் வடக்குப்புற வாசலில் அடியிலிருந்து உச்சிவரை 379 படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் படிகளில் ஏறி ஒவ்வொரு மாடிகளுக்கும் செல்லமுடியும். இந்தக் கோபுரத்தின் பல இடங்களில் அரபு, நாகர எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவை இந்தக் கோபுரம் தொடர்பான வரலாற்றைக் கூறுவனவாக அமைந்துள்ளன. சில குறான் வாசகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குதுப்மினார் வளாகத்தில் வியப்பூட்டும் ஓர் இரும்புத்தூண் உள்ளது. 7 மீற்றர் உயரமான இந்தத் தூணில் சமஸ்கிருத பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த இரும்புத்தூண் 1600 வருடங்களாக மழையில் நனைந்து வெயிலில் காய்ந்த போதும் துருப்பிடிக்காமல் இருப்பதை உல்லாசப் பயணிகள் வியப்புடன் பார்க்கின்றனர். இந்தத் தூண் பீகார் மாநிலத்தில் உள்ள விஷ்ணுபாத மலையில் உள்ள விஷ்ணுகோயிலில் இருந்து கொண்டுவரப்பட்டு நடப்பட்டிருக்கலாம் எனவும் விஷ்ணு கடவுளின் சின்னமாக இது விளங்குகிறது எனவும் அறிய முடிகிறது.

விஞ்ஞானிகள் பலர் இந்தத் தூண் எவ்வாறு ஆண்டாண்டு காலமாகத் துருப்பிடிக்காமல் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க பல்வேறு பரிசோதனைகள் மேற்கொண்டபோதும் அதற்கான காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை என எம்மிடம் கூறினார் அங்குள்ள பயண வழிகாட்டி. மெய்ஞ்ஞானம் சம்பந்தப்பட்ட விடயங்களை விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்க முடியாதல்லவா!

(இனி அடுத்த இதழில்)

படித்ததும் பகர்வதும் 74

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

இல்லங்களில் இளைஞர் தலைமைத்துவம்!

இளைஞர்களுக்கு தலைமைத்துவம் வழங்குவதில் அவர்களது வீடுகளே ஆரம்ப இடங்களாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் இளைஞர்களுக்கு உரிய இடமளிப்பதில் கவனம் செலுத்துவது குடும்ப உறவினர்கள் அனைவர்களதும் பொறுப்பாகும்.

பெற்றோர் வாலிப பருவத்திலுள்ள தமது பிள்ளைகளுக்கு, அவர்கள் ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி உரிய கௌரவத்தை வழங்கத் தவறக் கூடாது. பிற மனிதர்கள் முன் அவர்களை முறையற்று கண்டிக்கவோ, அவர்களை கேவலப்படுத்தி பேசவோ, அவர்களது குற்றங்களை சுட்டிக் காட்டி கதைப்பதோ கூடாது. மாறாக அவர்களது நல்லவைகளை சிறப்பித்து கூறவும், அவர்களது நல்ல அடைவுகளை பெருமைப்படுத்தி எடுத்துரைக்கவும், அவர்களது சிறப்புகளை அவர்களது முன்னிலையிலேயே பாராட்டிக் கூறவும் வேண்டும்.

இவ்வாறு செய்யும் போதுதான் அவர்கள் மகிழ்ச்சியடைவதோடு, தமது ஆற்றல்களையும் திறமைகளையும் விருத்தி செய்வதில் ஆர்வம் கொள்வார்கள். வீட்டில் நடைபெறும் முக்கிய விடயங்களில் தீர்மனங்களை எடுப்பதற்கு தமது வாலிப பிள்ளைகளது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெறுவதற்கு ஆர்வம் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்யும் போது அவர்களுக்கு தம்மைப்பற்றிய தன்னம்பிக்கை வளர்ச்சியடைவதோடு குடும்ப விடயங்களில் பொறுப்புணர்வும் ஏற்படும்.

தமது வாலிப பிள்ளைகள் ஏதேனும் தவறுகளை செய்தால் அவற்றை மிக நிதானத்தோடு அணுகி, அவர்களுக்கு புரிகின்ற வகையில் அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் எடுத்துக் கூறி திருத்திட முயற்சிக்க வேண்டும். சில தவறுகளை நேரடியாகவும், சிலவற்றை அவர்களது நண்பர்கள் மூலமாகவும், மற்றும் சிலவற்றை அவர்கள் மதிக்கின்ற, அவர்களுக்கு நெருக்கமான மூத்தவர்கள் மூலமாகவும் திருத்தி சீர்படுத்த முயற்சிப்பது சிறந்தது.

எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்திலும், அவர்களது தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் விதத்திலும், அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி நெறிப்படுத்த வேண்டும். பொறுப்பான விடயங்களை அவர்களிடம் கையளித்து, அவற்றை அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்ற வழிகாட்ட வேண்டும். இத்தகைய செயற்பாடுகள் மூலம் அவர்கள் தமது வீடுகளில், பொறுப்புக்களை ஏற்று சிறந்த தலைமைத்துவத்தை வழங்கும் பண்புகளை வளர்த்துக் கொள்வார்கள். எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாக உருவாகுவார்கள்.

நெஞ்சுக்கு நீதி

எண்ணம் எப்போதும் தூய்மை கொண்டால்
என்றும் வாழ்வினில் இன்பங்கள் பெருகும்
தின்னம் இறையோன் நல்லருளும் நிறையும்
திடமாய்த் தரணியில் மகிழ்ச்சியும் பொங்கும்!

வாசிக்க ஒரு நூல்

'அனுராதா கதைகள்'

தொடர்ச்சியாக எழுதி வந்தாலும் தமது ஆக்கங்களை புத்தகமாக வெளியிட முடியாமலிருக்கும் எழுத்தாளர்களுக்கு கரம் கொடுக்கும் வகையில் அவர்களது முதலாவது நூலை, தனது 'புரவலர் புத்தகப் பூங்கா' மூலம் வெளியிட்டு வருகிறார் புரவலர் ஹாசிம் உமர். இந்த வரிசையில் 34வது நூலாக, அனுராதா பாக்கியராஜாவின் **'அனுராதா கதைகள்'** வெளிவந்தது.

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட அனுராதா பாக்கியராஜா 1968ம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொடர்ந்து எழுதி வருகிறார். இவரைப் பற்றியும் இவரது ஆக்கங்கள் பற்றியும், தொல்லியல் ஆய்வாளர் – எழுத்தாளர் செல்வி. க. தங்கேஸ்வரி பின்வருமாறு குறிப்பிடுகிறார்,

"அனுராதா பாக்கியராஜா நாடறிந்த சிறுகதை எழுத்தாளர், சிறுகதை மட்டுமல்ல சிறந்த இலக்கியப் புலமை வாய்ந்தவர். இவருடைய சிறுகதைகள் பிரபல பத்திரிகைகளில் மட்டுமல்ல பல இலக்கிய மலர்களிலும் இடம் பெறுவதோடு பரிசில்களும் பெறுவதுண்டு. சிறுகதைக்குரிய கரு, அதில் நிகழும் சம்பவம், வட்டார வழக்கு, கற்பனைவளம், யதார்த்தம், எதிர்பாராத முடிவு, ஆசிரியரின் எண்ண வெளிப்பாடு போன்றன அமையப் பெற்ற நல்ல சிறுகதைகள் அனுராதாவின் சிறுகதைகளாகும்."

சுமார் நான்கு தசாப்தங்களாக எழுத்துத்துறையில் ஈடுபாடு கொண்டு உழைத்த இவரின் முதலாவது நூலாக 'அனுராதா கதைகள்' என்ற இச்சிறுகதைத் தொகுதி புரவலர் புத்தகப் பூங்காவினால் வெளியிடப்பட்டுள்ளது

நூல்: **அனுராதா கதைகள்**, நூலாசிரியர்: **திருமதி அனுராதா பாக்கியராஜா**, முதற்பதிப்பு:**நவம்பர் 2013,** பக்கங்கள்: **X + 92,** விலை: **280/00**, வெளியீடு: **புரவலர் புத்தக பூங்கா**, இல. 25 அவ்வல் சாவிய ரோட், கொழும்பு14, தொடர்புகளுக்கு: **0777707070**

என் கேள்விக்கென்ன பதில்?

இன்றைய எனது கேள்விக்கு சிரேஷ்ட எழுத்தாளர்,கலைஞர், காவியாபிமாணி, கலாபூஷணம் கலைவாதி கலீல் பதில் தருகிறார்.

கேள்வி: சில வானொலி, தொலைக்காட்சிகளில் செய்திகளை வாசிக்கும் சிலர் தமிழை சரியாக உச்சரிப்பதில்லை என்ற குற்றச்சாட்டை தொடர்ச்சியாக முன்வைக்கும் நீங்கள் அதனை சீர்திருத்த என்ன செய்யலாம் என்று கூறுவீர்களா?

பதில்: இலங்கை வானொலியின் முதன்மை அறிவிப்பாளர், எஸ்.பி. மயில்வாகனம் முதல் நடராஜன், ஜோர்ஜ் சந்திரசேகரன், வி. ஏ. கபூர், பீ. எச். அப்துல் ஹமீத், சற்சொரூபவதி, ராஜேஸ்வரி சண்முகம் போன்ற சிறந்த அறிவிப்பாளர்கள் பலரை இவ்வேளையில்நான் நினைவு கூறுகிறேன்.

"எழுத்துப் பிழையை மன்னிக்கலாம்; ஆனால் கருத்துப் பிழையை மன்னிக்க முடியாது" என்பர். ஆனால் உச்சரிப்புப் பிழையை மன்னிக்கவே முடியாது! என்பது என் கொள்கை!

உச்சரிப்பில், பிழைவிடும்போது அர்த்தம் அனர்த்தமாகிவிடும். அதிலும் இலத்திரனியல் ஊடகங்களில் பணியாற்றும் புதிய, பழைய அறிவிப்பாளர்கள், மேடை அறிவிப்பாளர்கள் விடும் உச்சரிப்புத் தவறுகளை என்னால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. "ஐயோ பாவம்" என்று கூறிவிட்டுச் சும்மா இருந்து விட முடியுமா? என்ன?

"இன்று மளை நாட்டில் நள்ளமலை பெய்யும்" .... திங்கல்முதல் வெள்ளி வரை காளை (காளைமாடு), பத்து மனிக்கு குள (குளத்திலுள்ள) தெய்வம்" (குலதெய்வமாம்!)" ...

"கடத்தப்பட்ட முதலைக்குட்டிகள் (முதிரைக் குற்றிகள்) லொறியொன்றில் கண்டு பிடிக்கப்பட்டது" ...

இவ்வாறு நூற்றுக் கணக்கில்...

நான் கூறுவது இதுதான். தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களில் எட்டு எழுத்துக்களை முறையான தொனியில் உச்சரிக்கக் கற்றுக் கொண்டால் உச்சரிப்புத் தவறின்றி அழகாக அறிவிப்புச் செய்யலாம். அவ்வெழுத்துகளாவன: ர, றகரங்கள், ல, ள, ழகரங்கள், ன, ண, நகரங்கள் (ர, ற, ல, ள, ழ, ன, ண, ந,) இவற்றுக்குப் பயிற்சியும் தேவை.

'இலத்திரனியல் ஊடகங்களில் ஒழுங்கான உச்சரிப்புப் பயிற்சி அளிப்பதற்கென்று ஒரு ஒழுங்கான சிறந்த தமிழ் ஆசானை நியமித்தல் நன்று' என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். வேறென்ன சொல்ல.....?

தகவல் களஞ்சியம்

வாரத்திற்கு நான்கரை நாள் மட்டுமே வேலை!

தொழிலாளர்களின் வாழ்க்கை நலனை அபிவிருத்தி செய்யும் தூய நோக்கில் சட்டங்களை கொண்டு வருவதும், அவற்றை அமுல் செய்வதும் இன்றைய காலத்தில் அபூர்வமாகவே நடைபெறுகின்றன. அத்தகைய ஒரு நல சட்டத்தை அமுல்செய்ய முன்வந்துள்ளது ஐக்கிய அரபு இராச்சியம்.

வாரத்திற்கு நான்கரை நாள் வேலை முறைமையினை, எதிர்வரும் 2022 ஜனவரி 1 முதல் அறிமுகப்படுத்துவதாக ஐக்கிய அரபு இராச்சியம் அறிவித்துள்ளது. அதன்படி வெள்ளிக்கிழமை அரைநாள் விடுமுறையும், சனி மற்றும் ஞாயிறு தினங்களில் முழு விடுமுறையும் வழங்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம், உலகளாவிய ரீதியில் வாரத்துக்கு ஐந்து நாள் வேலை என்பதை விடவும் குறைவான தேசிய வேலை வாரத்தை அறிமுகப்படுத்திய உலகின் முதல் நாடாக ஐக்கிய அரபு இராச்சியம் மாறவுள்ளது.

இந்த ஏற்பாட்டின்படி வாரத்தில் வேலை நாட்கள் திங்கட்கிழமை தொடங்கி வெள்ளிக்கிழமை பிற்பகலுடன் முடிவடையும்.

மத்திய அரசு ஊழியர்களுக்கான வேலை நேரம் காலை 7.30 மணி முதல் மாலை 3.30 மணி வரைஒரு நாளைக்கு எட்டரை மணி வேலை நேரம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமைகளில் ஊழியர்கள் நாலரைமணி நேரம் வேலை செய்வார்கள்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இந்த நடவடிக்கை 'தொழில்வாழ்க்கை சமநிலை'யை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேசும் கவிதை

தனிமனிதன் மாறினால்

தனிமனிதன் மாறினால் உலகம் மாறும்!
சரியான வழிநோக்கித் தான்முன் னேறும்!
இனிதான நல்வாழ்க்கை யார்க்கும் வாய்க்கும்!
இடர்செய்யும் பிரிவினை வாதத்தைச் சாய்க்கும்!
மனமிணைக்கும் அன்புணர்த்தும் சகிப்புத் தன்மை,
மதநல்லிணக்கம், மற்றும் மதச்சார் பின்மை
புனிதமென இங்கிவற்றைப் போற்றி வந்தால்
புவிமிசை பேரமைதி குடிகொள்ளும் அன்றோ!

கவிஞர் இமயவரம்பன்

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2021 டிசம்பர் 12 ஞாயிற்றுக்கிழமை

சுவஸ்திகா,
துர்க்கா
ஆகியோரின்
அரங்கேற்றம்
டிசம்பர் 18 இல்

திருமணம் புகைப்படத்தில் நிச்சயிக்கப்படுகிறது

இங்கிலாந்தைச் சேர்ந்த அய்மி மெய்டன் மற்றும் நிக்வீலர் இருவரும் பல நூறு மைல்கள் தொலைவில் பிறந்து வளர்ந்தவர்கள். கல்லூரியில் சந்தித்து காதலித்து திருமணம் முடித்தார்கள். ஒருநாள் தமது பழைய குடும்ப புகைப்படங்களை பார்த்துக் கொண்டிருந்தபோது இருவருக்கும் பெரும் அதிர்ச்சி.

1994 ஆம் ஆண்டு நிக்வீலரின் குடும்பத்தினர் கென்ட் கடற்கரையில் எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்று இருந்தது. அப்போது 6 வயதான நிக்வீலர் தனது சகோதரி மற்றும் உறவின சிறுமிகளுடன் புகைப்படத்தில் இருக்கிறார். அந்த புகைப்படத்தில் சற்று தூரத்தில் ஐந்து வயதான மெய்டனும் தனது குடும்பத்தினருடன் இருக்கிறார். இந்த புகைப்படம் எடுக்கப்பட்டு 11 ஆண்டுகளின் பின்னர் தான் இருவரும் சந்தித்து பழகினார்கள்.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

எச்சரிப்பது குற்றமா?

பெரு நாட்டில் உள்ள மலை ஒன்றில் இருக்கும் இராட்சத பாறை ஒன்று சரிந்து விழும் அபாயம் இருப்பதாக 1961 ஆம் ஆண்டு அமெரிக்க விஞ்ஞானிகள் இருவர் எச்சரித்திருந்தார். அப்படி ஒரு நிலச்சரிவு ஏற்பட்டால் கீழே இருக்கு நகரங்கள் முற்றாக அழிந்துவிடும் என்று எச்சரித்தார்.

ஆனால் பெரு அரசோ எச்சரிக்கை விடுத்த அந்த விஞ்ஞானிகளை பிடித்து சிறையில் அடைக்க முயன்றார்கள். பயந்துபோன இருவரும் நாட்டை விட்டு தப்பி ஓடி விட்டார்கள். அந்த எச்சரிக்கை பற்றி மூச்சுவிடக் கூடாது என்று அரசு எச்சரித்தது. எனவே அந்த மலையையும் இராட்சதக் கல்லையும் மக்கள் மறந்து விட்டார்கள்.

சரியாக எட்டு ஆண்டுகளின் பின் பெருவில் இடம்பெற்ற அன்காஷ் பூகம்பத்தில் சொன்னபடி அந்தக் கல் சரிந்து வரலாற்றில் காணாத நிலச்சரிவு ஒன்று ஏற்பட்டது. இரு நகரங்கள் அடையாளம் தெரியாமல் புதையுண்டன. அதனால் 70,000 பேர் வரை உயிரிழந்தார்கள்.

கேலியாக நடந்த பெண் புரட்சி

அமெரிக்காவில் தேர்தல் மூலம் வெற்றி பெற்று மேயர் பதவி வகித்த முதலாவது பெண்ணின் பெயர் சுசன்னா எம் சல்டர். 1887 ஆம் ஆண்டு கன்சாஸ், அர்கோனியா நகரின் மேயர் பதவிக்காக நடந்த தேர்தலிலேயே அவர் வெற்றி பெற்றார்.

உண்மையில் பெண் புரட்சியால் நிகழ்ந்த ஒன்றாக இதனை கூற முடியவில்லை. மேயருக்கான தேர்தல் நடைபெற்றபோது, வேட்பாளர் பெயர் பட்டியலில் சல்டரி பெயரை ஒரு குழு இணைத்து விட்டது. இந்த ஆடவர் குழு செல்டருக்கு ஆதரவாக அவரது பெயரைச் சேர்க்கவில்லை, அடுப்பங்கரையில் இருக்கும் பெண்களை நையாண்டி செய்வதற்காகவே இந்த வேலையை செய்தது. ஆனால் எதிர்பார்க்காத வகையில் அவர் வெற்றிபெற்றுவிட்டார்.

அன்றே அமெரிக்கப் பெண்களின் ஜனநாயக அரசியல் தொடங்கியது.

ஏமாற்ற நினைத்த வங்கியை ஏமாற்றிய கில்லாடி

டிமிட்ரி அகர்கோவ் ரஷ்யாவின் மொஸ்கோ நகரைச் சேர்ந்த ஒரு வர்த்தகர். வங்கி, தொலைபேசி நிறுவனங்களின் தொல்லை அங்கேயும் இருக்கும் விவகாரம் தான். கடன் தருவதாகவும், பரிசுகள் தருவதாகவும் வரும் கடிதங்கள், தொலைபேசி அழைப்புகள் எப்போதுமே எரிச்சலைத் தரும்.

டிமிட்ரிக்கும் கடன் அட்டை தருவதாக பிரபல வங்கி ஒன்றில் இருந்து கடிதம் வந்தது. ஆனால் நிபந்தனைகள் கவர்ச்சிகரமாக இல்லை. கடன் அட்டை விளம்பரத்தில் வட்டி வீதம் பூஜ்யம் என்று போட்டிருந்தாலும் அநியாயத்திற்கு குறுக்கு வழியால் 43 வீதம் வட்டி அறவிடுகிறார்கள்.

ஆனால் டிமிட்ரிக்கு அருமையான ஒரு யோசதனை தோன்றியது. அந்தக் கடிதத்தை ஸ்கேன் செய்த அவர் கணினியில் ஏற்றி, கடன் அட்டை தருவதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை கச்சிதமாக தனக்கு ஏற்றபடி திருத்தம் செய்தார்.

அதில் வட்டி வீதத்தை

உண்மையாகவே பூஜ்யமாக மாற்றிய அவர், வங்கி இந்த விதியை கடைப்பிடிக்காத ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவர்கள் 3 மில்லியன் ரூபிள் அபராதம் செலுத்த வேண்டும் என்று சேர்த்துக் கொண்டார்.

அது மட்டுமல்ல இந்த ஒப்பந்தத்தை வங்கி முறித்துக் கொண்டால் அது 6 மில்லியன் ரூபிள் அதாவது 182,000 டொலர் செலுத்த வேண்டும் என்றும் திருத்தினார்.

அப்படி திருத்தப்பட்ட ஒப்பந்தத்தை வங்கிக்கு கடன் அட்டை பெறுவதற்கு அனுப்பினார். என்ன ஆச்சரியம் வங்கியும் அதனை ஒப்புக்கொண்டது. உண்மையில் வங்கி அந்த திருத்தப்பட்ட நிபந்தனைகளை பார்க்காமல் கையெழுத்திட்டு விட்டது. அகர்கோவுக்கு கடன் அட்டையும் கிடைத்தது. அவர் அந்த கடன் அட்டையை வைத்து இஷ்டத்திற்கு செலவு செய்தார்.

அதிக நிலுவை இருப்பதால் இரண்டு ஆண்டுகளின் பின் அகர்கோவ் கணக்கை மூடியது வங்கி. பாவம் நிபந்தனை திருத்தப்பட்டது தெரியாத வங்கி அகர்கோவ் 45,000 ரூபிள் தர வேண்டும் என்று வழக்குத் தொடுத்தது.

ஆனால் வங்கி கையெழுத்திட்ட திருத்தப்பட்ட ஆவணத்தை வைத்து நீதிமன்றத்தில் வாதிட்ட அகர்கோவ் வழக்கில் வெற்றி பெற்றார். அதன்படி அகர்கோவ் தனது நிலுவையில் 19,000 ரூபளை செலுத்தினால் போதும் என்று நீதிபதி தீர்ப்பளித்துவிட்டார்.

ஆனால் அகர்கோவ் சும்மா விடவில்லை. செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி வங்கி தனக்கு 24 மில்லியன் ரூபிள் இழப்பீடு வழங்க வேண்டும் என்று பதிலுக்கு வழக்குப் போட்டார்.

உலகிலேயே மிக உயரமான வல்லபாய் பட்டேல் சிலை

உலகிலேயே மிக உயரமான வல்லபாய் பட்டேல் சிலை இந்திய பிரதம மந்திரி நரேந்திர மோடி உலகிலேயே மிக உயரமான (182 மீற்றர்) சிலையான வல்லபாய் பட்டேல் சிலையை குஜராத் மாநிலத்தில் நர்மதா மாவட்டத்தில் குட்டித் தீவான சாது பேட்டில் வல்லபாய் பட்டேலின் பிறந்தநாளையொட்டி (31.10.2018) திறந்து வைத்தார்.



வல்லபாய் பட்டேலின் சிலையின் உயரமானது அமெரிக்காவிலுள்ள சுதந்திர தேவி சிலையை விட இரு மடங்காகும். வல்லபாய் பட்டேலின் சிலையை உருவாக்க 70 ஆயிரம் தொன்; சீமெந்தும் சிலையின் வெளிப்புற பூச்சுக்காக 1700 தொன் வெண்கலமும் பயன்படுத்தப்பட்டது.யார் இந்த வல்லபாய் பட்டேல்?

இந்திய சுதந்திர போராட்டத்தில் மகாத்மா காந்திக்கு ஜவஹர்லால் நேருவும் இன்னொருவரும் இரு கைகளாக இருந்தனர். அந்த இன்னொருவர்தான் வல்லபாய் பட்டேல் ஆவார்.

விவசாய குடும்பமான குஜராத்தி குடும்பத்தில் ஜாவேரிபாய் – லாத்பாயி தம்பதியினருக்கு 1875 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி ஆறு பிள்ளைகளுள் ஒருவராக வல்லபாய் பட்டேல் பிறந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் வெள்ளையர்களுக்கு எதிரான வீரமங்கை ஜான்ஸி ராணியை தலைவியாகக் கொண்ட படையில் இருந்த வீரர்களுள் ஒருவர்தான் வல்லபாய் பட்டேலின் தந்தை ஜாவேரிபாய் ஆவார்.

வல்லபாய் பட்டேலின் சிறுவயதில் நடந்த ஒரு சுவாரஷ்யமான சம்பவம் என்னவெனில், அக்காலத்து நாட்டு வைத்திய முறைகள் மிகவும் கடுமையாக இருந்தன. வலி அல்லது வீக்கம் ஏற்பட்டால் அந்த இடத்தில் பழுக்க காய்ச்சிய இரும்பால் சூடு போடுவார்கள். சின்னஞ்சிறு பையன் எப்படித் தாங்குவான் என்று தந்தைக்கு தயக்கம்; தாய்க்கு நடுக்கம். வல்லபாய் பட்டேல் சூடான இரும்புக் கம்பியை தானே எடுத்து சூடு வைக்க வேண்டிய இடத்தில் தானே வைத்துவிட்டான். இதனை யாரும் எதிர்பார்க்கவில்லை. வல்லபாய் பட்டேல் அழவும் இல்லை. நாட்டு வைத்தியர் திகைத்துவிட்டார். இதுதான் வல்லபாய் பட்டேலின் மன வலிமை!

வல்லபாய் பட்டேல் ஆரம்பக் கல்வியை திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தார். குஜராத் மொழியைக் கற்றுக் கொண்டார். தொடர்ந்து ஐந்தாம் வகுப்பை பேட்லாந்த் பாடசாலையில் படித்த வல்லபாய் பட்டேல் ஆறாம் வகுப்பிற்கு நாடியாத் உயர்நிலை பாடசாலைக்கு சென்று விட்டார். அவர் குறும்புக்கார மாணவராகவும் சிறு சிறு பிரச்சினைகளுக்கு போராட்டங்களை நடத்தியதாலும் அந்தப் பாடசாலையை விட்டுச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவானது. அவர் நாடியாத் பாடசாலையிலிருந்து பரோடா உயர்நிலைப் பாடசாலைக்கு மாறினார்.

வல்லபாய் பட்டேல் மாணவராக இருந்தபோதே 1893 இல் கானா என்ற கிராமத்தைச் சேர்ந்த 12 வயது நிரம்பிய ஒரு பெண்ணை திருமணம் செய்தார். இவர்களுக்கு மனுபென் பட்டேல், தாஹ்யா பட்டேல் என்ற இரண்டு குழந்தைகள் பிறந்தன.

வல்லபாய் பட்டேல் 1897 இல் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேர்ச்சி பெற்று தொடர்ந்து மூன்று வருடங்கள் சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரானார். வல்லபாய் பட்டேல் தனது வழக்கறிஞர் பணியை கோத்ராவில் ஆரம்பித்தார்.

வல்லபாய் பட்டேல் ஒருநாள் நீதிமன்றத்தில் வாதாடிக் கொண்டிருந்தபோது தந்தியொன்று வந்தது. வழக்கின் நடுவே அவர் அத்தந்தியை மனதுக்குள் வாசித்தார். பின்னர் அத்தந்தியை சட்டைப்பையினுள் வைத்துவிட்டு வாதத்தை தொடர்ந்தார். வாதம் முடிவடைந்ததும் நாற்காலியில் சாய்ந்துவிட்டார். எல்லோரும் ஓடிவந்து விசாரித்தனர். வல்லபாய் பட்டேலால் பேச முடியவில்லை. உதடுகள் துடித்தன. நடுங்கும் கைகளால் கண்களில் கண்ணீருடன் தந்தியை நீட்டினார். வல்லபாய் பட்டேலின் மனைவி மறைந்துவிட்ட செய்திதான் அது. அதிர்ச்சியான, துன்பகரமான செய்தியை அறிந்தும் வாதத்தைக் கைவிடாது தொடர்ந்து வெற்றிகரமாக முடித்துவிட்டு மனம் வருந்தும் வலிமையுடையவராக இருப்பது எல்லோராலும் முடியாத காரியம்.

வல்லபாய் பட்டேல் பரிஸ்டர் பட்டப்படிப்பிற்காக 1910 ஆம் ஆண்டு லண்டன் புறப்பட்டார். அவர் லண்டன் மிடில் டெம்பில் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார். இறுதித் தேர்வில் சிறப்புச் சித்தி பெற்றதால் வல்லபாய் பட்டேலுக்கு இங்கிலாந்திலேயே சட்டப் பேராசிரியராக பணியாற்றும் வாய்ப்பு தேடிவந்த போதிலும் நாட்டுப் பற்று அதிகமுள்ளதால் இந்தியாவிற்கே திரும்பிவிட்டார்.

வல்லபாய் பட்டேலின் தந்தை ஜாவேரிபாய் இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் வெள்ளையர்களுக்கு எதிரான போரில் ஜான்ஸி ராணியை தலைமையாகக் கொண்ட படையில் சேர்ந்து போரிட்டு ஜான்ஸி ராணி கொல்லப்பட்டதன் பின் தந்தை ஜாவேரிபாய் மூன்று வருடங்கள் சிறை சென்றார். தனது தந்தை ஜாவேரிபாய் மூலம் அடிமை இந்தியாவின் அவலம் புரிந்தது. வல்லபாய் பட்டேலுக்கு இந்திய சுதந்திர தாகம் ஏற்பட்டு, மகாத்மா காந்தியுடன் தொடர்பை ஏற்படுத்தினார்.

வியாபாரத்திற்காக வந்த வெள்ளையர்கள் நாட்டைக் கைப்பற்றி சொந்த மண்ணிலேயே தன் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதை வல்லபாய் பட்டேலினால் சகிக்க முடியவில்லை. தியாக உணர்வுத் தீ வல்லபாய் பட்டேலின் நெஞ்சில் கனன்று கொண்டிருந்தது. வல்லபாய் பட்டேலிடம் செல்வம் இல்லையே தவிர மக்களிடத்தில் செல்வாக்கு இருந்தது. வல்லபாய் பட்டேல் 1917 ஆம் ஆண்டிலேயே தர்யாப்பூர் நகராட்சி மன்றத்திற்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

குஜராத்தில் கேடா என்ற இடத்தில் பயங்கர பஞ்சம் ஏற்பட விவசாயிகள் ஆங்கிலேய அரசிடம் வரிவிலக்கு கேட்டுப் போராடியபோது அரசு பணியாததால் மகாத்மா காந்தி, வல்லபாய் பட்டேல் தலைமையில் வரிகொடாமை போராட்டம் வெடித்தது. அரசு பணிந்து வரியும் ரத்தானது. வல்லபாய் பட்டேலின் முதல் வெற்றி இதுதான். பார்டோலி என்ற இடத்தில் விவசாயிகள் நலன் காக்க நடைபெற்ற மற்றொரு சத்தியாக்கிரக போராட்டத்திலும் வல்லபாய் பட்டேலுக்கு வெற்றி கிடைத்தது. அடுத்தடுத்து இரு வெற்றிகள் கிடைத்த வல்லபாய் பட்டேல் மகாத்மா காந்தியால் “சர்தார்” என்று அன்போடு அழைக்கப்பட்டார். சர்தார் என்றால் படைத் தலைவர் எனப் பொருள்படும். அன்றுமுதல் “சர்தார் வல்லபாய் பட்டேல்” என்றே அழைக்கப்பட்டார்.

மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், ஜின்னா ஆகியோர்கள் இணைந்து இந்திய சுதந்திரத்திற்காக போராடினர். ஆங்கிலேய அரசின் ஆசியோடு தோன்றியதுதான் “முஸ்லிம் லீக் கட்சி” ஆகும். அதனால் ஜின்னா அடிக்கடி ஆங்கிலேய அரசுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அந்த சந்தர்ப்பத்தில் ஜின்னா ஆங்கிலேய அரசிடம் விடுதலையின்போது பாகிஸ்தானுடன் காஷ்மீரையும் அஸ்ஸாமின்

பரீட் இக்பால்
யாழ்ப்பாணம்

தொடர்ச்சி 15 பக்கம்...

நாட்டிய கலா மந்திர் நடனக் கல்லூரி அதிபர் திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகளும், திரு. திருமதி காயத்திரி சுவீந்திரனின் புதல்வி சுவஸ்திகா, மற்றும் திரு. திருமதி உமா அசோகனின் புதல்வி துர்க்கா ஆகியோரின் அரங்கேற்றம் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன் நிகழ்விற்கு பிரதம அதிதியாக சட்டமா அதிபர் சஞ்ஜே இராஜரட்னம் (ஜனாதிபதி சட்டத்தரணி) மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஈஷா ஸ்பெல்ட்டிவைன்ட் (Mrs. EashaSpeldewinde), தெஹிவளை கேற்வே கல்லூரி அதிபர் திருமதிஅன்டனிசெல்லையா (Mrs. Anthony Chelliah) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நேற்று இல்லாத காதல்...!

எனது இளமை காலம் பெரும் பகுதி மருத்துவமனையிலேயே கழிந்தது பெரிய குற்றங்களை செய்துவிட்டு சிறைச்சாலையில் இருக்கும் கைதிகளின் நன்னடத்தையைப் பொருத்து அவர்களை சில காலம் பெயிலில் வெளியே விடுவார்களாம் அதே போலத்தான் என்னையும் மருத்துவமனையில் இருந்து சில மாதங்களோ அல்லது சில நாட்களோ வீட்டிற்கு கூட்டி வருவார்கள்

அப்படி கூட்டி வரும் நாட்களில் தான் நான் பள்ளிக்கூடம் போவது நண்பர்களோடு விளையாடுவது என்று நடக்கும் நான் வீட்டில் இருக்கும் காலங்களில் எனது தந்தையாரும் கூட இருந்துவிட்டால் சைக்கிளில் வைத்து என்னை கோயில் அரசியல் கூட்டம் இலக்கியம் மேடைகளுக்கு கூட்டி போவார் அப்படி போக நேர்ந்தால் தூக்கம் தூக்கமாக வரும் எப்போதடா கூட்டம் முடியும் என்று பல நாள் விழிப்பிதுங்க காத்திருப்பேன்

அதற்கு காரணம் இலக்கியவாதிகள் பேசுவது எதுவுமே எனக்கு புரியாது. தமிழ் வார்த்தைகளைத் தான் அவர்கள் பயன்படுத்துவார்கள் ஆனாலும் எனக்கு அது வேறு ஏதோ பாஷை போல் இருக்கும் புரியாத விசயத்தை எப்படி இத்தனைபேர் ரசித்து கேட்கிறார்களே என்றும் தோன்றும்

இதனாலேயே தமிழ் இலக்கியங்கள் என்றவுடன் எனக்கு வெகுநாள் ஒரு பயம் இருந்தது புதியதாக ஒருவன் ஆங்கிலம் கற்க முற்படும் போது அவனுக்குள் எழும்பும் இதை நம்மால் கற்றுக் கொள்ள முடியுமா என்பது போன்ற இயல்பான பயம் அல்ல அது கஷ்டப்பட்டு புரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் எதவுமே அதில் இல்லை. மனிதனின் அழகை இயற்கையின் வனப்பை வீரத்தின் செரிவை மிகைப்படுத்தி காட்டும் சாதாரண சங்கதியான தமிழ் இலக்கியத்தை கஷ்டப்பட்டு கற்றுக் கொள்ளத்தான் வேண்டுமா என்ற அலட்சியத்தில் உருவான அல்லது நிஜமான சோம்பேறித்தனத்தில் உருவான போலியான பயம் அது.

இந்த பயத்தால் நான் இழந்தது அளவிட முடியாதவைகள் என்று அப்போது எனக்கு புரியவில்லை எல்லோரும் புதுக்கவிதை எழுதுகிறார்கள் நாமும் அதையே எழுதினால் என்ன மரியாதை இருக்கிறது? கடினமானது என்றாலும் மரபுக் கவிதை தான் எழுதி பழக வேண்டுமென ஒரு எண்ணம் மனதில் தோன்றிய போது செயல்படுத்த முனைந்த போது நான் இழந்தவைகளில் உள்ள மதிப்பு தெரிய ஆரம்பித்தது.

தமிழ் இலக்கணம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை பிறந்தவுடன் தமிழாசிரியர் புலவர் சு.கண்ணனை நாடினேன் அவர் கவிஞன் பெண்ணை வளவன் என்ற பெயரில் பல மரபுக் கவிதைகளை எழுதி தமிழுக்கு தந்தவர் குழந்தை கவிஞர் அழ. வள்ளியப்பா போல குழந்தைகளும் தமிழிலக்கணத்தை மிக சுலபமாகவும் . சுகமாகவும் கற்றுக் கொள்ள பாட்டு வடிவில் பைந்தமிழ் இலக்கணம் என்ற நூலை எழுதியவர் ஆங்கில மொழியே கலக்காமல் சுத்தமான தமிழில்தான் எப்போது உரையாடுவார்.

அவரிடம் சென்று இலக்கணம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டவுடனேயே சம்மதித்துவிட்டார். வாரத்தில் ஒரு நாள் வகுப்பிற்கு வரச் சொன்னார் மார்கழி மாதக் குளிரில் அதிகாலை 5 மணிக்கு அவர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து தமிழ் இலக்கணம் கற்ற அந்த நாளை மறக்கவே முடியாது

ஒருநாள் அவர் உனக்கு சங்க பாடல் ஏதாவது தெரியுமா என்று கேட்டபோது பழந்தமிழ் இலக்கியத்தில் அவ்வளவாக எனக்கு நாட்டம் இல்லை. அந்த தமிழ் நடையை புரிந்து கொள்வது கடினம் என்று பதில் சொன்னேன் அப்போது அவர் ஒரு வார்த்தை என்னிடம் சொன்னார். அப்பனும் பாட்டனும் எப்படி வாழ்ந்தார்கள் என்று தெரியாமல் வாழ நினைப்பவன் கண்களை மூடிக்கொண்டு நெருப்புக் குண்டத்தில் விழுந்தவன் ஆவான் என்றார்.

இதை என்னால் எப்போதுமே மறக்க முடியாது எனது முன்னோர்கள் முட்டாள்களாக முழுமடையர்களாக வாழந்தார்கள் என்றால் நான் மட்டும் எப்படி அவர்களிடம் இல்லாத அறிவை பெற்றவன் ஆவேன்? எப்படி என்னால் மட்டும் தனியாக அறிவை பெற முடியும்? என் பாட்டனார் குதிரை சவாரி செய்து மெய்க்காப்பாளர்களோடு பயணம் செய்தவர் அவருடைய பேரனான நான் அப்படி போக முடியவில்லை என்றாலும் கூட சாராயம் குடித்துவிட்டு சாக்கடையில் புரளாமல் இருந்தாலே போதும் அவர் மரியாதையை காப்பற்றியவன் ஆவேன்.

பழந்தமிழ் சங்க பாடல்களை படிப்பதனால் இலக்கிய சுவை கிடைக்கும், புதியதாக கற்பனை செய்ய வழி கிடைக்கும். முன்னோர்கள்களை பற்றிய அறிவுமாக கிடைக்கும் என்று எனக்கு தோன்றவே அவரிடம் அப்போதே சரித்திரம் படித்தால் கிடைக்கக் கூடிய அறிவு இலக்கியம் படித்தால் கிடைக்குமா? என பளிச் என்று கேட்டும் விட்டேன். மெலிதாக சிரித்த அவர்

சரித்திரத்தில் எழுதப்பட்டவைகள் வெறும் விவரக் குறிப்புக்கள் தான் அதில் உணர்வு இருக்காது. காட்சிகள் இருக்காது. இலக்கியம் அப்படி அல்ல அக்கால சூழலை நமக்கு உள்ளப்படி காட்டுவது போலவே மனிதர்களின் உணவுர்களையும் அதையும் தாண்டி நிற்கும் உண்மைகளையும் நமக்கு காட்டும் என்றார்.

அந்த நாள் முதற்கொண்டு சங்கப் பாடல்களில் மீதியிருந்த அலட்சியத்தையும் அச்சத்தையும் விலக்கி இதற்குள்ளும் ஏதோ ஒரு புதையல் இருக்கும் என்ற ஆர்வத்தில் தேடிப் பார்க்கலானேன். ஆரம்பத்தில் பழம் தமிழ் பாடல்களை உச்சரிக்க முடியாமல் நாக்கு தள்ளாடியது வார்த்தைகளை வாய்விட்டு சொல்லும்போது பற்கள் தந்தி அடித்தன ஒன்றுமே புரியாத ஆபிரிக்காவில் மாட்டிக்கொண்டது போல ஒரு உணர்வு ஏற்பட்டது.

சுருக்கமாக சொல்வது என்றால் ஒரு மண்ணாங்கட்டியும் புரியவில்லை. தெரியவில்லை என்று எந்த விஷயத்தையும் விட்டுவிடும் சுபாவம் எனக்கு எப்போதுமே கிடையாது புரியும் வரை போராடுவேன் வெற்றி பெறும்வரை போராட்டத்தை நிறுத்தவே மாட்டேன் நீயா நானா பார்த்து விடலாம் என சங்கப்பாடலோடு மல்லு கட்ட ஆரம்பித்தேன் கடைசியில் பாடல்கள் என்னை பார்த்து பரிதாபப்பட்டன. இந்த மரமண்டைக்கு விளங்கிதான் தொலைப்போமே என்ற இரக்கத்தில் இரங்கி வந்தன.

பலாப்பழத்தைப் பிளந்து எண்ணைய் தேய்த்த குச்சியில் பலாப்பாலை உருட்டி எடுத்து சுளைக்குள் இருக்கும் கொட்டையை எடுத்து எறிந்து விட்டு மொய்க்க வரும் ஈயையும் துரத்தியடித்து சுளையை சுவைக்கும் போது கிடைக்கும் ஒரு சந்தோஷம் பழைய பாடல்கள் புரிய ஆரம்பித்தவுடன் கிடைத்தது. முதல் முதலில் நான் படித்து புரிந்து கொள்ள முயற்சித்தது திருக்குறளில் உள்ள காமத்துப் பாலே ஆகும்.

குறளை நான் தொட்ட போது என் வயது 22 அது விடலைப் பருவம் கவர்ச்சியை மட்டுமே அந்த பருவத்துக் கண்கள் பார்க்கும் எதில் ஆர்வம் இருக்கிறதோ அதிலிருந்து உனது முயற்சியை துவங்கினால் தான் சுலபமாக வெற்றியடைய முடியும் என நண்பர்கள் சொன்னதனால் அந்தப் பகுதியை படிக்கலானேன் இதை இங்கு சொல்லுகிறோம் என்ற வெட்கம் எனக்கில்லை. உண்மையை சொல்கிறோம் என்ற திருப்திதான் வருகிறது. காமம். களவு. கோபம் இப்படி எல்லா அசுத்தங்களையும் கடந்து வந்தால் தானே அமைதி மரத்தில் சாந்தி பழத்தை பறித்து சுவைக்கலாம்.

மனிதர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு விதமான ஆசைகள் வருகின்றது. தொட்டிலில் கிடக்கும் போது அம்மாவின் தாலாட்டை கேட்க ஆசைப்படுகிறோம் தொட்டிலை விட்டிறங்கி தளர் நடை பயிலும் போது விதவிதமான பொம்மைகள் மீது ஆசைப் பிறக்கிறது. அதன் பிறகு பம்பரம் .கோலி. கபடி என்ற தாண்டி மீசை முளைக்கும் பருவத்தில் ஆசையின் நிறம் மாறுகிறது.

அந்த மாற்றமே பணத்தாசை. பதவியாசை என விரிந்து கடைசியில் உயிரின் மீது ஆசையாக முடிவடைகிறது. ஆசைகள் பிறப்பதும் மாறுவதும் தவறல்ல. அது இயற்கையின் விளையாட்டு ஆனால் சிலபேருருடைய ஆசை எதாவது ஒரிடத்திலேயே நிலைத்து நின்றுவிடுகிறது. அப்போது தான் மனிதன் முழுக்க முழுக்க உணர்வுகளுக்கு அடிமையாகி புறப்பட்ட இடத்திலேயே நின்று விடுகிறான்.

பம்பரம் விளையாடும் ஆசை பல் போன பிறகும் தொடர்ந்தால் எப்படி தவறோ அதே போலவே இளமைப் பருவத்தில் அறுப்பும் காதல் உணர்விற்கு தலை நரைத்து போன பிறகும் அடிமையாக கிடப்பது தவறுதல் ஆகும். அந்த பருவத்தில் படித்த காமத்துப்பால் திருக்குறள் மனதை செம்மைப் படுத்தியதே தவிர சஞ்சலப்படுத்தவில்லை.

இரு நோக்கு அவளின் கண் உள்ளது ஒரு நோக்கு நோய் நோக்கு மற்றொன்று அந்நோய்க்கு மருந்து என்ற குறட்பா பெண்மையின் விழியசையில் உள்ள நளினத்தை மட்டும் கற்பிக்கவில்லை பெண் மோகத்தில் உள்ள கம்பீரத்தையும் தலைக்குனிவையும் கூட கற்பித்தது.

இப்படி உணர்வுகளை மட்டும்மல்ல அக்காலத்திய சமூக சித்திரத்தையும். பழம்தமிழ் பாடல்கள் நமது கண் முன்னால் தூசி தட்டி விரித்து வைக்கிறது நற்றிணையில் உள்ள ஒரு அழகான சித்திரத்தை இந்த இடத்தில் காண்பது நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இளம் காதலர்கள் இருவர் ஒரு தன்னந்தனி தோப்பிற்க்குள் நடந்து வருகிறார்கள். மாலை இளம் சூரியனின் இதமான வெப்பமும். குளிர் மிகுந்த தென்றலும் இருவர் மனதில் சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது. அந்த சோலையில் ஒரு புன்னை மரம் நிற்கிறது. அதன் அடர்ந்த நிழலில் உட்கார்ந்து இன்பக் கதைகள் பேச ஆசைப்படுகிறான் காதலன். ஆனால் வெட்கத்தோடு மறுக்கிறாள் காதல் தலைவி காரணம் என்னவென்று அவன் கேட்க இந்த புன்னை மரம் எனக்கு தமக்கை உறவாகும் என்று அவள் வீணை குரலில் கிசுகிசுக்கிறாள். மங்கைக்கு சகோதரி பச்சை மரமா என்று அவன் கேள்வி கேட்க துணியும் போதே அவளிடம் இருந்து பதிலும் வந்து விடுகிறது. என் அம்மா குழந்தைப் பருவத்தில் இந்த சோலைக்கு வந்து தான் விளையாடுவாளாம். அப்பொழுது கேட்பாரற்று கிடந்த புன்னை மரம் விதை ஒன்றை எடுத்து மணலில் ஊன்றி வைத்தாளாம்.

அவள் வாலிப பருவத்தை தொட்டப் போது அன்று ஊன்றிய விதை துளிர்த்து நிற்பதை கண்டாளாம் . அதன் நிழலில் தான் தோழிகளோடு விளையாடுவாளாம். அன்னை வளர்த்த மரம் என்பதால் இவளுக்கு இது அக்காவாய் ஆனதாம். இது உன் தமக்கை என்று அம்மா தான் அறிமுகம் செய்து வைத்தாளாம் .அதன் காரணமாக அக்கா முன் அத்தான் நீ தொட்டால் பற்றிக் கொள்ளாதோ வெட்கம் மென விளக்கம் சொன்னாளாம் பொருளை புரிந்த பிறகு இந்த நற்றிணை பாடலை படித்துப் பாருங்கள்.

விளையாடு ஆயமொடு
வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முலை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்த்தது
நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் தும்மொடு நகையே!

இதில் என்னப்பெரிய விஷயம் இருக்கிறது. ஜன்னிநோய் கண்டவன் உளறுவதுபோல காதல் நோய் வந்தவர்கள் அர்த்தமற்ற வார்த்தைகளை கூறி பிதற்றுவது வழக்கம் தானே என்று சிலர் கேட்கலாம். நானும் அப்படித்தான் ஒரு காலத்தில் கேட்டுக்கொண்டிருந்தேன். நேற்று வரை இல்லாத காதல் இன்று காலையில் அறும்பியவுடன் காதலனின் கருவாட்டு வால் மீசை ராஜராஜ சோழனின் கத்தி போல்இருக்கும். அவன் நாயை போல் வாலை சுருட்டிக் கொண்டு ஓடுவது கூட புலியும் சிங்கமும் கம்பீரமாக நடப்பது போல் தெரியும். ஆண்கள் மட்டும் இழைத்தவர்களாக என்ன? அவள் காலுக்கு செருப்பு வாங்கி கொடுக்க காசு இருக்காது. ஆனால் அதை வெளிக்காட்ட முடியுமா? உடனே மலரே நீ நடக்க பாதையெல்லாம் பூவிரித்தேன் என்பான் குளிக்காமல் நாற்றம் அடிக்கும் அவள் வியர்வையை செந்தேன் துளி எனச் சொல்லி நம்மை அறுவருப்பு அடைய வைப்பான். அப்படித்தான் இந்த நற்றிணை காதலியும் எதையோ சொல்ல வந்து சொல்லத் தெரியாமல் மரம் எனக்கு அக்கா என்று உளறுவதுபோல் தோன்றும்.

காதல் என்பதே ஒரு வித பைத்தியம் தான். அப்படிப்பட்ட பைத்தியக்கார பேச்சாக இந்த பாடலை நாம் எடுத்துக் கொள்ள முடியாது. இதில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளின் பின்னனியை ஆராய்ந்தால் நமக்கு மலைப்பு ஏற்படுகிறது. முதலில் காதலர்கள் நடந்துவரும் சோலையை எடுத்துக் கொள்வோம். இந்த சோலை காதலியின் அம்மா காலத்திலும் சோலையாகத்தான் இருந்திருக்கிறது. இப்போதும் அப்படித்தான் இருக்கிறது. இதில் நமக்கு கிடைக்கும் உண்மை பண்டைய கால தமிழன் இயற்கையை சிதைக்க முயலவில்லை. அதை வளர்க்கவே விரும்பியிருக்கிறான் அதனால்தான் நாடும் நகரமும் வளமையோடு இருந்திருக்கிறது.

மேலும் இந்த பாடலில் அவள் விதையை ஊன்றினாள் என்று எழுதப்பட்டிருக்கிறதே தவிர தண்ணீர் ஊற்றி வளர்த்தாள் என்று எங்கேயும் சொல்லப்படவில்லை. தண்ணீர் இல்லாமல் ஒரு விதை எப்படி மரமாகும். இங்கே ஆகியிருக்கிறது. அப்படி என்றால் மாதம் மும்மாரி மழை பெய்தது என்று சொல்வது கற்பனை அல்ல. அலங்கார வார்த்தையல்ல நிஜமான உண்மையென்பது தெரியவரும்.

மாதம் தோறும் மழை வராவிட்டால் நிச்சயம் விதை துளிந்தவுடன் கருகி போகுமே தவிர வளர்ந்து மரமாகாது. இன்னொரு விஷயம் இந்த சோலைக்கு தாயும் குழந்தைப் பருவத்தில் வந்திருக்கிறாள் மகளும் வந்திருக்கிறாள்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

ஜோன்ஸ் : இன்னிக்கு பேங் லீவு. இல்லைன்னா பணம் கிடைச்சிருக்கும்.
பீன்ஸ் : பேங்க்ல அக்கௌண்ட் வெச்சிருக்கியா... ?
ஜோன்ஸ் : ம்ஹூம் பேங்க் கிளார்க் கிட்ட கடன் வாங்குவேன்.

வேலு : நேத்து பல்லே விலக்கலை .. ..
ரமனன் : ஏன் .. ..
வேலு : என் மனைவி பக்கத்திலே இருந்ததால் வாயே திறக்க முடியலை ..

சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி

முராரி : அந்த மரம் ஒரு கிராஜூவேட்.
கோபு : அப்படியா முராரி : ஆமாம். அது பட்ட மரம்

நண்பர் : என்ன ஜோஸியரே, கிளிக் கூண்டு ரொம்பச் சின்னதாயிருக்கு ?

ஜோசியர் : உள்ளே இருக்கிறது, வெட்டுக்கிளிங்க

பூஜா : அவர் ஏன் தூங்கும் போது கண்ணாடி போட்டுக்கிறார்?
ராஜா : அவருக்கு அடிக்கடி லைப்ரரி போற மாதிரி கனவு வருமாம்.

டாக்டர் : வாத்தி இது உங்கள் மகனின் உயிர் பிரச்சினை , கண்டிப்பா இந்த அப்ரேஷன் செய்தே ஆகனும்
தல : அதனாலதான் அவன் நேத்தே எங்கேயோ ஓடிட்டான் !!

தளபதி : போர் தொடங்க இன்னும் கொஞ்ச நேரம்தான் இருக்கு... ஏன் இன்னும் நமது ஆயுதக் கிடங்கை திறக்கவில்லை?
வீரன் : நமது அரசர் அதுக்குள்ளேதான் ஒளிஞ்சுக்கிட்டிருக்காரு... எப்படித் திறப்பது?

ஜோன்ஸ் : இவர் பழக இனிப்பானர்
பீன்ஸ் : என்ன செய்றார்?
ஜோன்ஸ் : ஸ்வீட் கடை வச்சிருக்கார்.

பாக்கி : ஏ ரோல உட்கார்ந்து சினிமா பார்த்தா சினிமா தெரியாது.
ரமனன் : ஏன்?
பாக்கி : ஏன்னா பீ ரோ முன்னாடி இருக்கே.

இலக்கிய வானில் சிறகடிக்கும் முல்லைதிவ்யன்

உங்களைப் பற்றிய அறிமுகத்தை எமது வாசகர்களுக்காக கூறுங்கள்?

எனது பெயர் ஆனந்தமயில் முல்லைதிவ்யன். நான் முல்லைத்தீவின் செல்வபுரத்தில் பிறந்தேன். எழுத்தாளரான எனது தந்தையார் த. ஆனந்தமயில் அமரத்துவம் அடைந்துவிட்டார். அம்மா நகுலேஸ்வரி. ஐந்து அண்ணாக்கள், ஒரு தங்கச்சி. இதுதான் எனது குடும்பம். நான் தற்போது யாழ்ப்பாணத்தின் பொலிகண்டியில் வசித்து வருகின்றேன்.

உங்கள் பிறப்பிடம், கல்லூரி வாழ்க்கை பற்றிக் குறிப்பிடுங்கள்?

முல்லைத்தீவின் செல்வபுரத்தில் பிறந்து தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் நான், எனது ஆரம்பக் கல்வியை யா.:.கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்திலும், இடைத் தரக் கல்வியை யா.:. விக்கினேஸ்வராக் கல்லூரியிலும், க.பொ.த. சாதாரண தரக் கல்வியை யா.:.பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும், க.பொ.த. உயர் தரத்தை யா.:.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றேன். பின்னர் திறந்த பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவ பட்டப் படிப்பை மேற்கொண்டேன்.

கலை இலக்கியத் துறைக்குள் எவ்வாறு ஈர்க்கப்பட்டீர்கள்?

எனது தந்தையார் த. ஆனந்தமயில் (அமரர்) அவர்கள் ஈழத்தின் சிறந்த சிறுகதை எழுத்தாளராக இருந்தமையால் வீட்டிலையே நிறையப் புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் எனக்குக் கிடைத்தது. இதனைவிட எனது அப்பாவின் வழிகாட்டுதல்களும் பின்னூட்டல்களும் என்னை இலக்கியத் துறைக்குள் கால் பதிக்கச் செய்தது.

உங்களது முதலாவது எழுத்து முயற்சி எதனூடாக எப்போது ஆரம்பித்தது? முதன் முதலாக கவிதை எழுதிய தருணம் எது?

பாடசாலைக் காலத்திலே எனது எழுத்து முயற்சி ஆரம்பமாகியது. யா. விக்கினேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருந்த போது அங்கு நடை பெற்ற கலை இலக்கியப் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கு பற்றியிருந்தேன். அப்போது நான் எழுதிய ''விடிவை நோக்கி'' கவிதை முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டது. அக்கவிதைக்கு எனது தமிழ் ஆசிரியர் திருமதி சிவராமலிங்கம் அதிபர் மற்றும் மாணவர்களின் பாராட்டும் கிடைத்தது.

உங்கள் படைப்புகளுக்கு ஊடகங்கள் எந்தளவில் களம் அமைத்துத் தந்தன?

ஒரு கலைஞனின் வளர்ச்சியில் ஊடகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது. அந்தவகையில் எனது படைப்புகளை வெளிக்கொணர இலங்கையின் தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள் பெரும் பங்காற்றியிருக்கின்றன. இந்த நேரத்தில் என்னை வளர்த்து விட்டிருக்கின்ற ஊடகங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதுவரை வெளிவந்த உங்களது நூல் அறுவடைகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

நான் இதுவரை 10 நூல்களை வெளியிட்டுள்ளேன். இதில் ஆறு கவிதை நூல்களும் இரண்டு சிறுகதை நூல்களும் ஒரு மொழிபெயர்ப்பு நூலும், கட்டுரை, கவிதைகள், சிறுகதைகள் கலந்த ஒரு நூலும் உள்ளடங்கும். அவையாவன:-

1. நல்லதோர் கனவும் அந்தரிப்போரும் (கவிதை) - 2011
2. கவியின் ஏக்கம் (கவிதை) - 2012
3. அம்மா காத்திருக்கக் கூடும் (கவிதை) - 2013
4. அக்காவுக்கு எழுதிய கடிதம் (கவிதை) - 2014
5. தாய்நிலம் (சிறுகதை) - 2015
6. தாய்நிலம் (மொழிபெயர்ப்பு - தமிழ், ஆங்கிலம், சிங்களம், பிரெஞ்சு) - 2017
7. முல்லை நிலமும் நந்திகடலும் (கவிதை) - 2018

8. வள்ளிபுனத்து ஆலமரம் (கவிதை) - 2019
9. கொக்குத்தொடுவாய் கொக்குகளும் கூழாமுறிப்பு பாலைகளும் (கவிதை, கட்டுரை, சிறுகதை) - 2020

2016 ஆம் ஆண்டில் தாய்நிலம் என்ற சிறுகதை நூல் இரண்டாம் பதிப்பாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாக அமைகிறது.

நூல்களை வெளியிட ஊக்குவித்தவர்கள் யார்?

நான் இதுவரை ஒன்பது நூல்களையும் இணையத் தளத்தில் பாடல் ஒன்றையும் வெளியிட்டுள்ளேன். இதில் எனது எட்டு நூல்களையும் சொந்தக் காசிலையே வெளியிட்டுள்ளேன். நான் ஓர் எழுத்தாளராக இருந்த காரணத்தால் அம்மா எனது புத்தாக்க

முயற்சிகளைத் தட்டிக் கொடுத்தார். ஒன்பதாவது நூலுக்கான அனுசரணையை பொலிகை இணையம் வழங்கியிருந்தது. பொலிகை இணையத்திற்க்கு

எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்கள் கொக் குத்தொடுவாய் 'கொக்குகளும் கூழாமுறிப்பு பாலைகளும்' என்ற நூலின் தலைப்பு பற்றிக் கூறுங்கள்?

எனது நூலுக்கு இந்தத் தலைப்பு இடப்படுவதற்கான காரணம் என்னவெனில் இந்தப் புத்தகத்திலே வன்னி மண் சார்ந்த பல விடையங்கள் காணப்படுகின்றன. இந்தப் புத்தகத்தின் உள்ளே ''கொக்கு தொடுவாய் கொக்குகளும் கூழாமுறிப்பு பாலைகளும்'' என்ற கவிதை காணப்படுகின்றது. அதேபோல இந்தப் புத்தகத்தில் இடம்பெற்ற சிறுகதை ஒன்றிலே கூழாமுறிப்பு பாலைகள் பற்றி வருகின்றது. ஆகவே இரண்டையும் சேர்த்து ''கொக்குதொடுவாய் கொக்குகளும் கூழாமுறிப்பு பாலைகளும்'' என்று பெயர் சூட்ட முடிவு செய்தேன். இதனைவிட மண் பற்றும் ஒரு காரணமாகும்.

மேற்படி நூலின் ஊடாக இலக்கிய உலகுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

இந்த புத்தகத்தில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஆக்கமும் பல கருப்பொருட்களை வெளிப்படுத்துகின்றன. இந்த ஆக்கங்கள் அனைத்தையும் தொகுத்து ஒரு நூலாக மாற்றியதன் பிரதான காரணம் வருங்கால சந்ததிக்கான ஆவணப்படுத்தலாகும்.

உங்களது நூல்களில் உள்ளடங்கியுள்ள கருப்பொருட்கள் பற்றி பொதுவாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?

எனது நூல்கள் பல கருப்பொருட்களைத் தாங்கியதாகவே வெளிவருகின்றன. குறிப்பாக இயற்கை மீதான ஈர்ப்புகள், போரின் அவலங்கள், மண்ணின் மாண்புகள், மொழி மற்றும் இனம் சார்ந்த பெருமைகள், தன்னம்பிக்கை ஊட்டும் உபதேசங்கள் என அவை விரிவு கொள்ளும்.

இதுவரை எழுதிய உங்களது சிறுகதைகள் குறித்து?

நான் இதுவரை இருபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளேன். அச் சிறுகதைகள் ''தாய் நிலம்''

என்ற பெயரில் சிறுகதை நூலாக வெளிவந்தது. குறிப்பாக போரின் வடுக்களை, போருக்கு பின்னரான வாழ்வியலை பிரதிபலிக்கின்ற படைப்புகளாக இச் சிறுகதைகள் இருக்கின்றன. இதில் தாய்நிலம் என்ற சிறுகதை யாழ் பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தினரால் தமிழ், ஆங்கிலம், சிங்களம், பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. நான் எழுதிய சிறுகதைகள் கலாசார திணைக்களம் ஆண்டுதோறும் நடாத்துகின்ற இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவை.

உங்களைக் கவர்ந்த எழுத்தாளர் யார்? அண்மையில் வாசித்த படைப்பு எது?

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கவிஞர் வைரமுத்து, கவிஞர் வாலி, கவிஞர் தாமரை ஆகியோருடைய படைப்புகள் என்னை மிகவும் கவர்ந்தவை. ஈழத்தை பொறுத்தவரை எழுத்தாளர் தெணியான், எம்.ஏ நு.ஃமான், சோ. பத்மநாதன், துவாரகன், த. அஜந்தகுமார், எனது தந்தையார் த. ஆனந்தமயில் (அமரர்) ஆகியோரின் படைப்புகள் எனக்கு மிகவும் பிடித்தவை.

இளையவர்களிடையே இணையப் பாவனை அதிகரித்து நூல்களின் வாசிப்பு குறைந்து வரும் இக்கால கட்டத்தில் வாசிப்பை மேம்படுத்த என்ன செய்யலாம்?

இன்றைய உலகமயமாதலில் மூலை முடுக்கெல்லாம் தொழில்நுட்ப பாவனை அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே புத்தகங்களை வாசிப்பது குறைவடைந்து வருகின்றது. ஆகவே புத்தக வாசிப்பை மேம்படுத்த வேண்டுமாயின் நடமாடும் நூலகங்களை ஆரம்பித்து, அதனூடாக வார இறுதி நாட்களில் புத்தகங்களை வழங்கி, வாசிப்புத் திறனை ஊக்குவிக்கலாம். இதனைவிட புத்தங்களை மையப்படுத்தி வினா விடைப் போட்டிகளை பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தலாம். இவ்வகையான முயற்சிகளின் மூலமே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த முடியும்.

உங்களது படைப்புகள் பெண்களின் பிரச்சனைகளைப் பற்றி பேசியிருக்கிறதா?

ஆம்.. எனது தாய் நிலம் சிறுகதை நூலில் உள்ள ''நட்சத்திரப் பூக்கள், சிகரம், பாரமில்லாக் கனவுகள்'' போன்ற சிறுகதைகள் பெண்களின் பிரச்சினைகளை மையப்படுத்தியவை.

சமகாலமாக நாவல் இலக்கியங்களின் வரவு மிகவும் கணிசமாகக் குறைந்து வருகின்றது. நாவல் துறையில் ஆர்வம் காட்டவில்லையா?

ஆம்.. தற்போதைய இலக்கிய வெளியில் நாவல்களின் வரவு குறைவடைந்துள்ளது. நான் சில நாவல்களை வாசித்துள்ளேன். குறிப்பாக சாகித்திய ரத்னா தெணியானின் ''மரக்கொக்கு'' நாவல் எனக்கு மிகவும் பிடித்தது. சிறுகதை, கவிதை, பாடல், கட்டுரை என பலவற்றை எழுதியுள்ள எனக்கு நாவல் ஒன்றையாவது எழுதி, நூலாக்கம் செய்துவிட வேண்டும் என்ற கனவு இருக்கின்றது. எதிர்காலத்தில் நிச்சயமாக எனது ஒரு நாவல் புத்தக வடிவம் பெறும்.

உங்களைப் போன்று வளர்ந்து வரும் இளம் படைப்பாளிகளுக்கு நீங்கள் விசேடமாகக் கூறும் செய்தி என்ன?

தேடலும், தேடல் நிறைந்த வாசிப்புத் திறனும் இருக்குமானால் நல்ல படைப்புகளை படைக்க முடியும். கலை இலக்கிய போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்ற வேண்டும். அப்போதுதான் போட்டி போடும் மனப்பாங்கை வளர்த்துக்கொள்வதோடு, தரமான படைப்புகளையும் படைத்துக்கொள்ள முடியுமாகும். தனிய ஒரே இலக்கிய வடிவத்தில் நிற்காமல் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், பாடல் ஆக்கம், நாட்டார் கலை எனப் பல இலக்கிய வடிவங்களில் தடம் பதிக்க வேண்டும். அப்போதுதான் எங்கள் தனித்துவத்தை நிலை நாட்ட முடியும்.

உங்கள் இலக்கிய வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வு ஒன்றைக் குறிப்பிடுங்கள்?

யாழ் பிரெஞ்சு நட்புறவு கழகத்தால் எனது தாய்நிலம் சிறுகதை - ஆங்கிலம், சிங்களம், பிரெஞ்சு ஆகிய மூன்று மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு புத்தகமாக வெளியிடப்பட்டது என்னால் மறக்க முடியாத நிகழ்வாக அமைகிறது.

உங்களது எதிர்கால எழுத்து முயற்சிகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

எனது பத்தாவது புத்தகமான ''லயத்தின் குடியிருப்புகள் பேசுகின்றன'' என்ற புத்தகத்தை வெளியிடக் காத்திருக்கின்றேன். இதனைவிட எனது பிறந்த நாளை முன்னிட்டு நான் பிறந்த முல்லை மண் பற்றி எழுதிய பாடல் ஒன்றை வெளியிடவுள்ளேன். இவைதவிர பல படைப்புகளை எதிர்காலத்தில் படைப்பேன் என்ற நம்பிக்கை நிறையவே எனக்கு இருக்கின்றது.

கலை இலக்கியத் துறையில் உங்கள் படைப்புகளுக்கு இதுவரை கிடைத்த பாராட்டுகள், பரிசுகள், விருதுகள் பற்றி குறிப்பிடுவார்களா?

கலாச்சார திணைக்களம் வருடா வருடம் நாடாத்துகின்ற தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் இதுவரை ஐம்பதிற்கு மேற்பட்ட வெற்றிச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளேன். இதில் பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டம் ஆகியன உள்ளடங்கும்.

எனக்குக் கிடைத்த விருதுகள் என்று சொல்லும் போது:-

- 2019 ஆம் ஆண்டு வடமராட்சி பிரதேச செயலகம் வழங்கிய ''கலைத்தளிர்'' விருது
- 2019 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட கலை, கலாசாரப் பேரவை வழங்கிய ''இளங்கலைஞர்'' விருது
- 2020 ஆம் ஆண்டு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் இணைந்து வழங்கிய இளங்கலைஞர் விருது

போன்ற விருதுகள் இதுவரை கிடைத்துள்ளன. இதனைவிட வடமராட்சி வடக்கு கலாச்சார பேரவை, வல்வெட்டித்துறை கலாச்சார மையம், பொலிகை கலை இலக்கிய மன்றம், ஒளியரசி சஞ்சிகை, பொலிகை மக்கள் படிப்பகம் போன்ற என்னை கௌரவித்துள்ளன.

இறுதியாக என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

இலக்கிய வெளியில் நாங்கள் பயணிப்பதோடு நிற்காமல் பாடசாலை மாணவர்களையும் இலக்கிய வெளியில் பயணிப்பதற்கான ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். அத்தோடு கிராமங்களில் கலை இலக்கியப் போட்டிகளை நடாத்தி சிறுவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஒவ்வொரு எழுத்தாளரும் சமூகத்தைப் பற்றி சிந்திப்பவர்களாக இருக்க வேண்டும்.

வெலிகம ரிம்ஸா முஹம்மத்

தொடர்புகளுக்கு :
கே.ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
whatsapp : 0773124543

Senthooram செந்தூரம்

சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

கேள்வி:"காதல்" பட சீடியை பிரிஜ்ஜுக்குள் வைத்தால் என்ன நடக்கும்?

ஆர். மாகிரட். எடபட கம.

பதில்: "சில்லுன்னு ஒரு காதல்" கிடைக்கும்.

கேள்வி: இன்றைய தென்னிந்திய தமிழ் சினிமா உலகின் நம்பர் வன் நடிகையார்?

ஆர்.கே.புஹாரி. புத்தளம்.

பதில்: இதுவரையில் நயன்தாராதான் அந்த இடத்தில் இருந்தார். ஆனால் அவர் இப்போது பக்காவாக நடித்தாலும் அவருக்கு அக்கா தோற்றம் வந்து விட்டதாக கோடம்பாக்கத்தில் பேசிக் கொள்கிறார்கள். இதனால் நடிகை கீர்த்தி சுரேஷின் காட்டில் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. விரைவில் அவர் நம்பர் வன் ஆகி விடுவார்!

கேள்வி: நடிகர் சமுத்திரகனி புதிதாக ஒரு படத்தை இயக்கி இருக்கிறாராமே... அந்த படத்தின் பெயர், படம் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

ஆர்.ராகவன். வத்தளை.

பதில்: ஆமாம் சிறப்பான ஒரு குடும்பப் படம். படத்தின் பெயர் "விநோதய சித்தம்." குடும்பத்தோடு எல்லோரும் அமர்ந்து பார்க்க வேண்டிய படம். நாயகன், நாயகி, வில்லன், கொமிடியன் என்று எவருமே இல்லை. சமுத்திர கனியும், தம்பி ராமையாவும் இந்த எல்லா பாத்திரங்களையும் பூர்த்தி செய்கிறார்கள். இருவருமே போட்டி போட்டுக் கொண்டு நடிக்கிறார்கள். ஒவ்வொரு தாய் தந்தையரும், அண்ணன் தம்பிகளும்,அக்கா தங்கச்சி களும் தவற விடாமல் பார்க்க வேண்டிய ஒரு படம் சமுத்திர கனி இயக்கி இருக்கும் 'விநோதய சித்தம்'

கேள்வி: நடிகர் சிவகார்த்திகேயனின் சம்பளம் இப்போது முப்பது கோடியாமே... உண்மையா?

எம்.எஸ். மதுமிதா.

பதில்:அப்படிதான் கோரணம் பாக்கத்தில் மேளம் கொட்டுகிறார்கள்."டாக்டர்" பட ஓட்டத்திற்குப் பிறகு அவர் தனது சம்பளத்தைக் கூட்டி விட்டார். அவர் கேட்கும் தொகையை கொடுப்தற்கு தயாரிப்பாளர்களும் தயாராகவே இருக்கிறார்கள்.

கார்த்திகேயன் போகிற போக்கைப் பார்த்தால் தளபதியையும் விழுங்கி ஏப்பம் விடுவார் போல் தெரிகிறது!

கேள்வி:அடுத்து ரஜனி காந்த் நடிக்கும் படத்தை இயக்கப் போகும் இயக்குனர் யார்?

எம்.எம்.நாஸார். கல்முனை.

பதில்: ஐந்து பேர் வரிசை கட்டி நிற்கிறார்கள்.'கண்ணும் கண்ணும் கொள்ளை அடித்தால்' படத்தை இயக்கிய தேசிங்கு பெரிய சாமியை ஏற்கனவே அழைத்து பாராட்டியதோடு தனக்கு ஒரு கதையைத் தயார் செய்யும்படி கூறியிருந்தார். அடுத்ததாக,' டாக்டர்', பீஸ்ட்' படங்களின் இயக்குனர் நெல்சன் திலிப் குமார்,' பேட்ட'படத்தை இயக்கிய கார்த்திக் சுப்புராஜ்,'முத்து' ,படையப்பா' ' லிங்கா' ரஜினியின் படங்களை ஏற்கனவே இயக்கிய கே.எஸ். ரவிக்குமார், பாண்டி ராஜ் ஆகியோரில் ஒருவர் இயக்கலாம் என்று இப்போது பேச்சு அடிபடுகிறது!

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

உஷா உதுப்

உஷா அய்யர் என்ற தமிழ் பெண், கேரள மாநிலம் கோட்டயத்தை சேர்ந்த, உதுப் என்ற இஸ்லாமியரை திருமணம் செய்து, உஷா உதுப் ஆனார். தற்சமயம், 70 வயதைத் தாண்டிய போதும், மேடைகளில் இசைக்கச்சேரிகள் செய்து ரசிகர்களை மகிழ்வித்து வருகிறார்.

இவரது தந்தை,பொலிஸ்காரர். தன் பிள்ளைகளின் விருப்பத்துக்கு எதிராக செயல்பட்டது இல்லை. கல்வியில் நாட்டம் இல்லாமல், கலைத்துறையை தேர்ந்தெடுத்தார், உஷா. தன், 22வது வயதில், மும்பையில் உள்ள நட்சத்திர ஹோட்டல்களில் பாடல்களை பாட ஆரம்பித்தவர், இன்றும் தொடர்கிறார். கணவரும், இவரது இசைத் திறமைக்கு பக்கபலமாக இருந்து வருகிறார்.

'என் கணவரின் ஆதரவால் தான் இந்த வயதிலும் என்னால் மேடை ஏறி கலக்க முடிகிறது...' என்கிறார், உஷா உதுப்.

மிரட்டல்களுக்கு அஞ்ச மாட்டேன்

கங்கனா ரணாவத்

பிரபல பாலிவுட் நடிகை கங்கனா ரணாவத், மிரட்டல்களுக்கு நான் அஞ்ச மாட்டேன் என்று தனது சமூக வலைத் தளத்தில் பதிவு செய்து இருக்கிறார்.

நடிகை கங்கனா ரணாவத் சமூக வலைத்தளத்தில் தொடர்ந்து சர்ச்சை கருத்துகளை பதிவிட்டு வருகிறார். சமீபத்தில் வேளாண் சட்டங்கள் வாபஸ் பெறப்பட்ட நிலையில் அந்த சட்டங்களுக்கு எதிராக போராடியவர்கள் காலிஸ்தான் பயங்கரவாதிகள் என்று விமர்சித்தார். இதையடுத்து கங்கனா மீது சீக்கிய அமைப்பினர் புகார் அளித்தனர்.

இந்த நிலையில் தனக்கு கொலை மிரட்டல் வருவதாகவும், இதுகுறித்து புகார் அளித்து இருப்பதாகவும் கங்கனா தெரிவித்து உள்ளார். தனது சமூக வலைத் தள பக்கத்தில் கங்கனா வெளியிட்டுள்ள பதிவில், ''மும்பையில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் உயிர் இழந்தவர்களை நினைவுகூரும் வகையில், துரோகிகளை மன்னிக்க கூடாது என்று எழுதினேன். உள்நாட்டு துரோகிகள் பணத்துக்காக தேசவிரோத சக்திகளுக்கு உதவி செய்ததே இதுபோன்ற சம்பவங்களுக்கு காரணம் என்று பதிவிட்டேன்.

இந்த பதிவுக்காக தீய சக்திகளிடம் இருந்து எனக்கு மிரட்டல்கள் வருகின்றன. ஒருவர் என்னை கொலை செய்யப்போவதாக மிரட்டியுள்ளார். இத்தகைய மிரட்டல்களுக்கு நான் அஞ்ச மாட்டேன். நாட்டுக்கு எதிரான சதி செயல்களில் ஈடுபடுகிறவர்கள் பற்றி தொடர்ந்து பேசுவேன்" என்று குறிப்பிட்டு உள்ளார்.



நயனின் அழகு ரகசியம்

அழகாக இருப்பதை தான் அனைவரும் விரும்புகிறார்கள். நாம் இவர்களை போல அழகாக இருக்க வேண்டும் என்று நடிகை, நடிகரை பார்த்து ஆசைப்பட்டிருப்போம். அவர்களின் அழகின் ரகசியம் என்ன? இப்படி இவ்வளவு அழகாக இருக்கிறார்கள்? என்று நம் நண்பர்களிடையே பலமுறை உரையாடியிருப்போம். இன்றைய தமிழ் சினிமாவின் லேடி சூப்பர் ஸ்டார் என்று அழைக்கப்படும் நயன்தாராவை ரசிக்காத கண்கள் இருந்திருக்காது. அவரின் அழகை புகழாதவர்கள் மிகமிக குறைவு. மிகவும் தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடன் பல காதாப்பாத்திரங்களை எடுத்து நடித்து வருகிறார். ரஜினி, விஜய், அஜித் என பல முன்னனி நடிகர்களுடன் நடித்திருந்தாலும், தனக்கென ஒரு தனி இடத்தை தமிழ் சினிமாவில் பிடித்துள்ளார்.

இதற்கு அவருடைய திறமையும், உழைப்பும்தான் முதன்மை காரணங்கள். அழகிலும் நயன்தாரா ரசிகர்களை கவரும் ராட்சசியாக வளம் வருகிறார். இவருடைய அழகை கண்டு பொறாமை கொள்ளாத பெண்களே இல்லை எனலாம். ஐயாவில் தொடங்கிய இவர் நடிப்பு பயணம் இன்றும் இளமையாக அண்ணாத்த வரை தொடர்ந்துள்ளது. இன்னுமும் தொடர இருக்கிறது.

நயனின் அழகு ரகசியம் என்னவென்று தெரிந்துகொள்ள பலர் ஆர்வமாக உள்ளனர். நயன்தாராவின் அழகு ரகசியத்தை பற்றிதான் இக்கட்டுரையில் காணப்போகிறோம்.

நயன்தாரா மிகவும் விரும்புவது மற்றும் உபயோகப்படுத்துவது ஆயுர்வேத அழகு சாதன பொருட்களைதானாம். மேலும், அவர் ஆயுர்வேத குளியலை அடிக்கடி எடுத்துக்கொள்கிறாராம். இதனால், அவரது உடல் மற்றும் சருமம் ஆயுர்வேத நன்மைகளை பெற்றுக்கொள்கின்றன.

இயற்கையான தயாரிப்புகளை பயன்படுத்துவதால், அவரது தோல் பளபளப்பாக மின்னுகிறது. இப்போதும் இளமையாக இருக்கிறார்.

நயன்தாரா, தினமும் சன்ஸ்கிரீன் கிரீம் தடவாமல் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. அது நயனின் சருமத்தை ஆரோக்கியமாக வைத்து சூரிய ஒளியில் இருந்து பாதுகாக்கிறது. மேலும், சருமம் தொடர்பான பல பிரச்சினைகள் ஏற்படுவதிலிருந்து அவரைப் பாதுகாக்கிறது.

நயன்தாரா தன்னுடைய உடலையும் சருமத்தையும் எப்போதும் நீரேற்றத்துடன் வைத்திருக்கிறாராம். அதனால், அவர் அடிக்கடி தண்ணீர் அருந்துவார். தண்ணீர் அதிகம் குடிப்பதால், உடல் சூடால் உருவாகும் பருக்கள் நயனுக்கு ஏற்படுவதில்லை. அதோடு உணவு இடைவெளிகளில் ஜூஸ் போன்ற திரவ உணவுகளை அதிகமாக எடுத்துக் கொள்கிறார். பொதுவாக தண்ணீர் அருந்துவது உடலுக்கும் சருமத்திற்கும் நன்மை அளிக்கும். நயன்தாராவின் பளபளப்பான சருமத்திற்கு இதுவும் காரணமாக இருக்கிறது.

நடிகை என்பதால், எப்போதும் அழகாக இருக்க வேண்டும் என்று ரசிகர்கள் விரும்புவார்கள். ஆதலால், அடிக்கடி சோப்பு அல்லது கிரீம் போட்டு முகத்தை கழுவிக்கொண்டே இருக்க வேண்டிய நிலை நடிகைகளுக்கு இருக்கலாம். ஆனால், நயன்தாரா சோப் எதுவும் பயன்படுத்தாமல் வெறும் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவிக் கொள்வாராம். இது சருமத்தை வறட்சியடையச் செய்யாமல் பாதுகாக்கும்.

முகம் மட்டுமல்லாமல் மேனி முழுவதும் பிரகாசமாக இருக்க தினமும் அவர் பழச்சாறுகளை அருந்துகிறாராம். ஏனெனில், பழச்சாறுகள் இயற்கையாகவே உடலுக்கும் சருமத்திற்கும் நன்மைகளை அளிக்கிறது. வைட்டமின் சி நிறைந்த பழச்சாறுகளை நயன்தாரா தினமும் குடித்து, அவரது சருமத்தை இயற்கையாகவே பிரகாசிக்க வைக்கிறார்.

முக்கியமான சி.டி.எம் வழக்கத்தை நயன்தாரா ஒருபோதும் தவிர்ப்பதில்லை. சி.டி.எம் என்பது கிளன்சிங் (cleansing), டோனிங் (toning), மாய்ச்சரைஸிங் (moisturizing) ஆகிய மூன்றும்தான். இந்த அடிப்படையான மூன்று விஷயங்களையும் நயன்தாரா செய்யத் தவறுவதில்லையாம். இதிலும், ஆயுர்வேத தயாரிப்புகளுக்கு தான் நயன் முன்னுரிமை கொடுக்கிறாராம்.

நயன்தாராவின் பளபளப்பான மற்றும் வளவளப்பான கூந்தலுக்குப் பின்னால் இருக்கும் ஆச்சரியமான ரகசியம் தேங்காய் எண்ணெயைத் தவிர வேறில்லை. தினமும் குளிப்பதற்கு முன்பு தலைக்கு நிறைய தேங்காய் எண்ணெய்யை தேய்த்துக் குளிக்கும் பழக்கத்தை அவர் கொண்டிருக்கிறார். மேலும், தலைமுடியைப் பராமரிக்கவும் அவர் ஆயுர்வேத முறைகளையே முதன்மையாகப் பின்பற்றுகிறார். இதனால், அவருடைய தலைமுடியும் இயற்கையாக அவருக்கு கூடுதல் அழகை கொடுக்கிறது.

புதிதில் சில தவறுகள் செய்தேன் – பூர்ணா

தமிழில் பல படங்களில் நடித்து பலருடைய கவனத்தை பெற்ற நடிகை பூர்ணா, சினிமாவிற்கு வந்த புதிதில் சில தவறுகள் செய்தேன் என்று கூறியிருக்கிறார்.

தமிழில் பிரபல நடிகையாக இருக்கும் பூர்ணா, கேரளாவில் திருமண மோசடி கும்பலிடம் சிக்கி மீண்ட சம்பவம் பரபரப்பானது. சினிமா அனுபவங்கள் குறித்து பூர்ணா அளித்துள்ள பேட்டியில், ''பிரபலங்கள் பொது சொத்து என்பது எனது கருத்து. வளர்த்துவிட்ட ரசிகர்கள் சொல்லும் நேர்மறை, எதிர்மறை கருத்துகளை ஒரே விதமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

சில எதிர்மறை கருத்துகளை வைத்து என்னை நான் மாற்றிக்கொண்டு இருக்கிறேன். எனக்கு இந்த ஆண்டு முதல் நல்ல கதாபாத்திரங்கள் வந்தன. ஹீரோயினாக மட்டுமே நடிக்க வேண்டும் என நான் முடிவு செய்து வரவில்லை. நான்கைந்து காட்சிகளில் வந்தாலும் நடிப்புக்கு வாய்ப்பு இருக்கும் கதாபாத்திரம் கிடைத்தால் போதும். ஷோபனா, ரேவதி, சுஹாசினி மாதிரி எந்த கதாபாத்திரமாக இருந்தாலும் செய்ய வேண்டும் என்ற முடிவோடு வந்தேன்.

சினிமா துறைக்கு தனியாக வந்து இத்தனை ஆண்டுகளாக நீடிக்கிறேன். சினிமா கேரியர் நீண்ட காலம் நீடிக்க வேண்டுமென்றால் நல்ல கதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சினிமாவிற்கு வந்த புதிதில் நான் சில தவறுகள் செய்தேன். ஆனால் இப்போது ஜாக்கிரதையாக நல்ல கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து நடிக்கிறேன்" என்றார்.

பெண் எழுத்தாளர் 20

கிண்ணியா றாஹிலா மஜீட் நூன்

ஐம்பது வருடங்களாக கலைத்துறையில் பயணித்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர் திருமதி றாஹிலா மஜீட் திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேசத்தில் உள்ள பெரியாற்று முனை எனும் ஊரை வசிப்பிடமாகக் கொண்ட மர்ஹூம்களான சாஹூல் ஹமீது மற்றும் ஜனூன் வீவி தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தார். இவருக்கு நான்கு ஆண் பிள்ளைகளும் மூன்று பெண் பிள்ளைகளும் உள்ளனர். இவரது கணவர் மஜீத்நூன் முன்னாள் பொலிஸ் உதவிப் பரிசோதகராக கடமையாற்றினார். இவரது கணவர் அண்மையில் காலமானார்.

இவர் கல்வித்துறையைப் பற்றிக் குறிப்பிடுகையில் மகளிர் தேசிய கல்லூரியில் கல்வி கற்று சாதாரண தரப்பரீட்சையில் ஒரே தடவையில் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றார். சிறுவயதில் பாடசாலையில் படிக்கும் காலத்திலிருந்தே ஆசிரியர்களின் ஊக்குவிப்பும், வழிகாட்டல்களும் இலக்கியத் துறையில் பயணிப்பதற்கு காரணியாக அமைந்ததோடு வானொலிகளை கேட்பதிலும் மேலும் இவரது சிறிய தந்தை முன்னாள் அமைச்சர் மர்ஹூம் மஜீதின் பேச்சும், ஆளுமையும் இவரைக் கவர்ந்ததாலும் கலைத்துறையில் பல படைப்புக்களை படைக்க வழிவகுத்தது எனக் கூறினார்.

பாடசாலையில் படிக்கும் போது தான் எழுதிய ஒரு இஸ்லாமிய கீதம் தனது ஊரில் மீலாதுன் நபி போட்டி ஒன்றில் பல கவிஞர்களின் பாடல்களுக்கு மத்தியில் முதலாம் இடம் பெற்றது தனது வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்வு எனக் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் கிண்ணியா செல்வி எனும் புனைப்பெயரில் இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் எனும் கட்டுரையை எழுத ஆரம்பித்தார். தற்போது றாஹிலா மஜீட் எனும் தனது சொந்தப்பெயரில் எழுதி வருகிறார்.

இவரது கவிதைப்பிரசுரங்கள் பற்றி கேட்ட போது இவர் அதிகளவாக மார்க்கம் சம்பந்தமான கவிதைகளே எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் அதிகளவாக வீரகேசரி, சிந்தாமணி, தினபதி, தினகரன் , ஞானம் என பல பத்திரிகைகளில் பிரசுரமானதுடன் சிறுவர் மலர் , மங்கைகையர் மஞ்சரி என பல வானொலி நிகழ்ச்சிகளிலும் ஒலிபரப்பானது. மேலும் ஊடகங்களிலும் நேர்காணல் இடம் பெற்றதாகவும் குறிப்பிட்டார். இவர் கவிதை மட்டுமன்றி சிறுகதை , பாடல் எழுதுவதிலும் திறமை வாய்ந்தவர்.

இதுவரையில் ஐந்து நூல்கள் வெளியிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இவரது நூல்களான "அரங்கேறும் கவிதைகள்" நூல் 2008இல் வெளியிடப்பட்டது "இல்லத்தரசிகளும் இல்லற வாழ்வும்" "சிந்தனை முத்துக்களும் வாழ்வியல் தத்துவங்களும் " "அனானின் வண்ணத்துப்பூச்சி" "நபி வழியில் நாம்" போன்ற நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளார்.

சிறுகதை , கவிதைத்தொகுப்பு நூலும் விரைவில் வெளியிட இருப்பதாகக் கூறினார்.

கலைத்துறைப் பயணத்தில் கிடைத்த விருதுகள் சான்றிதழ்கள் பற்றி கேட்கப்பட்ட போது தான் விருது பெற்றதோடு கணவரும் ஒரு கலாபூஷண விருது பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

தனக்கு "கலாபூஷண அரச விருது" "கிழக்குமாகாண கலை இலக்கிய விருது" "சரவதேச முதியோர் தின விருது" "பிரதேச கலாச்சார பாராட்டு விருது" "கிழக்கு மாகாண வித்தகர் விருது" இலக்கியவாதிகளை கௌரவிக்கும் திட்டத்தின் கீழ் "சுவதம்" விருதுகள் என பல விருதுகள் கிடைத்துள்ளதாகக் கூறினார்.

கவிதை பற்றி கூறுகையில் கவிதை என்பது காலத்தால் அழியாத பொக்கிஷங்கள். ஆன்மீக உலகில் சஞ்சரித்து அர்த்தங்கள் பல சேகரித்து மானிட வாழ்க்கைக்கு உதவும் மணிக்கவிதைகள் படைக்க வேண்டும். முத்தமிழ் சாறு பிழிந்து முழு உலகை அதில் நனைத்து தித்திக்கும் தேன் கவிதை திகட்டாமல் எழுத வேண்டும் எனவும் எதுகை மோனை ஓசைகள் அமைய ஏற்றமாய் எழுத வேண்டும். சொற்கடலில் சுழியோடி சேர்த்தெடுத்த முத்து வரிகளால் கற்பனைக்கு எட்டாத கவிதைகளை எழுதினால் வாசிப்போர் அதிகம் விரும்பலாம் எனவும் கூறினார்.

ஒழுக்கம் உண்டாக்காத இலக்கிய கல்வியால் ஒரு வித உபயோகமும் இல்லை என்கிறார் காந்தியடிகள். ஆகவே மனித சமூகத்திற்கு பயனளிக்கும் கவிதை வரிகளை எழுதுவதால் நிறைய பலன் கிடைக்கும் எனக் கூறுகிறார்.

வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கு இவர் கூறுவதாவது எழுதும் ஆவலும் ஆற்றலும் இருந்தால் தொடர்ந்து எழுதிக் கொண்டே இருங்கள். எதை எழுத வேண்டும் என்பதை நன்றாகச் சிந்திந்து எழுதிக் கொண்டே வந்தால் நீங்களும் ஓர் எழுத்தாளர் தான். எதிர்ப்புகளையும், சவால்களையும் சமாளிக்கவும் பொறுமையுடன் முகம் கொடுக்கவும் தயாராக இருங்கள். ஆனால் நீங்கள் யாரையும் புண்படுத்தாமல் பொதுவான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் உள்ளத்தில் ஊற்றுப் போல அறிவு பெருக்கெடுக்கும். காலப் போக்கில் நீங்களும் எழுத்தாளராகலாம் எனக் கூறினார்.

இலக்கியத்தில் தனக்கென ஓர் இடத்தை தனதாக்கி தனித்துவமாக பயணிக்கின்ற றாஹிலா மஜீட்நூன் எழுத்துலகில் மென்மேலும் வளர வாழ்த்துகள்.

மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி

நண்பர்களுடன் இனாயத் – திருகோணமலை

திருக்கேதீஸ்வரன்

சாரங்கா – வத்தளை

பஸ்யால கவியரசி எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா கணவர், விரிவுரையாளர், எம்.ஏ.எம்.ரிப்தியுடன்

சந்திரமோகன் – அல்மாஸிலிருந்து

அக்ஷயன் – வத்தளை

தினகரனின் செந்தூரம் இதழின் செல்பிஉலா பக்கத்தில் உங்களது செல்பிக்களும் இடம்பெற விரும்பினால் selfiulla@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு படத்தையும் விபரங்களையும் அனுப்பி வையுங்கள். செல்பிக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

செல்ஃபி உலா

செந்தூரம் சஞ்சிகையுடன் சத்தியமாறன் – காரைதீவு

யதீசுடன் அருண்

மூதூர் – சாஹுன்

தொடர்புபடுத்துங்கள்

run

jump

hit

kick

swim

catch

play

நிறம் தீட்டுங்கள்

வழிகாட்டுங்கள்

4 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்

தொழில் சோறு போடும் இலக்கியம் புகழ் சூடும்

பாடகர். நடிகர். கவிஞர் என பல் ஆளுமை கொண்ட கலைமகன் அன்ஸார்

பல்துறை ஆளுமை கொண்ட ஒருவரை நான் ரொம்ப பிஸி பகுதிக்காக சந்தித்தேன். அவர்தான் பாடகர். நடிகர். கவிஞர் என பல் ஆளுமை கொண்ட கலைமகன் அன்ஸார்.

கிண்ணியா அல் அக்ஸா வீதியில்1971 /02/20 வரிசை முகம்மது என்பவருக்கு மகனாக வி.எம்.அன்ஸார் பிறந்தார் .

அல் அக்ஸா கல்லூரியின் பழைய மாணவரான கலைமகன் அன்ஸார் 1988 இல் தினகரன் பத்திரிகையில் எழுதிய 'என் தம்பி' எனும் சிறுவர் உலக முதல் கவிதையினூடாக இலக்கிய உலகிற்கு அறிமுகமானார்.

அதன் பின்னரான காலத்தில் சிந்தாமணி பத்திரிகையை அலங்கரித்த கவிஞருள் ஒருவரானார்.

அக்காலத்தில் இலங்கை வானொலி ஒலி மஞ்சரியில் இவரது அதிக கவிதைகள் ஒலி பரப்பப்பட்டது.

சில்லையூர் செல்வராஜன் தொகுத்தளித்த'பாவளம்' கவிதை நிகழ்ச்சி மற்றும் தம்பி ஐயா தேவதாஸ் தொகுத்தளித்த 'நாளைய சந்தி' கவிதை நிகழ்ச்சி அத்தோடு வாலிப வட்டம், இளைஞர் இதயம், போன்ற நிகழ்ச்சிகளில் கலைமகன் அன்ஸாரின் கவிதைகள் ஒலிபரப்பப்பட்டது.

சிந்தாமணி பத்திரிகை தொடக்கம் சூடாமணி, தினகரன், வீரகேசரி, தினக்குரல் , தினமுரசு, நவமணி, நேசம்,கிண்ணியாடுடே, மித்திரன் வாரமலர் போன்ற பத்திரிகைகளுக்கும் நீங்களும் எழுதலாம், விரல், ஓசை, குறுநகை, அண்ணல், பேனா, கொழும்பிலிருந்து வெளியான மாணவன் போன்ற இலக்கிய சஞ்சிகைகளுக்கும் எழுதினார்.

கிண்ணியா அல்அக்ஸா தேசிய பாடசாலை டி.பி. ஜாயா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளின் வெள்ளி விழா, பொன் விழா, மலர்களுக்கு ஆக்கங்கள் எழுதியுள்ளார்.

பத்திரிகைகளில் பிரசுரமான ஐந்நூறுக்கும் மேற்பட்ட கவிதைகள் இவரிடம் குவிந்து கிடக்கிறது. இவரொரு மரபு விரும்பி. மரபு சார்ந்த கவிதைகளே எழுதுகின்றவர்.

1997இல்தேசியஇளைஞர்சேவைகள் மன்றம் நடாத்திய தேசிய ரீதிலியிலான கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்.

"கிண்ணிக்கன்னி ரஸ்னா" என்ற புனைப்பெயரிலும் வி.எம் அன்ஸார்,

கலைமகன் அன்ஸார் எனும் பெயர்களிலும் இவரால் பல்வேறு ஆக்கங்கள் எழுதப்பட்டது.

இவரிடம் ஏன் பெண்ணின் பெயரில் எழுதுகின்றீர்கள் என வினவியபோது

இவ்வாறு எழுதிக் காட்டினார்.

"ரஸ்னா" என்பதை ஆங்கிலத்தில் எழுதும்போது RASNA

மாற்றி எழுதும்போது ANSAR எனது பெயர் வரும் என்றார்.

இந்த அழகிய ரஸ்னாவைத்தேடி அலைந்தவர்கள் அன்று அதிகம்தான்.

ஊரிலும் ஊருக்கு வெளியேயும் கிண்ணிக்கன்னி" ரஸ்னா" பெண் எழுத்தாளர் வரிசையில் போற்றப்பட்டார். அதற்குள் மறைந்திருந்தவரோ? கலைமகன் அன்ஸார்.

வித்தியாசமான திறமைகள் கொண்டவர். மானாமக்கீன் அவர்கள் தினகரன் பத்திரிகையில் தயாரித்தளித்த லைட்ரீடிங் பகுதியில் தொடர்ச்சியாக கலந்து சொற்களுக்கு கருத்துக்கள் வழங்கி பாராட்டைப் பெற்றவர். தினகரன் வாரமஞ்சரியில் குறுக்கெழுத்துப் போட்டியில் உள்ள அத்தனை பெட்டிகளையும் நிரப்பி விடுவார்.

வாசிப்பதில் நேசம் கொண்டதோடு;

அழகாக தமிழ் எழுதுவதுடன் குறியீடுகள் இட்டு எழுதும்

> **சிந்தாமணி பத்திரிகை தொடக்கம் சூடாமணி, தினகரன், வீரகேசரி, தினக்குரல் , தினமுரசு, நவமணி, நேசம், கிண்ணியாடுடே, மித்திரன் வாரமலர் போன்ற பத்திரிகைகளுக்கும் நீங்களும் எழுதலாம், விரல், ஓசை, குறுநகை, அண்ணல், பேனா, கொழும்பிலிருந்து வெளியான மாணவன் போன்ற இலக்கிய சஞ்சிகைகளுக்கும் எழுதினார்.**

பழக்கமுடையவர்.

கிண்ணியா மண்ணில் 1992 இல் உருவான இருபயணங்கள் திரைப்படத்தில் சிறுவேடம் ஏற்று நடித்ததனூடாக அவரது நடிப்புத் திறமையும் வெளிப்படுத்தப்பட்டது.

சிறந்த பாடகர் .அதிகமான பாடல்களை பாடியுள்ளார். 1997/1998 களில் இலங்கை வானொலி நடாத்திய பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாராட்டைப் பெற்றவர். அதுபோன்றே வானொலி நடாத்திய டெலிகோவின் ஒலிஅலைகள் பாட்டுப் போட்டியிலும் கலந்து பரிசில்கள் பெற்றவர். தலைநகரம் சென்று அவரது பாடல்களை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில் அந்த திறமை அவருக்குள் மறைந்தே கிடந்தது.

தனது கவிதை விரும்பியை துணையாக ஆக்கிக் கொண்ட கலைமகன் அன்ஸார் பரம்பரை தொழிலான தச்சுத் தொழிலில் ஈடுபாடு காட்டி வரும் அவர் இலக்கியம் வேறு தொழில் வேறு எனவும்

"தொழில் சோறுபோடும் "

"இலக்கியம் புகழ் சூடும் "என்றார்.

இலக்கியச் சுவை கலந்த பேச்சுடைய கலைமகன் அன்ஸார் எழுதிய கவிதைகள் நூலுருவம் பெறும் காலம் மலர வேண்டும். இறைவனின் துணையால் அவர் உடல் நலத்துடன் வாழவும் கலைமகனின் இலக்கியம் உயிர் பெறவும் பிரார்த்திக்கிறேன். இலக்கியத்தால் கிண்ணியா மண்ணுக்கு பெருமை சேர்த்த கலைமகனை மேடையேற்றி வாழ்த்தலாமா?

கவிச்சுடர் ஏ.எம் கஸ்புள்ளா

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

சிவப்பான உதடுகளை விரும்பு பெண்களுக்கு...!

தினமும் காலையில் தேநீருக்கு பதிலாக வைட்டமின் சி நிறைந்த ஆரஞ்சு அல்லது எலுமிச்சம் பழச்சாறை அருந்தலாம். இது ஈரப்பதத்தை தக்கவைப்பதுடன் உதடுகளை மெருகேற்றும்.

முக அழகை அதிகரித்து வசீகரிப்பதில் உதடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவற்றை மேலும் அழகு படுத்துவதற்காக பயன்படுத்தும் உதட்டுச்சாயங்கள் பெரும்பாலும் ரசாயனம் கலந்தவை. உணவு சாப்பிடும் போது உதட்டுச்சாயத்தின் துகள்களையும் சேர்த்து விழுங்குவதால் பல பிரச்சினைகள் உருவாகின்றன. அதனை தவிர்ப்பதற்காக இயற்கை முறையில் உதடுகளின் வண்ணத்தை பராமரிக்கும் வழிகளை இங்கே பார்க்கலாம்.

உதடு சிகப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு ஈரப்பதம் மிகவும் முக்கிமானதாகும். அவற்றை அடிக்கடி நாவினால் ஈரப்படுத்துவது மிகவும் தவறான செயலாகும். இதன் மூலம் உதடுகள் கருமை அடைவதோடு, வறண்டு போவும் நேரிடும். இதை தவிர்ப்பதற்கு போதுமான அளவு தண்ணீர் குடிக்கவேண்டும். அதிகமாக தண்ணீர் குடிப்பதால் உதடுகள் ஆரோக்கியமாகவும், பொலிவாகவும் இருக்கும்.

அடிக்கடி தேநீர் அருந்துபவரின் உதடுகள் கருத்து காணப்படும். இதனை தவிர்க்க தினமும் காலையில் தேநீருக்கு பதிலாக வைட்டமின் சி நிறைந்த ஆரஞ்சு அல்லது எலுமிச்சம் பழச்சாறை அருந்தலாம். இது ஈரப்பதத்தை தக்கவைப்பதுடன் உதடுகளை மெருகேற்றும்.

முகத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை உதடுகளுக்கும் கொடுக்க வேண்டும். அழகு சாதனப்பொருட்களை பயன்படுத்தும் போது உதட்டிற்கு தனி கவனம் செலுத்துவது நல்லது. உதடுகளை தூய்மைப்படுத்த தினமும் இரவு தூங்கச்செல்வதற்கு முன்பு அரை டீஸ்பூன் சர்க்கரை, ஒரு சிட்டிகை உப்பு, 4 துளிகள் தேன் மற்றும் 2 துளிகள் எலுமிச்சை சாறு போன்றவற்றை நன்றாக கலந்து சர்க்கரை கரைவதற்கு முன்பு உதட்டின் மீது பூசி 2 முதல் 3 நிமிடங்கள் மென்மையாக மசாஜ் செய்தால் இறந்த செல்கள் நீங்கி உதடுகள் மிருதுவாகும்.

பீட்ரூட் சாறு 2 தேக்கரண்டி, எலுமிச்சை சாறு கால் தேக்கரண்டி, நாட்டு சர்க்கரை 3 தேக்கரண்டி, தேங்காய் எண்ணெய் 1 தேக்கரண்டி இவை அனைத்தையும் நன்றாக கலந்து ஒரு கண்ணாடி குப்பியில் காற்று புகாதவாறு மூடி குளிர்சாதனப்பொட்டியில் பாதுகாக்கவும். இதனை தினமும் 2 முறை தடவி வந்தால் உதடுகள் மென்மையாகவும் சிவப்பாகவும் மாறும்.

பன்னீர் ரோஜா இதழ்கள் 20 கிராம் (அரைத்தது), பசுவின் பால் 1 தேக்கரண்டி, இவை இரண்டையும் நன்றாக கலந்து தினமும் உதடுகளின் மேல் தடவி வந்தால் அவை சிகப்பாகவும், மிருதுவாகவும் காட்சியளிக்கும்.

சிறிது கஸ்தூரி மஞ்சளுடன், பசுவின் பால் கலந்து பூசி வந்தால் உதடுகள் பளபள ப்பாகவும் சிகப்பா கவும் மாறும்.

நேற்று இல்லாத...

4 ஆம் பக்கத் தொடர்..

எனும் போது இந்த சோலை ஊரிலிருந்து வெகு தொலைவில் இல்லை ஊருக்கு பக்கத்தில் இருக்க வேண்டும் அல்லது ஊரே சோலையாக இருக்க வேண்டும்.

இதில் எது நிஜம் என்றாலும் இப்போது போல் அந்த காலத்து மனிதன் வீடுகளைக் கட்டி குடியிருப்பதற்காக மரங்களையும் வனங்களையும் தேவையில்லாமல் அழிக்கவில்லை என்பது தெளிவாகிறது. இது நற்றிணை பாடல் காட்சியின் சுற்றுச்சூழல் சார்ந்த சித்திரமாகும் இனி இதனுள் மறைந்து கிடக்கும் சமுதாயச் சித்திரத்தை பார்வையிடுவோம்.

அம்மா ஊன்றினாள் மகள் அதை சகோதிரியாக கருதினாள் என்பது தான் பாடலின் பிரதான கருத்து நமக்கு நன்றாக தெரியும் அந்தக் காலத்திலும் சரி இந்த காலத்திலும் சரி நம் நாட்டு ஆண்களுக்கு மட்டும் தான் பிறப்பு முதல் இறப்பு வரை ஒரே குடும்பம் சொந்தமாக இருக்கிறது. ஆனால் பெண்கள் நிலை அப்படியல்ல திருமணம் முடியும் வரை பிறந்த வீட்டை தன் சொந்த வீடு என்கிறாள் திருமணத்திற்க்கு பிறகோ நேற்று வரை தன்கக சம்பந்தமே இல்லாத புதிய வீட்டாரை தனது உரிமையாக கொள்ள வேண்டிய நிலை வருகிறது.

நகை கொடுத்து பெட்டி நிறைய சீதனம் கொடுத்து கட்டில். மெத்தை.பீரோ. என்று எல்லாமும் கொடுத்து ஒரே ஒரு மஞ்சள் கயிற்றை படுபாவி பயல் கட்டிவிட்டான் என்பதற்காக பெற்றவரை மறந்து. உற்றவரை துறந்து கற்ற காலத்தில் கதை பேசிய தோழியன் நடப்பை சிதைத்து எங்கோ கண் காணாத இடத்திற்கு அவனோடு போக வேண்டிய நிலை உருவாகி விடுகிறது.

ஆனால் நற்றிணை காட்சி இப்படி ஒரு சோக சித்திரத்தை நமக்கு காட்டவில்லை அம்மா போட்ட விதை மரமாகி நிற்பதை மகள் காண்கிறாள் என்றால் அம்மாவுக்கு மணமுடிந்ததும் அந்த ஊர்தான் மகள் காதலனோடு அதே சோலையில் நடமாடுகிறாள் என்றால் அறிமுகம் இல்லா புதிய ஆடவன் ஊருக்குள் இருக்கும் சோலைக்குள் சுதந்திரமாக நடமாட அந்தகாலத்தில் முடியுமா? இப்போது கூட புதிய நபர்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக நடமாடினால் நம்மால் சந்தேகப்படாமல் இருக்க முடியுமா?

ஆகவே மகளின் காதலனும் அந்த ஊர் காரணாகவே இருக்க வேண்டும். அல்லது பக்கத்து ஊர்காரணகவோ இருக்கலாம் இதிலிருந்து நமக்கு தெரிவது என்னவென்றால் ஆதிகால தமிழன் வியாபாரம் அரசியல் காரணங்கள் தவிர தனிப்பட்ட வாழ்க்கை தேவைகளுக்கு போக்குவரத்தை அதிக தூரத்திற்கு வைத்துக்கொள்ளவில்லை குறிப்பிட்ட தூரத்திற்குள்ளேயே வைத்து இருக்கிறான். அதனால்தான் அவனது சமுக சூழல் பரபரப்பு இல்லாமல் அமைதியாக ஒரு ஓடையின் தண்ணீரை போல அமைந்திருக்கிறது.

இப்படிதான் இன்றும் வாழ வேண்டும் என்று நான் சொல்லவரவில்லை நமது தேவைகளை குறைத்துக் கொண்டு பரபரப்பு இல்லாமல் வாழ்ந்தால் மனம் அமைதியாக இருக்கும் இரத்தக் கொதிப்பு இதயநோய் சர்க்கரை போன்ற சனியன்கள் எல்லாம் நம்மை தொட்டுக் கூட பார்க்காது. இது சங்க இலக்கியம் தரும் ஒரு சின்ன தகவல் அவ்வளவுதான்.

சிவாஜி கணேசனின் 198வது படம் "பைலட் ப்ரேம்நாத்"

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 198வது படமான "பைலட் ப்ரேம்நாத்" திரைக்கு வந்து இந்த வருடம் 43 வருடங்கள் நிறைவடைகின்றது. ஆர்.வெங்கட் எழுதி இயக்கிய "மெழுகு பொம்மைகள்" வெற்றி நாடகமே "பைலட் ப்ரேம்நாத்" என திரைப்படமானது.

சிவாஜி கணேசன் பைலட் வேடத்தில் அருமையாக இப்படத்தில் வியாபித்திருப்பார். தன்னுடைய மூன்று பிள்ளைகளில் ஒரு பிள்ளை தனக்கு பிறந்ததல்ல என்பதே "பைலட் ப்ரேம்நாத்" படத்தின் மூலக்கதை. இதன் கதைக்கேற்றவாறு "வெள்ளாட்டு மந்தையில் ஒரு கறுப்பாடு, என் கையில் தெய்வம் தந்த வைரங்கள் என்றாலும் ஏதோ ஒன்று உப்புக்கல்" என கவிஞர் வாலியின் வரிகள் அழகான உவமானமாக அமைந்தது. இலங்கை இந்திய கூட்டுத்தயாரிப்பில் இலங்கையில் முற்றிலும் படப்பிடிப்பு நடத்தப்பட்ட படமிது.

இலங்கையின் மிக முக்கியமான நகரங்களான கொழும்பு, கண்டி, பேராதனைப்பூங்கா, கதிர்காமம், பொலன்னறுவ, அநுராதபுரம், ஹுன்னஸ்கிரிய, கஜுகம போன்ற இடங்களில் வெளிப்புற காட்சிகளும், வத்தளை

> **அப்போது என் வயது 11. சிவாஜிக்கு அப்போது கைலாகு கொடுத்த நிகழ்வு இன்றும் பசுமரத்தாணி போல் என் நெஞ்சங்களில் நீங்காதுள்ளன. பின் 1980களில் இயக்குனர் ஸ்ரீதரின் "மோகனப்புன்னகை" படப்பிடிப்பு இலங்கையில் நடைபெற்ற போது நுவரெலியாவில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனை சந்தித்ததையும், அந்த தொடர்பின் பின் சிவாஜி கணேசன் இருக்கும் வரையிலும், அவருடன் பல தடவைகள் அன்னை இல்லத்தில் சந்தித்துப் பேசியதும்,1995 இல் மீண்டும் சிவாஜி கணேசன் இலங்கை வந்த போது அவருடனேயே தொடர்ந்து மூன்று தினம் பொழுதை கழித்ததையும் என் வாழ்நாளில் பொன்னான தருணங்காகவே கருதுகின்றேன்..... !**

ஹெந்தளை விஜயா ஸ்டுடியோவில் உள்ளகக் காட்சிகளும் படமாக்கப்பட்டன. சிவாஜிக்கு ஜோடியாக சிங்களக்குயில் மாலினி பொஃன் ஷேக்கா நடித்தார். இப்படத்தில் எல்லாப் பாடல்களையும் கவிஞர் வாலி எழுதினார். "இலங்கையின் இளங்குயில்" பாடலின் சில காட்சிகள் பேராதனைப் பூங்காவில் படமாக்கப்பட்டன. "நடிகர் திலகம் சிவாஜி கணேசன்"எனும் நடிப்புப் பல்கலைக்கழகத்தை அன்று தான் முதல் முதலாக என் தந்தையுடன் சென்று பார்த்தேன். அப்போது என் வயது 11. சிவாஜிக்கு அப்போது கைலாகு கொடுத்த நிகழ்வு இன்றும் பசுமரத்தாணி போல் என் நெஞ்சங்களில் நீங்காதுள்ளன. பின் 1980களில் இயக்குனர் ஸ்ரீதரின் "மோகனப்புன்னகை" படப்பிடிப்பு இலங்கையில் நடைபெற்ற போது நுவரெலியாவில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனை சந்தித்ததையும், அந்த தொடர்பின் பின் சிவாஜி கணேசன் இருக்கும் வரையிலும், அவருடன் பல தடவைகள் அன்னை இல்லத்தில் சந்தித்துப் பேசியதும்,1995 இல் மீண்டும் சிவாஜி கணேசன் இலங்கை வந்த போது அவருடனேயே தொடர்ந்து மூன்று தினம் பொழுதை கழித்ததையும் என் வாழ்நாளில் பொன்னான தருணங்காகவே கருதுகின்றேன்..... !

கண்டி பெரஹெராவை இப்படத்தில் அழகாக படமாக்கியிருந்தார் ஒளிப்பதிவாளர் டி.எஸ்.விநாயகம். "முருகனெனும் திருநாமம் முழங்குமிடம் கதிர்காமம்" பாடல் காட்சியில் சிவாஜி கணேசன் காவடி தூக்கி பாடியாடி வரும் காட்சி கதிர்காமத்திலும், "அழகி ஒருத்தி இளநி விக்கிற கொழும்பு வீதியிலே "பாடல் கஜுகம, காலி முகத்திடல் போன்ற இடங்களிலும், "உடரட்ட மெனிக்கே கந்துரட்ட திலகே" மற்றும் "ஹூ இஸ் த ப்க் ஷீப் " பாடல்கள் வத்தளை ஹெந்தளை விஜயா ஸ்டுடியோவிலும் படமாக்கப்பட்டன.

இப்படத்தில் நடித்த நடிகர்கள்:

சிவாஜி கணேசன், மாலினி பொஃன் ஷேக்கா, விஜயகுமார், ஜெய்கணஷ், ஸ்ரீதேவி, ஜெயசித்ரா, சத்யப்ரியா, மனோரமா, தேங்காய் சீனிவாசன், சுந்தரராஜன், வெங்கட் மற்றும் இலங்கைக் கலைஞர்களான எப்ரஹாம், மணிமேகலை, சிலோன் விஜேந்திரன், சிலோன் சின்னையா, ஸ்ரீசங்கர் போன்றோரும் நடித்துள்ளனர்.

இயக்கம், திரைக்கதை: ஏ.சி.திருலோகச்சந்தர்
வசனம்:ஆரூர்தாஸ்
தயாரிப்பு:டி.எம்.மேனன்,சலீம்,
டி.எம்.சந்திரசேன.
பாடல்கள்:கவிஞர் வாலி
இசை: மெல்லிசை மன்னர்
எம் எஸ் விஸ்வநாதன்
ஒளிப்பதிவு: டி.எஸ்.விநாயகம்.

இலங்கை கலைஞர் ஏ.ஈ.மனோகரனும், எல்.ஆர். ஈஸ்வரியும் இணைந்து இப்படத்தில் "உடரட்ட மெனிக்கே" பாடலைப் பாடியுள்ளனர்.

"பைலட் ப்ரேம்நாத் "தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் 200 நாட்கள் கடந்து ஓடி சாதனை படைத்தது.

ஆக்கம்:எஸ்.கணேசன்
ஆச்சாரி சதீஷ் கம்பளை

3ஆம் பக்கத்தொடர்ச்சி..

வல்லபாய் பட்டேல் ...

பகுதிகளையும் மேற்கு வங்காளத்தையும் கிழக்குப் பஞ்சாப் பகுதிகளையும் இணைத்துத் தரும்படி வேண்டியுள்ளார். அதற்கு ஆங்கிலேய அரசும் சம்மதித்திருந்தது. இதனை மகாத்மா காந்தியோ நேருவோ அறிந்திருக்கவில்லை. ஆனால், எவ்வாறோ வல்லபாய் பட்டேல் அறிந்து கொண்டார். வல்லபாய் பட்டேல் ஜின்னாவின் திட்டத்தை அறிந்தது முதல் விடுதலைப் போராட்டத்துடன் ஜின்னாவின் காய் நகர்த்தல்களையும் உன்னிப்பாக கவனித்து வந்தார்.

மகாத்மா காந்தியின் தியாக உணர்வு காரணமாகவும் அஹிம்சை போராட்டங்கள் காரணமாகவும் இங்கிலாந்து வேறுவழியின்றி இந்தியாவிற்கு விடுதலை அளித்தே தீர வேண்டிய நெருக்கடிக்குத் தள்ளப்பட்டு இந்தியாவிற்கு சுதந்திரம் அளித்தது. சுதந்திரம் கிடைத்தபோது பாகிஸ்தான் இந்தியாவிடமிருந்து பிரிக்கப்பட்டது. ஜின்னா நினைத்தவாறு காஷ்மீரின் முழுப்பகுதி, அஸ்ஸாமின் சில பகுதிகள், மேற்கு வங்காளம், கிழக்குப் பஞ்சாப் பகுதிகள் பாகிஸ்தானுடன் இணைக்கப்படவில்லை. ஏற்கனவே வல்லபாய் பட்டேல் நன்கு திட்டமிட்டு முட்டுக்கட்டை ஏற்படுத்திவிட்டார். காஷ்மீரின் பகுதியான ஆஸாத் காஷ்மீரை மாத்திரம்தான் பாகிஸ்தானால் இணைத்துக்கொள்ள முடிந்தது. ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. இந்தியாவிடமிருந்து ஜம்மு காஷ்மீரை இழக்காது பாதுகாத்த பெருமை வல்லபாய் பட்டேலையே சேரும். நேருவுக்கும் பங்குண்டு.

சுதந்திர இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராகவும் துணைப் பிரதமராகவும் வல்லபாய் பட்டேல் பணியாற்றினார். நாடு முழுவதும் துண்டு துண்டாக மன்னராட்சி நடந்து கொண்டிருந்த 565 இராஜ்ஜியங்களை ஒன்றிணைத்ததுதான் உள்துறை அமைச்சராக வல்லபாய் பட்டேல் இருந்து ஆற்றிய முதல் பணியாகும்.

மக்கள் எல்லோரும் சர்தார் வல்லபாய் பட்டேல்தான் இந்தியாவின் முதல் பிரதமர் என்று எதிர்பார்த்தனர். ஆனால், மகாத்மா காந்தி ஜவஹர்லால் நேருவுக்கு அதிக ஆதரவு கொடுத்ததால் ஜவஹர்லால் நேரு முதல் பிரதமர் ஆனார்.

வல்லபாய் பட்டேல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். ஆனால், இன்றைய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வல்லபாய் பட்டேலை அன்று தொடக்கம் இன்று வரை புகழ்ந்து தள்ளுகிறார். அதற்கும் காரணமுண்டு. மகாத்மா காந்தி கோட்சே என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னர் ஆர்.எஸ். எஸ். இயக்கம் தடை செய்யப்பட்டது. தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். அந்த சந்தர்ப்பத்தில் உள்துறை அமைச்சராகவும் துணைப் பிரதமராகவும் இருந்த வல்லபாய் பட்டேல் காந்தியின் இழப்பால் கவலையடைந்தாலும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினருக்கு உதவி புரிந்துள்ளார். வல்லபாய் பட்டேல் காங்கிரஸின் முதுகிற்கு பின்னால் ஒளிந்திருந்த ஓர் ஆர்.எஸ்.எஸ். இயக்க ஆதரவாளர் என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். இதனால்தான் இன்றைய இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வல்லபாய் பட்டேலை புகழ்ந்து தள்ளுகிறார்.

சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் தனது 75 ஆவது வயதில் 1950 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி காலமானார்.

சர்தார் வல்லபாய் பட்டேல் இந்திய சுதந்திர விடுதலைக்குப் போராடியதற்காக மட்டுமல்ல ஜம்மு காஷ்மீரையும் இந்தியாவின் சில பகுதிகளையும் பாதுகாத்ததற்காகவும் மக்கள் இன்றும் அவரை நினைவுகூர்கின்றனர்.

இலங்கையின் பிரபல தமிழ், ஆங்கில எழுத்தாளரும், கலை இலக்கிய விமர்சகரும், ஊடகவியலாளரும், வானொலி தொலைக்காட்சி ஒலி, ஒளிபரப்பாளருமான கைலாயர் செல்வநெனார் சிவகுமாரனுக்கு இலங்கை அரசாங்கத்தின் கௌரவ விருதான "சாகித்திய ரத்னா" விருது இலங்கை கலாசாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தருணம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.